
கல்கி
ஆண்டு மலர்
ALKI 6·8·67
40 காசு
'சோ' எழுதும் யாரோ இவர் யாரோ?
புதிய நகைச்சுவைத் தொடர் ஆரம்பம்



Rêve d'or

an unforgettable French perfume...
from the house of Piver.




CROOKES INTERFRAN LIMITED, BOMBAY-25

CIL 221



கல்கி ஆண்டுமலர்









பொருளடக்கம்

பிலவங்க, ஆடி 21 ✻ ஆண்டு 6

முகப்புப் படம் - உதவி :
ஸ்ரீ பக்த சமாஜ், சென்னை



நாம் அலங்காரம் செய்து கொண்டால் நமக்கு அகங்காரம்தான் உண்டாகும். அதே அலங்காரத்தை அம்பாளுக்குச் செய்தால் பாபம் தொலையும். நாம் செய்து கொள்ளக் கூடிய எல்லா அலங்காரங்களைக் காட்டிலும் சிறந்த அலங்காரம் அம்பாளின் கருணை. அதைப் பெற்றவர்களின் அழகே அழகு. அழகும் அது; ஆனந்தமும் அதுவே. அம்பாளின் பாத கமலங்கள் எப்போதும் இதயத்தில் இருந்தால் உள்ளம் தூய்மையாகிறது. அப்போது அழகாகவும் ஆக முடியும், நல்லவர்களாகவும் ஆக முடியும். கருணையே உருவான அம்பாளிடம், நம் இதயத்திலும் கருணையை உண்டாக்கி, நம்மை உய்விக்குமாறு பிரார்த்திப்போம்.

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகள்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 1

கட்சி மாறலாமா?

ஒரு கட்சியின் அங்கத்தினர் அக்கட்சியை விட்டு இன்னொரு கட்சியில் சேருவதென்பது எப்போதுமே அரசியல் உலகில் நடக்கும் விஷயம்தான். எனினும், இவ்வாண்டுப் பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு பல ராஜ்யங்களில் கோஷ்டி கோஷ்டியாகப் பல சட்டசபையாளர்கள் கட்சி மாறுவதை சர்வ சகஜமாகக் கண்டு வருகிறோம். சாதாரணக் கட்சி அங்கத்தினர்களாக மட்டுமின்றிச் சட்டசபையில் அங்கம் வகிப்பவர்கள் இவ்வாறு கட்சி மாறுவதால், ஆளுங்கட்சி எதிர்க்கட்சி இவற்றின் பலங்களும் மாறி, அரசாங்கமே கைமாறவும் நேருகிறது. மத்தியப் பிரதேசத்தில் தற்போது ஏறக்குறைய இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை தோன்றியுள்ளது.

குறிப்பிட்ட ஒரு கட்சியின் கொள்கைகளைக் காட்டித் தேர்தலுக்கு நின்றவர்கள், வெற்றி பெற்றபின் கட்சி மாறும் போது உண்மையாகவே அவர்கள் தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டு விட்டார்களா அல்லது சுய வாழ்க்கையில் ஏற்பட்ட ஆசாபங்கத்தாலோ, எதிர்காலச் சொந்த முன்னேற்றம் பற்றிய கருத்தினாலோ அப்படிச் செய்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. சுயநலத்துக்காகக் கட்சி மாறுவதை நன்மக்கள் எவரும் வரவேற்க முடியாது. இப்படிக் கட்சி மாறுபவர்களைக் கண்டு மக்கள் அருவருப்புக் கொள்வதும் இயற்கையே. 'குறிப்பிட்ட கட்சியின் கொள்கையைக் காட்டித்தானே இவர் தேர்தலில் வெற்றி பெற்றார்? இப்போது அந்தக் கட்சிக் கொள்கையை விட்டு விட்டதால் சட்டசபை ஸ்தானத்திலிருந்தும் இவர் விலக வேண்டும். அந்த ஸ்தானத்துக்கு மீண்டும் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும்' என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களுடைய வாதம் ஆராய்ந்து பார்ப்பதற்குரியது. ஒருவர் கட்சி மாறுவது காரணமாக மீண்டும் தேர்தல் நடத்துவதில் எவ்வளவோ பொருட் செலவாகிறது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தச் செலவு முழுவதையும் கட்சி மாறியவரே ஏற்க வேண்டும் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இதை ஒப்புக் கொண்டால், செல்வச் செழிப்புள்ளவர்களுக்கு மட்டுமே கட்சி மாறும் உரிமையை அளிப்பதாக முடியும். வாக்காளர் ஒரு கட்சிக் கொள்கையைப் பார்த்து மட்டும் வோட்டுச் செய்கிறாரா அல்லது வேட்பாளரின் தனிச் சிறப்புக்களைப் பார்த்து வோட்டுச் செய்கிறாரா என்று தீர்மானமாகக் கூற முடியாது. கட்சிக் கொள்கையைவிட, வேட்பாளரிடமே அதிக நம்பிக்கை வைத்து வோட்டுச் செய்யும் போது, அத்தகைய வேட்பாளர் எந்தக் கட்சிக்கு மாறினாலும் அதனால் அவருக்குக் கிடைத்த மக்களின் ஆதரவு மாறியதாகக் கொள்ள முடியாது. மொத்தத்தில் இது பரிசீலனைக்குரிய விஷயம்.

இவை யாவுமே தனி மனிதர்கள் கட்சி மாறுவது பற்றிய விஷயம். இதனின்று வேறுபட்டது, பலர் ஒன்று சேர்ந்து ஒரு கட்சியைக் கைவிடுகிற விஷயம். தனி மனிதர்கள் ஒரு கட்சியிலிருந்து விலகுவதைக் கண்டிக்குமளவுக்கு, ஒரு கூட்டமாகச் சிலர் விலகுவதைக் கண்டிப்பதற்கில்லை. ஏனெனில், இப்படிச் சிலர் கூடி ஒரு முடிவுக்கு வருவதெனில் அதற்கு அழுத்தமான காரணம் இருப்பது சாத்தியமே. பொதுவாக இப்படிக் கூட்டமாக ஒரு கட்சியிலிருந்து விலகுவதற்குக் காரணம் கட்சித் தலைவர்களின் சுயநலம் தான். கட்சித் தலைவர்கள் தங்களது கட்சி அங்கத்தினர்களுக்கிடையிலேயே பட்சபாதம் காட்டித் தங்கள் செல்லப் பிள்ளைகளையே அரசாங்கத் தொடர்புள்ள ஸ்தானங்களில் நியமித்தால், அக்கட்சியிலுள்ள மற்றவர்களுக்கும், பொதுமக்களுக்கும்கூட ஆத்திரம் உண்டாவது நியாயமே. இச்சமயங்களில் கட்சித் தலைவர்களின் போக்குப் பிடிக்காதவர்கள் கட்சியை விட்டு விலக

எண்ணுவதைத் எப்படித் தவறென்று கூற முடியும்?

அதெப்படியாயினும் யாரும் கட்சி மாறவே கூடாது என்று விதிப்பதற்கில்லை. கொள்கையை மாற்றிக்கொள்ள ஒரு ஜனநாயகத்தில் எவருக்கும் சுதந்திரம் உள்ளபோது, சட்டசபையாளருக்கு மட்டும் அந்த உரிமையை மறுப்பதற்கில்லை, யாருமே கட்சி மாறக்கூடாது என்றால், ஒவ்வொரு கட்சியையும் ஒரு புதிய ஜாதியாக்குவது போலாகும். கட்சி மாறுவது நடத்தைக் குறைவைக் குறிப்பது என்று எண்ணுபவர்கள் ஜனநாயக அரசியலை ஒரு ஜாதிக் கட்டுப்பாட்டு அமைப்புப் போன்ற இழி நிலைக்குக் கொண்டு வந்துவிடுவார்கள். எனவே, சொந்த நலனுக்காகக் கட்சி மாறுவதைக் கண்டிக்க வேண்டுமெனினும், கட்சி மாற்றமே உதவாது என்று பொது விதி செய்வதற்கில்லை.

அன்பார்ந்த நேயர்களுக்கு

இறைவன் திருவருளாலும், காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அநுக்கிரகத்தாலும் ராஜாஜி அவர்களின் நல்லாசியுடனும் உங்கள் கல்கி இருபத்தாறு ஆண்டுகள் தரமான தமிழ்ப் பணி புரிந்து இன்று இருபத்தி ஏழாம் ஆண்டின் நிலைவாசலில் நிற்கிறது. இத்தருணத்தில் நேயர்கள் அனைவரது நல் வாழ்த்துக்களையும் கோருகிறேன்.

'கல்கி'யில் அவ்வப்போது இடம் பெறும் அம்சங்கள் குறித்துப் பாராட்டியும், சிலவற்றைக் குறை கூறியும் வாசகர்களிடமிருந்து கடிதங்கள் அடிக்கடி வருகின்றன. எனினும், அனைவரும் ஏகமனதாக மகிழ்வுடன் வரவேற்று ஒப்புக் கொள்கிற ஒரு விஷயம் கல்கி கடைப்பிடித்து வரும் தரம்தான். இந்த நெறி பிறழாமலும் அதே சமயத்தில் கல்கி மேன்மேலும் சிறப்படையவும் நேயர்கள் அனைவரது ஒத்துழைப்பையும் கோருகிறேன்.

நகைச்சுவை நாடகங்கள் பல நடத்திப் பிரபலமடைந்துள்ள 'சோ', 'காதல் இல்லையேல் காதல்' என்ற தமது நாடகத்தின் மூலம் கல்கி நேயர்களுக்கு அறிமுகமாகி அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். இந்த ஆண்டு மலரில் அவர் தொடங்கும் 'யாரோ இவர் யாரோ' என்ற நகைச்சுவை நவீனம் முன்னதைவிட அதிகமாக நேயர்களால் வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. கல்கி அன்பர்களின் இல்லங்களிலெல்லாம் இந்த நாவல் குதூகலம் நிலவத் துணை செய்யும்.

மற்றும் இந்த ஆண்டு மலரில் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன. தி. மு. க. பதவிக்கு வந்த பிறகு உணவுப் பிரச்னையிலும் அதற்கு அடிப்படையான விவசாயம், நீர்ப்பாசனம் ஆகியவற்றிலும் விசேஷக் கவனம் செலுத்தி வருவது வரவேற்கத்தக்க விஷயம். ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ள இந்த மூன்று துறைகளிலும் தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள் ஆகியவற்றை விளக்குகிறது, 'நீர், நிலம், நிறைவு' என்ற கட்டுரை.

ஆகஸ்டு புரட்சி தோன்றி இன்று இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்றைய இளைஞர் சமுதாயத்துக்கு அந்த ''இறுதிப் போர்'' பற்றிய முக்கியத்துவத்தை விளக்குகிறார் திரு க. சந்தானம்.

சிறப்புச் சிறுகதைகள் என்று கூறிய பிறகு அவற்றுக்கு மேலும் ஓர் அடைமொழி அவசியமில்லைதான். இந்த இதழில் நான்கு சிறப்புச் சிறுகதைகளும் ஒரு குறுநாவலும் இடம் பெறுகின்றன.

'இல்லத்தரசியும் கவியரசரும்' என்ற கட்டுரையில் டாகுரின் வாழ்க்கையில் அதிகமாக யாருடைய கவனத்துக்கும் உள்ளாகாத சில சுவையான அம்சங்களைக் காண்கிறோம்.

இன்னும் பக்கத்துக்குப் பக்கம் புதுப் புது உணர்வுகளைத் தோற்றுவிக்கும் நூதன விஷயங்கள் அடங்கியுள்ளன இந்த ஆண்டு மலரிலே. விஷய ஞானம் பெறுவதற்கும் இலக்கியத் தரமான சிறுகதைகள் நெடுங்கதைகளை அநுபவிக்கவும் நகைச்சுவையை ரசித்துச் சிரித்து மகிழவும் இதோ ஒரு சிறந்த சாதனம் உங்கள் கரத்தினை அலங்கரிக்கிறது. இதழ்தோறும் இதே முறையில் உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் அலங்காரமாகக் கல்கியை வெளியிட விநாயகப் பெருமானின் துணையை நாடுகிறேன்.

சதாசிவம்

ராஜாஜியின் கருத்துக்கள்

1964லிருந்து மூன்றாண்டுகளில் மொத்த விலைகள் எண்பத்தைந்து சதவிகிதம் உயர்ந்திருப்பதாகத் தொழில் துறை ராஜாங்க மந்திரி பார்லிமென்டில் தெரிவித்திருக்கிறார். இந்த மொத்த விலைகள் மக்களுடைய சிரமத்தை முற்றிலும் வெளியிடுவதில்லை என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

மக்களின் வாழ்க்கைத்தரம் வருஷத்துக்கு வருஷம் — சில சமயங்களில் மாதத்துக்கு மாதம்கூட — வீழ்ந்து கொண்டிருப்பதாகவும் மந்திரி கூறினார். ஊதியத்தையும், பஞ்சப் படியையும் உயர்த்திய பின்பும் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

அவசரப்படாமல், தீர்க்கமாக விவாதித்து ஆலோசனை செய்தபின் சம்ஸ்தான மன்னர்களுடன் இந்திய சர்க்கார் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இப்போது முறிப்பது, சர்க்கார் செய்யக்கூடிய வேறெந்தத் தவறையும்விடப் பயங்கரமானது. வர்த்தகத் துறையிலும் இறங்கிவிட்ட சர்க்கார் — சர்வதேசக் கடன்களை நம்பியுள்ள ஒரு சர்க்கார் — ஒப்பந்தத்தை மீற முற்படுவது மிகவும் அபுத்தம். சத்தியமே வெல்லும் என்பதல்லவா நம் துவஜ வாசகம்? செயல், சொல் இரண்டிலும் சர்க்கார் சத்தியத்தை மீறலாகாது.

முன்பு பாகிஸ்தானுக்குத் தருவதாக வாக்களித்திருந்த 55 கோடி ரூபாயைப் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராகத் தன் படைபலத்தைப் பெருக்கிக் கொள்ளவே பயன்படுத்திக் கொள்ளக்கூடும் என்று சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் காந்தி அடிகளுடன் வாதம் புரிந்தார். எனினும் சத்தியம் என்கிற வாதத்தின் முன் இந்த வாதமும் காந்தியிடம் எடுபடவில்லை. காந்திஜி உண்ணாவிரதமிருந்து இந்த 55கோடியைப் பாகிஸ்தானுக்குத் தருமாறு செய்தார். காந்திஜி இவ்வாறு வற்புறுத்தியதால் இந்தியா பெற்ற லாபம் எவ்வளவு என்பதை மக்கள் உணரவில்லை. ஐ. நா. சாஸனத்துக்கு ஒப்புதல் தந்துள்ள இந்தியா, அதை மீறி கோவாவில் ராணுவ நடவடிக்கை எடுத்தபின் காந்திஜியின் வாக்கை யார் நினைக்கப் போகிறார்கள்?

குறுகிய காலத்தில் எப்படியாயினும், நீண்ட காலத்தில் நேர்மையே பயனளிக்கும். நாலரைக் கோடி ரூபாய் மிச்சம் பிடிப்பதற்காக இந்தியா நேர்மையைவிட வேண்டியதில்லை. நான் பழைய மன்னர்களுக்காக வாதாடுகிறேன் என்று தோன்றலாம். அவர்களுக்காகவோ, அல்லது தீங்குக்கு ஆளான வேறெவருக்காகவோ வாதிடுவது பிற்போக்கல்ல என்றே கருதுகிறேன். பணவினர்களுக்காக வாதிடுவது பிற்போக்கல்ல; தீரம் தேவைப்படும் ஒரு போரே இது. மக்களுக்கு ரஞ்சகமான விஷயங்களுக்காகப் போராடுவதற்கு இந்நாட்களில் தீரம் தேவையில்லை. நான் சர்வதேசங்களிலும் இந்தியாவுக்குள்ள நற்பெயருக்காகவும் — சர்வதேச வர்த்தகத்தில் நாம் முன்னேறுவதற்காகவும் — வாதாடுகிறேன்.

ராஜ மான்யத்தை நிறுத்திவைப்பதால் பழைய மன்னர்களும், அவர்களின் பின்னோகளும் நசித்துவிட மாட்டார்கள். வர்த்தகத்திலும் அரசியலிலும் ஈடுபடுவதற்குரிய திறமை அவர்களுக்கு உண்டு. அதிகாரத்தில் உள்ள காங்கிரஸ்காரர்களைவிட அவர்களிடம் மக்கள் அதிக மதிப்பு வைத்திருக்கிறார்கள். இது காரணமாகத்தான் ராஜமானியத்தை நிறுத்தும் எண்ணத்துக்கே தூண்டுகோல் கிடைத்துள்ளது. இதனால் பழைய மன்னர்கள் மக்களிடம் பெற்றுள்ள மதிப்புக் குறையாது; மாறாக அதிகமேயாகும். காங்கிரஸ் கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்த பதினேழு அங்கத்தினரைவிட, எதிர்த்த நாலு பேரே அதிக அரசியல் விவேகம் பெற்றவர்கள்.

ஃ ஃ ஃ

மக்களின் அடிப்படை உரிமைகளை அரசியல் சாஸனத்திலேயே உள்ளடக்க வேண்டும் என்றும் ஸ்ரீ முன்ஷி விரும்பினார். அப்போதுதான் மக்களுக்குக் காப்பு கிடைக்கும் என்பது அவர் கருத்து. சாஸனத்தில் எழுதப்படாவிடினும்கூட இந்த உரிமைகளை ஸுப்ரீம் கோர்ட் நிலைநாட்டியிருக்கும். ஆனால் சாஸனத்தில் இவற்றை எழுதிவிட்டதால்தான் இந்த உரிமைகளைப் பறிக்கப் பார்லிமென்ட் பாத்தியதை கோருகிறது. அதாவது ஸ்ரீ முன்ஷி கருதியதற்கு எதிர்மாறான விளைவு ஏற்பட்டிருக்கிறது. இதே போல், மன்னர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தமும் சாஸனத்தில் இடம் பெற்றிராவிடில் என்றைக்கும் ஸுப்ரீம் கோர்ட்டால் நிலைநாட்டப்படும். ஆனால் சாஸனத்தில் இடம் பெற்றதாலேயே இப்போது ஒப்பந்தத்தை முறிக்க முடிகிறது — அதாவது ஸர்தார் பட்டேல், வாக்குறுதியைச் சாஸனத்தின் மூலம் பலப்படுத்துவதாக நினைத்ததற்கு நேர்மாறான விளைவு ஏற்பட்டுள்ளது. உத்தரவாதம் என்று நினைத்துச் செய்த காரியம் உடன்படிக்கையையே அடியோடு குழி பறிக்கப் பார்க்கிறது!

ஃ ஃ ஃ

முன்நாட்களில் சில்லறை அங்காடிக்காரர்கள் விலையை வேண்டுமென்றே மிகவும் உயர்த்திக் கூறுவார்கள். பிறகு பேரத்தில் சிறிது சிறிதாக விலையைக் குறைத்து விற்பனை செய்யும்போது, பண்டத்தை வாங்குபவருக்குத் தாம் லாபம் பெற்றது போல் தோன்றும். இப்போது நிதி மந்திரிகள் இதைத்தான் பின்பற்றுகிறார்கள். பெருத்த விவாதத்துக்கும் கண்டனத்துக்கும் பிறகு அவர்கள் தமது நியாயமற்ற வரி இனங்களை மாற்றும்போது ஏதோ 'சலுகை' தந்தது போல் பெயர் வாங்கி விடுகிறார்கள். ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்களும் இந்த ரீதியில் நிறைய 'சலுகை'கள் தந்து விட்டார்!

ஃ ஃ ஃ

இந்தியாவின் பதினான்கு பிரதேச மொழிகளிடமும் ஹிந்தியர்களுக்குத் திடீர் மோகம் பிறந்திருக்கிறது. ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் உண்டான சூனியத்தில் ஹிந்தியை அமர்த்துவதற்கே அவர்கள் இப்படியொரு தந்திரம் செய்கிறார்களோ என்று அஞ்சுகிறேன்.

ஹிந்தி பேசாதவர்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்

என்று ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு வாக்குறுதி தந்த போது, அவர் இதயபூர்வமாக ஹிந்தி பேசாதவர்களின் கட்சியிலுள்ள நியாயத்தை உணர்ந்திருந்தார். நேருஜியின் வாக்குறுதியைச் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு இன்றைய யூனியன் சர்க்கார் முயன்று வருகிறது. எனினும் புதிதாகச் செய்யப்படும் சட்டம் தெளிவாகவோ, திருப்திகரமாகவோ இராதென்பது நிச்சயம். 'ஏனெனில், ஜவாஹர்லால்ஜியின் இதயத்தில் இருந்த சத்திய உணர்வும், பட்சபாதம் ஏற்பட்டால் அது குறித்து அவரது உள்ளத்தில் உண்டான நோவும் இன்று சட்டம் போடுபவர்களிடம் கிடையாது. அவர்கள் வியாதியைக் குணப்படுத்த முனையவில்லை; 'மார்பியா' ஊசி போட்டு நோயாளியை மயக்கமடையச் செய்வதே அவர்கள் நோக்கம். வேண்டுமென்றே **தெளிவில்லாமல்** சட்டம் செய்ய அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஆங்கிலத்தின் நிகழ்கால அந்தஸ்து அப்படியே இருக்க வேண்டும் என்பதுதான் தேவை. உண்மையில் இத்தேவையைப் பூர்த்தி செய்ய எண்ணம் இருந்தால் அதற்குத் தெளிவான வாசகத்தில் சட்டம் செய்துவிட முடியும். மாறாகச் சட்டம் செய்து இந்தியாவை மோசமான நிலையிலிருந்து படுமோசமான நிலைக்கு இட்டுச் செல்லவிருப்பார்களா ?

ஃ ஃ ஃ

''வாயினுல் சாப்பிடும்' கர்ப்பத் தடை மாத்திரைகளால் புற்று நோய் ஏற்படாது என்று இது வரை ஆதாரபூர்வமாக நிரூபணமாகவில்லை. இவ்விஷயத்தில் முடிவு காணப் பத்தாண்டுகள் தேவை' என்று மிக உயர்ந்த அமெரிக்க மருத்துவ அறிக்கைகளிலிருந்து தெரிகிறது. இந்தப் பத்தாண்டுப் பரிசோதனைக்கு இந்தியப் பெண்மணிகளைக் காவு கொடுக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.


இது போன்ற கருத்தடைக் காரியங்களை மகாத்மா காந்தி தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறார். டாக்டர் சந்திரசேகரன் இத்திட்டத்தை எவ்வளவு ஆவேசமாக விரும்புகிறாரோ அவ்வளவு ஆவேசமாகக் காந்திஜி வெறுத்தார். காந்திஜி நம் தேசத்துக்குச் செய்திருக்கும் சேவைகள் காரணமாக, அவரது கருத்துக்கள் இன்னவென்று நாம் கேட்க வேண்டிய உரிமையைப் பெற்றிருக்கிறார். **'Mind of Mahatma Gandhi'** என்ற பெயரில் நவஜீவன் அச்சகம் வெளியிட்டுள்ள நூலில் இக்கருத்துக்களைக் காணலாம்.

ஃ ஃ ஃ

நான் சுயசரிதை அல்லது நினைவுக் குறிப்புக்கள் எழுதாமலிருப்பதில் பல நண்பர்களுக்கு ஏமாற்றம்.

'சுய சரிதைகளில் சிறிதளவே பொருள் உள்ளது ; தற்பெருமையிலும், தன் தவற்றுக்குத் தானே காரணம் காட்டுவதிலும், வார்த்தைப் பெருக்கிலும் இந்தச் சிறிதளவு பொருளும் அமுந்தி மறைந்து விடுகிறது' என்று தார்ன்டன் வைல்டர் என்ற ஒரு பெரிய எழுத்தாளர் கூறியுள்ளார். புகழ் வாய்ந்த பல மனிதர்களின் சுயசரிதங்களைப் படித்தபின் நான் கொண்ட கருத்தும் இதுவே. இந்தக் குறைபாடுகளிலிருந்து மாறுபட்டவர்கள் தப்ப முடியாது. தமது குறைகளைத் தாமே வெளியிடும்போதுகூட, தமக்கு உள்ள சிலவகள் காரணமாக இக்குறைகள் இருப்பது ஒரு பொருட்டில்லை என்று சுயசரிதைக்காரரின் அடிமனம் கருதுவதாகவே தோன்றும்.

இதற்கு விதிவிலக்கான சுயசரிதைகளும் உண்டு. தற்பெருமையின் வலையில் சிக்காமலும், எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட தோற்றத்தை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலும் நல்ல மனிதர்கள் எழுதும் நினைவுக் குறிப்புக்கள் உத்தமமான சமய நூல்களுக்குச் சமமானவை.





இறுதிப் போர்

க. சந்தானம்

மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற விடுதலை யுத்தத்தின் இறுதிப் போர் 1942 ஆகஸ்டில் ஆரம்பமாயிற்று. இவ்வாண்டு அதன் வெள்ளி விழாவாகும். அது 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற கோஷத்துடன் தொடங்கியதால் இந்தக் கோஷத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது. அதுவும் ஒரு சத்தியாக்கிரகப் போராயினும், மற்றப் பெரும் அஹிம்சைப் போர்களுக்கும் அதற்கும் சில பெரும் வேற்றுமைகள் இருந்தன. ஆதலால் அதை நன்கு உணர சத்தியாக்கிரக யுத்தத்தின் முழுப் போக்கையும் பெருவாரியாக விமர்சனம் செய்வது நலமாகும்.

பாரதத்தில் முதன் முதலாக சத்தியாக்கிரகம் நடந்தது, 1917ல், பீகார் மாகாணத்தில் சம்பாரன் ஜில்லாவில். அதில் காந்தியடிகள் ஒருவரே சத்தியாக்கிரஹி. அந்தப் பிரதேசத்தில் நீலிச் செடியைப் பயிரிட்டு அதிலிருந்து நீலச் சாயம் காய்ச்சிப் பெரும் லாபமடையும் பல ஐரோப்பியப் பண்ணை முதலாளிகள் குடியானவர்களை மிகவும் வருத்தினர். குத்தகைக்கு நிலம் கொடுத்து ஒரு பாகத்தில் இலவசமாக நீலிச் செடியைப் பயிர் செய்ய வேண்டும் என்று பலாத்காரம் செய்தனர். பீகார் குடியானவர்களின் தலைவர்கள் இதைப் பற்றிப் பல வருஷங்கள் கிளர்ச்சி செய்தும் சிறிதும் பயனின்றி காந்தியடிகளை அணுகினர். தாம் நேரில் பார்த்து ஆராய்ந்த பின்னரே முடிவு செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் காந்தியடிகள் சம்பாரன் சென்றார். அவர் வரவு குடியானவர்களிடம் பெரிய பரபரப்பை உண்டாக்கியது. ஐரோப்பியப் பண்ணை முதலாளிகளின் பேச்சைக் கேட்டுப் பிரிட்டிஷ் அதிகாரிகள் காந்தியடிகள் மீது தடையுத்தரவு போட்டனர். அதற்குப் பணிய முடியாதென்றும், மீறப் போவதாகவும் எச்சரிக்கை செய்து விட்டு மீறிக் கைது செய்யப்பட்டார்.



நாடு முழுதும் கொதித்தெழுந்தது. மாகாண, மத்திய அரசாங்கங்கள் கலந்தாலோசித்து அவரை விடுவித்தன. நீலிப் பிரச்னையைக் கவனிக்க ஒரு கமிஷனை நியமித்து அதில் காந்தியடிகளையும் சேர்த்தனர். அக்குழுவின் சிபாரிசுகள் காந்தி அடிகளுக்குத் திருப்தியாக இருந்ததால் அவற்றை அரசாங்கம் ஏற்றுக் குடியானவர்களுக்குப் பரிகாரம் கிடைத்தது. சத்தியாக்கிரகம் வெற்றியடைந்தது.

இதற்குப் பின் பல இடங்களில், பல பிரச்னைகளைத் தீர்ப்பதற்குச் சத்தியாக்கிரகம் பிரயோகிக்கப்பட்டது. ஆமதாபாத்தில் முதலாளி தொழிலாளி தகராறைத் தீர்க்க; குஜராத்தில் கைரா ஜில்லாவில் மழையின்றி மாசூல் மிகக் குறைந்த பொழுது நிலவரியைக் குறைக்க; வைக்கத்தில் கோவிலில் ஹரிஜனங்களைப் புகவிட; மற்றும் பல துறைகளில் பலாத்காரமின்றித் தகராறுகளையும், அநீதிகளையும் தீர்க்க சத்தியாக்கிரகம் செய்யப்பட்டது. விடுதலை இயக்கத்துக்கு அவை பக்கபலமாக இருந்தன. அவற்றைப் பற்றி இங்கு நான் விவரிக்க விரும்பவில்லை. ஆனால் விடுதலை யுத்தத்தின் முக்கிய கட்டங்களாயிருந்த 1920-23, 1930–33 சத்தியாக்கிர கங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவது அவசியம்.

1920ல் ஒத்துழையாமை இயக்கம் இதே ஆகஸ்டு மாதத்தில் திலகர் மறைந்த நாளில் ஆரம்பமாயிற்று. முதலில், அரசாங்கப் பள்ளிகளை மாணவர்களும் நியாயாலயங்களை வழக்கறிஞர்களும் பகிஷ்கரிக்க வேண்டும், பொதுமக்கள் அந்நிய ஆடையை விலக்க வேண்டும் என்ற பிரசாரமே மேலோங்கியிருந்தது. இவற்றால் பொதுமக்களிடம் உணர்ச்சி மேலிட அரசாங்கம் பல தடை உத்தரவுகளைப் பிறப்பித்தது. அவைகளை மீறி ஆயிரக்கணக்கான தொண்டர்கள் முதன்முதலாகச் சிறை புகுந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் காந்தி

யடிகள் விதித்த கடும் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்துச் சிறையில் இட்ட வேலைகளைச் செய்தும் மற்றும் சிறை விதிகளை அனுசரித்தும் சத்தியாக்கிரகத்தின் கொள்கைகளை அனுஷ்டித்தனர். அந்த சத்தியாக்கிரகம் குஜராத்தில் பார்டோலி தாலுகாவில் காந்தியடிகளின் தலைமையில் ஓர் அஹிம்சைப் புரட்சியாகப் பரிணமிக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் சௌரிசௌராவில் மக்கள் பலாத்காரத்தை உபயோகித்துப் போலீஸ்காரர்களைக் கொன்று அக்கிரமம் செய்ததால் சத்தியாக்கிரக இயக்கத்தைக் காந்தியடிகள் நிறுத்தி வைத்தார்.

அடுத்த பெரும் சத்தியாக்கிரகப் போர் 1930ல் தொடங்கி மூன்று வருடங்கள் நடைபெற்றது. இது உப்பு சத்தியாக்கிரகம், என்று சரித்திரப் பெயர் பெற்றுவிட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியத் தலைவர்களைப் புறக்கணித்துவிட்டு சைமன் பிரபுவின் தலைமையில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிஷனை அனுப்பினர். அதை எல்லா அரசியல் கட்சிகளும் பகிஷ்கரித்தன. அதன் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு ஒரு புதிய அரசியல் திட்டம் நிர்மாணிக்க லண்டனில் வட்டமேஜை மகாநாடு கூட்டப்பட்டது. இந்திய அரசியல், இந்தியாவிலேயே இந்தியர்களால் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்காக உப்புசத்தியாக்கிரகம் செய்யப்பட்டது. தமது சபர்மதி ஆசிரமத்திலிருந்து நூறு தொண்டர்களுடன் கால்நடையாகக் கடற்கரை சென்று தண்டி என்னுமிடத்தில் சட்டத்தை மீறி காந்தியடிகள் உப்பெடுத்தார். அவர் கைது செய்யப்பட்டவுடன், நாடெங்கும் உப்பெடுத்தும், கள்ளுக்கடைகளை மறியல் செய்தும் மற்றும் பல விதங்களில் சத்தியாக்கிரகம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் திருச்சியிலிருந்து வேதாரண்யத்துக்கு ராஜாஜி தலைமையில் ஒரு பெரும் தொண்டர் குழாம் கால்நடையாகச் சென்றது. காந்தியடிகளின் தண்டி யாத்திரையைப் போலவே பொதுமக்களின் பேராதரவு பெற்றது.

உப்பு சத்தியாக்கிரகத்தின் பலனாகக் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டு, காந்தியடிகள் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்





முன் பக்கம்: அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மகாத்மா காந்தி, பண்டித நேரு, வல்லபாய் பட்டேல்.

★

1942-ல் தூதுவராக வந்த கிரிப்ஸ், காந்திஜியோடு உரையாடுகிறார்.

1930ம் ஆண்டில் காந்திஜி செய்த சரித்திரப் பிரசித்தி பெற்ற தண்டி யாத்திரை.



ருச் சென்று பலனின்றித் திரும்பியதும் மீண்டும் சத்தியாக்கிரகம் தொடங்கிற்று. ஆனால் தொண்டர்கள் களைப்புற்றும் பொது மக்களும் மனத் தளர்ச்சியடைந்திருந்ததால் அது படிப்படியாக வேகம் குறைந்து நின்று போயிற்று.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமானதும் பிரிட்டிஷ் அரசாங்கம், பாரதத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமலும் மத்திய சட்டசபையின் சம்மதத்தைத் தேடாமலும் இந்தியாவைச் சண்டையில் புகுத்தியது. இது புதிய சத்தியாக்கிரகப் போருக்கு நல்ல சந்தர்ப்பமளித்தது. ஆனால் நமது தலைவர்கள் தர்மசங்கடத்தில் அகப்பட்டுத் தவித்தனர். ஹிட்லர், முசோலினிகளின் அக்கிரமங்களுக்கு எதிராக ஜவாஹர்லால் நேருவின் தூண்டுதலின் பேரில் காங்கிரஸ் மகாசபை பல தீர்மானங்கள் நிறைவேற்றியிருந்தது. அவர்களே இந்த யுத்தத்துக்குக் காரணம் என்றும், அவர்களை எதிர்த்த பிரிட்டனும் பிரான்சும், இதர நேசநாடுகளும் நியாயத்துக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் போர் புரிகின்றனரென்றும் நமது தலைவர்கள் நன்குணர்ந்தனர். அவர்களுக்கு எதிராக ஒன்றும் செய்யக் கூடாது. ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பாரத மக்கள் ஏற்கவில்லை என்பதையும் உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்று விரும்பினர். இதற்காக 1940ல் தனி நபர் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. இது ஒரு விசித்திர சத்தியாக்கிரகமாக இருந்தது. குறிப்பிட்ட தலைவர்களும், தொண்டர்களும் தமது எதிர்ப்பை அமைதியுடன் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டுச் சிறையில் ராஜபோகத்துடன் வசித்தனர். இதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையிலோ, பாரத மக்களின் மனத்திலோ ஏதாவது மாறுதலிருந்ததாவென்பது சந்தேகம். ஆனால் பிரிட்டன் இந்தியாவோடு சமாதானம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அமெரிக்காவிலும், மற்ற நேச நாடுகளிலும் பரவிற்று. யுத்தம் நெருக்கடி நிலைமை அடையவே நேச நாடுகளைத் திருப்தி செய்யப் பிரதமர் சர்ச்சில் கிரிப்ஸை அனுப்பிச் சில சமாதான யோசனைகளைக் காங்கிரஸ், லீக் தலைவர்கள் முன் வைத்தார். அவற்றால் காங்கிரஸ் முஸ்லிம் லீக் பிளவு அதிகரித்ததேயொழிய வேறு பலனில்லை. பர்மா, மலேயா சிங்கப்பூர், இந்தோனீஷியா முதலிய நாடுகளைக் கைப்பற்றிய ஜப்பான், பாரதத்தின் மீது படையெடுக்குமோ என்ற அச்சம் பரவிற்று. சுபாஷ்போஸ் ஜப்பானிடம் சரணடைந்த பிரிட்டிஷ் இந்தியப் படைகளில் பலரைச் சேர்த்து ஓர் இந்திய விடுதலை சைனியம் தயார் செய்து கொண்டிருந்தார்.

இத்தருணத்தில்தான் மகாத்மா காந்தி தமது இறுதிப் போரை நடத்தத் தீர்மானம் செய்தார். அவருடைய அந்தரங்க சகாக்களுக்குள் பெரும் அபிப்பிராய பேதங்கள் இருந்தன. அத்தருணத்தில் சத்தியாக்கிரக இயக்கம் நேசநாடுகளுக்கு எதிராகவும் ஜப்பானுக்குச் சாதகமாகவும் ஆரம்பிக்கப்பட்டதாக உலகெங்கும் கருதப்படும் என்று ராஜாஜி, ஜவாஹர்லால் உள்படப் பலர் எண்ணினர். முஸ்லிம் லீகுடன் ஒப்பந்தமில்லாதபொழுது அவ்வித இயக்கத்துக்கெதிராக முஸ்லிம்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரை ஆதரிப்பார்கள், சமூகச் சண்டை வலுக்கும் என்றும் அஞ்சினர். ஆனால் காந்தியடிகள் மனத்தில் எவ்வித சஞ்சலமும் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் எப்படியாவது வெளியேற வேண்டும், பின்னர் ஜப்பான் வந்தால், சமாளித்துக் கொள்ளலாம்; இந்தத் தருணத்தை விட்டால் அடிமை வாழ்வு மிகவும் நீண்டுவிடும் என்று உறுதியாக நம்பி, 'வெளியேற வேண்டும்' என்ற கோஷத்துடன் இயக்கத்தை ஆரம்பித்தார். எவ்வித நிபந்தனையுமின்றி எல்லா இந்தியரும் அதில் சேரவேண்டும் என்று யோசனை கூறினர்.

மற்ற இரண்டு பெரும் சத்தியாக்கிரகப் போர்களைப் போல் இது ஆங்காங்கு ஒழுங்காகக் கட்டுப்பாட்டுடன் நடைபெறவில்லை. அஹிம்சையென்றால் மனிதர்களைத்தான் துன்புறுத்தலாகாது. அரசாங்கக் கட்டடங்களைக் கொளுத்தலாம், ரயில்களைக் கவிழ்க்கலாம் என்ற யோசனைகள் காந்தியடிகளின் ஆதரவு பெற்று விட்டதாகத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. பலர் ஒளிந்து மறைந்து, பலவித நாசச் செயல்களைச் செய்தனர். அரசாங்கத்தின் அடக்குமுறைகளும் மிகக் கொடியவைகளாக இருந்தன. முற்றிலும், அஹிம்சையுமின்றி, வெளிப் படையான பலாத்காரப் புரட்சியுமின்றி இப்பேரியக்கம் சுமார் இரண்டு வருஷங்கள் நாடெங்கும் பரவி பிரிட்டிஷ் அரசாங்கத்தை மிகவும் கவலைக்குள்ளாக்கி விட்டது. நேச நாடுகள் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்குமுன் இவ்வியக்கம் தளர்ந்து ஏறக்குறைய நின்றுவிட்டது.

சத்தியாக்கிரகத்தின் பலன் நேரிடையாக உருவாவதில்லை. அதன் மூலம் இருதரத்தாரின் மனத்தில் ஏற்படும் மாறுதல்களால் எதிர்பாராத பலன்கள் கிடைக்கின்றன. மூன்று பெரும் சத்தியாக்கிரகப் போர்களும் வெளிப்பார்வைக்குத் தோல்வியுற்ற போதிலும், அவற்றின் மறைமுகப் பயனாக 1947ல் பாரதம் விடுதலை பெற்றது. காந்தியடிகளின் புகழும் உலகெங்கும் பரவியது.

இறுதிப் போரின் பலன்களில் பாகிஸ்தானையும், 1946–47ல் ஏற்பட்ட கொடிய ஹிந்து முஸ்லிம் கலகங்களையும் கணக்கிட வேண்டும் என்று பட்சபாதமற்ற சரித்திர ஆசிரியர்கள் கூறக்கூடும். காங்கிரஸ் இயக்கத்தை எதிர்ப்பதற்காகவே ஜின்னாவுக்குத் தனிப் பெருமை அளித்து முஸ்லிம் லீக்கை ஒரு பெரும் முட்டுக்கட்டையாகவே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்தனர் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறே கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவளித்துத் தொழிலாளர்களிடம் செல்வாக்கு அதிகரிக்கவும், தெலுங்கானா போன்ற பிரதேசங்களில் புரட்சிக் கொள்கையைப் பரப்பவும் வசதியளிக்கப்பட்டதென்பதும் உண்மையே.

ஆனால் புராணத்தில் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து சமுத்திரத்தைக் கடைந்த பொழுது அமுதமும், லக்ஷ்மியும் கிடைத்தது போல் ஆலகால விஷமும் வெளிக் கிளம்பியது. அதே போல் விடுதலைப் போராலும்

சில கஷ்டங்கள் ஏற்படுவது சகஜமே. காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கங்கள் பாரத சரித்திரத்தில் ஒரு முக்கிய பாகமாக அமைந்துள்ளன. அஹிம்ஸா தத்துவம் உண்மையில் முற்றிலும் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், நலன்கள் மட்டுமே கூடியிருக்குமென்றும், அவ்வாறின்றி ஹிம்ஸையும், ஆத்திரமும், சுயநலமும் கலந்திருந்ததால் விடுதலையோடு பலவித தீமைகளையும் பெற்றோமென்றும் சுத்த காந்தி சித்தாந்திகள் வாதிக்கக்கூடும். இதைப் பற்றி என்றும் அபிப்பிராய பேதங்கள் இருந்தே தீரும். நடந்ததனைத்தும் ஈசன் செயல் என்று நம்பி ஏற்று, நன்மைகளை வளர்த்து, தீமைகளை எதிர்த்துக் கருமம் புரிவதே நமது கடன் என்ற கீதோபதேசமே பயன் தரும் புத்திமதியாகும்.

அமெரிக்காவில் அமுத ஷெனாய்

நெடிதுயர்ந்த விருட்சங்கள் சூழ்ந்த ஒரு தோப்பில், தெள்ளிய நீல நீர்த் தடாகக் கரையில் உன்னதமான இசை விருந்து நிகழ்ந்தால் கேட்போரின் உள்ளம் எப்படி உருகும் என்பதற்குப் பிரத்யட்சமான ஒரு சான்று ஜூலை 7ந் தேதி அமெரிக்காவில் பாஸ்டன் நகருக்கு வெளிப்புறத்தேயுள்ள டான் லிங்கரின் மாளிகைத் தோட்டத்தில் கிடைத்தது. இசை விருந்து படைத்தவர் ஷெனாய் வாத்தியத்தில் மகாவித்துவானாக விளங்கும் உஸ்தாத் பிஸ்மில்லா கான் அவர்கள். சுற்றுச் சூழலின் இயற்கை எழிலோடு ஷெனாய் வழங்கிய பாவமும் இரண்டறக் கலந்துவிட்டது. பிஸ்மில்லாகானுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலேயே இந்தச் சிறிய கச்சேரி இடம் பெற்றது.

மறு நாள் மாஸசூஸெட்ஸ் நுட்பத் தொழில் கல்லூரியிலுள்ள கிரெஸ்கி மன்றத்தில் பிஸ்மில்லாகானின் பொதுக் கச்சேரி நடைபெற்றது. முதல் நாள் வரவேற்புக்கும், மறு நாள் நடந்த இக்கச்சேரிக்கும் காரணமாயிருந்தவர் பான் ஓரியண்ட் ஆர்ட்ஸ் ஃபௌண்டேஷனின் நிர்வாக இயக்குநராகிய ஜேம்ஸ் ரூபின் அவர்கள். இக்கச்சேரியைச் சுமார் ஆயிரம் மக்கள் செவிமடுத்தனர். திட்டமிட்ட நேரத்தைவிடக் கச்சேரி மேலும் ஒரு மணி நீடிக்குமாறு இந்த ரசிகர்கள் 'பலவந்தம்' செய்தனர் என்றே சொல்ல வேண்டும்.

இதற்கு மறு நாள் இசைக் கலைஞரின் கோஷ்டியினர் மத்திய நியூயார்க் ராஜ்யத்தில் உள்ள கால்கேட் சர்வகலாசாலைக்குப் புறப்பட்டனர். அங்கு இந்தியக் கலைப் பிரிவைத் தோற்றுவித்துள்ள வில்லியம் ஸ்கெல்டன் அவர்கள், ஷெனாய் போன்ற பஸ்ஸூன் என்ற வாத்தியத்தில் வல்லுநர் ஆவார். உஸ்தாத் பிஸ்மில்லாவும், பேராசிரியர் ஸ்கெல்டனும் செய்துகொண்ட சங்கீதப் பரிவர்த்தனையைக் கேட்டுச் சர்வகலாசாலையின் பெருங் கல்விமான்கள் பேருவகை அடைந்தனர். ஜூலை 11-ந் தேதி கால்கேட் சர்வகலாசாலையில் பிஸ்மில்லா நிகழ்த்திய கச்சேரிக்குப் பெருங் கூட்டம் கூடியிருந்தது. கச்சேரிக்குப்பின் ஒரு மணி நேரத்துக்கு மேலாகப் பலர் தங்களுக்குப் புதிதான ஷெனாய், குந்தா ஆகிய வாத்தியங்களைப் பரிசோதித்துப் பார்த்தனர்.


''சென்ற ஆண்டு அக்டோபரில் எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அம்மையாரின் இசைக் குழுவுடன் அமெரிக்க ராஜ்யங்களில் சுற்றுப் பயணம் செய்ததற்குப் பிறகு இப்போது பிஸ்மில்லா குழுவினரோடு ஒரு வாரமாகப் பயணம் செய்கையில்தான் இத்தகைய மறக்க வொண்ணா அநுபவங்களைப் பெற்றிருக்கிறேன். ஹிந்துஸ்தானி இசை, கர்நாடக இசை என்ற இந்திய சாஸ்திரீய சங்கீதத்தின் இரு பிரிவுகளையும் ரசிப்பதில் அமெரிக்க மக்கள் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இந்திய இசைக்கு அமெரிக்க ரசிகர்களின் கூட்டமும் பெருகி வருகிறது. இந்தியாவின் இசை விற்பன்னர்களிடம் அமெரிக்கர் கொண்டுள்ள அன்பும் மதிப்பும் இறுகி வருகின்றன'' என்றார் ரூபின். பிஸ்மில்லாவைத் தமக்கு ஒரு வாரம் 'கடன்' கொடுத்த ஜே.கே. ஹாஃப்மனுக்கு (நியூயார்க்) ரூபின் நன்றி கூறினார். அமெரிக்கர்கள் பிஸ்மில்லா குழுவினரை எவ்வளவு ரசிக்கின்றனரோ அவ்வளவுக்குப் பிஸ்மில்லா குழுவினரும் அமெரிக்காவை ரசிக்கின்றனர் என்பதில் ரூபின் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கால்கேட்டிலிருந்து நியூயார்க் சென்ற இசைக் குழுவினர் ஹாஃப்மன் ஏற்பாடு செய்துள்ளபடி அமெரிக்கா தேசத்தில் சுற்றுப் பிரயாணம் தொடங்கினார்கள். இத்தேசியப் பயணத்தில் முதல் கச்சேரி ஜூலை 14ந் தேதி நியூயார்க்கிலுள்ள மகத்தான லிங்கன் கேந்திரத்தில் நடந்தது.

அமெரிக்காவில் பிஸ்மில்லாகான் குழுவினர்.









○ விம்பிள்டன் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுச் சாம்பியனான அமெரிக்கர் ஸ்ரீமதி கிங்கை பிரிட்டனைச் சேர்ந்த ஸ்ரீமதி ஜோன்ஸ் பாராட்டிக் கைகுலுக்குகிறார்.

○ ஜனாதிபதி ஜான்சன் தம்பதியினர் தங்கள் முதல் பேரக் குழந்தையை - அருமைப் பேத்தி பாட்ரிக் லிண்டன் நியூஜெண்டை - செட்டன் ஆஸ்பத்திரியில் கண்டு மகிழ்ந்தனர்.



○ ஸ்ரீ அகோபில மடத்தின் 44வது பட்டம் ஜீயராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ இஞ்சிமேடு அழகியசிங்கர் என்னும் ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்திர மகாதேசிகர் அவதரித்த இடம் டாக்டர் ஸ்ரீஹரியால் கல்யாண மண்டபமாகக் கட்டப்பட்டு, அஹோபில மடம் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வேதாந்த தேசிக யதீந்த்ர மகா தேசிகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



○ இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னலாஜி பட்டமளிப்பு விழாவுக்கு ராஜாஜி விஜயம் செய்கிறார். அவருடன் டைரக்டர் சென்குப்தாவும் வருகிறார். பட்டமளிப்பு விழாவில் ராஜாஜி அவர்கள் நிகழ்த்திய உரை சுருக்கமாகவும் கருத்துச் செறிவு மிக்கதாயும் விளங்கியது. பொறி இயல் துறை வல்லுனர்கள் நாட்டுக்கு எவ்வளவு பேர் தேவை என்பதைக் கணக்கிடாமலே இத் துறையில் உயர்கல்வி வசதிகளை அதிகரித்துக் கொண்டு போவதில் பொருளில்லை என்பதை உணர்த்தினார்.

E.I.D.-PARRY IN THE SHOP *From the very beginning Parry & Co. Ltd., later known as the E.I.D.-Parry Group, has been one of the major trading companies in India.*

The E.I.D.-Parry Group distributes machines and spares manufactured by well-known Indian and foreign companies, drugs and chemicals made by leading pharmaceutical companies and household products such as milk-food, biscuits, squashes, flavours and essences, antiseptics, metal and boot polishes, crown corks, paper, starch products and a host of other items.

Trading, however, is only one of the Group's operations as it leads in the manufacture and sale of sugar, confectionery, fertilisers, sanitaryware and a large number of other goods besides the formulation of plant protection products.

Today, the E.I.D.-Parry Group, fondly known as "Parrys" is one of the larger companies in India, consisting of 9 subsidiary and associated concerns, providing employment for more than 10,000 people.



E.I.D.-PARRY LIMITED, Dare House, Madras 1.

SUGAR ● CONFECTIONERY ● FERTILISERS
● PESTICIDES ● POTTERY ● SANITARYWARE ● AGENCIES



fds-eid-543 b

யாரோ இவர் யாரோ?

'சோ'



அத்தியாயம் 1

அமாவாசை இரவு. கும்மிருட்டு. எங்கும் காரிருள். ஒரு பயங்கர நிசப்தம் நிலவியது. திடீரென்று ஒரு கோட்டானின் கூக்குரல் கேட்டது. தொடர்ந்து ஒரு பெண்ணின் அழுகுரல் எழுந்தது. உண்மையைச் சொல்லப் போனால் முதலில் கூவியது கோட்டானா, பெண்ணா என்று தெரியவில்லை. .ஒரு ஆந்தையின் அலறல் எங்கோ கேட்டது.

இப்படி ஆரம்பிக்க இது என்ன துப்பறியும் கதையா? இல்லையே! ஆகையால் அமாவாசையையும் கோட்டானையும் சந்திக்க நமக்கு வாய்ப்பு இருக்காது. அதற்குப் பதிலாகக் கதாநாயகனையும், அவன் நண்பனையும் சந்திக்கவேண்டியது தான். பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை!

இடம்: மதுரை ரயில்வே ஸ்டேஷன். நேரம்: ரயில் வரும் நேரம். ரயில் நிலையத்தில் அவ்வளவு கூட்டத்தில் ஒரு முகம் மட்டும் 'பளிச்' எனத் தெரிகிறதே, ஏன்? அந்த ஒரு நடையில் மட்டும் கம்பீரம் கொடி கட்டிப் பறக்கிறதே, ஏன்? அந்த ஒரு சிரிப்பிலே மட்டும் ஏதோ உள்ளத்தைக் கவரும் ஒரு சக்தி தெரிகிறதே.



ஒரு கரிய உருவம் மெள்ள அடிமேல் அடி வைத்து, இருளோடு இருளாக நிசப்தத்தோடு நிசப்தமாக, கோட்டானோடு கோட்டானாக நகர்ந்து வந்து கையை ஓங்குகிறது. ஓங்கப்பட்ட கையிலே பிடிக்கப்பட்ட கத்தி காட்டப்பட்ட முதுகிலே சரேலெனப் பாய்கிறது. வானமே அதிரும்படி ஒரு கூக்குரல்! ''ஆ!...அய்யோ! அம்மா...!''

ஏன்?... ஏன்?... ஏன் தெரியுமா? அதுதான் கதாநாயகனின் முகம். அது அப்படித்தான் இருக்கும்... ரவி பிளாட்பாரத்தில்

நின்று சுற்றிலும் உள்ள 'கூட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான். ரவிக்குச் சுமார் இருபத்திரண்டு வயது இருக்கலாம். அழகான முகம், அதில் சதா தவழ்ந்து கொண்டே இருக்கும் புன்சிரிப்பு, சுருள் சுருளான கேசம்... அவன் அசல் கதாநாயகன்தான் போங்களேன்!

ரயில் வரும் நேரம். ரயிலுக்கும், மனிதனுக்கும் உள்ள ஒற்றுமைகளை நினைந்து ரவி மனத்துக்குள் வியந்து கொண்டிருந்தான். மனித உணர்ச்சிகள் பற்பல, ரயிலுக்கும்தானே இருக்கிறது? முதல் தர மனிதர், இரண்டாம்தர மனிதர், மூன்றும் தர மனிதர் என்றெல்லாம் மனிதனுக்கு மனிதன் ஒதுக்குவது போல, ரயிலும் ஒதுக்குகிறது. குறித்த நேரத்துக்கு வராமை என்பது ரயிலுக்கும், மனிதனுக்கும் உள்ள மற்றொரு ஒற்றுமை. ரயிலுக்கு எஞ்சினில் நெருப்பு — மனிதனுக்கு வயிற்றெரிச்சல் போல... இப்படி ஓர் ஆழ்ந்த தத்துவ விசாரணையில் ஈடுபட்டிருந்த ரவி, திடீரென்று திரும்பிப் பார்த்தான். ஏன் அவ்வளவு கூச்சல் அங்கே?

இளைஞன் ஓடி வர, அவனை ஒரு நாய் 'விட்டேனு பார் !' என்று துரத்திக் கொண்டிருந்தது.

கட்டுக் குடுமி அவிழ்ந்து காற்றில் பறக்க, காதிலே கடுக்கன் 'பளிச் பளிச்' சென்று மின்ன, கண்கள் முகத்தை விட்டு எப்போது குதித்துவிடலாம் என்று எட்டிப் பார்ப்பது போல் தொத்தி நிற்க ஓடி வந்த இளைஞனைப் பிடித்து நிறுத்தினான் ரவி.



"நாய்.... நாய்....." என்று அலறினான் அந்த இளம் சிங்கம்.

"பதற்றப்படாதே, நான் இருக்கேன்" என்று சுத்த வீரனான ரவி அவனுக்கு அபயமளித்தான்.

"மொழ்.... மொழ்....மொழ்ம்ழ்"

'உனக்கு அவ்வளவு தைரியமா?' என்று முறைத்தது நாய்.

"நாய்!" — இளைஞனின் அலறல் கேட்டது!

"தெரியும்!" என்று ரவி கூறி அசையாமல் நின்றான்.

"உனக்குப் பயமா இல்லே?" இப்படி ஒரு தைரியசாலி இருக்கிறானே என்ற வியப்புடன் கேட்டான் அந்தக் கட்டுக் குடுமி இளைஞன்.

"நாம் ஓடினால்தான் நாய் துரத்தும். அப்படியே நாம் அசையாமல் நின்னுடணும். அப்போ....!"

"அது கடிச்சுட்டுப் பேசாமல் போயிடுமா?"

"ரொம்பப் பயந்திருக்கிறே நீ....!"

"அதை எப்படி நீ கண்டுபிடிச்சே?"

இதற்குள் இளைஞனைத் துரத்தி வந்த நாய், இரண்டு மனித ஜன்மங்கள் பேசும்போது நன்றியுள்ள ஜன்மமாகிய தனக்கு அங்கு வேலையில்லை என்று தீர்மானித்து அந்த இடத்தை விட்டு அகன்றது.

நாய் காலி செய்து விட்டுப் போன இடத்தில் இப்போது ஐம்பது வயது ஆசாமி ஓடி வந்து நின்றார். அவரைப் பார்த்தாலே அசல் நாட்டுப்புறம் என்று கூறி விடலாம். நாய் மறைந்ததையும், அந்த இடத்தில் இவர் வந்ததையும் கவனிக்காத ரவி, அந்த இளைஞனைப் பார்த்து, "இப்ப பாரு. இந்த நாயை ஒரே ஓர் அதட்டலிலே பிச்சுக்கிட்டு ஓடும்படியாச் செய்யறேன். பாரு!" என்று கூறித் திரும்பினான்.

"ஏண்டா எலே! என்னை நினைச்சுக் கிட்டிருக்கிறே மனசுக்குள்ளாறே? என்னைப் பார்த்தால் நாயாட்டமா தெரியுது?" என்று சீறினார் அவர்.

"இல்லே ஸார்! மன்னிச்சுக்கணும். நீங்க நாய்..." என்று குளறினான் ரவி.

"பல்லைப் பேத்துப்புடுவேன். நானா நாய்?" என்று இரைந்தார் அந்த நாட்டுப்புற மனிதர்.

"அதில்லே ஸார்! நாய் நிற்க வேண்டிய இடத்திலே நீங்க நிக்கிறீங்க" என்று வியாக்கியானம் செய்தான் ரவி.

"ஏன்? இந்த இடம் நாய்க்குத்தான் சேரணும்னு பட்டா எழுதிக் கொடுத்திருக்கிறாங்களா?"

"அதில்லே ஸார்! அந்த இடத்துலே முதல்லே அது நின்னுது. இப்ப நீங்க நிக்கிறீங்க. அதுவே பரவாயில்லே ஸார்!"

"என்னை ஏன் நாய்ன்னே? அதுக்கு இப்ப பதில் சொல்லு!" அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் போல் கேட்டார் அந்தப் பெரியவர்.

"ஸார்! ராமாயணம் படிச்சிருக்கீங்களா? ராமர் கால் பட்ட உடனே ஒரு கல்லு அப்படியே அகலிகை என்கிற பெண்ணா மாறிடிச்சு. இப்ப என் பார்வை பட்டுது! உங்களுக்கு யாரோ கொடுத்த சாபம் நீங்கி, நீங்க நாய் உருவத்தை விட்டு மனுஷனா மாறிட்டீங்க!"

"விளையாடறியா? எவன் நாய்? நானா, உங்கப்பனா?"

"தெரியாது, ஸார்!"

"எல்லாம் இந்தப் பயலாலே வந்தது!" என்று பெரியவர் திடீரென்று அந்த இளைஞன் மீது திரும்பினார். "ஏண்டா, எலே என்னடா இது?" என்று கேட்டார்.

அந்த இளைஞன் நடுங்குவதைப் பார்த்த ரவி தைரியம் சொன்னான்: "பயப்படாதே, நில்லு! ஓடப் பார்க்காதே. ஓடினால் துரத்தும்!"

"அப்பா! என்னை ஒரு நாய் துரத்திச்சு. அதான் ஓடியாந்துட்டேன் அப்பா.... கோவிச்சுக்காதீங்கப்பா!" என்று தயங்கிக் கொண்டே அந்த இளைஞன் பெரியவரிடம் தன் நிலையை விளக்கினான்.

ரவிக்கு அந்த இருவர் உறவுமுறை இப்போதுதான் விளங்கியது. "இவரை அப்பான்னு கூப்பிடறியே! நீ அவர் மகன் போலிருக்குது!" என்று தான் கண்டுபிடித்த உண்மையைப் பிரகடனம் செய்தான்.

அந்தக் குடுமி இளைஞன் முகத்தில் ஒரே வியப்பு. "நீ எப்படியோ எல்லாத்தையும் டக் டக்னு கண்டுபிடிச்சுடறே....!" என்று ரவியைப் பார்த்துக் கூறிவிட்டு, தந்தையிடம், "இவர் தான்பா நாயை விரட்டிக் காப்பாத்தினாரு!" என்றான்

பெரியவருக்கு உண்மையிலேயே ஒரு நாய் அங்கே தோன்றி மறைந்திருக்கிறது என்பது இப்போதுதான் புரிந்தது. "தம்பி! கோவத்திலே ஏதோ கத்திப்புட்டேன். மனசிலே வெச்சுக்காதே. பட்டணத்துக்கா பயணம்?"

"ஆமாங்க...... மெட்ராஸ்தான் போறேன்!"

"நம்ம பயலும் அங்கேதான் போறான். ரொம்பப் பயந்த புள்ளே. பேரு முத்து."

"என் பேர் ரவி, ஸார்!"

''ஏன் தம்பி, ரவி! பட்டணத்திலே வேலை பார்க்கப் போறியா?'' என்று கேட்டார் பெரியவர்.

''இல்லை ஸார்! ஏதோ சும்மாப் போறேன்.''

''நான் வேலை தேடித்தாங்க போறேன்!'' என்றான் முத்து இடையிலே புகுந்து.

''என்ன படிச்சிருக்கிறே?'' என்று முத்துவின் பக்கம் திரும்பிக் கேட்டான் ரவி.

''எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணியிருக்கிறேன்'' என்றான் முத்து.

''தம்பி!'' பெரியவர் இடைமறித்தார். ''படிப்பு போதும்னு நான்தான் நிறுத்திப்புட்டேன். கொஞ்ச நாள் வேலை பார்க்கணும்கிறான். பார்க்கட்டும். அப்பாலே நம்ம பயிரைத்தானே கவனிச்சுக்கிடப் போறான்? பயிரை வளர்க்கப் படிப்பு என்னத்துக்கு ?'' என்று வியாக்கியானம் செய்தார்.

''விவசாயப் படிப்பு படிக்க வைச்சிருக்கலாமே, ஸார்!'' என்று இளமாக ஆலோசனை கூறினான் ரவி.

''விவசாயம் படிச்சுப் பிரயோசனம் இல்லே. விவசாயம் தெரிஞ்சுக்கணும்னு நேரடி அனுபவம் வேணும். வயக்காட்டிலே கத்துக்கிற மாதிரி காலேஜில் கத்துக்கிட முடியாது!'' என்று ஒரு தீர்ப்பளித்தார் பெரியவர்.

''சரி ஸார்! நீங்கள்ளாம் இப்படித்தான் பேசுவீங்க. அது போகட்டும். உங்க பேர் தெரிஞ்சுக்கலாமா?'' என்றான்.

''தணிகாசலம்'' என்றார் பெரியவர்.

''ஏங்க உங்க பையன் மெட்ராஸ்லே எங்கே தங்கப் போகிறான்?'' என்று வினவினான் ரவி.

''ஏதாவது ஹோட்டல்லேதான் இருக்கணும்.....''

''ஸார்! நான் மெட்ராஸ்லே தனியாத்தான் இருக்கணும். எங்க வீடு அங்கே இருக்குது. முத்துவும் கூடவே என்னுடன் வந்து இருக்கட்டுமே?''

''எதுக்குத் தம்பி, அதெல்லாம்?'' என்று தட்டிக் கழிக்கப் பார்த்தார் தணிகாசலம்.

''வேலை கிடைச்ச பிறகு வேணுமானால் அவன் சௌகரியம் போல் செய்துக்கட்டும்.''

''என்ன சொல்றே, முத்து?'' என்று நேரடியாகவே தம் பையனை அபிப்பிராயம் கேட்டார் தணிகாசலம்.

''நல்லதாப் போச்சப்பா. எனக்கும் மெட்ராஸ்லே தனியா இருக்கக் கொஞ்சம் பயமாத்தான் இருக்கும்'' என்றான் முத்து தயங்கியபடியே.

''தம்பி ரவி! இவன் படிச்சிருக்கிறானே ஒழிய என்னை மாதிரிதான். கிராமத்துப் பக்கம் இருந்த பையன். எங்க ஊர் படிப்போட சரி.... அதனாலே நீ கொஞ்சம் பையனுக்குத் தைரியம் சொல்லு. நானு இடத்துலே அவன் பழகி நல்லது கெட்டது தெரிஞ்சுக்கட்டும்னு தான் அவனைப் பட்டணத்துக்கு அனுப்பறேன்!'' என்றார் தணிகாசலம்.

''நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க! நம்பகிட்டே சேர்ந்தால் அவன் நல்லா உருப்பட்டுப் போவான்! அவனை நல்லாக் கவனிச்சுக்கறேன்!'' என்று உறுதியளித்தான் ரவி.

தணிகாசலத்துக்கு உள்ளம் பூரித்தது. கிராப் அடித்திருந்தாலும் பையன் ரவி நல்லவன்தான் என்ற முடிவுக்கு வந்தார் தணிகாசலம்.

திடீரென்று பிளாட்பாரம் யுத்தகளமாக மாறியது. ரயில் வருவதைப் புரிந்து கொண்ட ரவியும், முத்துவும் தங்கள் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு ரயிலைப் பார்த்து ஓடினர்.

''அத்திம்பேல்.... அத்திம்பேல்...'' என்று ரவியின் சட்டையைப் பிடித்து இழுத்தான் ஒரு சிறுவன், 'ர'கரத்தையெல்லாம் 'ல'கரமாக மாற்றி!

''டேய், யார்ரா அவன்? நான் இல்லேடா, உன் அத்திம்பேர்!'' என்று கூறி நழுவப் பார்த்தான் ரவி.

''பின்னே எங்க அத்திம்பேல் எங்கே?'' என்று கேள்விக்குறியை எழுப்பினான் சிறுவன்.

''எனக்கென்னடா, தெரியும்!'' என்று ரவி அவனிடமிருந்து திமிறப் பார்த்தான்.

''சொல்லாத்தா உன்னை உதமாத்தேன்!'' 'ட'வெல்லாம் 'த'வாக மாறியது சிறுவனிடத்திலே.

''அறைஞ்சேன்னு தெரியுமா, ராஸ்கல்.... அத்திம்பேலாம் அத்திம்பேல்!'' என்று கையை அடிக்க ஓங்கினான் ரவி.

''ஸ்.... சார்!'' என்று ஒரு வயதான கிழவர், ரவியைத் தடுத்து, ''என்ன ஸார்! பையனை இப்படி அடிக்கலாமோ? இந்தாங்கோ, தூக்கி வைச்சுக்குங்கோ'' என்று கூறிப் பையனின் கையைப் பிடித்துத் தூக்கினார்.

அந்தக் கிழவரைப் பையன் ஒரு முறை பார்த்தான்.

பாவம், கிழவர்! பொக்கை வாயைத் திறந்து சிரித்தார். உடனே பையன், ''அத்திம்பேல், அத்திம்பேல்!'' என்று கூவிக் கொண்டே அவரைக் கட்டிக் கொண்டான்.

கிழவர் ரவியைப் பார்த்து, ''என்ன ஸார் இது?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டார்.

"அதுதான் ஸார், அத்திம்பேல். பையன் தேடறான். அவரைத் தேடிக் கண்டு பிடிக்கக் குடுங்க.... எனக்கு நேர மாச்சு. நான் வரேன்!" என்று கூறிப் பறந்தான் ரவி.

இதற்குள் எல்லாப் பெட்டிகளும் நிரம்பி வழிந்தன. ரவி முதல் வகுப்புப் பெட்டிகள் இருக்கும் பக்கம் போனான். முத்து அவனைப் பிடித்து இழுத்து, "எங்கிட்டே மூணும் கிளாஸ் டிக்கட்டு தான் இருக்குது!" என்ற பயந்த படியே கூறினான்.

"எல்லாம் பார்த்துக்கலாம் வா!" என்று ரவி முத்துவையும் இழுத்துக் கொண்டு முதல் வகுப்புப் பெட்டியி லேயே ஏறினான். ஒரு சில நிமிடங்களுக் கெல்லாம் ரயில் கிளம்பியது. தணிகா சலம் ஓடி வந்து இவர்கள் இருவரும் ஏறிய பெட்டியருகே நின்று, "எலே, முத்து! போன உடனே கடுதாசி போடு. தம்பி ரவி, முத்துவை நல்லாக் கவ னிச்சுக்க!" என்று கூறிக் கொண் டிருக்கும்போது, ரவி ஜன்னலருகே நின்றவன் திடீரென்று பயந்து நடுங்கி, முகமெல்லாம் வெளிறிப் போய், ரயில் பெட்டியின் மூலையில் சென்று பதுங்கினான். தணிகாசலம் ஒன்றும் புரியாமல் திரும்பிப் பார்த்தார்.

"அத்திம்பேல்!" என்றான் சிறுவன்.

"என்னடா எலே?"

"அத்திம்பேல்லா எலே!"


அதற்குள் ஒரு கை அந்தச் சிறுவனை அறைந்தது. "எங்கேடா போயிட்டே, சனி!" சிறுவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. "அத்திம்பேல் ஆப் புத்துத்தா" என்ற குரல் கேட்டு ரவி யும், ரயிலும் மகிழ்ச்சியுறப் பட்டணப் பிரயாணம் தொடங்கியது.

* * *

ரயிலிலே ஏறி அமர்ந்த ரவியும், முத்துவும் சென்னைக்கு வந்து சேரப் பல மணி நேரம் ஆகலாம். ஆனால் நமக்கு அது அவசியமில்லை. ஆகை யால் சென்னையிலே இருக்கும் இரு வாளர் சின்னதுரையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக மனக் குதிரையைத் தட்டிவிட்டு, மதுரையை விட்டுச் சென்னையைப் பிடிப்போம். யார் இந்தச் சின்னதுரை? சின்ன துரையின் மனைவி பார்வதியின் அண்ணன்தான் ரவியின் தகப்பனாரான சபாபதி. சின்னதுரைக்குக் கல்யாணம் நடந்தவுடன் அவருடைய தகப்பனார் கட்டிய வீடு ஏலத்துக்கு வந்துவிட் டது. அதைத் தடுத்து நிறுத்தச் சின்ன துரையின் தகப்பனார், தமது சம்பந்தி அதாவது சின்னத்துரையின் மாமனா ரிடம் பண உதவி கோரினார். அவரோ பலர் முன்னிலையில் சின்ன துரையின் தகப்பனாரை ஏசி, அவ மானப்படுத்தி விட்டார். "இனி என் குடும்பத்துக்கும் உன் குடும்பத்துக்கும் சம்பந்தம் கிடையாது" என்று சபத மிட்டார் சின்னதுரையின் தகப்பனார். அவர் இறந்த பிறகும்கூட இரண்டு குடும்பங்களுக்கும் தொடர்பே இல் லாமற் போய் விட்டது. பார்வதியை யும் கூட, சபாபதியைப் பார்த்து வரக்கூட அனுமதிக்காமல் இருந்துவிட் டார் சின்னதுரை. சமாதானத்துக் காகச் சபாபதி எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஐ. நா. சபை முயற்சிகள் போல் படுதோல்வி யடைந்தன. ரவி யைக்கூட வயது வந்த பிறகு சின்ன துரை குடும்பத்தில் ஒருவருமே பார்த்த தில்லை. அந்த அளவுக்கு ஒதுங்கியே வாழ்ந்தன இரு குடும்பங்களும். ரவி ஊரை விட்டுச் சென்னை புறப்பட்ட தற்குக் காரணமே இந்தக் குடும்ப சரித்திரம்தான். சின்னதுரையின் மகள் சித்ராவுக்கு ரவியைக் கல்யாணம் செய்து வைத்து இரு குடும்பங்களை யும் ஒன்று சேர்த்துவிடலாம் என்று சபாபதி சின்னதுரைக்குக் கடிதம் எழுதினார். அதற்குச் சின்னதுரை தாறு மாறாக ஏசிப் பதில் எழுதிவிட்டார்.







'' அவரை இப்போது பார்க்க முடியாது: சிறிய மோட்டார் கார் திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்!''

ரவி தானே நேரில் சென்று எப்படியாவது சித்ராவை மணந்து இரு குடும்பங்களையும் ஒன்று சேர்ப்பதாகச் சபதமெடுத்தான். சபாபதியும் குடும்பநலனைக் கருதி அதற்குச்சம்மதமளிக்கவே, ரவியின் சென்னைப் பயணம் தொடங்கியது.

சித்ரா நவநாகரிக யுவதி. ஆனால் மேல் நாட்டு நாகரிகத்தில் நீந்திக் கொண்டிருந்தாளே தவிர, 'அதில் மூழ்கிவிட வில்லை. விளையாட்டுப்போட்டிகளில் அவள் பெற்ற பரிசுகளுக்காக அவளுடைய புகைப் படம் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதையே அடையாளமாகக் கருதி, ரவி மணிபர்ஸில் அதைப் பத்திரப் படுத்தி வைத்திருந்தான்.

இந்த விவரங்களையெல்லாம் முத்து கேட்காமலே ரவி அவனுக்குச் செய்தி விளக்கம் செய்பவரைப் போல் கிடுகிடுவென்று சொல்லி முடித்தான்.

''எப்படியாவது சித்ராவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போறேன். இப்பத்தான் எங்கள் குடும்பங்கள் ஒண்ணு சேரும்'' என்று முத்துவிடம் முழங்கினான் ரவி.

''அது எப்படிப்பா முடியும்? நீ சபாபதி பெத்த பிள்ளைன்னு தெரிஞ்சா, சின்னதுரை எப்படித் தம் பொண்ணை உனக்குக் கொடுப்பாரு?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினான் முத்து.

''அவரை யார் கேட்டாங்க? நான் செய்து கொள்ளப் போறது காதல் கல்யாணம்.''

''அந்தப் பொண்ணைக் காதலிக்கப் போறியா?''

''ஆமாம்!''

''அது உன்னைக் காதலிக்க வேண்டாமா?''

''இந்த 'பர்ஸனாலிடி'யைப் பார்த்துக் காதலிக்காமல் இருக்க முடியுமா? என்னை ஒரு தடவை பார்த்தால் போதும். சித்ரா என்னைக் காதலிச்சுடுவா!'' என்றான் ரவி தன் மன்மத சொரூபத்தைச் சுய்மாகப் பாராட்டிய படியே.

''உன்னை ரெண்டாவது தடவை பார்த்தால் காதல் போயிடும்!''

''உனக்கென்னடா, தெரியும், காதலைப் பத்தி?'' என்றான் ரவி அலட்சியமாக. ''குடுமி வைச்சுக்கிட்டிருக்கிற நாட்டுப்புறப் பயலுக்குக் காதலைப் பத்தி என்ன பேச்சு?''

''இந்த வம்பெல்லாம் உனக்கெதுக்கு ரவி, பேசாமல் வேறே ஏதாவது பெண்ணைக் கலியாணம் செய்துக்கோயேன்'' என்று 'அட்வைஸ்' செய்தான் முத்து.

''மணந்தால் சித்ராவையே மணப்பேன். அது முடியாமற் போனால்....'' என்று சபதமிடத் தயாரானான் ரவி.

''முடியாமற் போனால்....?''

''வேறு யாரையாவது மணப்பேன்!''

''சே! இவ்வளவுதானா?''

''முத்து! நிஜமாச் சொல்றேன். இந்தச் சித்ரா என்னைக் காதலிச்சுக் கல்யாணம் செய்துக்கத்தான் போறா; நீ வேணுமின்னா பார்த்துக்கிட்டே இரு.''

''ஆமாம்! அவள் உன்னைக் காதலிச்சுக் கல்யாணம் செய்துக்கிறதை நான் பார்த்துக்கிட்டே இருக்கிறேன். இதுக்குத்தான் நான் மெட்ராஸ் புறப்பட்டேனா? நாளைக்கே எங்கப்பா, 'எலே முத்து. பட்டணத்திலே என்னடா பார்த்தே'ன்னுட்டுக் கேட்டால், நான் என்ன சொல்றது? நீ சித்ராவைக் காதலிக்கிறதைச் சொல்றதா?'' என்று அந்த அப்பாவி கேட்டான்.

''டேய், முத்து! இதோ பார்ரா. இதாண்டா சித்ரா!'' என்று ரவி பத்திரிகையிலிருந்து கத்திரித்து வைத்த அவள் படத்தை மணிபர்ஸிலிருந்து எடுத்துக் காட்டினான்.

''எதுக்குப் பேப்பர்லே அவள் படத்தைப் போட்டாங்க? அந்தப்பொண்ணு தொலைஞ்சு போயிடுச்சா?''

''முட்டாள். ஸ்போர்ட்ஸ்லே எல்லாம் பரிசு வாங்கியிருக்கிறா. அதுக்காகத்தான் இந்தப் போட்டோ வந்திருக்குது. ஓட்டப் பந்தயத்திலே எல்லாம் சித்ராதான் முதல்லே வராளாம்!''

''பொம்பளைங்க ரேஸா ஓடறாங்க! அய்யோ, அது அசிங்கமா இருக்குமே?''

''உங்கிட்டே பேசறேன் பாரு. என் மூளையைச் செருப்பாலே அடிக்கணும்'' என்று தலையில் அடித்துக் கொண்டான், ரவி.

''வேணுமா?''

''என்னது?''

''செருப்பு ?''

''எதுக்கு?''

''அடிக்கணும்னியே ரவி!... கோவிச்சுக்காதே! நீ எடுத்துக்கிட்டிருக்கிற காரியம் சுலபமா முடியும்னு எதிர்பார்க்கிறியா?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினான் முத்து.

''எதையுமே ஒரு முறை முயன்று பார்க்க நான் தயார். இதை இப்படிச் செய்தால் அப்புறமா அது நடக்குமா நடக்காதா என்றெல்லாம் யோசனை செய்து, மூளையைப் போட்டுக் குழப்பக் கூடாது. செய்யறதைத் தைரியமாச் செய்துடணும். அப்பத்தான் வாழ்க்கையிலே உருப்பட முடியும். உன்னையும் என்னை மாதிரி தைரியசாலியாக்கிக் காட்டறேன். நான் சொல்றபடி யெல்லாம் கேளு. போதும்.''

''நான் உருப்பட்ட மாதிரிதான்!''

ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றது. ரவி எட்டிப் பார்த்தான். டிக்கட் பரிசோதகர் வந்து கொண்டிருந்தார்.

''முத்து, டிக்கெட் பரிசோதகர் வராரு...உன் கையிலே முதல் வகுப்பு டிக்கெட் இல்லையே, என்ன செய்யப் போறே! எங்கேயாவது ஒளிஞ்சுக்க...'' என்று எச்சரித்தான் ரவி.

முத்துவுக்குக் கைகால்கள் உதற ஆரம்பித்தன. சிறிது யோசித்துவிட்டு, ''ரவி, உன்னிடம் டிக்கெட்டு இருக்கா?'' என்று கேட்டான் முத்து.

''இதோ!'' என்று கூறி டிக்கெட்டைக் காட்டினான் ரவி.

''காட்டு!'' என்று வாங்கி முத்து முதல் வகுப்பு, மூன்றும் வகுப்பு டிக்கெட்டுகள் இரண்டையுமே சடேலென ஜன்னலுக்கு வெளியே எறிந்து விட்டான்.

''ஏய்! முத்து! ஏண்டா, இப்படிச் செய்தே?'' என்று கோபத்தோடு கத்தினான் ரவி.

''நடக்கிறது இரண்டு பேருக்கும் நடக்கட்டுமே!'' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் முத்து.


''ஐயோ, டிக்கெட் எக்ஸாமினர் வந்துட்டார்!'' என்று ரவி கூவி, முத்துவைப் பேச விடாமல் ஸீட்டுக்கு அடியில் தள்ளி விட்டான்.



டிக்கெட் பரிசோதகர் இவர்கள் அமர்ந்த பெட்டியில் ஏறினார். ரவியை மேலும் கீழும் பார்த்தார். அவர் மனத்தில் காலையிலிருந்தே 'வந்துவிடுவேன், வந்து விடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்த கோபம் இப்போது மூக்கை நெருங்கி விட்டது. ''ஏய், ஜானகி! நீயும் ஒரு மனைவியா? இன்றைக்குக் காலை காப்பியில் சர்க்கரை போடாமலே அனுப்பினாயே, நீயும் ஒரு மனைவியா! பரவாயில்லை. இருக்கட்டும். இந்த உலகமே எனக்கு விரோதம். ஏன் இவன்கூடத்தான். இவனிடம் மட்டும் டிக்கெட் இல்லாமல் இருக்கட்டும்.... என்ன பாடு படுத்துகிறேன், பார்! ஆ! ஜானகி! காப்பிக்குச் சர்க்கரை போடவா நினைவில்லை?.... இப்போது பார், என் சொரூபத்தை!'' என்று மனத்தில், நினைத்த எண்ணங்களை, உதடுகளைக் குவித்து, ''சார், டிக்கெட்!'' என்று ஆக்ரோஷமாக வெளிப்படுத்தினார்.

ரவி அசடு வழியச் சிரித்தான்: ''ஹிஹிஹி.... நீங்கதானே டிக்கெட் எக்ஸாமினர்...... ஹி...ஹி...ஹி.... உங்க டிரஸ்ஸைப் பார்த்தாலே தெரியுதே, நீங்கதான் டிக்கெட் எக்ஸாமினர் என்று. நான்தான் டிக்கெட்! ஐமீன்.... இதுதான் ரயில்... வந்து நிக்கிறீங்களே, உக்காருங்க ஸார்!'' என்று என்னவெல்லாமோ உளறிக் கொட்டினான்.

''டிக்கெட் எடுங்க மிஸ்டர்! டிக்கெட்!'' ஜானகியின் தவறை மறக்க அவரால் முடியவில்லை. 'ஹோம் டிபார்ட்மெண்டு'க்குப் பல்லிளிக்கவேண்டியதுதான். இங்கேயுமா அப்படிச் செய்ய வேணும்? ''உம், சீக்கிரம்! எடு டிக்கெட்!'' என்று அதிகார தோரணையோடு அதட்டினார் அவர். (தொடரும்)

















பைத்தியக்கார உலகம்...!

இந்த வார்த்தையைப் பலபேர் பல சந்தர்ப்பங்களில் சொல்லுவதை நாம் கேட்டிருப்போம். ஆனால் பிரபல அமெரிக்கத் திரைப்படத் தயாரிப்பாளரான ஸ்டான்லி கிராமர் இதை - பைத்தியக்கார உலகத்தை - சித்திரித்துக் காட்டியுள்ள முறை ரொம்பப் பிரமாதமானது. பணம் மனிதனைப் பித்தும் செய்யும் என்பது உலக வழக்கு. அது பைத்திய மாகவும் அடிக்கும்.-எப்படி என்பதை மிகச் சிறப்பான முறையில் விளக்கி இருக்கிறார் கிராமர். படத்தின் ஆரம்பத்திலேயே தலைப்புக்கள் வரும்போதே நாம் மனம்விட்டுச் சிரிக்க ஆரம்பித்து விடுகிறோம். அப்போது ஆரம்ப மாகும் சிரிப்பு இரண்டரை மணி நேரம் நம்மைக் குலுங்க வைத்து விடுகிறது. ஆமாம்! படம் பார்க்கும் நாம் நமது ஆசனத்தில் உட்கார்ந்திருந்தால்தானே? நாற்காலியின் முனைக்கு நாம் அடிக்கடி துள்ளி நழுவுகிறோம். கதைப் போக்கும் சம்பவங்களும் வயிறு புண்ணாகும் இடைவிடாத சிரிப்புக்கு நம்மை ஆளாக்கி விடுகின்றன. கார் விபத்தில் இறந்து போகும் ஒருவன், சாகுமுன் புதையலைப் பற்றிக் குறிப்பிடுகிறான். அதை அடைய முன்பின் அறிமுகமில்லாத நான்கு கோஷ்டிகள் முயலுகின்றன. ஒவ்வொருவரும் தாங்களே அதை அடைந்துவிட முந்துகின்றனர். அவர்களுக்கு ஏற்படும் அனுபவங்கள், அவஸ்தைகள், ஆசாபாசங்கள், ஆச்சரியங்கள், அசட்டுத் தனங்கள் இவைகளை விளக்குவதே இந்தப் பைத்தியக்கார உலகின் கதை. இதைப் படமாக்கி யிருக்கும் முறை மிகவும் பாராட்டுக்குரியது. அத்தனை காட்சிகளிலும் படம் பார்க்கும் நம்மையும் நிறுத்தி, காமிராவை எப்படித்தான் இயக்கினார்களோ என்ற பிரமிப்பு ஏற்படுகிறது. படம் பார்க்கும் நம்மையும் சிரிக்கும் இன்பப் பைத்தியங்களாக்கி விடுகிறார் ஸ்டான்லி கிராமர். சஃபயர் தியேட்டரில் நடக்கும் இந்தப் பைத்தியக்கார உலகத்துக்குப்போனால் நேரம் போவது தெரியாமல், சிறந்ததொரு காட்சியைப் பார்த்த நிறைந்த மனத்துடனும் சிரித்த முகத்துடனும் வெளி வருவீர்கள். இது ஒரு 70 எம்.எம். படமாக இருப்பது இதன் சிறப்பை இன்னும் ஒருபடி உயர்த்துகிறது.




இலங்கையில் மலை நாட்டில் கண்டி மிகவும் அழகான நகரம். கடல் மட்டத்துக்கு மேல் சுமார் 1700 அடி உயரத்தில் உள்ளது இது. இலங்கையி லுள்ள மலைவாச நகரங் களில் இதுவே மிகவும் எழிலுடையது.

இங்குள்ள ''தலதா மலிகுவா'' என்னும் புத்தர் கோவிலில் உள்ள ''புத்தர் பல்லை''ப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போகின்றனர். இந்தப் பல் இந்தியாவில் உள்ள கலிங்கத்தி லிருந்து கி. பி. நாலாம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்ட தாகக் கூறப்படுகிறது. கோயிலின் முன் பக்கத்தில் எட்டுக் கோண வடிவமுள்ள மாடி உள்ளது. முன்னால் அகழி உள்ளது. மக்கள் இதில் உள்ள மீன்களுக்குத் தீனி போடுகின்றனர். மேலே சென்றால் பலவிதமான காட்சிகளையும் புத்தமத சம்பந்த மான ஓவியங்களையும் காணலாம். பின்பு உட்புறம் சென்று மாடிப் படிகள் வழியாகப் புனிதப் பல் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அடையலாம். லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் உள்ளன. ஐந்து அடுக்குள்ள கோபுரம்போல் நிர்மாணித்து, அலங்காரம் செய்து இரும்புக் கம்பி போட்டுப் பூட்டிய அறையில் அதை வைத்துள்ளார்கள்.

கண்டியில் மற்றோர் அழகான இடம் ஏரி. இதன் நடுவில் ஒரு திட்டும், தென்னை மரங்களும் உள்ளன.





பெரஹரா பெருவிழா

என். ராமகிருஷ்ணன்




✲

இலங்கை மக்களுக்குப்
பெரஹரா விழா
என்றால் ஒரே
கொண்டாட்டம்தான்
அந்த விழாவினுக்கு
நாமும்
சென்று வரலாமா ?

✲







முன்பக்கம்...... ,

1. கண்டி ஏரி. அக்கரையில் தெரிவது தலதா மலிகுவா மாளிகை.

2. மாவலி கங்கையில் யானைகள் நீராடல்.

★

இந்தப் பக்கம்....

1. கண்டிய நடனம்.

2. பெரஹரா ஊர்வலம். யானை புனிதப் பல்லேயுடைய அம்பாரியைத் தாங்கி வருகிறது.

★

புகைப்படங்கள் :

கட்டுரை ஆசிரியர் எடுத்தவை.

★



கண்டி அரசர்களால் ஏரி வெட்டப்பட்டது. படகில் சென்று உல்லாசமாகச் சுற்றிப் பார்க்கலாம். மேட்டுப் பகுதியில் அழகான பூங்கா ஒன்று உள்ளது. கண்டியில் உள்ள ''பேராதனை தாவர இயல் பூங்கா'' உலகப் பிரசித்தி பெற்றது. ''மாவலி கங்கா'' என்ற ஆறும் ஓடுகிறது. கண்டியில் யானைகள் அதிகம். இவை மத்தியான நேரத்தில் மாவலி கங்கையில் நீராடுவதையும், விளையாடுவதையும் ஒரு முறை பார்த்தாலும் போதும், வாழ்நாள் முழுவதும் அதை மறக்க முடியாது!

கண்டி நடனம் மிகவும் சிறப்பானதும் உலகப் புகழ் பெற்றதுமான கலை. வருடம் தோறும் நடைபெறும் கண்டிப் பெருவிழாவான 'பெரஹரா'வில் பலவிதமான கண்டி நடனங்களையும் காணலாம். பெரஹரா என்பது தேசிய விழா என்றே கூறவேண்டும். பாமர மக்கள் பொழுது போக்காகக் கொள்ளும் ஆண்டு விழாவாகக் கொள்

டாடப்படுகிறது. பெரஹராவைக் காண வருடம் முழுவதும் பணத்தைச் சேமித்து, விழாவின் கடைசி மூன்று நாட்களில் செலவிடுவார்கள். பலவிதமான உடைகள் அணிந்து மகிழ்வார்கள். இரவுநேரங்களில் நடைபெறும் இவ்விழா ஊர்வலத்தைப் பார்க்கப் பகலிருந்தே மக்கள் இடம் பிடிக்க ஆரம்பித்து விடுவார்கள். கண்டி அல்லாமல் மற்ற ஊர்களிலும்பெரஹராசிறியஅளவில்நடைபெறும்.

தற்போதுள்ள பெரஹரா கி. பி. 1775ம் ஆண்டில் 'மகாராஜ கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கி' காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்று சரித்திரம் கூறுகிறது. இந்த அரசன் காலத்தில் அரச குடும்பத்தில் இந்தியாவிலிருந்து வந்த ஹிந்து ராஜ வம்சப் பெண்கள் மணம் செய்து கொண்டதால் கொஞ்சம் கொஞ்சமாக ஹிந்து வழிபாட்டு முறைகளும் புத்த மத வழிபாட்டு முறைகளுடன் கலக்க ஆரம்பித்தன.

அரசன் புனிதப் பல்லை பெரஹராவின் போது ஊர்வலமாகக் கொண்டு வந்தான். இன்றும் இந்த முறையில்தான் நடைபெற்று வருகிறது. உண்மையில் அந்தப் புனிதப் பல்லானது ஊர்வலத்தில் கொண்டு செல்லப்படுவதில்லை. அதன் நகல்தான் எடுத்துச் செல்லப்படுகின்றது. 'மளிகுவா' என்ற அலங்கரிக்கப்பட்ட யானைமீது எடுத்துச் செல்லப்படுகிறது. புனிதப் பல்லை அதன் இருப்பிடத்திலிருந்து வெளியில் எடுப்பது பாபம் என்று எண்ணுகின்றனர். நாட்டின் சுபிட்சமும் இதையொட்டித்தான் உள்ளது என்று மக்கள் கருதுகின்றனர்.

'பெரஹரா' என்பது ஊர்வலம் போல் அமைந்துள்ளது. முதலில் சாட்டை அடிப்பவர்கள் வருகிறார்கள். 'பளார் பளார்' என்று நீண்ட சாட்டைகளைச் சொடுக்கிக் கொண்டு செல்கின்றனர். அடுத்தபடியாக இரண்டு வரிசைகளில் கொடிகளைப் பிடித்துக் கொண்டு செல்கின்றனர். பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த கோவில்களின் கொடிகள் காணப்படுகின்றன. அடுத்தபடியாக் யானை மீது ஓர் அதிகாரி வருகிறார். அரசனிடமிருந்து பெரஹரா நடத்த உத்தரவு கொண்டு வருபவர் என்பது கருத்து. இவருக்குப் ''பெரமு நேரலா'' என்று பெயர்.

அடுத்தபடியாக மத்தளம் கொட்டுபவர்கள் வருகிறார்கள். அவர்கள் வீர முரசு கொட்டுவார்கள். தவில்கள், தம்பட்டங்கள் காணப்படுகின்றன. சிலர் புல்லாங்குழல் வாசிக்கிறார்கள். மத்தளம் அடிப்பவர்கள் நாட்டியமாடிக் கொண்டே அடிக்கிறார்கள்.

''கஜநாயக நிலமே'' என்ற தலைவர் அடுத்தபடி வருகின்றார். யானை மீது அமர்ந்து வெள்ளி அங்குசம் கையில் பிடித்துள்ளார். சிங்கள அரசர் காலத்தில் கஜநாயக நிலமே என்பவர் அரசாங்க யானைக் கொட்டடித் தலைவர். அரசனைத் தவிர இவர் மட்டுமே யானைமீது சவாரி செய்யலாம். இவரைத் தொடர்ந்து பலபேர் மத்தளத்துடன் வருவார்கள். அடுத்தபடியாக 'கரிய கோராலே' என்பவர் வருவார். இவர்தான் எல்லாச் சடங்குகளையும் கவனிப்பவர். அடுத்தபடியாகத்தான் மிகவும் முக்கியமான காட்சியைக் காண்கிறோம்.

மிகப் பெரிய 'மளிகுவா யானை' வருகிறது. அதன் மீது வைக்கப்பட்டுள்ளது தங்கப் பேட்டகம். இதற்குள்தான் உள்ளது புத்தர் பல் (நகல்). இதற்கு மேல் அழகான மேல் கட்டி பிடிக்கப்படுகின்றது. யானை நடந்து செல்ல வெள்ளைத் துணி விரிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் புத்தர் கோயிலிலிருந்து வெளி வரும்போது தலைவர் பேட்டகத்தோடு வெள்ளைத் துணிமீது நடந்து வருவார். யானை மீது பேட்டகத்தை வைத்ததும் அது படிகளில் இறங்கி வருகிறது. யானை மிகவும் பயபக்தியுடனும்; ஜாக்கிரதையாகவும் நடக்கும்படி பயிற்றப்பட்டுள்ளது. ரன்தாவின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வகை நாட்டியங்களும் மத்தளங்களும் காணப்படுகின்றன. 'தியவதான நிலமே' என்பவர் பண்டைக் காலத்திய உடையில் காட்சி அளிக்கிறார். அவர் பக்கலில் ஈட்டி தாங்கினவர்களும், குடை பிடிப்பவர்களும் வருகின்றார்கள். இவர்தான் புனித புத்தர் பல்லின் காப்பாளர்.

அடுத்தபடியாக 'நாத தேவாலே' பெரஹரா வருகிறது. பிறகு வரும் ஊர்வலத்துக்குப் பெயர் 'மகா விஷ்ணு தேவாலே' பெரஹரா. இலங்கையில் புத்த மதம் என்றும் நிலைக்க இத் தேவதை ஏற்படுத்தப்பட்டதாக அறிகிறோம். இந்தத் தேவதையே காக்கும் தெய்வம் என்று கூறுகிறார்கள்.

அடுத்தபடியாகக் கதிர்காம தேவாலே பெரஹரா வருகின்றது. யுத்தத்தில் முக்கிய தேவதையாகக் கருதப்படுகின்றது இது. யுத்தத்துக்கு முன் அரசர்கள் இந்தத் தெய்வத்தை வழிபட்டு வந்தார்கள்.

கடைசியாகப் 'பத்தினி தேவாலே' பெரஹரா வருகின்றது. பத்தினித் தெய்வம்தான் அம்மை நோய்களின் கடவுள் என்று எண்ணுகின்றனர். அதனால் அவ்வம்மையாரை சந்தோஷப்படுத்த இந்த ஊர்வலம் நடத்தப்படுகின்றது. கண்ணகியே பத்தினித் தெய்வம் என்று கூறுகின்றனர். தேவாலே என்பதன் பொருள் தேவாலயம் அல்லது கோவில்.

மற்றும் காவடி ஆட்டம், கரகம், வேல் நடனம் முதலியனவும் காணலாம். சிலர்மீது ''சாமி'' வந்துவிடுகிறது. மற்றும் தையாண்டி நடனமும் ஆடுகின்றனர்.


பெரஹரா விழா ஜுலை மாதம் அமாவாசைக்கு மறுநாள் ஆரம்பிக்கப்படுகிறது. ஐந்து இரவுகள் தேவாலாக்களுக்குள்ளேயே ஊர்வலம் நடைபெறும். ஆறாம் நாள் இரவு ''கும்பல் பெரஹரா'' ஆரம்பமாகிறது. கும்பம்போல் உள்ள மண் பாண்டத்தில் மரக் கிளையை நட்டிருப்பதால் இப் பெயர் வந்தது. அன்றுதான் ஊர்வலம் வெளிவரும். எல்லா ஊர்வலங்களும் தலதா மளிகுவா (புத்தர் கோயில்) வந்து அந்தப் பெரிய பெரஹராவுடன் கலக்கும்.

மறுநாள் மத்தியானம் விழா முடிவு பெறும். புனிதப் பல் சின்னம் மறுபடியும் தலதா மளிகுவாவில் வைக்கப்படும். அந்தந்தத் தேவாலய பெரஹராக்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பும். முடிவில் 'வாலியாக்கும்' என்ற திருஷ்டி கழிக்கும் சடங்கு நடைபெறும். இடையூறு ஏதுமின்றி விழாவைப் பார்த்துத் திரும்பிய நாமும்கூட அன்று திருஷ்டி கழித்துக் கொள்ளலாம்தான்!



வசீகரமான வனப்பைப் பெறுங்கள்... முகத்திற்கு மோகன மேன்மை அளியுங்கள்!

வெண்பனிபோன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவிக்கொண்டால் உங்கள் சருமம் மிருதுத்தன்மை பெற்று, மழமழப்பாக, பளிச்சென்று திகழும்... முகத்தில் கரும்புள்ளிகள் வராமல் தடுப்பதோடல்லாமல், காற்றிலும், வெய்யிலினாலும் சருமம் வரட்சி யடையாமல் பாதுகாக்கும். அதைத் தனியாகத் தடவிக் கொள்ளலாம் அல்லது அதன் மீது பவுடர் போடலாம். பவுடர் ஒரேசீராகப் படிந்து, மணிக் கணக்காகக் கலையாமல் இருக்கும்.
உலகெங்கும் பேரழகிகள் பலரும் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகிக்கின்றனர்.




பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—பவுடர் ஒற்றிக்கொள்ள ஒப்பற்ற க்ரீம்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

பத்திரிகையில் பிரமுகர்!


கோவிந்த்

எடுத்த படங்கள் — எடுக்காத படங்கள்




எடுத்த படங்கள்
எடுக்காத படங்கள்
அடிக்கடி பிரசுரமாகி விடவும் 'போஸ்' அடிக்கும் ஒரு போட்டோ...
அதே போட்டோ இதுமாதிரி பிரசுரிக்கப் பட்டால்...
குறிப்பு: வாழைப்பழத் தோலுக்கு நன்றி...
அஸ்திவாரக் கல் நாட்டும் விழா...
அதே இடத்துக்கு வருஷம் கழித்து ஆவலுடன் விஜயம் செய்யும் போது...
எத்தனை வேலை இருந்தபோதிலும் ஒரு மணி நேரமாவது புத்தகங்கள் படிக்காமல் இருக்க மாட்டார்...
எந்த பத்திரிகைகள் என்பது 'குளோஸ் அப்' பில் படம் எடுத்தால் தானே தெரியும்...

எடுத்த படங்கள் , எடுக்காத படங்கள்!





பூவும் பாறையும் (கவிதா)

திரைத் தொழிலுக்குத் திருட்டைத் தொழிலாகக்கொண்ட கதாபாத்திரங்கள் கைகொடுத்து உதவுவதுபோல் வேறு எந்தப் பாத்திரமும் உதவுவதில்லை போலும்! ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கலை இத்தகைய பாத்திரங்களுக்குக் கைவந்த கலையாக இருப்பதால்தானோ என்னவோ, பணம் போடும் முதலாளிகள் தங்கள் முதல் கொள்ளை போகாமல் இருக்கப் பெரும்பாலும் இதுபோன்ற கதைகளையே நாடுகிறார்கள். ஆயினும் கல்லுக்கும் ஈரம் உண்டு, பாறைக்கும் கனிவு-கசிவு உண்டு என்னும் கோட்பாட்டை மீறாமல் தங்கள் பாத்திரங்களின் குண நலன்களைச் சிருஷ்டிக்கிறார்கள். எனவே, இது போன்ற கதைகளின் மையக் கருத்து ஒன்றுபோலவே தோன்றுகிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காகத் தயாரிப்பாளர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் படத்துக்குப் படம் மாறுபட்டிருப்பது போன்ற பிரமையை உண்டுபண்ணுகின்றன.

'பூல் ஔர் பத்தர்' என்னும் ஹிந்திப் படமும் இதற்கு விதிவிலக்கல்ல; மேற்கூறிய கோட்பாட்டை மீறவில்லை. 'சாகா' என்னும் திருடனாக வரும் தர்மேந்திரா, சீடனாக வரும் சசிகலாவின் உள்ளங்கவர் கள்வனாக நடிப்பதோடு ரசிகர்களின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ள முயல்கிறார். அவர் மனத்தை மாற்றிச் சமைக்கமுயலும் சாந்தியோ கதைக்கு ஒரு புரட்சிகரமான திருப்பத்தைத் தந்து சாகாவின் இதயத்தைத் திருடத் துணிகிறார். சாந்தியின் பாத்திரமேற்று நடிக்கும் மீனாகுமாரி தமது சாந்தமான நடிப்பினால் இதயம் கவருகிறார். துணை நடிகராக வரும் ஓ. பி. ரல்ஹானே, தமது விந்தை நடிப்பாலும் சிறப்பான டைரக்ஷனாலும் ஒத்துழைத்து உள்ளங் கவருகிறார். போதாக்குறைக்கு வண்ணப் பதிவும், உத்தியும் வேறு மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இப்படிக் கொள்ளையும் களவுமாகக் குற்றம் புரியும் திரையுலகுக்கு ரசிகர்கள் குழாம் தரும் சரியான தண்டனை பணத்தோடு மனத்தையும் பறிகொடுப்பதாகத்தான் முடிகிறது.



அநுபவி ராஜா அநுபவி

நாகேஷுக்கு நல்லதொரு வாய்ப்பு. ஒன்றுந் தெரியாத பட்டிக்காட்டானாகவும், நாகரிகம் தெரிந்த பிரபுவின் மகனாகவும் வந்து படம் முழுவதும் பரிமளிக்கச் செய்கிறார். இரு வேறு பாத்திரங்களை ஏற்று, இரண்டுக்கும் ஒரு சிறு குறையும் வைக்காமல் மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். அவர் நடிப்பை நன்கு அநுபவிக்க முடிகிறது.

ஒரே மாதிரி தோற்றம் கொண்ட இருவரை வைத்துக் கொண்டு கூத்தடிப்பது நம் பட உலகுக்குப் புதிதல்ல. இரு சகோதரர்கள் அசட்டுத்தனமாக நடந்து கொண்டு தந்தையைத் தொந்தரவுக்குள்ளாக்குகின்றனர். அவர், அவர்களை வெளியேற்றி விடுகிறார். அவரைச் சரிப்படுத்துவதற்காக அண்ணன் தம்பியைக் கொன்று விட்டதாகப் பொய்யாய் நடிக்கப் போக, அது விபரீதமாகி விடுகிறது.

ராஜஸ்ரீயும், ஜயபாரதியும் நாகேஷையும், முத்துராமனையும் கயிற்றில் பிணைத்து ஆட்டி வைப்பது 'ஓவ'ராகப் போய் விடுகிறது. ராஜஸ்ரீ வெறும் கவர்ச்சியைக் காட்டுவதோடு நின்றுவிடாமல், போனால் போகிறதென்று கொஞ்சம் நடித்தும் இருக்கிறார்.

பாடல்கள் பாராட்டும்படியாக இல்லை. நகைச்சுவையை அள்ளி வழங்கும் வேகத்தில் நீதி மன்றத்தைக் கேலிக்கூத்தாக்கி யிருக்க வேண்டாம். இவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டு, அநுபவிக்க முடிந்தால், ''அநுபவி ராஜா அநுபவி'' படத்தைப் பார்த்துச் சிரித்துச் சிரித்து மகிழலாம். ★



ஜெர்மானியக் குட்டிக் கதைகள்

தொகுப்பு:
கு. அழகிரிசாமி

குட்டிக் கதைகள் சொல்வதில் பேராற்றல் படைத்தவர் ஈசாப் என்ற கிரேக்க நாட்டு மேதை. அவரைப் பின்பற்றிச் சிறந்த குட்டிக் கதைகளை எழுதிய பல ஐரோப்பிய ஆசிரியர்களில் ஒருவர் லெஸ்ஸிங் என்ற ஜெர்மானிய அறிஞர். கீழ்க்காணும் அவருடைய குட்டிக் கதைகளில் சில, திருக்குறட் பாக்களைப்போல் எக்காலத்துக்கும் எந்நாட்டினருக்கும் பொருந்தும் நீதிகளையும் உண்மைகளையும் எடுத்துரைக்கின்றன.

ஈசாப்பும் கழுதையும்

ஈசாப்பைப் பார்த்து ஒரு கழுதை, "அடுத்த தடவை என்னைப் பற்றி ஒரு குட்டிக் கதை எழுதுங்கள். நான் எதையாவது புத்திசாலித்தனமாகச் சொல்வது போலவும் அந்தக் கதையில் எழுதுங்கள்" என்று கேட்டுக் கொண்டது.

அதைக் கேட்ட ஈசாப், "நீ புத்திசாலித்தனமாகச் சொல்வதா!" என்று ஆச்சரியப் பட்டார். பிறகு, "உன்னைப் பற்றி அப்படி நான் கதை எழுதினால் உலகத்தார் உன்னை ஈசாப் என்றும் என்னைக் கழுதை என்றும் அல்லவா சொல்வார்கள்?" என்றார் ஈசாப்.





அப்படி ஒரு பறவை!

ஓர் ஆந்தையைப் பார்த்து ஒரு கழுகு பின்வருமாறு கேட்டது:

"மெரோப்ஸ் என்ற ஒரு பறவை இருப்பதாகச் சொல்கிறார்கள். அது பறக்கும்போது வால் மேலே இருக்குமாம்; தலை பூமியைப் பார்த்துக் கொண்டு இருக்குமாம். அப்படியா? அது உண்மைதானா?"


இதைக் கேட்ட ஆந்தை, "இது கத்தப் பொய். மனிதன் கட்டி விட்ட மட்டமான கதை. உண்மையில் மனிதனைத்தான் மெரோப்ஸ் என்று சொல்ல வேண்டும். ஏன் தெரியுமா? அவன் மோட்சத்துக்குச் செல்ல ஆசைப்படுவான்; அதே சமயத்தில் இந்த மண்ணுலகத்தையும் இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டே இருப்பான்" என்று கூறியது.

சிங்கமும் கழுதையும்

ஈசாப் கதையில் வரும் ஒரு சிங்கம் ஒரு கழுதையோடு காட்டுக்குப் போய்க் கொண்டிருந்தது. கழுதை பயங்கரமாகக் கத்தி, சிங்கம் வேட்டையாடுவதற்கு உதவி செய்வது வழக்கம். கழுதையோடு சிங்கம் வருவதைப் பார்த்து மரத்தின் மேல் இருந்த ஒரு காகம், "சிங்கமே! உனக்கு வெட்கமாக இல்லையா? இருந்திருந்து ஒரு கழுதையோடு நீ நடந்து வரலாமா?" என்று கேட்டது.

அதற்குச் சிங்கம், "யாரையெல்லாம் என் நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அவர்களையெல்லாம் என் பக்கமாக நடந்து வருவதற்கு நான் அனுமதிப்பேன்" என்று பதில் சொன்னது.

இப்படித்தான் சாதாரண ஆசாமிகளைப் பெரிய புள்ளிகள் தங்களோடு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.





□ மரணப் படுக்கையில் ஓநாய்

ஓர் ஓநாய் சாகும் தருணத்தில் பழைய நாட்களை யெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது.


''நிஜம்தான்! நான் கொடுஞ் செயல்களைச் செய்த மகா பாவி தான்!...ஆனாலும் முழுக்க முழுக்கப் பாவியல்ல. நான் கெட்ட காரியங்களும் செய்திருக்கிறேன்; அதே சமயத்தில் நல்ல காரியங்களும் நிறையச் செய்திருக்கிறேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஒரு சமயம் ஓர் அசட்டு ஆட்டுக் குட்டி தன் கூட்டத்தை விட்டு விலகி, வழி தவறி என் பக்கத்தில் வந்துவிட்டது. அதை நான் சுலபமாகப் பிடித்துத் தின்றிருக்க முடியும். ஆனாலும் நான் அதற்கு ஒரு தீங்கும் செய்ய வில்லை. அப்படியே விட்டு விட்டேன். அந்தச் சமயத்தில்தான் ஆடுகள் கூட என்னை லட்சியம் செய்யாமல் என்னைப் பார்த்துக் கத்திக் கொண்டும், செருமிக் கொண்டும், பரிகாசம் பண்ணிக் கொண்டும் இருந்தன. அவற்றின் பக்கத்தில் காவல் நாய்கள் இல்லாமலிருந்தும் அந்த ஆடுகளை நான் ஏதும் செய்யவில்லை.''

ஓநாய் இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதைப் பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த ஒரு நரி சொன்னது: ''எனக்கும் அந்த நாட்கள் நன்றாக ஞாபகத்தில் இருக்கின்றன. அப்போது நீ எந்த நிலையில் இருந்தாய் என்பதும் எனக்கு நினைவு இருக்கிறது. அந்தச் சமயத்தில், உன் தொண்டையில் ஓர் எலும்பு சிக்கிக் கொண்டிருந்தது என்பதும் அப்புறம் இரக்கமுள்ள ஒரு கொக்கு உன் தொண்டையிலிருந்து அந்த எலும்பை வெளியே எடுத்தது என்பதும் எனக்கு நினைவு இருக்கிறது.''

இண்டஞ் செடி □

முட்கள் நிறைந்த ஓர் இண்டஞ் செடியைப் பார்த்து ஆந்தை கேட்டது: ''உன் பக்கமாக நடந்து போகிறவர்களின் ஆடை உன் மேல் பட்டால், நீ ஏன் அதை உன் முட்களால் கிழித்து விடுகிறாய்? உனக்கு ஏன் இந்தப் புத்தி? அதனால் உனக்கு என்ன லாபம்?''

''ஒரு லாபமும் இல்லை. அவர்களிடமிருந்து எதையும் அடைய வேண்டும் என்ற ஆசையும் எனக்கு இல்லை. கிழிக்க வேண்டும் என்பதுதான் என் ஒரே ஆசை'' என்றது இண்டஞ்செடி.



சிங்கமும் முயலும் □


ஒரு சிங்கம் ஒரு முயலைத் தனக்குச் சிநேகிதனாக்கிக் கௌரவித்தது. சிங்கத்தைப் பார்த்து முயல் கேட்டது: ''ஆமாம், ஒரு காகம் கத்தினால் சிங்கங்களாகிய நீங்கள் பயந்து ஓட்டம் பிடித்து விடுவீர்கள் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?''

''உண்மைதான். பெரிய மிருகங்களாகிய எங்களுக்குச் சில பலவீனங்கள் உண்டு. ஒரு பன்றி உறுமினால் யானை பயந்துவிடும் என்று சொல்வார்கள். நீயும் கேள்விப்பட்டிருப்பாயே?'' என்றது சிங்கம்.

''ஆம், கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று சொன்ன முயல், மேலும் கூறியதாவது: ''இப்பொழுது அல்லவா தெரிகிறது, முயல்களாகிய நாங்கள் எதற்காக நாய்களைக் கண்டு அப்படிப் பயந்து சாகிறோம் என்பது!''



காலை—நடுப்பகல்—அல்லது இரவு



எச்சமயத்திலும், பகட்டான **கடாவ்** வாயில்களில்

ஃபாஷனின் சின்னமாகத் திகழ்வீர்கள்



தி கடாவ் மகேந்திர ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கோ. லிட்.,

மில்கள்: ஹெயின்ஸ் ரோடு, வொர்லி, பம்பாய்-27. மொத்த வியாபார அலுவலகம்: கோவிந்த் செளக், மூல்ஜி ஜேதா மார்க்கெட், பம்பாய்-2. சில்லறை விற்பனைக் கடைகள்: 216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-1 கடாவ் வாயில், 2/133, மவுண்ட் ரோடு, சென்னை-1

SISTA'S-KMS-389 A Tam

கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்

முன்கதைச் சுருக்கம்

வ. உ. சிதம்பரம் பிள்ளை, திலகர் ஆகியோரைத் தன் தலைவர்களாகக் கொண்ட ரங்கமணிக்குக் காந்திஜியின் அஹிம்ஸா முறையினால் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறக்கவில்லை.

கல்லூரியில் அவன் படிக்கும்போது கமலவாசினி என்ற மாணவியைக் காதலிக்கிறான். அவள் ரங்கமணி விடுதலைப் போரில் குதிப் பதை மறந்துவிட்டுத் தன்னைத் திருமணம் செய்து கொண்டு அமைதியாக, இன்பமாக வாழ வேண்டும் என விரும்புகிறாள். காதலுக்காக லட்சியத்தைத் துறக்க மறுக்கிறான் ரங்கமணி. அவர்கள் பாதை பிரிகிறது. கமலவாசினி ஓர் இன்ஸ்பெக்டரை மணந்து கொள்கிறாள். இது ரங்கமணிக்குத் தெரியாது. ரங்கமணியிடம் ஏற்பட்ட ஏமாற்றம் கமலவாசினியை எல்லாச் சத்தியாக்கிரகிகள் மீதும் கடும் கோபம் கொள்ளச் செய்கிறது. தனது கணவன் வெளானந்தம் சத்தியாக்கிரகிகளிடம் பச்சாத்தாபம் காட்டாது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தூண்டுகிறாள்.

ரங்கமணிக்குச் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளையின் தொடர்பு கிட்டுகிறது. அவர் மூலம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ரகசியச் சதிச் செயல்களில் ஈடுபடும் ஒரு கூட்டத்தில் அங்கத்தினனாகிறான். ஆனால் தந்தையைப் போலன்றி சர்தாரின் மகள் திரிவேணி தீவிர காந்தியவாதி. ரங்கமணி ஒரே ஒரு முறை காந்திஜியைச் சந்தித்துவிட்டால் போதும், அவன் பலாத்காரப் பாதையிலிருந்து விலகி அஹிம்சா மார்க்கத்தை மேற்கொண்டு விடுவான் என்று உறுதியாக நம்புகிறாள். ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தில்லிக்கு வரும் போது பத்திரிகை நிருபர் என்ற முறையில் தில்லிக்கு வருகிறான் ரங்கமணி. ஆனால் உண்மையில் அவன் தலைநகருக்கு வருவது தீவிரவாதிகள் சிலரைச் சந்தித்து ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் சதிச் செயல்கள் பற்றி யோசிக்கத்தான். ரங்கமணியை மனப்பூர்வமாகக் காதலிக்கும் திரி



வேணி அவன் பிரிவைத் தாங்க முடியாமல் வருந்துகிறாள். அவனுடைய புகைப்படம் ஒன்றினை வைத்துக் கொண்டு அதனுடன் இனிய ரகசியங்களைப் பேசிக் கொண்டிருக்கிறாள். ரங்கமணியும் ரகசியம்தான் பேசுகிறான்— சுபாஷ்சந்திர போஸுடன் ரேடியோ மூலம் தொடர்பு கொண்டிருக்கும் சிலருடன் சேர்ந்து.

இந்தச் சமயத்தில் கிரிப்ஸ் தூது தோல்வி அடைந்து அவர் பிரிட்டனுக்குத் திரும்பியிருந்தார்.

★ ★ ★

அத்தியாயம் 30

"பொருத்தமான ஜோடி!"

காங்கிரஸ் பெருந் தலைவர்களையெல்லாம் ஒருமித்து ஒரே இடத்தில் கண்டதும் ஆரம்பத்தில் ரங்கமணிக்கு ஏற்பட்டிருந்த திகைப்பு ஒருவாறு நீங்கியிருந்தது இப்போது. அவன் தைரியமாக ஜவாஹர்லால் நேரு அவர்களை அணுகிப் பத்திரிகை நிருபர் என்ற முறையில் கேட்டான்:



''தற்காப்பு விஷயத்தில் அதிகாரம் இந்தியாவுக்குக் கைமாறப் போவதில்லையாமே?'' என்றான் ரங்கமணி. சிறிது யோசித்துவிட்டு நேரு சொன்னார்:

''சிந்திக்க வேண்டிய விஷயம்தான். இருந்தாலும் அதைக் காரணமாகக் கொண்டு கிரிப்ஸ் திட்டத்தை ஒதுக்கி விட முடியாது.''

''காரியக் கமிட்டி என்ன நினைக்கிறது?'' ரங்கமணி குறுக்கிட்டுக் கேட்டான்.

''இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை.''

''உங்கள் முடிவென்ன?''

''இது நல்ல திட்டம்தான். கவனித்துச் செய்ய வேண்டிய விஷயமும் கூட. நானும் ஒரு முடிவுக்கு இன்னும் வரவில்லை. காரியக் கமிட்டி என்ன முடிவு செய்கிறதோ அதுதான் என் முடிவு. இதற்கு மேல் இப்போது நான் வேறு எதையும் சொல்வதற்கில்லை'' என்றார் நேரு சிரித்துக் கொண்டே.

ஜவாஹர்லால் நேருவிடம் பேசிவிட்டு வெளி முற்றத்துக்கு வந்தான் ரங்கமணி. ஒரு பெரிய தலைவரைப் பேட்டி கண்ட உற்சாகத்தில் மனம் பூரித்திருந்தான். வெளி முற்றத்தை அடைந்த போது கைப்பிடிச்சுவர்ப் பக்கம் ராஜாஜி சென்று கொண்டிருப்பதைக் கண்டான். உடனே விரைந்து சென்று அவரை நெருங்கினான் ரங்கமணி.

ரங்கமணியைக் கண்டதும் ராஜாஜி நின்றார். அவருடைய கறுப்புக் கண்ணாடிக்குள் அவருடைய பார்வையைத் துழாவினான் ரங்கமணி. ஒன்றும் தெரியவில்லை.

"என்ன வேண்டும்?" என்று ராஜாஜி கேட்டார்.

"கிரிப்ஸ் திட்டம் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான் ரங்கமணி.

"பிரிட்டிஷ்காரர்கள் தந்திரசாலிகள். எப்போதுமே இந்த மாதிரி இரண்டுங்கெட்டான் நிலையில்தான் திட்டம் வகுப்பார்கள். அப்போதுதானே திட்டம் ஒருவேளை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், பழியை எங்கள் மீது சுமத்தலாம்!"



"திட்டத்தை ஆதரிக்கிறீர்களா?"

"ஆதரிக்க வேண்டியதுதான். ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதை நாம் நழுவ விட்டு விடக் கூடாது. இதற்கு மேல் பதில் சொல்ல நான் இப்போது தயாரில்லை. பிறகு சந்திக்கலாம்" என்று கூறிவிட்டு ராஜாஜி விடைபெற்றுக் கொண்டார்.

ரங்கமணியைக் கண்டதும் உற்சாகத்தால் அவன் முதுகில் தட்டினார் மில்லர்.

"அற்புதம் மிஸ்டர் ரங்கமணி! முதல் அனுபவத்திலேயே உங்களுக்கு ஒரு 'ஸ்கூப்' கிடைத்து விட்டது. மகத்தான வெற்றி. வாருங்கள். கிரிப்ஸ் பேட்டி விஷயமாக அமெரிக்காவுக்குத் தந்தியில் செய்தி கொடுத்து விட்டு வரலாம். நீங்கள் உங்கள் பத்திரிகைக்குத் தந்தி கொடுங்கள்" என்று அவசரப்படுத்தினார் மில்லர்.

டோங்கா விரைவாக ஓடிக் கொண்டிருந்தது.

"சாதாரணமாகக் காரியக் கமிட்டியின் கூட்டம் முடிந்த பிறகுதான் நிருபர்களுக்குப் பேட்டி கிடைக்கும். கூட்டம் மாலையில்தான் முடியும். நாம் அதற்குள் காரியக் கமிட்டி அங்கத்தினர்களில் முக்கியமானவர்களைச் சந்தித்து விட்டோம்" என்றார் மில்லர்.

"இடையில் நம்மைச் சந்திக்கக் காங்கிரஸ் தலைவர்கள் சம்மதிப்பார்களா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருந்தது" என்றான் ரங்கமணி.

"அவர்கள் சம்மதிக்காவிட்டால் என்ன? நாம் வலியப் போய்ச் சந்தித்து விடவேண்டியதுதானே" என்றார் மில்லர்.

"இருந்தாலும் அழையாத விருந்தாளியாக...?"

"இதையெல்லாம் ஒரு நிருபர் நினைக்கக் கூடாது. மான, அவமான உணர்ச்சிகள் பத்திரிகை நிருபருக்கு இருக்கவே கூடாது. எல்லாவற்றையும் உதறிவிட்டுக் கருமமே கண்ணாயிருப்பவன்தான் உண்மையான நிருபர்." இப்படிக் கூறிவிட்டு மில்லர் எதையோ நினைத்துக் கொண்டவர் போல் சிரித்தார். "உங்களது உடை மாற்றம் எப்படி மந்திரம் போல் வேலை செய்தது பார்த்தீர்களா? மிஸ்டர் ரங்கமணி! உண்மையில் உங்களைப் பார்த்தால் வெறும் சொக்காய்க் காங்கிரஸ்காரர் மாதிரி தோன்ற

வில்லை. அசல் பக்கா காங்கிரஸ்காரர் மாதிரியே இருக்கிறீர்கள்'' என்றார்.

''அதென்ன சொக்காய் காங்கிரஸ், பக்கா காங்கிரஸ்?'' என்று வியப்புடன் கேட்டான் ரங்கமணி.

''உண்மையிலேயே தேசப் பற்றுடன் காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் பக்கா காங்கிரஸ்காரர்கள். வெறும் பகட்டுக்காகவும், சுயநலத்துக்காகவும் கதர் அணிந்து கொண்டு காங்கிரஸ் கட்சிக்குள் வேஷம் போடுபவர்கள் சொக்காய் காங்கிரஸ்காரர்கள்'' என்று பில்லர் விளக்கம் கொடுத்தார்.

இதைக் கேட்டு ரங்கமணி சிரித்தான்.

''தற்காப்பு விஷயத்தை உங்களிடம் கொடுக்க கிரிப்ஸ் தயாராயில்லையே!'' என்றார் பில்லர்.

''முதலில் கொடுப்பதை வாங்கிக் கொள்வோம். தற்காப்பைத் தமதென்று இந்தியா ஏற்று நடத்துவதும் சங்கடந்தானே?'' என்றான் ரங்கமணி.

''நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் என்ன நினைக்கிறார்களோ இதை ஒரு அந்தஸ்துப் பிரச்னையாக நினைத்துவிட்டால் சங்கடந்தான். கிரிப்ஸ் திட்டம், பாகிஸ்தான் பிரிவினைக்கும் வழி வகுக்கிறது'' என்றார் பில்லர்.

அந்தச் சமயத்தில் டோங்கா தந்தி நிலையத்துக்குப் பக்கத்தில் வரவே, வண்டியை நிறுத்திக் கீழே இறங்கினார் பில்லர்.

''தந்தி மூலமே இவ்வளவு செய்திகளையும் அமெரிக்காவுக்கு அனுப்புவதென்றால் ஏகமாகச் செலவாகுமே'' என்றான் ரங்கமணி.

''உடனுக்குடன் தந்தியில் செய்திகள் போயாக வேண்டும். அமெரிக்கப் பத்திரிகை விஷயமே தனி. பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. செய்தியைச் சீக்கிரமாகப் பெற எவ்வளவு வேண்டுமானாலும் நாங்கள் செலவழிக்கத் தயார். போன மாதம் சியாங்காய் ஷேக் இங்கு வந்தாரே அப்போது ஒரே நாளில் நாற்பது தந்திகள் கொடுத்திருக்கிறேன். ஒவ்வொரு தந்தியும் பத்துப் பக்கங்களுக்குக் குறைவிராது'' என்றார் பில்லர். இதைக் கேட்டு ரங்கமணி பிரமித்துப் போனான். செய்திகளைச் சேகரிப்பதில் அமெரிக்கப் பத்திரிகைகள் காட்டும் சுறுசுறுப்பையும், அமெரிக்க நிருபர்களின் திறமையையும் நினைத்து வியப்பில் ஆழ்ந்துவிட்டான்.

தந்தி நிலையத்தில் பில்லர் தந்தியைக் கொடுத்தார். பிறகு ரங்கமணியிடம் திரும்பி ''நீங்கள் தந்தி கொடுக்கவில்லையா?'' என்று கேட்டார்.

''ஊஹூம்... எங்கள் பத்திரிகையின் செய்தி ஏஜெண்ட் இங்கு இருக்கிறார். அவருக்குச் செய்தியைப் போன் செய்து விடுவேன். அவர் தந்தி கொடுத்து விடுவார்'' என்று புளுகினான் ரங்கமணி.

இவ்வளவு சாமர்த்தியமாகப் பொய் சொல்லும் ஆற்றல் இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டதே என்று நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

நிருபர் என்று வேஷம் போட்டு வந்த இடத்தில் உண்மையாகவே நிருபராகப் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டதை எண்ணி வியந்தான். எல்லாமே அவனுக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. அந்த வேடிக்கையிலும் ஒருவித பரபரப்பும், ரசனையும் இருந்ததை உணர்ந்தான்.

இருவரும் டோங்காவில் ஏறித் தங்கள் இருப்பிடம் திரும்பினார்கள். பில்லரை அவருடைய ஹோட்டலில் இறக்கிவிட்டு, கிராண்ட் ஹோட்டலை நோக்கிப் பழைய தில்லிக்கு விரைந்தது டோங்கா. டோங்காவின் ஆட்டத்துக்கு இசைய ரங்கமணியின் மனம் உற்சாகத்தால் ஆடிக் கொண்டிருந்தது.

மாலை ஆறு மணிக்கு ரங்கமணி, பாண்ட்டும் சட்டையும் அணிந்து கொண்டு, தேவிகாவின் மாடிக்குச் சென்றான். அவள், அவனுக்காகவே காத்திருந்தாள்.

''ஒரு முஸ்லிம் நிருபர் தகவல் கொடுத்தார். யார் அவர்?'' என்று ரங்கமணி ஆவலுடன் கேட்டான்.

''ஆசாமி எப்படி இருந்தார்?'' என்று தேவிகா கேட்டாள்.

''தொப்பி வைத்திருந்தார். மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். மீசை வைத்திருந்தார்.''

''நம்மைச் சேர்ந்தவர்தாம். அவரைச் சந்திக்கத்தான் இப்போது போகிறோம்'' என்றாள் தேவிகா. பிறகு அவனையும் அழைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டாள். பஞ்சாபி பாணியில் அவள் அணிந்திருந்த உடை அவள் அழகை எடுத்துக் காட்டியது. இருவரும் ஒரு டோங்காவில் ஏறிக் கொண்டார்கள். வண்டி, குயின்ஸ் ரோடுக்கு வந்து அங்கிருந்த நூலகத்தின் வாசலில் நின்றது. தேவிகா மெதுவாகத் தலையை வண்டிக்கு வெளியே நீட்டிப் பார்த்தாள். சிறிது நேரத்தில் டோங்காவுக்குள் ஒரு நபர் ஏறுவதைக் கண்டு திகைத்தான் ரங்கமணி. ஏறியவர், அவனுக்கு ஏற்கனவே தெரிந்திருந்த முஸ்லிம் நிருபர்தாம்! வண்டியில் அமர்ந்ததும் ரங்கமணியைப் பார்த்துச் சிரித்தார்.

''நிருபர் தொழிலுக்கு நீங்கள் புதிதுதான் என்றாலும், கிரிப்ஸிடம் சக்கைப் போடு போட்டு விட்டீர்கள்!'' என்றார் முஸ்லிம் நிருபர், ஹிந்தியில்.

அவருடைய குரலை எங்கேயோ கேட்ட மாதிரி இருந்தது. எங்கே என்று ஞாபகப் படுத்திக் கொள்ள முடியவில்லை.

''உங்கள் பெயர்?'' என்று ரங்கமணி கேட்டான்.

''உஸ்மான்.''


''நீங்கள் எதில் நிருபராக இருக்கிறீர்கள்?''

''நான் பத்திரிகைக்கு நிருபர் இல்லை. ஒரு தனி நபருக்கு நிருபராயிருக்கிறேன்!''

''யாருக்கு?'' ஆவலோடு கேட்டான் ரங்கமணி.

''சுபாஷ்சந்திர போஸுக்கு.''

இதைக் கேட்டதும் ரங்கமணியின் உடல் சிலிர்த்தது. அந்த நிருபரையே உற்றுப் பார்த்தான். டோங்கா வண்டி, குயின்ஸ் ரோடு வழியாகச் சாந்தினி சௌக் பக்கம் வந்து, ஒரு சந்துக்குள் நுழைந்தது. ஒரு பழைய சிறு வீட்டின் முன்னால் வண்டியை நிறுத்தும்படி சொன்னார் உஸ்மான். மூவரும் வண்டியிலிருந்து இறங்கினார்கள். பூட்டியிருந்த வீட்டைத் திறந்து கொண்டு உள்ளே





வயிற்றுக் கோளாறுகளினால் எங்களுக்கு தொல்லை இல்லை

ஏனெனில் நாங்கள் இப்பொழுது பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம்.

அதிகமான புளிப்புகளினால் ஏற்படும் வயிற்று கோளாறுகள் சிறந்த முறையில் மில்க் ஆப் மக்னீஷியா நிவாரணம் அளிக்கிறது.

பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நவீன விஞ்ஞான முறைக்குத் தெரிந்த ஒரு புளிப்பு நிவாரணி — துரிதமாக பலனளிக்கும். நிச்சயமாகவும் இதமான முறையிலும் பூரண குணம் கிடைக்கும்.

அநேகமாக ஒவ்வொருவரும் சிற்சில சமயங்களில் அஜீரணம், வாயுப் பொருமல், நெஞ்செரிச்சல், அல்லது பித்தம் முதலியவைகளால் அவதிப்படுகிறார்கள்.

ஒருபொழுதும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உங்கள் வசம் இல்லாமல் இருக்க வேண்டாம். அபாயம் அற்றதும் நம்பிக்கையானதுமான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா குடும்பத்தில் எல்லோருக்கும் தேவைப்படும்.

மலச்சிக்கலை பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா இதமான முறையில் நீக்கி உங்களுடைய ஜீரண உறுப்புகளை எப்பொழுதும் போல் இயங்கச் செய்கிறது.

பிலிப்ஸ்

மில்க் ஆப் மெக்னீஷியா

மானுபாக்சரர் : ரிஜிஸ்டர்ட் யூஸர்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மானுபாக்சரிங்)
பிரைவேட் லிமிடெட்,
62, பண்டல் ரோட், கல்கத்தா-19.



நுழைந்தார், உஸ்மான். எல்லாரும் உள்ளே சென்ற பிறகு வாசற் கதவைச் சாத்தித் தாளிட்டாள் தேவிகா.

''டோங்கா நிற்கிறதே !'' என்றான் ரங்கமணி.

''நிற்கட்டும். டோங்காவாலா நம்மைச் சேர்ந்தவன்தான்'' என்றாள் தேவிகா.

வீட்டுக்குள் மின்சார விளக்கை ஏற்றினார் உஸ்மான். முன் அறையிலிருந்த சோபாக்களில் ரங்கமணியும் தேவிகாவும் அமர்ந்தார்கள். உஸ்மான் உள் பக்கம் சென்றுவிட்டுச் சிறிதுநேரத்தில், சாதிக்காய்ப் பலகையில் செய்யப்பட்டிருந்த ஒரு சிறு பெட்டியுடன் வந்தார். ரங்கமணியிடம் பெட்டியை நீட்டினார். பெட்டியை வாங்கிக் கொண்டான் ரங்கமணி.

''நீங்கள் தேடி வந்திருக்கும் ரேடியோ ஒலிபரப்பும் கருவியின் முழு பாகமும் இன்னும் வந்து சேரவில்லை. ஒரு பகுதி மட்டும் இப்போது கிடைத்திருக்கிறது'' என்றார் உஸ்மான்.

''அப்படியானால், முழுவதும் வரும் வரையில் இது, உங்களிடம் இருக்கட்டுமே'' என்றான் ரங்கமணி.

''கூடாது. என்னை இரகசியப் போலீஸார் சுற்றிக் கொண்டே இருக்கிறார்கள். எந்தச் சமயத்திலும் இந்த வீட்டைச் சோதனை போடலாம். ஆகையால், இதை நீங்களே உங்கள் வசம் வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார் உஸ்மான்.

''மற்றப்பகுதிகள் எப்போது கிடைக்கும்?''

''கூடிய விரைவில் கிடைக்கும். எப்படியும் இன்னும் பத்து நாட்களுக்குள் அது பற்றிய தகவல் வந்து விடும். சாமான், ஏடனுக்கு வந்து விட்டதாகத் தகவல் கிடைத்து விட்டது. கராச்சி வழியாகத் தில்லிக்கு வரவேண்டும்'' என்றார் உஸ்மான்.

ரங்கமணி பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். ''இவளை ஹோட்டலில் விட்டு விட்டுப் பிறகு நீ வீட்டுக்குப் போ. ஜாக்கிரதையாகப் போங்கள்!'' என்று கூறி வழியனுப்பினார் உஸ்மான். தேவிகாவும் ரங்கமணியும் வண்டியில் ஏறிய போது, பக்கத்துச் சந்திலிருந்து இரண்டு பேர்கள் எட்டிப் பார்த்தது, தெரு விளக்கின் மங்கிய ஒளியில் தெரிந்தது. உடனே உஸ்மான் வண்டிப் பக்கம் வந்து ரங்கமணியிடமிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் விரைந்தார். ரங்கமணியும் தேவிகாவும் விஷயம் புரியாமல் திகைத்தார்கள். சிறிது நேரத்தில் உஸ்மான் ஒரு மிட்டாய்ப் பெட்டியுடன் வெளியே வந்து வீட்டைப் பூட்டிவிட்டு வண்டியில் ஏறிக் கொண்டார். உஸ்மானும் வண்டியில் ஏறியதைக் கண்டு திகைத்தார்கள்.

''வண்டியை விரைவாகச் செலுத்து'' என்று டோங்காவாலாவுக்கு உத்தரவிட்டார் உஸ்மான்.

''என்ன விஷயம்?'' என்று திகைப்போடு ரங்கமணி கேட்டான்.

''நம்மைப் போலீஸ்காரர்கள் கவனிக்கிறார்கள். வண்டியைத் தொடர்ந்து வந்



''இளம் வித்வான்கள் உங்க கச்சேரியை அடிக்கடி கேட்க வேண்டும். அவர்கள் உங்க கச்சேரியிலிருந்து தெரிஞ்சுக்க வேண்டியது ரொம்ப இருக்கு! எப்படிக் கச்சேரி பண்ணக் கூடாது என்று நன்றாகத் தெரிஞ்சுக்கலாம்!''

தாலும் வரலாம். உங்களுக்குத் துணைக்கு வருகிறேன்'' என்றார் உஸ்மான்.

வண்டி, ஒரு பர்லாங்குகூடச் சென்றிருக்காது. இரண்டு போலீஸ்காரர்கள் சைக்கிளில் வண்டியைத் துரத்திக் கொண்டு வந்து விட்டார்கள். வண்டியை நிறுத்தும்படி கட்டளையிட்டார்கள். வண்டி நின்றது. ஒரு போலீஸ்காரர் வண்டிக்குள் பாட்டரி விளக்கைக் காட்டினார். உஸ்மான் கீழே இறங்கி, ''ஏய், என்ன வேண்டும்?'' என்று அதட்டினார்.

''வண்டிக்குள் என்ன?'' என்று ஒரு போலீஸ்காரர் கேட்டார்.

''எது இருந்தால் உங்களுக்கென்ன?''

''எங்களுக்குச் சந்தேகம். நீங்கள் ரவீந்திர சென் குப்தா வீட்டிலிருந்து வருகிறீர்கள் !'' என்றார் போலீஸ்காரர்.

''வந்தால் என்ன? அவர் எங்களுக்கு நண்பர். பார்த்து விட்டு வருகிறோம். அவர் வீட்டுக்குச் சென்றால் உங்களுக்கென்ன ?''

''அவர் பயங்கரவாதி. சர்க்காருக்கு எதிராக உள்ளவர்.''

''ஓ.... அப்படியா....? எங்களுக்குத் தெரியாதே ! எப்போது காந்திக் கட்சியில் சேர்ந்தார் ?''. என்று கேட்டார் உஸ்மான்.

இந்தச் சமயத்தில் மற்றொரு போலீஸ்காரர், பாட்டரி விளக்கொளியை வண்டிக்

ருள் காட்டினார். உஸ்மான் பாய்ந்து அந்தப் போலீஸ்காரரைப் பிடித்துத் தூரத் தள்ளினார்.

"உள்ளே பெண் பிள்ளை இருக்கிறாள். விளக்கு அடிக்கக் கூடாது என்று உனக்குத் தெரியாது ?" என்று உறுமினார் உஸ்மான்.

"பெட்டிக்குள் என்ன இருக்கிறது? நாங்கள் பார்க்க வேண்டும்" என்றார் போலீஸ்காரர் சற்றுக் கடுமையாக.

"இங்கு பெட்டி ஒன்றும் கிடையாது" என்றார் உஸ்மான்.

"வீட்டுக்குள் இருந்து வரும்போது இதோ, வண்டிக்குள் இருக்கிறாரே இவர், ஒரு பெட்டியை எடுத்து வந்தாரே ?"

"இதோ பெட்டி, பார்த்துக் கொள்" என்று கூறி, மிட்டாய்ப் பெட்டியை எடுத்து நீட்டினார் உஸ்மான். பெட்டியைத் திறந்து டார்ச் விளக்கை உள்ளே அடித்துப் பார்த்தார் போலீஸ்காரர். உள்ளே மிட்டாய்கள் மட்டும் இருந்தன. பெருத்த ஏமாற்றத்தால் போலீஸ்காரர்கள் இருவரும் முகம் கண்டிப் போனார்கள்.

"வண்டிக்குள் சோதனை போட வேண்டும். எல்லாரும் கீழே இறங்குங்கள்" என்று கூறி வண்டிக்குள் டார்ச் லைட்டை அடித்துத் துழாவினார்கள். வேறு பெட்டி ஒன்றும் அகப்படவில்லை. மூவரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். போலீஸ்காரர்கள் ஏமாற்றத்தால் மனம் புழுங்கினார்கள். தெரு விளக்கில் அவர்களுடைய முகத்தில் அசடு வழிந்ததைக் கண்டு தேவிகா சிரித்துக் கொண்டாள். ரங்கமணியும் ரசித்துக் கொண்டிருந்தான்.

"உம்!" என்று உறுமிக் கொண்டே பெட்டியை வண்டிக்குள் வீசி எறிந்தார் போலீஸ்காரர்.

"வண்டிக்குள் இருப்பது யார்?" - ஒரு போலீஸ்காரர் கேட்டார்.


"என்னுடைய மகளும், மருமகனும்" என்றார் உஸ்மான்.

"ஓ.... உங்களுக்கு எந்தப் பிரதேசமோ?"

"கராச்சி."

"ஆனால் உங்களுடைய பெண் பஞ்சாபி உடையிலிருக்கிறாளே?" என்று வெடுக்கென்று கேட்டார் ஒரு போலீஸ்காரர்.

"மருமகன் பஞ்சாபி. காதல் கலியாணம்" என்றார் உஸ்மான் தயங்காமல். அந்தப் போலீஸ்காரர்களோ சந்தேகத்துடன் உஸ்மானை உற்றுப் பார்த்தார்கள். தெரு விளக்கில் அவர் முகம் சரியாகத் தெரியவில்லை.



கடைக்காரர் : டேய் முனுசாமி! அந்தப் போர்டு எழுதறவனிடம் கருப்பண்ண முதலியார் கடைன்னு எழுதச் சொன்னேன்... அவன் என்ன எழுதிவிட்டுப் போயிட்டான் பாருடா?.-. வாசலிலே 'இன்கம் டாக்ஸ்' காரர்கள் கூட்டமாகப் போர்டைப் பார்த்தபடி நிற்கிறாங்க !

"சரி, நீங்கள் போகலாம்" என்றார், போலீஸ்காரர் அதிகாரத்துடன். வண்டி புறப்படும் சமயத்தில் மற்றொரு போலீஸ்காரர் கேட்டார் :

"உங்களுக்கும் ரவீந்திரசென்னுக்கும் என்ன தொடர்பு?"

"நண்பர்கள்" என்றார் உஸ்மான்.

"உம்.... சரி!" என்று கூறிவிட்டு இரண்டு போலீஸ்காரர்களும் சைக்கிளில் ஏறிக் கொண்டு எதிர்த் திசையில் சென்றார்கள்.

ஃ ஃ ஃ

வண்டி, ஓராண்ட் ஹோட்டலை நோக்கி விரைந்தது. "நல்ல வேளை, வீட்டு வாசலிலேயே கவனித்தேன். இல்லையென்றால் நீங்கள் அகப்பட்டிருப்பீர்கள்; அந்த ரேடியோ ஒலிபரப்புக் கருவியும் பறி போயிருக்கும்" என்று கூறி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் உஸ்மான்.

"நீங்கள் எங்களைத் தம்பதிகளாக்கியது தான் பிரமாதம்" என்றாள் தேவிகா. உஸ்மான் சிரித்தார். ரங்கமணியோ கூச்சத்துடன் அவள் பக்கத்தில் அமர்ந்திருந்தான்.

கட்டைப் பிரம்மச்சாரிக்கு அதற்குள் ஒரு மனைவியைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டாரே உஸ்மான் !

"ஏன், நீங்கள் பொருத்தமான ஜோடி தான்; இல்லையா ரங்கமணி?" என்றார் உஸ்மான்.

ரங்கமணிக்கு இந்த தமாஷ்யம் பிடிக்கவில்லை. முகத்தைச் சுளித்துக் கொண்டான். ஆனால் இதைத் தேவிகா ரசித்துச் சிரித்தாள்.

மனிதன்தான் எத்தனை விதமாக நடிக்க வேண்டியிருக்கிறது. கேவலம், ஒரு சாண் வயிற்றுக்காக என்னவெல்லாமோ வேஷம் போடும் இந்தச் சமூகத்தில் நாட்டின் விடுதலைக்காகச் சிறிது நேரம் கணவனாக நடித்தால்தான் என்ன? அந்த நடிப்பில் ரங்கமணிக்கு வெறுப்பில்லை. ஆனால் இருந்திருந்து ஒரு தாசிக்குப் போய்க் கணவனாக நடிக்க வேண்டி வந்ததே என்ற நினைவுதான் அவனுக்குக் கசந்தது. ஆனால் மறுகணமே தேவிகாவின் துணிவும், தியாகமும், சுதந்திர வெறியும் நினைவுக்கு வந்து அவளை அவன் மதிப்பில் உயர்த்தின.

'வெறும் பகட்டும், படாடோபமும் சூழ, அற்ப ஆசைகளைச் சுமந்து கொண்டு சுகத்தை மட்டுமே தேடி அலைந்து உல்லாச வாழ்க்கையில் மிதக்கும் சோம்பேறிப் பெண்களைவிட இந்தத் தேவிகா எவ்வளவோ உயர்ந்தவள்.'- இப்படி எண்ணினான் ரங்கமணி. (தொடரும்)



பி. வி. ஆர்.

முன்கதை

சீதா, ஜானு, கமலா மூவரும் விதவையாகி விட்ட பாகீரதியின் பெண்கள். அவர்கள் வீட்டில் முன் அறையைச் சந்தானம் என்ற வாலிபன் வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசித்து வருகிறான். கமலா கல்லூரியில் படிக்கிறாள். சீதாவும் ஜானுவும் வேலையில் இருக்கிறார்கள். அலமேலு அம்மாளின் சொற்படி கேட்டுச் சீதாவை ரகுபதிக்கு மணம் முடித்துக் கொடுக்க நினைக்கிறாள் தாயார்.

அலமேலு அம்மாள் மகா கெட்டிக்காரி; சுய காரியப் புலி. பிறருக்காகவே வாழ்கிற ஓர் உத்தமப் பிறவியாகத் தன்னைப் பிறர் நினைக்கும்படி திறமையாக நடிப்பாள். எப்படிப் பட்டவர்களும் அவள் பேச்சில் மயங்கி விடுவார்கள்.

அப்படி யிருக்கும்போது வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்கும் கள்ளங் கபடில்லாத பாகீரதியைப் பற்றிக் கேட்பானேன்?

சந்தானத்துக்கு ரகுபதியைப் பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. பாகீரதியிடம் இந்தச் சம்பந்தம் வேண்டாம் என்கிறான்.

ரகுபதி பணக்காரன். சீதா அவனுக்கு வாழ்க்கைப்பட்டால் வறுமை ஒழிவதுடன் மற்ற இரு பெண்களின் திருமணம் பற்றிய கவலையும் நீங்கும் என்று 'கணக்குப் போடுகிறாள் பாகீரதி. 'வேண்டாம்' என்று தடுக்கும் சந்தானத்தின் மீது அவளுக்கு வெறுப்பு வளர்கிறது. தன் பெண்களுக்கெல்லாம் நல் வாழ்வு கிட்டுவதில் சந்தானத்துக்கு விருப்பமில்லை என்ற முடிவுக்கு வருகிறாள் பாகீரதி. அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவனாகக் கருதப்பட்ட சந்தானம் இப்பொழுது பாகீரதியைப் பொறுத்த வரையில் முற்றிலும் விரோதியாகி விட்டான். அவனைக் கண்டாலே பாகீரதிக்குப் பிடிக்கிறதில்லை. இந்த நிலையில் அவன் பேச்சு எப்படி எடுபடும்? அவனுடன் பேசுவதையே நிறுத்தி விட்டாள் பாகீரதி. அவனை லட்சியம் செய்யாமல் கல்யாண காரியங்களைக் கவனிக்கலானாள்.

சந்தானத்துக்கு வேதனை தாங்கவில்லை. ஜானுவும், கமலாவும் அவனிடம் மிகவும் அன்பாயிருந்தபடியினால் அந்தக் குடும்பத்தை விட்டு வெளியேற முடியவில்லை.

அலமேலுவும் வந்து தூபம் போட்டுத் திருமணத்தைக் கூடிய சீக்கிரம் முடிக்கப் பார்க்கிறாள்.

ஜானுவுக்குச் சந்தேகம் முற்றுகிறது. 'அலமேலு இவ்வளவு அவசரப்படுவதன் காரணம் என்ன?' என்று சிந்திக்கத் தொடங்குகிறாள். சந்தானத்தை அவன் காரியாலயத்தில் சந்திக்கச் செல்கிறாள் ஜானு. சந்தானம் இன்று வேலை பார்க்கும் அலுவலகத்தில் தான் முன்பு ரகுபதியும் இருந்தான். அப்போது முதலே ரகுபதியின் நண்பனாக விளங்கி இன்று தன் சக ஊழியனாக இருக்கும் சேஷனிடம் ரகுபதியைப் பற்றிய விவரங்களை விசாரிக்கிறான் சந்தானம். ரகுபதியைப் பற்றிக் காரியாலயத்தில் சில ஃபைல்கள் உள்ளன. அவற்றைத் தன்னிடம் தந்துவிடுமாறு ரகுபதி சேஷனைக் கேட்கிறான். ரகுபதியிடமிருந்து இதைச் சாக்கிட்டுப் பணம் பறிக்கலாம் என்று திட்டம் போடுகிறான் சேஷன். ஆனால் ஒரு நாள் சீதாவைச் சந்திக்க நேர்ந்தபிறகு மனமிளகி விடவே இந்தத் திருமணம் நடக்காமல் பார்த்துக் கொள்வது என்று தீர்மானிக்கிறான். இப்படி சந்தானம், ரகுபதி, சீதா மூவரிடமும் தொடர்பு கொண்டு மையப் புள்ளியாக நிற்கும் சேஷனை அன்று அந்தக் காரியாலயத்துக்குச் சந்தானத்தைத் தேடி வந்த ஜானுவும் சந்திக்க நேருகிறது.

சுவையான முறையில் மேலே கதை வளர்கிறது.

அத்தியாயம் 18

இருபத்து நாலாம் தேதி.

முந்தின நாள் சேஷன் ஆபீசுக்கு வராததைக் குறித்துச் சந்தானம் தன்னுள் யோசித்துக் கொண்டிருந்தான்.

திடீர், திடீரென்று ஆபீஸுக்கு 'மட்டம்' போடும் வழக்கம் சேஷனுக்கு உண்டு. ஆனால் இரண்டு நாட்கள் சேர்ந்தாற் போல் அவன் 'லீவ்' எடுத்துக் கொண்டது இல்லை. ஒரு வேளை ஜுரம் ஏதாவது வந்துவிட்டதோ?

அன்று முழுவதும் அவனுக்கு வேலை ஓடவில்லை. சீதாவின் கல்யாணத்துக்கு இன்னும்

நான்கு நாட்கள் இருக்கின்றன! இந்த எண்ணமே அவன் மனத்துள் புகுந்து சித்திரவதை செய்தது.

இருபத்தைந்தாம் தேதி!

பன்னிரண்டு மணிக்கு மேல் ஆபீசுக்கு வந்த சேஷன் நேராகச் சந்தானத்திடம் போனான்.

''எக்ஸ்க்யூஸ்மி, சார்... ஒரு தலை போகிற காரியமா ஊருக்குப் போக வேண்டியிருந்தது. இன்னிக்குத்தான் வந்தேன்...'' என்றான்.

''சொல்லாமல் கொள்ளாமல் போனால் கம்பெனி வேலையை யார் செய்கிறது?''

''இங்கே 'அரியர்ஸ்' விழுந்தால் கம்பெனி முழுகிடாது ஸார். நான் போன, வேலை இருக்கே, அதைத் தள்ளிப் போட்டிருந்தால் அவ்வளவுதான்...''

''சேஷா, நீ என்ன உளர்றே?''

''இன்னிக்கு என்ன சார் தேதி?...இருபத்தைந்து. இன்னும் ஒரு நாள் பொறுங்கோ... அது சரி, நீங்களும் கலியாணத்துக்குப் போகிறீர்கள் இல்லையா?''


''நாளைக்குச் சொல்லுகிறேன்...''

''போனீர்களா இல்லியான்னு நாளன்னிக்கே சொல்லுங்கள் ஸார்!'' என்ற சேஷன், அடுத்த கணமே, அறையை விட்டு வெளியேறினான்.

ஃ ஃ ஃ

பாரேதியின் வீட்டில் சகல ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. கூறை, நிச்சய தாம்பூலப் புடவைகள் மற்ற துணிமணிகள் யாவும் வாங்கியாகி விட்டது. ஜானு அவற்றைக் கொண்டு வந்து சந்தானத்திடம் காட்டியபோது, அவனுடைய உற்சாகத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''ஜானு! இந்தக் கலியாணத்தை நிறுத்தி விடுகிறவள் போலக் கச்சை கட்டிக் கொண்டு கிளம்பினாயே? இப்போ ஆ, ஊன்னு குதிக்கிறே... ஏன்?'' என்றான் சந்தானம் வியப்புடன்.



''இந்தக் கலியாணம்தான்னு ஒரு வழியா நிச்சயமானப்புறம், பழசையெல்லாம் மறந்துட்டு, நடப்பதை நினைச்சுத்தானே சந்தோஷப்படணும்?''

''அப்போ உனக்குச் சந்தோஷமா?''

''அம்மாவுக்குச் சந்தோஷம், சீதாவுக்குத் திருப்தி... அப்புறம் எனக்கு என்ன? ஒத்துப் போக வேண்டியது தானே?''

''இது உன்னுடைய இயற்கையான சுபாவம் இல்லையே?''

''இயற்கையான சுபாவம் எதுன்னு உங்களுக்குத் தெரியுமாக்கும்... வீடு ஒரே சந்தோஷத்திலே இருக்கிறப்போ, நான் மட்டும் உம்மணாமூஞ்சியா நிற்பானேன்?''

''அதுவும் சரிதான்...''

''கூறைப் புடவையைப் பாருங்கள் நல்ல அரக்கு இல்லியோ?''

''ஆமாம்.''

''நிச்சய தாம்பூலப் புடவையை அக்கா மெர்க்குரிக் கலரிலே செலக்ட் பண்ணியிருக்கா.''

''ஏன் உனக்குப் பிடிக்க வில்லையா?''

''அவளுக்குப் பிடிச்சிருக்கே?''

''நான் கேட்டது, உனக்குப் பிடிக்க வில்லையான்னுதான்.''

''எனக்கு இந்தக் கலரே பிடிக்காது! அம்மா தனக்குப் புடவைவேண்டாம்னு வைச்சுட்டா... இது என்னுடையது... ஒன்லைட் பார்டர்தான். இது கமலா புடவை. இதோ இந்தக் கட்டம் போட்ட மஞ்சள் புடவை யாருக்குத் தெரியுமா?''

''சொல்லு...''

''ஸ்ரீமதி அலமேலு அவர்களுக்கு!''

''அப்படியா?''

''ஆமாம், அவள் செய்திருக்கிற உபகாரத்துக்குக் குறைந்தது நூறு ரூபாய்க்காவது பட்டுப் புடவை எடுக்கணும் என்று அம்மா சொல்லி, எடுத்திருக்கிறோம்....நூத்து எட்டு ரூபாய் விலை.''

சந்தானம் தன்னுள் சிரித்துக் கொண்டே, வேஷ்டிகளையெல்லாம்

அமெரிக்காவில் இருந்தபோது ஓரிரு தடவைகள் தமிழ்நாட்டுச் சாப்பாட்டுக்கு ஏங்கிக் கொண்டு அவருடைய வீட்டுக்குப் போவதுண்டு. அப்போது அநுபவித்த உபசாரத்தின் இதத்தை அவர் இன்னும் மறக்கவில்லை. அவ்வப்போது கடிதம் எழுதுவார். இந்தியாவிலிருந்து அபூர்வமாக ஏதையேனும் வாங்கி அனுப்புவார். பதிலுக்கு இப்படி ஏதாவது வந்து நிற்கும். அநேகமாகப் புத்தகங்கள் தாம். சிலசமயம் இதைப் போல் வேறு பொருட்களும் இருக்கும்.

பிளாஸ்டிக் உறையைக் கிழித்து வெளியே எடுத்தார். அழகான தங்க நிறப் பேனா. பார்வையில் பளபளவென்று மின்னிற்று. மூடியின் மேற்புறம் ஒரு சிறு நகங்கள். எங்கேயோ வரும் வழியில் அடிபட்டிருக்க வேண்டும். விரல் அங்கே தடவியபோது மனத்தில் ஒரு சிறு பச்சாதாபம்கூடத் தோன்றியது. உயிருள்ள பொருளுக்கு ஆறுதலாக நீவிக் கொடுப்பதைப் போல.

மரத் தூளையும், காகிதச் சுருள்களையும் எடுத்துக் குப்பைக் கூடையில் உதறிவிட்டுப் பேனாவை மட்டும் எடுத்து டிராயரில் மறைத்து வைத்துக் கொண்டார். அவருடைய மனம் ஏதோ ஒரு யோசனையில் தீவிரமாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

அனுவுக்குத் தெரியாமல் அதை அவனுடைய கைப் பையில் வைத்துவிடவேண்டும். கொஞ்ச நாட்கள் அவன் கேட்டாலும் ஏதும் சொல்லக் கூடாது. அந்தப் பிரமிப்பில் அவன் ஆழ்ந்து போய்த் திகைத்து நிற்பதை மௌனமாக அநுபவித்துக் கொண்டே இருந்துவிட வேண்டும். அப்புறம் ஒரு நாள் — என்றேனும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் — அவர் உண்மையை வெளியிடலாம். அவருடைய மனத்தையே வெளியிடும் சந்தர்ப்பமாக அமைந்து விடலாமோ, அது? ஏன் கூடாது?

''உங்கள் பேனா ஏதாவது காணுமா ஸார் ?'' என்று கேட்டுக் கொண்டு வந்தான் அனு. ஆடும் ஊஞ்சலில் உட்கார்ந்திருப்பவர்கள் திரும்புவது போல, அவன் பார்வை சுற்றிலும் அலைந்து ஓய்ந்தது.

''இல்லையே ?''

அவன் கண்களில் சிறு வியப்பு தெரிந்தது. யோசனையோடு திரும்பி விட்டான்; நிலவில் நடப்பது போல் நிதானமாக நடந்து கொண்டு. தோள் மேல் தவழ்ந்து அலைந்த துகிலில், நீலச் சுடர்கள் பிறந்து ஆடுவது போன்ற தோற்றம். அவர் பார்வை முதுகு வழியே அந்த அமைப்பின் எழிலில் ஒருகணம் லயித்து நின்றது. இன்னும் இரண்டுநாட்கள். அப்புறம் அவர் உண்மையைச் சொல்லலாம். நடுவில் இரண்டு நாட்கள் விடுமுறையாக நேருகிறது. அதனால் அதில் அதிக சிரமம் இல்லை.

திங்கட்கிழமை.

மணி பதினொன்று இருக்கும். ஏதோ காரியமாக அனுவை அழைக்க நினைத்தவர், சட்டென்று அடக்கிக் கொண்டார்.

''வரலாமா ஸார் ? ஒரு சந்தேகம்—'' இறைந்தாற் போன்ற குரலோடு, கதவின் உள் ஓர் அடி எடுத்து வைத்து நின்றான் ரவி.



''என்ன அப்போதிருந்து பாத்துண்டே இருக்கேள்! என்னமோ ஒண்ணு, இரண்டு, மூணுன்னு எண்ணிண்டு இருக்கேள் ?''

''உன் பொண்ணு டெலிபோன்லே அவ 'பிரண்ட்'' யாரகூடவோ பேசிண்டிருக்கா, இது வரை பதிமூணு தடவை டெலிபோனை இரண்டு காதிலேயும் மாத்தி மாத்தி வைச்சுண்டாச்சு !''

''வாயேன்.''

வந்து உட்கார்ந்து கொண்டான். வெள்ளைக் காகிதத்தில் பென்சிலால் வரைந்த படமும், சிறு கணக்குகளுமாக ஓடிக் கொண்டிருந்தன. எழுதிக் கொண்டிருந்த பேனாவில் மசி ஆகி விட்டது. நிப்பை அழுத்தினாலும் காகிதத்தில் வெள்ளைக் கீறல் மட்டும், நகம் அழுத்தினாற் போல விழுந்தது.

''இதில் எழுதுங்கள் ஸார் !''

ரவி பேனாவைப் பிரித்து எழுதுவதற்குக் கொடுத்தான். விரல்களில் அதைப் பிடித்ததும் மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது அவருக்கு. பவுன் நிற மினுமினுப்பு: மூடியில் அந்த இலேசான நகங்கள். வழுக்கினாற்போலச் செல்லும் எழுத்துக்கள். மனம் பதறி அவருடைய பார்வை அவன்புறம் திரும்பிற்று. குழி வாங்கிய விழிகளில், எரியும் நினைவுக் கனலில், புடைத்தெழுந்து வடியும் பெருமூச்சில், அவனைத் தாக்குவது போன்ற ஒரு சக்தி. அந்தக் கண்களைக் கண்டதும் அவனே திகைத்துப் பின்னடைந்தான்.

''புதுப் பேனா ஸார்.''

அவர் தலையைக் குனிந்து கொண்டார். மண்டையைத் தலையினின்று தனி வில்லையாகப் பெயர்த்து விடுவது போன்ற உள் எழுச்சியில், வலி நெற்றிப் பொட்டைத் துளைத்தது. சுற்றிலும் எல்லாம் சுழன்றன. பார்வை மங்கி இருண்டது.

''எங்கே.... எங்கே வாங்கினாய் ரவி?''

''ஒரு — பரிசு ஸார் !''

பேச்சைப் போல அவன் முகமும் குழைந்தது. நெற்றியில் முத்து முத்தாய் அரும்பும் வியர்வை. கைக்குட்டையை எடுத்து அதை ஒற்றும் பாவனையில் முகத்தை, அங்கே வடிந்த உணர்ச்சியை மறைத்துக் கொண்டான். அவர் அப்புறம் பேசவில்லை.

ஒரு விம்பாகக் கணக்கு மட்டும் ஓடிக் கொண்டிருந்தது. நல்ல வேலை, ஏற்கனவே



போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் தக்கபடி பராமரிக்கும் முறையைக் கற்பிக்க வேண்டிய காலம்

அவள் தேர்ச்சி பெற்று வளர்ந்து வருகிறாள். பிற்கால வாழ்க்கையில் அவள் அநேக முக்கிய விஷயங்களைப் பற்றி உங்களிடமிருந்து கற்றுக்கொள்வாள். பற்களைத் தக்கபடி பராமரிக்கும் முறையை அவளுக்குக் கற்பிக்கத் தவறாதீர்கள். ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் எப்படி போர்ஹான்ஸ் தடுக்க உதவுகிறது என்று அவளுக்குக் கூறுங்கள் இப்போதே அவளுக்குக் கற்றுக் கொடுங்கள். ஏனெனில் அவள் பற்கள் ஆயுள்முழுவதும் நன்றாக இருக்க வேண்டும்.



பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட போர்ஹான்ஸ் பற்பசை ஈறுகளுக்கென விசேஷ மருந்துகளைக் கொண்டது. உங்களுக்கும் சரி, அவளுக்கும் சரி நல்லதென்று நீங்கள் அறிந்த பற்பசை அது. எனவே இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் துலக்க அவளுக்குக் கற்றுக் கொடுங்கள் - ஆயுட்கால பற் பராமரிப்பு முறை அது போர்ஹான்ஸிறால்

பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க இதுவே சிறந்த சமயம்



இலவசம்! "பற்களையும், ஈறுகளையும் பராமரிக்கும் முறை"* என்ற விவரமான வண்ணப் புத்தகம் 10 மொழிகளில்† கிடைக்கிறது. தபால் செலவுக்கு 10 பைசா தபால் தலைகளை அனுப்பவும்: மானேர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10081, பம்பாய்-1.

பெயர் ....

முகவரி ....

† வேண்டிய மொழியைக் கோடிட்டுக்காட்டுக: தமிழ், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, வங்காளம், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.

* உங்கள் குழந்தை படிக்க வேண்டிய முக்கியமான புத்தகங்களுள் இதுவும் ஒன்று.

K 6

போர்ஹான்ஸ் பற்பசை—பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பெற்றது

CHGM-19F B TM

"தெரிஞ்சு செஞ்சா மன்னிப்பே கிடையாது.... என்ன இருந்தாலும் நாங்கள் இவ்வளவு சிரத்தா புத்தியோடு நடந்திருக்கிறோமென்னு நெனைக்கிறப்போ, எனக்கே அவமானமாயிருக்கு!"

"மனித சுபாவம்தான் ஜானு! நீ ஏன் அலட்டிக் கொள்றே? அலமேலு மாமி இந்தக் கலியாணத்தை முடிச்சுக் கொடுக்கிறா... அவ ஞாபகம் இருக்கணும்... இருந்தது. புடவையும் வாங்கி விட்டீர்கள். நான் இந்தக் கலியாணம் வேண்டாம் என்று சொன்னேன். அதனாலே என் நினைவு வரவில்லை... வேஷ்டியும் வாங்கவில்லை.... இதிலே என்ன தப்பு இருக்கு?"

சந்தானத்தின் அலுப்பும் வருத்தமும் உண்மை என்றே நம்பி, கலங்கின ஜானுவின் கண்களில் நீர் துளித்தது. அவள் தன்னைத் தானே சபித்துக் கொண்டாள்.

"நீ ஏன் அசடு மாதிரி கண் கலங்கறே? உலகத்திலே நியாய அநியாயங்களைக் காதாலே கேட்கிறப்போ, அவற்றின் முக்கியத்துவமோ, கொடுமைகளோ தெரியாது. நேரிலே அனுபவிக்கிறபோதுதான் தெரியும். ஏதோ என் மனசிலே வேடிக்கையாத் தோணித்து. இவ்வளவு எல்லாம் வாங்கியிருக்கிறீர்களே, எனக்கு ஒரு வேஷ்டியாவது எடுத்திருக்கிறீர்களா என்று... மனசில் பட்டதை உன்னிடம் சொன்னேன். சும்மா நீ போ. நான் பேசினதையெல்லாம் சீதாகிட்டே சொல்லி வைக்காதே. ராத்திரிப் பூரா அவள் தூங்கமாட்டாள்."

"எனக்கு இன்னிக்குத் தூக்கமே வராது!" என்று கசிந்தாள் ஜானு.

"உனக்கா?" என்று சிரித்த சந்தானம், "படுத்துண்டா பாறாங்கல் மாதிரி தூங்குவியே நீ. உன் கலியாணத்தின் போதாவது, எனக்கு மறக்காமல் வேட்டியும் அங்கவஸ்திரமும் வாங்கச் சொல்லு..." என்றான்.

தூக்க முடியாமல் புடவை மூட்டையைத் தூக்கிக் கொண்டு ஜானு சென்றாள்.

இருபத்தாறும் தேதி.

சந்தானம் ஆபீஸுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். கூடத்தில், பெட்டிகளும், கூடைகளும் நிரம்பிக் கிடந்தன. ஜானுவும் கமலாவும் அங்குமிங்குமாக ஓடி ஓடிச் சாமான்களை எடுப்பதும் வைப்பதுமாக இருந்தார்கள். உள்ளே பாரோதி அம்மாள் சமையல் வேலையில் இன்னும் ஈடுபட்டிருக்க, சீதா எதிலுமே சிரத்தை இல்லாதவளைப் போல் கூடத்துக்கும் வாசலுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் மகிழ்ச்சியின் நிழல் மங்கலாகக் கூடப் பிரதிபலிக்கவில்லை. இனிப் பிழைப்பதற்கே வழி கிடையாது என்று தீர்மானிக்கப்பட்டவள், பிறருக்காக வைத்தியம் பார்த்துக் கொண்டுதான் போவோமே என்று இருப்பது போல இருந்தது அவளுடைய போக்கு. ரேழி வழியாகச் செல்லும் போது இரண்டு தடவைகள் சந்தானத்தின் கண்களோடு அவளுடைய கண்கள் சந்தித்தாலும், அவள் புன்முறுவலிக்கக்கூட இல்லை. அவளுடைய மன நிலையை அறிந்த சந்தானமும் பேச்சுக் கொடுக்கவில்லை.

அவனுடைய மனக் கண்முன், திருமணத்துக்குத் தயாராக நின்ற சீதாவின் உருவம் எழுந்தது. நிச்சயிக்கப்பட்ட விவாகத்தை எதிர்நோக்கி அவள் எப்படியெல்லாம் மகிழ்ந்திருப்பாள்? கற்பனையிலேயே நாள் முழுதும் சென்றிருக்குமே? சரியான பருவத்தில், அந்தப் பருவத் துடிப்பின் உச்சியில் பருவத்துக்கேற்ற உணர்ச்சிகளை அவள் உள்ளம் அடக்கிக் கொள்ளாமல்

ஒன்றும் ஒன்றும் இரண்டல்ல!

ஒரு சமயம் கணக்கில் நிபுணரான கல்லூரி மாணவன் ஒருவன், கவிஞர் தாகூரைப் பார்க்க வந்திருந்தான். அவன் கணிதத்தில் தேர்ச்சி பெற்றவன் என்பது தாகூருக்குத் தெரிந்திருந்தது.

"தம்பி! உன்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது. என்னிடம் ஒரு ரூபாய் இருக்கிறது. நாம் இருவரும் மாற்றிக் கொண்டால் இருவரிடமும் அதே தொகை தானே இருக்கும்? இல்லையா?" என்று கேட்டார் தாகூர்.

"ஆமாம்! நீங்கள் சொல்வது சரிதான்" என்றான் மாணவன்.

உடனே தாகூர், "உன் மனத்தில் ஓர் எண்ணம் இருக்கிறது. என் மனத்திலும் ஓர் எண்ணம் இருக்கிறது. நாம் இருவரும் ஒருவருக்கொருவர் எண்ணங்களைச் சொல்லி மாற்றிக் கொண்டால், நம் மனத்தில் இரண்டு எண்ணங்கள் இருக்கும்; இல்லையா?" என்று கேட்டார்.

கணித நிபுணன் அயர்ந்து போய் விட்டான். கணிதப்படி இது சரியா என்று ஆராயத் தொடங்கினானாம் அவன்!

- வசந்தா



ஆனந்த வெறி கொண்டிருக்கும்! பகலில் அவன் கண்ட கனவுகள் கணக்கிலடங்காமற் போயிருக்கும்!

ஆனால் அந்தக் கனவுகள் ஒரு நிமிஷத்தில் சிதைந்தன. 'மணக்கோலத்துக்கு நீ அருகதையில்லாதவன்' என்று விதி சிரித்தது. அதன் சிரிப்பு இப்பொழுது அடங்கி யிருக்கிறதா? அவன் இப்போது மணக் கோலத்துக்கு ஏற்றவன் என்று விதி அங்கீகாரம் செய்து விட்டதா? அப்படியானால் ஏன் அவனுக்குத் தன் கல்யாணத்துக்கு முன்னால் அதே விதி மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் கொடுக்கவில்லை?

சந்தானம் பழனிக்குப் போவதில்லை என்று தீர்மானித்து அன்று காலை பாகீரதி அம்மாளிடமே சொல்லிவிட்டான். அவள் அவனுடைய முடிவைக் கேட்டு ஆச்சரியப்படா விட்டாலும் தனது வருத்தத்தைத் தெரிவித்தாள்.

அன்று கம்பெனியை அடைந்த போது, என்றுமில்லாத சிரிப்பும் களிப்புமாக சேஷன் அட்டெண்டரைக் கேலி செய்து கொண்டிருந்தான். அவனுடைய ஹாஸ்ய வெடிகள் ஒவ்வொன்றையும் டைப்பிஸ்ட் அமிர்தம் ரசித்துக் கொண்டிருந்தாள்.

சந்தானம் வந்து தன் அறைக்குள் நுழைந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் சேஷன் உள்ளே போனான்.

''ஸார்... இன்னிக்குத்தானே கலியாணப் பார்ட்டி போகிறது...?''

''ஆமாம்...''

''எந்த டிரெயின்?''

''ஏன்?''

''எனக்கு வேண்டியவர்களும் பழனிக்குப் போகிறார்கள். வழித்துணைக்கு இருக்குமேன்னு பார்த்தேன்...''

''திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்...''

''வீட்டிலிருந்து எத்தனை மணிக்குப் புறப்படப் போகிறார்கள்??''

''ஐந்தரை மணிக்கு...''

''நீங்களும் போகிறீர்களா?''

''இல்லே....''

''இன்னிக்குச் சாயங்காலம் கொஞ்சம் ஹெவியாகவே டிபன் சாப்பிட்டு விட்டுப் போங்கள்...''

''ஏன்?''

''ராத்திரி சாப்பாடே இல்லாமற் போனாலும் போகலாம்... உங்களுக்கும் ஏதாவது திடீர்னு புதிசா வேலைகள் வரலாம்...''

''எனக்குப் புரியவில்லே. விவரமாகச் சொல்.''

''ரகுபதியும் அலமேலு அம்மாளும் எழும்பூர் ரயில் ஸ்டேஷனிலே சீதாவின் குடும்பத்தாருக்காகக் காத்துக் காத்துக் கால் ஓடிந்து போவார்கள். , ரயிலும் ஆறே முக்காலுக்குப் புறப்பட்டுப் போய்விடும். அப்புறம் அவர்கள் என்னமோ ஏதோ என்று அலறி அடித்துக் கொண்டு அரிசிக்காரன் தெருவுக்கு ஓடோடி வருவார்கள்.... அந்தச் சமயத்திலே இந்தப் பெண்களுக்கும் அந்த வயதுவந்த அம்மாவுக்கும் ஒத்தாசையாக, துணையாக — பலமா நீங்களும் இருக்கிறது நல்லது இல்லையா?''

ஒரு நிமிஷம் சந்தானம் சேஷனைக் கூர்ந்து பார்த்தான். சேஷனுடைய கண்கள் குறும்புச் சிரிப்புச் சிரித்தன.

''என்ன! ஏதாவது திட்டம் போட்டிருக்கிறயா?''

''பின்னே எதற்கு நான் ஊருக்குப் போனேன்னு நெனைச்சீர்கள்? அறுவடையாச்சான்னு பார்க்கிறதுக்கா?''

''...ஊருக்குப் போய்?''

''ரகுபதியின் பெண்டாட்டியையும் பிள்ளையையும் இழுத்து வந்தேன்... 'என் புருஷன் எப்படியோ எங்கேயோ நன்றாயிருந்தாச் சரிதான்... என்னைத் தொந்தரவு பண்ணாதீர்கள்' என்று தான் அந்தப் பெண் சொல்லித்து. 'நீ வராவிட்டா இன்னொரு பெண்ணின் வாழ்க்கையும், ஏன், ஒரு குடும்பமே நாசமாய்ப் போயிடும்' என்று சொல்லி அழைச்சிண்டு வந்திருக்கேன்!''

சந்தானத்தின் திகைப்பில் அவனது உடல் தானாக எழுந்து நின்றது.

''அவனுடைய பெண்டாட்டி செத்து விட்டாள் என்றல்லவா அலமேலு அம்மாள் சொல்லி, பாகீரதியும் நம்பிக் கொண்டிருக்கிறாள்?''

''அவபோது வேறு எப்படிச் சொன்னால் இந்தக் கல்யாணம் நிச்சயமாகும்?''

''நீ சொல்றதெல்லாம் நிஜமா?....''

''சாயங்காலம் இந்தச் சேஷன் ரகுபதியின் மனைவி சாரதாவையும், அவள் பிள்ளை கோபுவையும் அழைச்சிண்டு வந்து, அரிசிக்காரன் தெருவிலே பாகீரதி வீட்டுக் கூடத்திலே நிறுத்தற போது பாருங்களேன். அப்போ நம்பித் தானே ஆகவேண்டும்?''

''ஆமாம், அவர்கள் இத்தனை தூரம் எல்லா ஏற்பாடுகளையும் செய்யறவரைக்கும் சும்மா ஒண்ணும் தெரியாதவனைப் போல இருந்து விட்டு, இப்போ திடுதிப்பென்று வந்து எல்லா விஷயத்தையும் உடைக்கிறயே, எவ்வளவு செலவு ஆகியிருக்கு, தெரியுமா?''

''நான் செலவைப் பார்க்கவில்லே. அந்தப் பணத்தை ரகுபதியிடமிருந்து கறந்து விட என்னால் முடியும். முன்னாலே சொல்லி யிருந்தால் என்ன ஆகியிருக்கும்? சீதாவின் கல்யாணம் நிற்கும். அவ்வளவுதானே? ஆனா இன்னும்

கொஞ்ச நாள் கழித்து இதே அலமேலு அம்மாளும் ரகுபதியுமே வேறு ஒரு ஏழைக் குடும்பத்தைக் குட்டிச் சுவராக அடிக்கப் பார்ப்பார்கள். பத்துப் பேர்களுக்கு நடுவே மானம் போகிற போதுதான் அவனுக்கும் ஒரு பயம் இருக்கும்.''

அவன் சொல்வதில் உண்மை இருக்கிறது என்று தோன்றினாலும் அநாவசியமாகப் பண விரயம் உண்டாகி விட்டதே என்று தன்னுள் நொந்து கொண்டான் சந்தானம்.

''நகையும் துணியும்தானே சார் செலவு... அவையெல்லாம் உபயோகப் படாமலா போகப் போகின்றன?''

அவனுடைய வார்த்தைகள் சந்தானத்தின் காதில் ஏறவில்லை.

''சேஷன்,... எனக்குப் புதிசா ஒரு சந்தேகம் உண்டாகிறது!''

''என்ன சார்....?''

''இந்த ரகுபதி சீதாவையே கலியாணம் செய்து கொள்ள ஒரேமூச்சாக நிற்பதற்கு உனக்கும், எனக்கும், ஏன் அந்த அலமேலு அம்மாவுக்கும்கூடத் தெரியாத ஒரு காரணம் இருக்குன்னு தோன்றுகிறது. ஏன் என்று கேட்டால் சீதா நல்ல பெண் என்றாலும் அழகு அதிகம் இல்லாதவள்.... ஆளை மயக்கக் கூடிய வசீகரம் அவளிடம் கிடையாது...''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. சார்.... எனக்குப் பதினைந்து வருஷமா இந்த ரகுபதியைத் தெரியும். அவனை எனக்குத் தெரியாது என்றே உங்களிடம் இதுவரை சாதித்தேன். அதுக்கு இப்போதும் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். அப்புறமும் தனியாகக் கேட்கிறேன்..... இந்தப் பயல் என் ஊரிலேதான் கல்யாணம் பண்ணிண்டான். அப்போ அவனுடைய அப்பாவே, அவனை 'உபயோகமத்த பிள்ளை' என்று ஊர் அறிய விரட்டி அடித்திருந்தார். வீடுவாசல் ஒன்றிலும் உரிமை கிடையாதுன்னு வேறே பிரகடனப்படுத்தி-யிருந்தார். அந்தச் சமயத்திலேதான், அவன் எங்க ஊரிலே ஒரு பெண்ணைப் பார்த்து, அவளையும் அவ அம்மாவையும் வார்த்தையாலே மயக்கிக் கலியாணம் செய்து கொண்டான். பாண்ட்டும் பூட்சுமாய் 'டக் டக்' கென்று இவன் தோல் பையும் கையுமாக நடந்து போவதையும், டாக்ஸியில் ஓடறதையும் பார்த்து அந்தப் பெண்ணின் அப்பா மயங்கி விட்டார்...''

''என்ன வேலை அந்த ரகுபதிக்கு அப்போ?''

''ஏதோ ஊதியாளு கம்பெனி ஒன்றின் ரெப்ரஸண்டேடிவ்... இந்த உல்லன் ஸ்வெட்டர், சாக்ஸ், போர்



கம்பௌண்டர்: ''என்ன டாக்டர் சார்.... விசிட்டுக்குப் போனீங்களே... இப்ப பேஷண்டுக்கு எப்படி இருக்கு..?''

டாக்டர்: ''ஒண்ணும் பயமில்லே.... நல்லகாலம், சமயத்தில் போய்ச் சேர்ந்தேன்... இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சுப் போயிருந்தேன்னுக்க..... பேஷண்டுக்கு மருந்து இல்லாமலே குணமாகி இருக்கும்!''

வைன்னு ஏதோ சாம்பிள்களையெல்லாம் எடுத்துண்டு அலைவான். எப்படியோ கலியாணம் நடந்தது. அதுக்கு அவனுடைய அப்பாகூடப் போகவில்லை.... அம்மா, பிள்ளையின் அயோக்கியத்தனத்தைக் காணச் சகிக்காமல், முன்னுடியே செத்து விட்டாள்.....''

''நீ இதெல்லாம் ஒண்ணுமே எனக்குச் சொல்லவில்லையே? உம்....அப்புறம்?''

''அப்புறம் என்ன? ஊதியாளு கம்பெனிகளின் சாயம்தான் உங்களுக்குத் தெரியுமே! இருநூறு சாமான்களுக்கு மூன்று ரூபாய் என்று விளம்பரம் வருமே அந்த மாதிரிக் கம்பெனிதான் போலிருக்கிறது, ரகுபதியின் கம்பெனியும். ஆனால் அவனுக்கு அதிருஷ்டம் அடிச்சது. காவேரி ஸ்நானத்துக்குப் போன ரகுபதியின் அப்பாவுக்குக் கரையிலே 'ஹார்ட் அட்டாக்' — பாவி மனுஷன் ஏதாவது உயில் எழுதி, சொத்தை தர்ம ஸ்தாபனங்களுக்கு வைத்திருக்கப் படாதா? உயிலே எழுதாமல் பிராணனை விட்டு விட்டது.''

''உம்...''

''அதுக்கப்புறம்தான் மெட்ராஸ் வந்தான். கோதண்டராமனின் தயவிலே பணம் புரண்டது. இந்தக் கம்பெனியை ஏமாற்றினான் அவருக்காக... கடைசியிலே அவரையும் இருபதாயிரத்துக்கு ஏமாத்தினான். இப்போ ஷா அண்டு ஷாவிலே என்ன செய்கிறானோ? சீட்டாட்டம், ரேஸ், குடி இதெல்லாம் அவனுடைய மூன்று சொர்க்கங்கள் இப்போது....'' என்று இழுத்தான் சேஷன்.

(தொடரும்)

சேகர், டைப் செய்து வைத்திருந்த கடிதத்தை ஒருமுறை படித்தார். ஓரிரு எழுத்துக்கள் தவறியிருந்தன. ஆனால் சிவப்புப் பென்சிலால் அடிக்க மனம் வரவில்லை. வெள்ளைக் காகிதத்தில் அந்த எழுத்துக்களின் வரிசையில் அந்த விரல்களின் அழுத்தம் தெரிவது போன்ற உணர்ச்சி; அதில் ஒரு தனி அழகு; அவற்றைத் திருத்தினால் அந்தக் கோலம் கலைந்துவிடுமென்று நினைப்பது போல. பேனாவை எடுத்து எழுத்துக்களை மென்மையாக உருமாற்றி விட்டார். அனு அந்தக் கடிதத்தை மறுபடியும் டைப் செய்ய வேண்டிய அவசியம் இராது.

பெருமூச்சு விட்டபடி நிமிர்ந்தார். மேஜையின்மேல் பொருத்திய கண்ணாடித் தகட்டில் உருவக் கோட்டின் எல்லை தெரிந்தது. சில சமயம் அனுபமாவின் முகம் யோசனையாகக் குனியும்போது அதில் தெரிவதுண்டு. அவர் சொல்லிக் கொண்டு வரும் வாசகமும் சட்டென்று நின்று போகும். வார்த்தைகள் பொருளில்லாமல் மீன் குட்டிகளைப் போல் மனத்துள் பல வர்ணங்களில் நீந்திக் கொண்டிருக்கும்.

தேடும் பொருளோ, நயம் தரும் சொல்லைத் தேடியோ அவர் நிறுத்துவதாக, அவளும் பொறுமையோடு காத்திருப்பாள். இருவருக்குமிடையே. அந்தச் சொல் ஊமைச் சிரிப்பு சிரித்தபடி ஊசலாடும். புன்சிரிப்போடு அவள் முகம் நிமிரும்போது உதட்டில் பேனாவின் மேல் முனை தட்ட, பார்த்தபடி அமர்ந்திருக்கும்போது மனத்துள் யாரோ கோலமிடுவது போன்ற உவகை பொங்கும்.

அனு அந்த உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டிருக்க முடியுமா?

அலுவலகத்தைப் பொறுத்தவரை, அவருடைய ஒவ்வொரு செயலுக்கும் அவளிடம் நிரல் இருக்கிறது. அவருடைய 'போனை' எடுப்பவளும் பதில் பேசியதும் முடிப்பவளும் அவளே. கைப்பட எழுதாமல், சொல்லி எழுத வைக்கும் கடிதங்கள் அவள் அமைப்பவையே. ஆனால் செயலையும் சொல்லையும் புரிந்து கொண்டு நடக்கும் அவள், ஒன்றன் மேல் ஒன்றாய்த் தம்மை அடுக்கி இழைந்து ஒருங்கே சேரும் மேகங்களைப்போன்ற அவர் மன உணர்ச்சிகளை அறிந்திருப்பாளா?

வேலையின் கடுமை குறைந்த வேளைகளில் சில சமயம் கண்ணாடித் தகட்டில் பேனாவை விரலால் நிற்க வைத்தபடி பள்ளிக்கூடச் சிறுமியைப் போல் உட்கார்ந்திருப்பாள்.

''ஸாரி! இன்றைக்கு....''

அவர் கவனம் அவள் பேச்சில் திரும்பி விடும். பேச்சில் மட்டுமல்ல. நெற்றியில் சரிந்த அந்தக் கூந்தல் இழைகள்? விழிகளின் மேல் இரு நீண்ட கீறல்களாகக் கவிந்த இமைகள்? விளையாட்டாக முறுவலித்துக் கொள்ளும் இதழ்கள்?

குழந்தைகள் பொருமிக் கொண்டு பேசுவது போல, ஒரு துடிப்போடு அவரிடம் பேசுவாள். வீட்டு விஷயங்கள், வழியில் நேர்ந்தவை, மாலையின் பொழுது போக்குத் திட்டம் எல்லாம் போட்டுவிட்டுக் கொண்டு, வந்து நிற்கும்.

''உங்கள் நேரத்தை வீணாக்கி விட்டேன் ஸார் —''

அந்த முத்தாய்ப்பையும் அவளே வைத்து விட்டுப் பேச்சை முடித்துக் கொண்டு எழுந்து விடுவாள். அவள் போன பிறகு சிறிது நேரம் வெளிச்சம் மங்குவது போன்ற, உணர்ச்சிகள் எழுந்து அடங்கிய மன நிலையில், அவர் வேலை ஓடாமல் உட்கார்ந்திருப்பார்.

சேகர் மணம் செய்து கொள்ளவில்லை. ஆரம்ப நாட்களில் படிப்பு ஆர்வம். அப்புறம் தொழிற் பயிற்சியில் அயல் நாட்டுப் பயணம். பிறகு தகுந்த வேலையைப் பிடித்து, படிப்படியாக முன்னேறும் தீவிரம். இப்போது, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நல்ல பதவியில் நிலைத்தாகி விட்டது.



வயதும் நாற்பதுக்கு இரண்டு ஆண்டுகள் முன்பாக வந்து நின்று கொண்டிருந்தது.

வசதியான வீடு. விதம்விதமான பொழுது போக்குகள்தாம் எத்தனை? வர்ண முதுகுகள் தெரிய அடுக்கிய புத்தகங்களின் வரிசை. தானாகவே தட்டுக்களை மாற்றிக் கொண்டு இசைக்கும் ஒலிக் கருவி. இரவு கண்ணயரும் வரை ஒரு மூலையில் மெல்லிய குரலில் தனக்குத் தானே அனுபவித்துக் கொள்வது போல் இயங்கும் வானொலி. இவைகளைத் தவிர அவருக்கே இரண்டொரு பொழுதுபோக்குகளும் உண்டு. நாற்சதுர வடிவில் அமைந்த 'ஸ்டாண்'டில் அட்டையைப் பொருத்தி, சித்திரம் எழுதுவார். மாலை வேளைகளில் மௌனமாகச் சிந்தும் மங்கிய விளக்கொளியில் அமர்ந்து பியானோ வாசிப்பார்.

வெளிப் பார்வைக்குத்தான் அந்த வாழ்க்கையின் மினுமினுப்பா? அதற்கு உள் செழிப்பு இல்லையா? இருந்ததுண்டு. அவரே உணர்ந்த விதமாக; சமீபகாலம்வரை. இப்போது எத்தகைய மாறுதல்? தனியே அமர்ந்து செல்லும் காரில், வானொலியின் எதிரே புத்தகமும் கையுமாக உட்காரும் நீள சோபாவில் சாப்பிட அமரும் வழுவழுப்பான மேஜையில் அடுக்கிய தட்டுகளில் ஒரு தனிமை தெரிந்தது; அவர் மனத்திலே தெறிக்கும் உணர்ச்சியின் எதிரொலியாக.

அனுபமா அங்கே வேலைக்கு வந்து ஓர் ஆண்டுதான் ஆகிறது. சற்றுத் தயக்கத்துடன் தொடங்கிய பழக்கம். படிப்பில், தொழிற் பயிற்சியில், வேலையில் அவர் பேசிப் பழக நேர்ந்த பெண்கள்தாம்



எவ்வளவு பேர்? வெவ்வேறு மொழிகளை, உடைகளை, பாவனைகளைக் கண்டதுண்டு. அவைகள் நிழலிடும் உணர்ச்சிகளிற் பக்குவத்திலும் எவ்வளவோ வேறுபாடுகள். ஆனால் அவர்கள் யாரிடமும் இப்படி ஒரு சரளமான பேச்சை, உணர்ச்சிகளின் வெளியீட்டை அவர் அறிந்ததில்லை. அவரும் பேச நேர்ந்ததில்லை.

தம்முடைய அயல் நாட்டு அனுபவங்களைச் சுவையோடு வருணித்துக் கொண்டே போவார். கண்களில் ஆவல் கனலென அவனும் கவனித்துக் கொண்டிருப்பான். அவனுடைய கேள்விகள் அவர் பேச்சுக்குத் தூண்டுதலாக அமையும். அவனுடைய ஆர்வத்தைக் கிளறி எழுப்புவது போல இருக்கும்.

வெறும் பேச்சுத் துணைதானா அது?

வேலை முடிந்து காரில் திரும்பும்போது அடிக்கடி அந்தப் பார்வை மனத்தில் வந்து நிற்கும். கடற்கரை ஓரமாகக் காரை நிறுத்தி விட்டு, வெப்புக்கல் நடைபாதையில் காலார நடக்கும்போது அந்த விழிகள் அழகிட அவர் புறமாகத் திரும்பிய முகம் நெஞ்சத் திரையில் தெரியும். அப்போது சில சமயம் தோன்றும் எண்ணங்கள் நெஞ்சை உறுத்துவது போல உதிரும் நினைவுகள் அவரையே குற்றம் சாட்டுவது போலவும் தொடரும். நியாயமானவை தானா—அவை? அந்த நினைப்பில், தொடர்ந்த கற்பனையில் நேர்மை இருக்கிறதா?

அவருடைய எண்ணங்களே அவரை நூற்று. அதன் பின்னல்களில் இன்னதெனப் புரியாமல் சிக்குண்ட பிறகு, மீள முடியாமல் தவித்தபடி நேரம் போவது தெரியாமல் அமர்ந்திருப்பார்.

பிற்பகல் நேரங்களில் சிற்றுண்டிக்குப்பிறகு உட்கார்ந்திருக்கும் அரை மணி நேர ஓய்வு தான் அவருக்கென்று கிடைப்பது. பத்திரிகையும் கையுமாக அங்கே வந்து சேருவான் அநு. அந்த மாதம், அல்லது அந்த வாரம் அவன் எழுதிய சிறுகதை ஏதேனும் பிரசுரமாகியிருக்கும். அந்தப் பெருமைக்கு உரியவன் என்ற நினைப்பே அவனிடம் ஒரு வாளிப்பையும், பாவனைகளில் ஒரு புது மலர்ச்சியையும் தரும்.

"உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள் ஸார்! அதுதான் எனக்கு முக்கியம்" என்பான்.

வெறும் புகழ்ச்சியாக மட்டுமிராமல் அவர் பதில் ஒரு சிறு விமரிசனமாகவே இருக்கும். அவன் ஆர்வம் ததும்பும் பார்வையோடு உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருப்பான். அந்த உணர்ச்சியில் தெரியும் அண்மையும், பழக்கத்தின் இனிமையும் ஒரு வெறும் இடைவேளைப் பொழுதுபோக்கு என்பதை அவர் மனம் நம்பக்கூட மறுக்கும்.

ஏதோ ஒரு கேள்வியைக் கேட்க நினைத்து, கடித்து விழுங்கிக் கொள்வார் சேகர். பின்னால் எண்ணங்களைத் தட்டின விதமாய்க் கேட்கும் அந்தக் கிளுகிளுவென்ற சிரிப்பு, முகிழ்விட்ட செடியில் இளமையாய்க் கண் குளிரத் தெரியும் பசுமை, கண்ணகல அவர் பேச்சைக் கேட்க உதிரக் காத்திருப்பதுபோல் காட்டும் ஆர்வம், மென்மையான ஒரு மகிழ்ச்சியில் தோய்ந்தாற்போலப் பளபளவென்று மின்னும் பார்வை, எல்லாம் அப்புறமும் ஞாபகத்துக்கு வரும். மனத்தில் சிலிர்த்தெழும் புல்லரிப்பின் வடிவமாய் உதட்டில் புன்னகை தவழ உட்கார்ந்திருப்பார்.

புதிதாக அந்தக் கம்பெனியில் இன்ஜினியராக வந்து சேர்ந்திருந்தான் ரவி. வடக்கே எங்கேயோ, படித்த புதிதில் பயிற்சிக்குப் போய்ச் சேர்ந்தவன் அங்கிருந்து இந்த வேலைக்கு வந்துவிட்டான். அவனைத் தேர்ந்தெடுத்ததே அவர்தாம்.

சுறுசுறுப்பான சுபாவம். இன்னும் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் நிறைய இருந்தது. கற்றுக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பும் தான். இளம் வயதுக்கு ஏற்ற நறுக்கான உடை. அதன் மிடுக்கில் நிமிரும் நடை. அரும்பு மீசையும், அழகு செய்த தலைமயிருமாக, தூர வரும்போதே, ஒரு குளிர்ந்த புன்னகையோடுதான் தெரிவான். அவனைப் பார்க்கும்போதெல்லாம் அவருக்கு மனத்தில் ஒரு நெகிழ்ச்சி தோன்றும்.

"இந்த 'டிஸைன்' எப்படி ஸார்?" என்று வந்து நிற்பான். சற்று அப்பாவி மாதிரி தோற்றம் அளிக்கும் முகம். அவர் பதில் சொல்லுவார். படம் போட்டுக் காட்டுவார். அதைக் கவனத்தோடு பார்த்துக் கொண்டு மலைப்புத் தெரியாமல் உட்கார்ந்திருப்பான் ரவி. சில சமயம் அவர் பேசுவது புரியாவிட்டாலும், 'அவர் சொல்வதே சரி; ஒரு தேர்ந்த புத்திசாலி வழிகாட்டுகிறார்' என்ற நினைப்பில் அவன் அடக்கமாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பான்.

நோட்டுப் புத்தகமும் பென்சிலுமாக அநு உள்ளே வந்ததும்தான் ஏதோ ஒரு நினைவை உதறிக் கொண்டு எழுந்திருப்பான் ரவி.

மேல் படிப்புக்கு வெளி நாட்டுக்குப் போக வேண்டும் என்கிற ஆர்வம் அவனுக்கு நிறைய இருந்தது. அங்கே நூதனமான தொழிற்சாலைகளில் பயிற்சி பெற வேண்டுமென்ற அடங்காத துடிப்பு. அவரிடம் அவருடைய அனுபவங்களைச் சொல்லச் சொல்லி, ஒரு பக்தியோடு கேட்டுக் கொண்டிருப்பான்.

மாதம் இருமுறை ஏதாவது ஒரு வெளி நாட்டுப் பத்திரிகையைக் கொண்டு வந்து பிரித்து வைத்துக் கொள்வான். ஒன்று அது ஏதாவது சமீபத்தில் வழக்கில் வந்திருக்கும் நுட்பமான இயந்திரமாக இருக்கும்; அல்லது வெளி நாட்டுப் படிப்புக்கோ, பயிற்சிக்கோ சந்தர்ப்பம் அளிக்க முன்வரும் உபகாரச் சம்பள அறிவிப்பாக இருக்கும். எதிலும் அவருடைய புத்திமதிதான் அவனுக்குத் தேவையாயிருந்தது.

அவர்கள் இருவருமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது அநு அங்கே வருவதில்லை. வந்தாலும் நிமிஷத்தில் ஒதுங்கிக் கொண்டு போய்விடுவான். ஒரு மகிழ்ச்சி ததும்பும் மனநிலையில் அவர் குளிர்ந்த பானம் தருவிப்பார். மூன்று தம்ளர்களாக வந்து சேர்ந்தாலும் அவன் தன்னுடையதைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே போய் விடுவான்.

அன்று அவருடைய நண்பர் ஒருவரிடமிருந்து பார்ஸல் ஒன்று வந்திருந்தது. அவர்



நிலையற்ற எதிர்காலத்தை நீங்கள் விரும்புவீர்களா ? ஒருகாலும் இருக்காது !



கனரா பாங்க் வாடிக்கையாளர்களைப் போலவே, பாதுகாப்பு உணர்ச்சியை அனுபவிக்கவே நீங்களும் விரும்புவீர்கள்

கனரா பாங்க் வாடிக்கையாளர்கள், திடீரென்று வரும் நோய்கள் அல்லது விபத்துக்களைச் சமாளிக்க எப்பொழுதும் தயாராக இருக்கவே விரும்புகிறவர்கள். அவர்கள், எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற கவலையின்றி, நம்பிக்கையுடனும், பாதுகாப்பு உணர்ச்சியுடனும், வசதியாகவும் வாழ விருப்பம் உடையவர்கள். திருமணங்கள், பிறப்புக்கள் போன்ற இன்ப தினங்களிலும், முதுமையிலும் அவர்களுக்கு பணத்தைப் பற்றிய கவலையே கிடையாது; கனரா பாங்க் அளிக்கும் பிரத்தியேகமான பாதுகாப்பு உணர்ச்சியை அவர்கள் என்றென்றும் அனுபவிக்கிறார்கள்.

ஏற்கனவே நீங்கள் கனரா பாங்க் வாடிக்கையாளராக இல்லாவிட்டால், இன்றே அதில் ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து, துள்ளும் நடையையும், கண்ணில் நம்பிக்கை ஒளியையும் தரும் அந்த அற்புத மனநிறைவையும், பாதுகாப்பு உணர்ச்சியையும் அனுபவித்து மகிழுங்கள்.

டெபாசிட்டுகள் 123 கோடிக்கு மேல்

கிளைகள் 240க்கு மேல்

உலகெங்கும் பிரதிநிதிகள்

கனரா பாங்க் லிமிடெட்

பதிவுபெற்ற அலுவலகம் மற்றும் தலைமை
நிர்வாக அலுவலகம்
112, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர்

SISTA'S-CB-13 TAM

அமெரிக்காவில் இருந்தபோது ஓரிரு தடவைகள் தமிழ்நாட்டுச் சாப்பாட்டுக்கு ஏங்கிக் கொண்டு அவருடைய வீட்டுக்குப் போவதுண்டு. அப்போது அநுபவித்த உபசாரத்தின் இதத்தை அவர் இன்னும் மறக்கவில்லை. அவ்வப்போது கடிதம் எழுதுவார். இந்தியாவிலிருந்து அபூர்வமாக எதையேனும் வாங்கி அனுப்புவார். பதிலுக்கு இப்படி ஏதாவது வந்து நிற்கும். அநேகமாகப் புத்தகங்கள் தாம். சிலசமயம் இதைப் போல் வேறு பொருட்களும் இருக்கும்.

பிளாஸ்டிக் உறையைக் கிழித்து வெளியே எடுத்தார். அழகான தங்க நிறப் பேனா. பார்வையில் பளபளவென்று மின்னிற்று. மூடியின் மேற்புறம் ஒரு சிறு நசுங்கல். எங்கேயோ வரும் வழியில் அடிபட்டிருக்க வேண்டும். விரல் அங்கே தடவியபோது மனத்தில் ஒரு சிறு பச்சாதாபம்கூடத் தோன்றியது. உயிருள்ள பொருளுக்கு ஆறுதலாக நீவிக் கொடுப்பதைப் போல.

மரத் தூளையும், காகிதச் சுருள்களையும் எடுத்துக் குப்பைக் கூடையில் உதறிவிட்டுப் பேனாவை மட்டும் எடுத்து டிராயரில் மறைத்து வைத்துக் கொண்டார். அவருடைய மனம் ஏதோ ஒரு யோசனையில் தீவிரமாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

அனுவுக்குத் தெரியாமல் அதை அவனுடைய கைப் பையில் வைத்துவிடவேண்டும். கொஞ்ச நாட்கள் அவன் கேட்டாலும் ஏதும் சொல்லக் கூடாது. அந்தப் பிரமிப்பில் அவன் ஆழ்ந்து போய்த் திகைத்து நிற்பதை மௌனமாக அநுபவித்துக் கொண்டே இருந்துவிட வேண்டும். அப்புறம் ஒரு நாள் — என்றேனும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் — அவர் உண்மையை வெளியிடலாம். அவருடைய மனத்தையே வெளியிடும் சந்தர்ப்பமாக அமைந்து விடலாமோ, அது? ஏன் கூடாது?

''**உ**ங்கள் பேனா ஏதாவது காணுமா ஸார் ?'' என்று கேட்டுக் கொண்டு வந்தான் அனு. ஆடும் ஊஞ்சலில் உட்கார்ந்திருப்பவர்கள் திரும்புவது போல, அவன் பார்வை சுற்றிலும் அலைந்து ஓய்ந்தது.

''இல்லையே ?''

அவன் கண்களில் சிறு வியப்பு தெரிந்தது. யோசனையோடு திரும்பி விட்டான்; நிலவில் நடப்பது போல் நிதானமாக நடந்து கொண்டு. தோள் மேல் தவழ்ந்து அலைந்த துகிலில், நீலச் சுடர்கள் பிறந்து ஆடுவது போன்ற தோற்றம். அவர் பார்வை முதுகு வழியே அந்த அமைப்பின் எழிலில் ஒருகணம் லயித்து நின்றது. இன்னும் இரண்டுநாட்கள். அப்புறம் அவர் உண்மையைச் சொல்லலாம். நடுவில் இரண்டு நாட்கள் விடுமுறையாக நேருகிறது. அதனால் அதில் அதிக சிரமம் இல்லை.

திங்கட்கிழமை.

மணி பதினொன்று இருக்கும். ஏதோ காரியமாக அனுவை அழைக்க நினைத்தவர், சட்டென்று அடக்கிக் கொண்டார்.

''வரலாமா ஸார் ? ஒரு சந்தேகம்—'' இழுத்தாற் போன்ற குரலோடு, கதவின் உள் ஓர் அடி எடுத்து வைத்து நின்றான் ரவி.



''என்ன அப்போதிருந்து பாத்துண்டு இருக்கேள்! என்னமோ ஒண்ணு, இரண்டு, மூணுன்னு எண்ணிண்டு இருக்கீங்க ?''

''உன் பொண்ணு டெலிபோன்லே அவ 'பிரண்ட்'' யார்கூடவோ பேசிண்டிருக்கா, இது வரை பதிமூணு தடவை டெலிபோனை இரண்டு காதிலேயும் மாத்தி மாத்தி வெச்சுண்டாச்சு !''

''வாயேன்.''

வந்து உட்கார்ந்து கொண்டான். வெள்ளைக் காகிதத்தில் பென்சிலால் வரைந்த படமும், சிறு கணக்குகளுமாக ஓடிக் கொண்டிருந்தன. எழுதிக் கொண்டிருந்த பேனாவில் மசி ஆகி விட்டது. நிப்பை அழுத்தினாலும் காகிதத்தில் வெள்ளைக் கீறல் மட்டும், நகம் அழுத்தினாற் போல விழுந்தது.

''இதில் எழுதுங்கள் ஸார் !''

ரவி பேனாவைப் பிரித்து எழுதுவதற்குக் கொடுத்தான். விரல்களில் அதைப் பிடித்ததும் மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது அவருக்கு. பவுன் நிற மினுமினுப்பு: மூடியில் அந்த இலேசான நசுங்கல். வழுக்கினாற்போலச் செல்லும் எழுத்துக்கள். மனம் பதறி அவருடைய பார்வை அவன்புறம் திரும்பிற்று. குழி வாங்கிய விழிகளில், எரியும் நினைவுக் கனவில், புடைத்தெழுந்து வடியும் பெருமூச்சில், அவனைத் தாக்குவது போன்ற ஒரு சக்தி. அந்தக் கண்களைக் கண்டதும் அவனே திகைத்துப் பின்னடைந்தான்.

''புதுப் பேனா ஸார்.''

அவர் தலையைக் குனிந்து கொண்டார். மண்டையைத் தலையிலிருந்து தனி வில்லையாகப் பெயர்த்து விடுவது போன்ற உள் எழுச்சியில், வலி நெற்றிப் பொட்டைத் துளைத்து. சுற்றிலும் எல்லாம் சுழன்றன. பார்வை மங்கி இருண்டது.

''எங்கே.... எங்கே வாங்கினாய் ரவி?''

''ஒரு — பரிசு ஸார் !''

பேச்சைப் போல அவன் முகமும் குழைந்தது. நெற்றியில் முத்து முத்தாய் அரும்பும் வியர்வை. கைக்குட்டையை எடுத்து அதை ஒற்றும் பாவனையில் முகத்தை, அங்கே வடிந்த உணர்ச்சியை மறைத்துக் கொண்டான். அவர் அப்புறம் பேசவில்லை.

ஒரு வீம்பாகக் கணக்கு மட்டும் ஓடிக் கொண்டிருந்தது. நல்ல வேளை, ஏற்கனவே

முடியும் நிலைக்கு வந்துவிட்ட மனைன். இல்லா விட்டால் எதையும் அவரால் அந்த நிலையில் யோசித்திருக்க முடியாது. நினைவில் தெளிவில்லை.

"நன்றி ஸார்."

ரவி எழுந்து போய் விட்டான். அவர் நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார். ஒரு நிமிஷம்.... இரண்டு.... ஐந்து...

விரலால் யாரோ கதவைத் தட்டும் சத்தம்.

குலுங்கி நிமிர்ந்து உட்கார்ந்தார். கையில் 'டைப்' செய்த காகிதங்களுடன் உள்ளே வந்தாள் அநு. ஓர் உள் ஒளியில் கண் கூசத் தலையைக் குனிந்து கொண்டார். நிமிரும் மனத் துணிவு ஒளிந்து கொண்டு விட்டது.

"பேனாவுக்குக் கொஞ்சம் மசி போட்டு அனுப்புகிறாயா?"

"சரி ஸார்!"

சட்டென்று அவர் பார்வை கருநிற மேஜைத் தகட்டில், நிழலுடன் இரட்டையாகத் தெரிந்த பவுன் நிறப் பேனாவில் நிலைத்தது.

"இது — இது ரவியின் பேனா — அனுப்பி விடுகிறாயா ?"

அவள் மௌனமாக அந்தப் பேனாவை எடுத்துக் கொண்டாள். மேஜையின் வழுவழுப்பில் பிடி நழுவி விடாமல் விரல்கள் ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொண்டன. அவர் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். ஆனால் அவள் முகம் துளி மாறுதலையும் காட்டவில்லை. தலைப் பூவைச் சரி செய்வது போல் இலேசாகக் குனிந்து பார்வையை மாற்றிக் கொண்டாள்.

கையில் அவருடைய பேனாவை வாங்கிக் கொண்டாள். அந்தப் பவுன் நிறப் பேனாவின் அருகில் அவருடைய பேனா. அவருடைய பார்வை சற்றுத் திகைத்தது. அவர் பேசுமுன் அவள் வெளியே போய் விட்டாள். நின்று கொண்டிருந்தாலும் அவரால் எதுவும் பேசியிருக்க முடியாது.

அறையில் அமைதி சூழ்ந்தது. அவருடைய பலத்தையெல்லாம் சேர்த்துக் கொண்டு நினைவை நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கும் முயற்சி. அவர் இனி கேட்க வேண்டியது இல்லை. எதையும் பேசித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. தன் நிலை வந்தடைந்தாகி விட்டது: புரிந்து விட்டது.

இரண்டு நாட்களாக என்னென்னவோ யோசனைகள்.

அன்று காரியாலயத்துக்கு வந்ததும், கடிதத்தைச் சொல்ல, அநுவைக் கூப்பிட்டனுப்பினார். நோட்டுப் புத்தகமும் கையுமாக அவள் எழுத உட்கார்ந்தாள். அவர் குரலைச் சரி செய்து கொண்டார். அவருடைய உணர்ச்சி அவருக்கே தெரியாதது போன்ற பிரமை. நெஞ்சையே ஒழித்துப் பெருக்கித் துடைத்து வைத்தாற் போல இருந்தது. ஒரு விரக்தி நிறைந்த மன அமைதி.

".... தங்களைக் காரியாலயத்துக்கு என்னை மாற்றுவது பற்றிச் சம்மதம் கேட்டிருக்கிறீர்கள். எனக்கு அந்த விஷயத்தில், ஆட்சேபனை எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்....."

"ஒரு நிமிஷம்—"

அநு கண்களில் விறுவுடன் தலை நிமிர்ந்தாள். புருவங்கள் கம்பளிப் பூச்சிகள் போல நெளிந்தன. உள் பரபரப்பில் இலேசாய்த் திறந்த வாய். கண்களில் தனிப் பளபளப்பு.

"யோசித்துத்தான் இந்தத் தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன்."

அவள் பார்வை நிமிர்ந்தது. நீண்ட இமைகளில் துயரம் தெரிந்தது. காற்றில் அவள் மனத் துடிப்பே போல, துகில் படபடவென்று அடித்துக் கொண்டது.

"ஏன் ஸார் ?"

அவள் குரல் துயரத்தில் லேசி உடைந்தது. அவருடைய நெஞ்சில் அதன் எதிரொலியாக ஒரு வேதனை தெறித்தது. அவள் வருந்துகிறாள்: அவர் போய் விடுவதை எண்ணி. அதன் அடிப்படை அவருக்கு இப்போது தெளிவாகத் தெரிந்தது: முன்பிருந்த குழப்பம் இல்லை. அவளிடம் பண்போடு நடந்து கொண்டு வந்த, கௌரவமாகப் பழகிவந்தவர் வேலையில் திறமையோடும் அநுபவத்தோடும் வழிகாட்டக் கூடிய, ஒருவர் போகிறார் என்ற நினைவின் வருத்தம்தான் அது. அவருடைய உணர்ச்சிகளின் முதிர்ச்சி அவருடைய இளம் உள்ளத்து உணர்ச்சிகளுக்குக் கவசமாக இருந்தது. இனி அது இல்லை. அவ்வளவு தான்.....

அநு கடிதத்தை முடித்துக் கொண்டு போய் விட்டாள்.

அவர் வெளியே சொல்ல மாட்டார். தன் ஏக்கமும் ஏமாற்றமும் தன்னுடனேயே இருந்து விட்டுப் போகட்டும்.

அடுத்தபடி ரவி அவரிடம் வந்து கேட்பான். விரைவில் அவனுக்குத் தகவல் தெரிந்து விடும். அநு அவனிடம் சொல்லி விடுவாள். அவனுக்கும் மௌனம்தான் அவருடைய பதிலாக இருக்கும்.

புறப்படும் வேளையை அவரால் கற்பனை செய்து கொள்ள முடிந்தது. அநுவும் ரவியும் குழந்தைகளைப் போல் விக்கி விக்கி அழுகிறார்கள். அவர் எழுப்பிய துயரம் அவர்களை எரிக்கிறது. அதன் அனல் அவர் மேல் வீசுகையில் அவருடைய நெஞ்சிலும் ஏதோ இளகிப் புரளுகிறது. அவரால் பேச முடிய வில்லை. உதடுகள் நடுங்குகின்றன. ஓரங்களில் உறுத்திக் கொண்டு விழிகள் நிறைகின்றன. தலை கவிழ்கிறது. நெஞ்சு வரை நிறைந்த நினைவுகள்.

அவர் எதுவும் சொல்ல வேண்டாம்.

அவரிடம் ரவியைப் பற்றி ஏதாவது சொன்னாளா அநு? ஜாடையாகவேனும் எத்தனையோ பேச்சுக்களில் அதை உணர்த்தினாளா ? அவரிடம் அநுவைப் பற்றி ஏதேனும் சொன்னானா ரவி? எவ்வளவோ முறை பேசிய போது அந்த உணர்ச்சி நிறைவிட்டதாகக்கூடக் காட்டிக் கொள்ள வில்லையே? அவர்கள் இருவருக்குமே அவர் தேவையாக இருந்தார். இருவருடைய உணர்ச்சிகளுக்கும் அவருடைய அநுதாபம், அதன் பாதுகாப்பு, தேவைப்பட்டன. ஆனாலும் அவரை அவர்கள் தங்களுக்கிடையே ஒதுக்கி விட்டார்கள். அவரும் எதுவும் சொல்ல வேண்டாம்.

அவருடைய உணர்ச்சிகள் அப்படியே இரகசியமாக இருந்துவிட்டுப் போகட்டும்.

கவியரசரும் இல்லத்தரசியும்

வி. ஸ. காண்டேகர்

தமிழாக்கம்:
ரா. வீழிநாதன்






ஆகஸ்டு 7உ டாகுரின் ஜயந்தி. அவரது குடும்ப வாழ்க்கையில் சில சுவையான சம்பவங்களைச் சித்திரிக்கிறது இந்தக் கட்டுரை.

ரவீந்திர நாத டாகுரின் சிறந்த இலக்கியப் படைப்புக்களிலே பாரதத்தின் பண்டைய இலக்கியங்களை ஆராய்ச்சிக் கண்ணோடு நோக்கிய விமரிசனக் கட்டுரைகளையும் குறிப்பிட வேண்டும். ஒரு கட்டுரையில் லக்ஷ்மணனின் வாழ்க்கைத் துணைவி ஊர்மிளையைப் பற்றி உள்ளத்தைத் தொடும் வண்ணம் அரிய படம் ஒன்று பிடித்துக் காட்டுகிறார். அவளைச் சிறந்த காவிய நாயகி என்றும், மகாகவி வால்மீகி அமைத்த இதிகாசமாகிற ராமாயணத்திலே அவளை எப்படித்தான் அப்படி அலட்சியமாக ஒதுக்கி விட்டாரோ, தெரியவில்லை என்றும் எழுதுகிறார். அந்தப் பேரரசியை அலட்சியப்படுத்தியதற்காக, "ரகுகுல லக்ஷ்மி" என்று அழைக்கப்பட வேண்டியவளை ஒதுக்கியதற்காகக் கவியைக் கண்டிக்கிறார். அத்தனை பெரிய நூலில் ஒரே ஓர் இடத்தில் பெயருக்கு அவள் பெயரைக் குறிப்பிட்டதைக் காணக் கவியுள்ளம் படைத்த அவருக்கு மனம் பொறுக்கவில்லை.

அதே வித்தை டாகுரின் வரலாற்றிலும் விதியென விளையாடியிருக்கிறது. டாகுருடன் நெருங்கிப் பழகின தீனபந்து ஆண்ட்ரூஸ், எட்வர்ட் தாம்ஸன் போன்ற ஆங்கில வரலாற்று ஆசிரியர்களும் மற்றும் இந்திய மொழியில் எழுதிய ஏனைய வரலாற்று வல்லுநர்களும் கூட அந்த மாபெரும் தவற்றை இழைத்திருக்கிறார்கள். ராமாயணத்தைப் போன்று சிறந்த 'டாகுராயண'த்தை எழுதியும்கூட, "டாகுர் குல லக்ஷ்மி" என்று போற்றப்படக் கூடிய ஒரு பெண்ணை ஒதுக்கித் தள்ளியிருக்கிறார்கள். 'இன்றைய ஊர்மிளை' என்று சிறப்புக் கொடுத்துப் போற்ற வேண்டிய பெண் திலகங்களில் ஒருத்தி அவள்.

டாகுரின் குற்றச்சாட்டுக்கு இலக்கான வாழ்வின் முனிவரானது தமது இதிகாசத்திலே ஒரு முறையாவது ஊர்மிளையின் பெயரை நினைவு கூர்ந்திருக்கிறார். ஆனால் 'டாகுர் ராமாயண'த்தைப் படைத்தவர்களுக்கோ இன்றைய ஊர்மிளையின் பெயரை எங்காவது ஓரிடத்திலாவது சொல்லவேண்டும் என்ற எண்ணம் எழுந்ததாகக்கூடத் தெரியவில்லை. டாகுரின் வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் இப்படி மன்னிக்க முடியாத தவற்றை யார் விஷயத்தில் செய்தார்கள்? ரவீந்திரரின் வாழ்க்கையிலே அப்படியொரு பங்கு பற்றிய பெண் யார்? இப்படிக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? வேறு யாருமில்லை. ரவீந்திரநாதரின் சொந்த மனைவி மிருணாளினி தேவிதான்!

மிருணாளினி தேவி ஜெஸ்ஸோரைச் சேர்ந்த பேனிராம் சௌதுரியின் மகள். 1883ஆம் ஆண்டு ரவீந்திரநாத் டாகுருக்கும் அவளுக்கும் திருமணம் நடந்தேறியது. அவள் 1902ம் ஆண்டில் காலமாகி விட்டாள். அவளது மிகக் குறுகிய திருமண வாழ்க்கையின் ஒளிச் சித்திரத்தைக் காணவேண்டுமென்றால், அவளது மகன் ரதீந்திரநாத் டாகுர் இயற்றியுள்ள சுயசரிதையைத்தான் நாட வேண்டும். சமீபத்தில் வெளியான ரதீந்திரரது சுயசரிதையிலே மிருணாளினி தேவியைப் பற்றிச் சிற்சில சுவாரஸ்யமான நினைவுக் குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.



"என் அன்னை இனிய சுபாவம் படைத்தவள், அன்பு என்னும் பண்பு செறிந்தவள். எனவே எங்கள், குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அவள் வேண்டியவளாயிருந்தாள். உற்றார் உறவினர் பலரும் அவளோடு கலந்து உறவாடிக் களித்து மகிழ வருவார்கள். அவர்களது களிப்பில் பங்கு பெற்றுக் களிப்பூட்டி மகிழுவாள் என் அன்னை. துயரப்படும் நிலையிலேகூட அவர்கள் அவளை அண்டித்தான் வருவார்கள். அவர்களுடைய துயரிலும் பங்கு போட்டுக் கொள்ளுவாள் என் அன்னை. அவள் தனது அன்பை ஏற்றத் தாழ்வின்றி எல்லோருக்கும் சமமாக வழங்குவாள். எனினும் என் ஒன்றுவிட்ட சகோதரன் பாலேந்திரன்மீது அவளுக்குத் தனியானதொரு வாஞ்சை. அவன் தன் எழுத்துக்களை மட்டுமின்றி, ஆங்கிலம் சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் உள்ள சிறந்த காவியங்களையும் அவளுக்குப் படித்துக் காட்டுவான். என் அன்னை முறையான பள்ளிக் கல்வி பெற்றது வெகு குறைவுதான். ஆயினும் இந்த வகையில் அவள் மேலை நாட்டு, கீழை நாட்டு இலக்கியங்களைப் பற்றிச் சிறப்பாக அறிந்து கொண்டுவிட்டாள். அதோடு ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் நன்றாகப் பயின்று விட்டாள்.

எங்கள் தந்தை சித்தரஞ்சன் தாஸின் சகோதரியிடத்திலே அற்புதமான இனிய சாரீரத்தைக் கண்டார். அவள் எங்கள் குடும்பத்தினள் அல்ல என்றாலும், எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவதுண்டு. அவள் வந்துவிட்டால் போதும், அப்பாவுக்கு அடக்கமாட்டாத இசை ஆர்வம் பிறந்துவிடும். அவர் நாள் முழுவதும் ஏதாவது ஒரு பாட்டை அல்லது ராகத்தை முணுமுணுக்கத் தொடங்கிவிடுவார். அவளும் இசைப் பற்றுக் காரணமாக அவரருகில் அமர்ந்து அவர் புதிதாகக் கட்டிய பாடல்களுக்கு இசை பயிலத் தொடங்கி விடுவாள். அம்மாவும் அன்போடு அவளை எங்கள் வீட்டுக்கே வந்து தங்குமாறு வற்புறுத்துவாள். இவ்வாறு அவள் எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே வளைய வரலானாள். நாங்கள் அவளை அமலா அக்கா என்று அழைப்போம்.

"நாங்கள் கல்கத்தாவை விட்டு ஷெலிதாஹ் என்னும் கிராமத்தைக் குடியிருப்பாகக் கொண்டு இடம் பெயர்ந்தபோது எங்கள் கல்வியைப் பற்றித் தந்தை மிகவும் கவலை கொண்டார். பாரத நாட்டுப் பண்டைய இதிகாச புராணங்களைக் குழந்தை

களாகிய நாங்கள் பயில வேண்டும், குறிப்பாக ராமாயணத்தையும், மகாபாரதத்தையும் கசடறக் கற்க வேண்டும் என்று தந்தை ஆசை கொண்டார். புத்தக உருப்பெற்றிருந்த இந்த நூல்கள் மிகக் கனமாயிருந்ததோடு குழந்தைகளுக்குதவாத எத்தனையோ தேவையற்ற தகவல்களையும் கொண்டிருந்தன. எனவே தந்தை ராமாயணத்தைச் சுருக்கமாக எழுதுமாறு தாய்க்குப் பணித்தார். மூலத்தின் சுவை குன்றாமல், தேவையற்ற பகுதிகளை நீக்கிக் குழந்தைகளுக்குப் புரியும்படியாக, புத்தகத்தை எடுத்தால் ஒரே மூச்சில் படித்து முடிக்கும்படியாக எழுத வேண்டும் என்று கூறியதோடு, இந்த நூலைத் தயாரிக்கும் விஷயத்தில் சம்ஸ்கிருத மூலத்தின் உதவியை நாட வேண்டுமே ஒழிய வங்காள மொழிபெயர்ப்புக்களை நம்பக் கூடாது என்றும் வற்புறுத்தியிருந்தார். அன்னைக்கு இது மிகவும் கஷ்டமான காரியமாகத்தான் இருந்தது. ஆயினும் சிறிதும் அலுத்துச் சலித்துக் கொள்ளாமல் அவள் உற்சாகமாக ஒரு பண்டிதரின் உதவியை நாடினாள்; ராமாயணத்தை சம்ஸ்கிருதத்திலேயே படித்து முடித்தாள். பிறகே எழுதத் தொடங்கினாள். ஆனால் அந்தப் புத்தகத்தை எழுதி முடிப்பதற்கு முன்னாலேயே அவள் இறந்துவிட்டாள்.

''எங்கள் தந்தை விந்தையானதொரு கிளப்பைத் துவக்கினார். அதற்குக் 'காம் கேவலி சபை' என்று பெயர். அதற்கு ஒரு விதிமுறை கிடையாது. அங்கத்தினராவதற்கும் குறிப்பிட்ட நிபந்தனைகளெதுவும் கிடையாது. அதில் சேர விரும்பும் நண்பர்கள் ஒரே ஒரு கருத்தை மட்டும் ஆதரிக்க வேண்டும். முறை வைத்துக் கொண்டு அதன் அங்கத்தினர்களைத் தங்கள் வீட்டுக்கு விருந்துக்கு அழைக்க வேண்டும் என்பதே அது. இந்த விருந்துகள் எவ்விதப் படாடோபமுமின்றிச் சிறந்த முறையில் நடைபெற்றன. விருந்தளிப்பவர்கள் வயிறு முட்ட உணவு தர வேண்டும் என்பதைக் காட்டிலும் புதிது புதிதாகச் சுவை மிகுந்த உணவு வகைகளைத் தயாரித்து அளிக்க வேண்டும் என்பதையே குறிப்பாகக் கொண்டிருந்தனர்.' எனவே ஒவ்வொரு விருந்தும் ஒரு சிறப்பியல்பைக் கொண்டிருந்தது. உண்பதற்கு ருசியாக இருப்பதுடன் பார்க்கவும் நேர்த்தியாக விளங்கும் தின்பண்டங்கள் போட்டி போட்டுக்கொண்டு தயாரிக்கப்பட்டன. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் மூளைக்குப் பெரும் வேலை கொடுத்துப் புதுப் புது உணவு வகைகளைக் கண்டு பிடித்துத் தயாரிக்க முனைவாள் என் அன்னை. போதாக் குறைக்கு அப்பாவின் கற்பனை வேறு சிறகடித்துக் கொண்டு பறக்கத் தொடங்கும். இதுவரை செய்து பார்த்திராத வித்தை வித்தையான தின்பண்டங்களைத் தயாரிக்கப் புதுப் புது யோசனைகளைக் கூறுவார். அம்மாவும் தளராமல் தன் முனைப்பைச் செலுத்திச் சுவையோடு அந்தப் பண்டத்தைத் தயாரித்த பின்னரே மனநிறைவு கொள்ளுவாள்.

எனது தந்தையின் பல இளம் நண்பர்களில் சித்தரஞ்சன் தாஸும் ஒருவர். அவருக்குப் புல்வனைப் புஜ்ஜி சாப்பிட வேண்டுமென்று ஆசை. என் தாயாரின் விருந்தோம்பலில் மூழ்கித் திளைக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது போல் வேறு யாருக்கும் கிட்டியதில்லை. அப்பொழுதுதான் அவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்து, கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டிருந்தார். அவர் தாம் இயற்றிய பாடல்களைத் தந்தைக்குப் படித்துக் காட்டுவதற்காக நீதிமன்றத்திலிருந்து நேரே எங்கள் வீட்டுக்கே வந்துவிடுவார். இரண்டு இரண்டு படிகளாகத் தாவி ஏறி மெத்தைக்குச் சென்றவாறே, 'மாமி, மாமி! எனக்குக் கறி என்ன வைத்திருக்கிறாய்? காய் என்ன வைத்திருக்கிறாய்? எனக்குப் பசி தாளவில்லை. சீக்கிரம் கொண்டுவாயேன், ப்ளீஸ்!' என்று கூவுவார். அவர் நன்றாகச் சாப்பிடக் கூடியவர். என் அன்னைக்கும் அவருக்கு உணவு படைப்பதென்றால் ஒரே ஆனந்தம்!

ஷெலிதாஹில் தங்கியிருந்த காலத்தில் அடிக்கடி எங்களைப் பார்க்க வருவோர்கள் பலர் உண்டு. அவர்களில் ஒருவர் நாடோர் சமஸ்தானத்தின் தலைவர் மகாராஜா ஜகதீந்திரநாத். அவர் எழுத்தார்வமும் இசையார்வமும் மிகக் கொண்டவர். அப்பா அவருக்குத் தம் கவிதைகளைப் படித்துக் காட்டிக்கொண்டிருக்கும் வேளையில் அமலா அக்காவின் உதவியோடு அம்மா சமையல் வேலையில் ஈடுபட்டிருப்பாள். அமலா அக்கா கிழக்கு வங்காளத்துச் சமையலில் கைதேர்ந்தவள். மகாராஜா போஜனப் பிரியர் என்று அம்மாவுக்குத் தெரியும். அவருடைய ருசி அறிந்து சமைத்து அவரைத் திருப்திப்படுத்துவதில் எவ்விதக் குறையும் வைக்க மாட்டாள். இந்த நாக்கு ருசிதானோ என்னவோ மகாராஜாவை வாரம் தவறாமல் ஷெலிதாஹுக்கு இழுத்து வந்துவிடும்.

ஷெலிதாஹில் தங்கியிருந்த காலத்தில் அப்பா எங்கள் கல்வி வளர்ச்சியைக் கவனித்தார். அம்மா தனக்கே உரிய முறையில் எங்களுக்கு வாழ்க்கை நடத்தப் பயிற்சி அளிப்பாள். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அவள் வேலையாட்களுக்கு விடுமுறை வழங்கிவிடுவாள். என் அக்காவும் நானும் அம்மா சொற்படி அன்றைய வீட்டு வேலைகளையெல்லாம் கவனித்துக் கவனித்துச் செய்வோம். சமையல் பொறுப்பும் கூட எங்களைச் சேர்ந்ததுதான். ஒருநாள் வாட்டசாட்டமான சீக்கியன் ஒருவன் அம்மாவிடம் வந்து, தனக்கு வயிற்றுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை என்று புகார் செய்தான். அவன் எங்களிடம் சேவகனாகவோ, காவலாளியாகவோ வேலை பார்த்து வந்தான். "சாப்பிட என்ன வேண்டும்?" என்று அம்மா அவனைக் கேட்டாள். சப்பாத்திகளும் அதற்குத் தொட்டுக்கொள்ளப் பருப்பும், தயிரும் வேண்டுமென்று கேட்டவன், மிகப் பணிவான குரலில், 'நான் போதும் போதும் என்று சொல்லும் அளவுக்கு எனக்கு உணவு பரிமாறப்படுமா?' என்றும் கேட்டான். அவன் வேண்டுமளவுக்குச் சப்பாத்திகள் செய்யுமாறு அம்மா எங்களைப் பணித்தாள். அடுக்கடுக்காக நாங்கள் சப்பாத்திகளைச் சுட்டு வைத்தோம். கட்டி கட்டியாகத் தயிரும் கொண்டு வந்து வைத்தோம். நாங்கள் போடுவதை

யெல்லாம் அவள் ஒரே வாயாக விழுங்குவதை அம்மா பார்த்துக் கொண்டே இருந்தாள். எங்கள் குழந்தைக் கணக்குக்கு அவன் அரை மனிதருக்குக் குறைவாய சாதமே சாப்பிட்டிருப்பான் என்று சொல்லி வந்தது. அவனது பரிதாப நிலையை அனுதாப உணர்வோடு கண்டுகொண்ட அம்மா, அவனுக்குச் சம்பள உயர்வு கொடுக்குமாறு அப்பாவிடம் சிபாரிசு செய்தாள்.

ஏறக் குறைய மூன்று ஆண்டுகளுக்குப் பின் நான் சாந்தி நிகேதனுக்கு வந்தேன். அப்பொழுது எனக்கு வயது பன்னிரண்டு. அப்பா அங்கே பிரும்மசரிய ஆசிரமம் என்ற பெயரில் ஒரு கல்விச்சாலையைத் துவக்கியிருந்தார். சில நண்பர்களை வேண்டிக் கொண்டதன் பேரில் நான்கு மாணவர்கள் கல்கத்தாவிலிருந்து கிடைத்திருந்தார்கள். நான் அந்த எண்ணிக்கையை ஐந்தாக உயர்த்தினேன். மாணவர்களும் உபாத்தியாயர்களும் அங்கு மேற்கொண்ட வாழ்க்கை மிக எளிமையாகவும் கட்டுத் திட்டங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. எந்தக் காரியத்துக்கும் பிரம்மசரியமே ஆதர்சமாகக் கொள்ளப்பட்டது. எளிய மஞ்சள் நிற உடை, படுக்கப் போர்த்த இரண்டு சமுக்காளங்கள், சிறை உணவுக்கு ஈடான மரக்கறி உணவு என்று இப்படியாக ஒருதரம் நிர்ணயித்திருந்தார்கள். யாரும் செருப்போ பூட்ஸோ போட்டுக் கொள்ளக் கூடாது. தந்தை என்னை அந்தப் பள்ளி விடுதியில்தான் தங்க வேண்டும் என்று வற்புறுத்தியபோது, அம்மாவின் மனம் கலங்கியது. என்ன கடுமையான சோதனை அவளுக்கு! பாலகர்களான நாங்கள் படும் துயரத்தை அவளால் பொறுக்க முடியவில்லை. முக்கியமாக எங்களுக்கு அளிக்கப்படும் உணவை நினைத்தாலே அவளுக்கு வயிற்றை என்னவோ செய்தது. அதனால் அடிக்கடி மாணவர்களாகிய எங்களையும் உபாத்தியாயர்களையும் உணவருந்த அழைத்துத் தன் கையாலேயே சுவையாகப் பண்டங்கள் தயாரித்துப் போட்டு மனம் ஆறுவாள். இது தவிர, அவ்வப்போது நாங்கள் மெல்லப் பதுங்கிப் போய் அவளுடைய சமையலறையில் தின்பண்டங்களைச் சூறையாடி விடுவோம். இதை அவள் கண்டும் காணாதது போல் இருந்து விடுவாள்.

சாந்தி நிகேதனத்தில் நிறுவப்பட்ட ஸ்தாபனம் எவ்வளவுதான் எளிமையாக இருந்தபோதிலும் அப்பாவின் பொருளுதவியைப் பெற்றுத்தான் வெகு சிரமத்தோடு இயங்கி வந்தது. அதற்கென்று தனி வருவாய் ஏதும் கிடையாது. சாந்தி நிகேதன டிரஸ்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஆயிரத்து எண்ணூறு ரூபாய் மட்டுமே அதற்குக் கிடைத்து வந்தது. பல ஆண்டுகள் வரை மாணவர்களிடமிருந்து எந்த விதமான கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. அங்கு பயின்ற மாணவர்களுக்கு இலவசக் கல்வி மட்டுமின்றி, இலவச உணவும் சிற்சில சமயம் இலவச உடையும் கூடக் கொடுக்கப்பட்டு வந்தன. எல்லாப் பொறுப்பும் அப்பாவின் மீதே விழுந்தது. அப்பொழுது அப்பாவின் சொந்த வருமானம் கிட்டி முட்டிப் போனால் மாதம் இருநூறு ரூபாய்தான். எனவே, என் அன்னை தனது

அவனைத் தேடுகிறேன்!



''நம்பிக்கை முழுமையையும் இழந்த வேளையிலும் நான் அவனை என் அறையின் மூலை முடுக்குகளில் எல்லாம் சென்று தேடுகிறேன். என்ன தேடியும் அவன் கிடைக்கவில்லை.

என் வீடோ மிகச் சிறியது. ஆயினும் என் வீட்டில் ஒரு பொருளை இழந்து விட்டால் அது போனது போனதுதான்; என்ன தேடியும் திரும்பக் கிடைப்பதில்லை.

ஆனால் உன் மாளிகையோ பெரிதினும் பெரிது; ஆதி அந்தம் அற்றது. ஆசை பற்றி அவனைத் தேடிக் கொண்டு உன் வாசலுக்கு வந்து விட்டேன்.

அந்தி வானத்தின் பொற் கூரைக்கடியிலே நின்று கொண்டு ஆவல் ததும்பும் விழிகளோடு உன் முகத்தைக் காண விழைகிறேன்.

ஆம், இப்பொழுது நான் சாசுவதத் தத்துவத்தின் விளிம்பைப் பற்றிக் கொண்டு நிற்கிறேன். இனி இங்கிருந்து எதுவுமே மறையாது; மாறாது. நம்பிக்கைத் தளர்ச்சி, மகிழ்ச்சிக் குலைவு, கண்ணீருக்கிடையே முகம் காணல் போன்ற நிலை கிடையாது.

ஆண்டவனே! சூன்யமாகி விட்ட என் வாழ்வினை அக்கடலிலே முழுக்காட்டி அதன் நிறை ஆழத்திலே என்னை அமிழ்த்தி விடு.

இழந்த அந்த இனிய ஸ்பரிசத்தைப் பிரபஞ்சத்தின் முழுமையிலே பெற்று உய்யுமாறு எனக்கு அருள்புரி.''

[ரவீந்திரர் தமது மனைவி மிருணாளினியின் நினைவாக எழுதிய பாடல் ஒன்றின் தமிழாக்கம்.]

நகை நட்டுக்களில் பெரும் பகுதியை விற்று அந்தப் பள்ளிக்கு நன்கொடையாக தந்து விட்டாள். இவையெல்லாம் 1902ம் ஆண்டு அவள் இறப்பதற்கு முன்பே நடந்தவை.''

தன் தாயை இழந்தபோது ரதீந்திரநாத்துக்கு வயது பதினைந்து. பார்க்கப் போனால் ஏதும் அறியாத பிள்ளைப் பருவம். இருந்தாலும் அந்த நாட்களில் அவர் உள்ளத்தில் தமது தாயைப் பற்றி அழியா ஓவியமெனப் பதித்துவிட்ட சிறு சிறு சம்பவங்கள், உயரிய ஆத்மா ஒன்றின் எழில்மிகு சித்திரத்தைக் கண் முன் கொண்டு வந்து நிறுத்தப் போதுமானவை. நினைவுகளைப் பளிங்கென எடுத்துக் காட்டும் அந்தப் பிரதிபலிப்பிலே மிருணாளினி தேவியை ஏழைகளுக்கு இரங்கும் கருணைகரியாகக் காண்கிறோம். குடும்ப விளக்காகப் பார்க்கிறோம். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றிச் சம நோக்குடன் பழகும் இல்லத்தரசியாகக் காண்கிறோம். எல்லோருக்கும் தன் இன்பத்தைப் பகிர்ந்தளிக்கும் ஆனந்தமயியாகக் காண்கிறோம். தன் செல்வங்களின் சீரிய ஒழுக்கத்துக்கு வித்திடும் சிறந்த அன்னையாகக் காண்கிறோம். இன்னும் சொல்லப் போனால், கணவரின் மனமறிந்து, சீரிய கருத்துக்களை உணர்ந்து அவரையும் உயர்த்தி, தானும் உயர்ந்து நிற்கும் மங்களமயியாட்டியாகவும் காண்கிறோம்.


பொறிகள்!
சிறப்புச்

இந்த இடத்தைப் பார்க்கிறபோது எனக்கு ஏதோ புதுமையில்லாத எண்ணங்க ளெல்லாம் வருகின்றன. இதோ, ஓடினால் பிடித்துவிடலாம் போல ஒரு குன்றும், வெண்ணெய்ப் பாறை நிற்கும் அதன் உச்சியும். நான் ஓடியும் பார்த்திருக்கிறேன். ஆனால் ஓட ஓடத்தான் தெரியும் அதன் தூரம்.

அந்தக் குன்றுக்கு அப்புறம் என்ன இருக்கிறதோ, தெரியாது. ஆனால் மாலை நேரத்தில் மஞ்சளைக் குழைத்துப் பூசின பளபளப்பான பெண்ணின் முகத்தைப் போல பந்து பந்தாய் உருண்டு உருண்டு மேகக் கூட்டங்க ளெல்லாம் அதன் பின்னால் போய் ஒளிந்து கொள்வதைப் போல எனக்குத் தோன்றும். திடீர் திடீரென்று கோபுரக் கோலத்துக்குப் புள்ளி வைத்தாற் போலக் கொக்குக் கூட்டமோ, நாரைக் கூட்டமோ எங்கிருந்தோ பறந்து வந்து அந்தக் குன்றுக்குப் பின்னால் மறைந்துவிடும்.

அந்தக் குன்றுக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்பதைக் கண்டுவிட எனக்குத் தீராத ஆசை — மூடியிருப்பதைத் திறந்து பார்த்து விடவேண்டுமென்ற மனித வெறி.

குன்றுக்கு இப்புறமாக இருந்த ஏரியின் ஒரு பகுதியில் மூங்கில் புதர். காற்று வீசுகிற நேரத்தில் மூங்கில்கள், 'உய்யோ, உய்யோ' என்று விநோதமான சத்தத்தை எழுப்பிக் கொண்டு, ஒன்றோடொன்று உராய்ந்துகொள்ளும்.

அந்த இடத்துக்கு யாரும் வருவதில்லை. தனிமையைக் கண்டு பயப்படாதவனுக்கு அங்கே பொழுது போவதே தெரியாது. 'ஜலக் ஜலக்' என்று மீன்கொத்தி திடீரென்று நீரில் பாயும். பெயர் தெரியாத ஏதோ ஒரு பறவை இனிமையாய்க் குரலெழுப்பும். இவையெல்லாம்தான் இப்போது நான் விலாயத்கானின் ஸிதார் இசையில் என்னை மறக்கக் கற்பித்திருக்க வேண்டும்.

மேகங்கள் கூட்டம் கூட்டமாய் ஓடும். என்ன ஓட்டம், என்ன வேகம்! எங்கள் ஊர் பிடிக்காதோ? ஒரு நிமிடத்துக்குள் எத்தனை உருவம், என்னென்ன சித்திரம்! அன்றும், இன்றும் இந்த விளையாட்டில் மட்டும் ஒரு வித்தியாசமும் தெரியவில்லை.

ஏரி நீர் ஆடாமல் அசையாமல் நிற்கும் போது, வானத்தில் ஓடும் மேகங்களின் பிரதிபலிப்பு எனக்கு விசித்திரமாயிருக்கும். மரங்களின் இலைகள் பச்சை என்றால், அப்படி ஒரு பச்சை நிறமாக இருக்கும். அந்த நிறத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் அது கண்ணுக்குள்ளே யெல்லாம் புகுந்து புகுந்து புறப்படும். சூரியன் கீழே இறங்கிச் செப்பு நிறத்தைப் பரப்பப் பரப்ப, இலைகளின் நிறம் மஞ்சளாகவும், செம்பாகவும் மாறுவதுபோல் எனக்குத் தோன்றும்.

அப்போது எனக்கு ஏழு வயது இருக்கும். இல்லை, ஒருவேளை ஆறுதானோ? அந்த வயதிலேயே இப்படி நிசப்தத்திலும், இயற்கையின் சப்தங்களிலும் மட்டும் மனசைச் சுற்ற விட்டு விட்டதனாலோ என்னவோ என் மனம் எப்போதுமே தனிமையை நாடுகிறது.

ஆனால் இடையில் இந்த இருபது வருடங்களில் — என் பத்து வயதுக்கு அப்புறம் நான் தனிமையை எங்கே அனுபவித்தேன்? என் அனுபவங்களும், நான் காலேவிட்ட தொழிலும் எனக்கு நிம்மதியையா அளித்தன?

ஆனால், இந்தத் தனிமைக்காக நான் எத்தனை ஏங்கியிருக்கிறேன் என்பது இதோ இந்தக் கணத்திலேதான் எனக்கே தெரிகிறது. இந்த இடத்தைப் பார்த்து இப்படிப் பைத்தியம்போல் மெய் மறந்து நிற்கிறேனே, இந்த முப்பதாவது வயதில், இப்போதுதான் தெரிகிறது.

இத்தனைக்கும் இது எங்கள் ஊர் அல்ல. இதுவும் 'அந்த இடம்' அல்ல. எங்கள் ஊரை மனிதர்கள் நாசமாக்கி விட்டார்கள். அந்த ஏரியை இப்போது ஒரு கோட்டை சூழ்ந்து விட்டது. சும்மா கிடந்த நீரை 'பம்ப்' வைத்து அந்த என் குன்றின் மேல் ஏற்றி மறுபடியும் உயரத்திலிருந்து 'சோ' வென்று விழவைத்துப் பெரிய பெரிய சக்கரங்களையெல்லாம் வைத்து, ஏதோ 'பவர் ப்ரொட்யூஸ்' பண்ணுகிறார்களாம், நாசமாய்ப் போனவர்கள்! ஏதோ உலகத்துப் 'பவரை' யெல்லாம் இவர்களே 'ப்ரொட்யூஸ்' பண்ணிவிடுவதாக நினைப்பு!

இந்த இடம், என்னுடைய அந்த இடத்தின் கால் தூசு — அரைம், கட்டை விரல் தூசு பெறாது. இந்த மண் மேட்டை எப்படி என் குன்று என நினைத்துக் கொள்வேன்? தண்ணீர் ஓர் ஓரமாய், சேறும் கட்டிப் பாசி பிடித்து — பாசி அழுகத்தான் இருக்கிறது; இருந்தாலும் எருமை மாடுகள் தம் உடலைப் புரட்டிக் கொண்டு 'ஹோய், ஹோய்' என்று கத்த, இதை எப்படி என் அந்த இடமாக நினைத்துக் கொள்வேன்?

ஆனாலும் இந்த இடத்தைப் பார்க்கும்போது எனக்கு ஏதோ நினைவுக ளெல்லாம் வருகின்றன.

எப்போதுமே, நான் மற்றப் பிள்ளைகளுடன் தெருவில் சாதாரணமாய் ஓடியாடி விளையாடுவ தில்லை. அப்பா சாயங்காலமாக என்னைத் தினமும் அங்கே அழைத்துப் போவார். இந்த வழக்கம் எப்படி ஆரம்பித்தது என்பது எனக்கு நினை

ம. இராஜாராம்

வில்லை! நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம் அந்த இடத்தில்தான் நடந்தது போல ஒரு ஞாபகம். நான் ஏன் அப்படிப் பித்தாகிப் போனேன் என்பதற்குக் காரணம் தெரியாவிட்டாலும், அதைப் பற்றி நினைக்கும்போது வியப்பாகவும் சிரிப்பாகவும் வருகிறது.

அப்பா கரையின் மேல் வெறுமனேயுக் கிடந்த ஒரு கல்லின் மேல் — அதை அவருக்கென்றே யாரோ அங்கு போட்டு வைத்திருக்க வேண்டும் — உட்கார்ந்து கொண்டு தம் புல்லாங்குழலை எடுத்து வைத்துக்கொள்வார். நான் இன்னொரு கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டு என் முழங்காலைச் சுற்றிக் கையைக் கட்டிக் கொண்டு என் தாடையை அழுத்திக் கீழ் நோக்காய் நீர்ப் பரப்பைப் பிரமை பிடித்தாற் போல் பார்த்துக் கொண்டிருப்பேன்.

அப்பா எப்போது குழலை ஊத ஆரம்பிப்பாரோ தெரியாது. ஆனால், அந்த ஒலி எப்போதுமே என் காதுகளில் விழுந்து கொண்டிருப்பது போல ஒரு கற்பனை. அப்பா சுழற்றிச் சுழற்றி மெல்லிசையைப் பிடித்து விட்டு மெதுவாக அலையலையாய்க் கீழே இறங்கும்போது நானும் மேலே மேலே ஏறி மேகத்தின் மேலமர்ந்து என் குன்றைச் சுற்றிவிட்டு, மறுபடியும் கீழே இறங்கி வருவேன். அப்பா சன்னமாய் நீள அனுபவித்து ஓர் இழுப்பு இழுத்துவிட்டு முத்தாய்ப்பாக ஒரு சுழற்றுச் சுழற்றுகையில் என்னுடைய வயிறு 'குபுக்'கென்று கருளும். செத்துப் போய்விடலாம் போலத் தோன்றும். சில சமயங்களில் அழுகையாய் வரும்.

சில நாட்களில் அந்த மாமி வருவாள். அப்பாவை விடக் கொஞ்சம் சிறியவளாய் இருந்திருக்க வேண்டும். அவள் யாரென்று கேட்க எனக்கு ஏனோ அப்போது தோன்றியதில்லை. அதை இப்போது நினைத்தால் எனக்கே என்மேல் கோபமாக வருகிறது. வீட்டில் அம்மாவிடமும் அவளைப் பற்றி ஏனோ பேசியதில்லை.

அப்பா குழலூதி முடித்த பின் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது நான் சின்னச் சின்னக் கற்களாய்ப் பொறுக்கி நீரில் விட்டெறிந்து கொண்டிருப்பேன். கல் நீர்ப் பரப்பில் பட்டதும் வளையங்கள் புறப்படும். உள்ளிருந்து மீன்கள் ஆவலுடன் வந்து மேலே எட்டிப் பார்த்துவிட்டுப் போகும்.

ஒவ்வொரு நாளும் அவள் போகும்போது என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டவாறே அப்பாவைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனது நினைவிருக்கிறது.

வர வர அப்பா ஏரிக் கரையில் குழலூதும் நேரம் குறைந்தது. எனக்கு இது பிடிக்கவில்லை. வீட்டில் ஊதிக் காட்டுகிறேன் என்று சமாதானம் சொன்னார். யாருக்கு வேண்டும்? வீட்டில் எங்கள் பூனைகூட ஊதும்.

ஒரு நாள் அப்பா என்னை வரவேண்டாமென்று சொன்னார். அப்பா கண்டிப்புக்காரர். ஆனால் அவர் போய் அரை மணி நேரத்துக்கு மேல் என்னால் தாங்க முடியவில்லை. அம்மாவை ஏமாற்றிவிட்டு ஓடினேன். அப்பா வழக்கமான கல் மேல் இல்லை. குழம்பிப் போய்ச் சுற்று முற்றும் நான் பார்த்தபோது மூங்கிற் காட்டுக்கு நடுவே அப்பாவையும் அவளையும் பார்த்தேன்.

'ஜிவ்' என்று என் முதுகுத் தண்டு சில்லிட்டது. அந்தக் காட்சியை என்னால் தாங்க முடியவில்லை. ஒரே ஓட்டமாய் வீட்டுக்கு ஓடி வந்து விட்டேன். உடம்பெல்லாம் புதுக் குமட்டிக் குமட்டி வந்தது. எனக்கு என்னவோ செய்தது. எதைக் கண்டாலும் பயமாக இருந்தது. நடுத் தெருவில் போய் நின்று கொண்டு, 'ஓ'வென்று கதற வேண்டும் போலிருந்தது.

அம்மா என்னைக் கவனித்து விட்டு ஏதேதோ கேட்டாள். என் வாயிலிருந்து வார்த்தை எழவில்லை. உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது. அம்மா என் நெற்றியில் விபூதியை மந்திரித்துப் பூசி மடியில் கிடத்திக் கொண்டாள். எப்படியோ தூங்கிப் போனேன்.

அப்புறம் எப்படி நான் சமாதானம் அடைந்தேனென்று நினைவில்லை. ஆனால் அடுத்த நாளோ அல்லது இரண்டு நாட்களுக்குப் பிறகோ தெரியவில்லை, ஒரு நாள் ஏதோ அடக்க முடியாத வெறியுடன் அப்பா எதிரே போய் நின்று கொண்டு பல்லைக் கடித்தவாறு, ''நானும் ஏரிக் கரைக்கு வந்திருந்தேன்'' என்றேன்.

அப்பா மிரண்டாற்போன்ற ஞாபகம்.

''எல்........லாத்தையும் பார்த்தேன்!''

ஒரு கணம் பிரமித்த அப்பா, ''எல்லாத்தையும் பார்த்தாயா?'' என்று கேட்டவாறு 'போட்'டென்று வெடித்துச் சிரித்தார். அவரால் நிறுத்தக்கூட முடியாமல் அத்தனை சிரிப்பு.


எனக்கு ஏனோ அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அநியாயமாய்த் தோற்றுப் போனாற் போன்ற ஏமாற்றம். 'சட்'டென்று அங்கிருந்து ஓடிப் போனேன்.

அப்புறம் வெகு நாட்களுக்கு அப்பாவையும் அவளையும் பார்க்கும்போதே அசிங்கமாகவும், வெட்கமாகவும் இருந்தது நினைவுக்கு வருகிறது.

அப்பா அநேகமாய்ப் புல்லாங்குழல் வாசிப்பதையே விட்டு விட்டார். கவரில் ஒட்டி விட்ட படத்தைக் கோணல் மாணலாய்க் கிழித்துவிட்ட அப்புறம் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் துண்டுகள் மீந்திருப்பதைப் போல் சிற்சில சம்பவங்கள் என் நினைவில் நிற்கின்றன.

அம்மாவும் அப்பாவும் ஒரு நாள் பெரிய சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அம்மா, அப்பாவை அத்தனை தூரம் எதிர்த்துப் பேசியதையோ அப்பாவுக்கு அத்தனை கோபம் வந்ததோ நான் பார்த்ததில்லை. விறகுக் கட்டையால் அம்மாவை அப்பா 'அடி அடி'யென்று அடித்துவிட்டு, ''நீ ஒழிந்தால் எனக்கு நிம்மதி'' என்று உறுமியபோது நான் விதிர் விதிர்த்துப் போனேன்.

அன்று மாலை அப்பாவோடு ஏரிக் கரைக்குப் போகவே எனக்குப் பயமாக இருந்தது. என்னால் அங்கே போகாமலும் இருக்க முடியவில்லை. அங்கே போய் அப்பா அந்தப் பெண்பிள்ளையிடமும் சண்டை போட்டார். ஆனால் அது அத்தனை பயங்கரமாக இருக்கவில்லை.


கண்ணைப் பறிக்கும் புது மோஸ்தர்களும், இழைநயமும் கொண்டவை-
அரவிந்த்
தரத்தில் சிறந்த துணிவகைகள்
துணிவகைகள்:
பாப்லின்கள்
ஷர்ட்டிங்குகள்: ஸ்ட்ரைப், டாப்பி, செக், பைஜாமா,
வேஷ்டிகள்: ப்ளாடினம், ராஜா ஸ்பெஷல்
மெர்ஸிரைஸ்ட் லான்: 5531
சூட்டிங்குகள்: காபர்டீன்
ப்ரின்டுகள்: ப்ரின்டெட் லான்கள், வாயில்கள், பாப்லின்கள்.
சலவை செய்த கலர் புட்டாக்கள்:
லெனோ மற்றும் புட்டாக்களில் 2x2 ஃபேன்ஸி ஃபுல் வாயில்கள்.
SANFORIZED
TABILIZED* and
TABILIZED double tested.
*Registered Users
Arvind
Quality
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அகமதாபாத்
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
மெஸர்ஸ் அஜித்பாய் ஜயந்திலால் சோமாபாய் படேல் & கோ., 5, கிடங்குத் தெரு, மதராஸ்.

அவள் அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு அழுததைப் பார்த்தபோது எனக்கு வியப்பாகவும், அம்மா அழுததற்கு அவளே ஏதோ தானே பழி வாங்கிவிட்டாற்போன்ற விநோதமான திருப்தியாகவும்' இருந்தது.

வீட்டுக்குத் திரும்பியபோது வழக்கம் போல் விளக்கு எரிந்து கொண்டிருக்கவில்லை. அப்பா கதவில் கையை வைத்தபோது அது தானாகத் திறந்து கொண்டது. உள்ளே கூடத்தில் ஊஞ்சல் சங்கிலி மாட்டும் வளையத்திலிருந்து ஒரு கயிற்றில் அம்மா தொங்கிக் கொண்டிருந்தாள். கண்கள் திறந்து வெள்ளை விழி மட்டும் தெரிந்தது. நாக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது.

அப்பா ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டு, திரும்பி என்னைப் பார்த்தார். ஒன்றும் பேசாமல் என்னைக் கையைப் பிடித்து பூஜையறைக்குள் அழைத்துப் போய் விளக்கைப் பொருத்தினார். புல்லாங்குழலை எடுத்து என் கையில் கொடுத்து, ''வாசிக்கொண்டு இங்கேயே இரு!'' என்று சொல்லிவிட்டுப் போனார். சரளி வரிசை வாசிக்கப் பழகியிருந்தேன் அப்போது. புல்லாங்குழல் வாசிப்பது ரொம்ப ரொம்பக் கஷ்டம்.

நான் இக்பிரமை பிடித்துப் போய்க் குத்து விளக்குச் சுடரையே பார்த்துக் கொண்டிருந்தேன். நான் என்ன நினைத்தேன், எனக்கு என்ன தோன்றியது, என் அப்போதைய உணர்ச்சிகள் என்ன என்பது எதுவுமே எனக்கு இப்போது தெரியவில்லை.

மறுபடியும் அப்பா வந்து என்னை அழைத்துக்கொண்டு போனபோது, கூடத்துத் தரையில் அம்மாவின் உடல் கிடந்தது. கண்கள் மூடியிருந்தன. நாக்கு உள்ளே அழுந்தியிருந்தது.

அப்பா என்னையும் அழைத்துக் கொண்டு பக்கத்து வீடுகளிலிருந்து யாரையெல்லாமோ அழைத்து வந்தார். அப்புறம் நான் சுடுகாட்டுக்குப் போனதும் புரோகிதர் சொன்னதை எதையோ செய்ததும் மற்ற விஷயங்களும் தெளிவாய் நினைவில்லை.

ஆனால் அம்மாவின் இல்லாமையை என்னை யறியாமல் நான் உணர்ந்ததும், ஏங்கிப்போனதும் நினைவிருக்கின்றன.

இதற்கிடையில் நான் இரண்டாம் வகுப்பிலிருந்து தேறி மூன்றும் வகுப்புக்குப் போய்விட்டேன்.

அப்பா அதற்கப்புறம் குழலைத் தொடவேயில்லை. பேசுவதும் மிகச் சொற்பமாகி விட்டது. இரண்டு வீடுகள் தள்ளி யிருந்த ஒரு சின்னப் பெண் வந்து தினமும் சமைத்து வைத்துவிட்டுப் போனாள். ஆனால் நானும் அப்பாவும் மாலையில் ஏரிக்கரைக்குப் போவது மட்டும் நிற்கவில்லை.

கொஞ்ச நாட்களாக அவளையும் அங்கு காணோம். ஏரியில் நீர் வற்றிக் கொண்டு வந்தது. கொக்குகள் இறங்கி நீரில் தவமிருக்க ஆரம்பித்தன.

திடீரென்று ஒரு நாள் அவளும் வந்தாள். அவளுடன் கையில் ஒரு சின்னக் குழந்தையும் வந்தது. வந்து அப்பாவின் மடியில் அந்தக் குழந்தையை வைத்தாள் அவள். நான் கொஞ்சம் கூடச் சிரத்தை இல்லாதவன் போல் பாவனை பண்ணிக் கொண்டு ஓரக் கண்ணால் அந்தக் குழந்தையைப் பார்த்தேன். ரொம்பச் சிறியது. தொட்டால் கன்றிவிடும் போல் அப்படி ஒரு சிவப்பு. அதன் உதடுகளை அப்படியே கடித்துத் தின்றுவிடலாம் போல் இருந்தது. கன்னங்களை நன்றாக நிமிண்டி நசுக்கித் திருகி எடுக்க வேண்டும் போல் வெறி பிறந்தது.

எனக்கு ஏனோ ஆத்திரம் குமுறி வந்தது. வெறுப்போடு கீழே கிடந்த கற்களைப் பொறுக்கி நீரில் நின்றுகொண்டிருந்த நாரை யொன்றின் மேல் விட்டெறிந்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

ரயிலில் அப்பாவோடு ஏறுகிறேன். கொஞ்ச நேரத்தில் அவளும் அந்தக் குழந்தையோடு வந்து ஏறுகிறாள். அப்பாவின் புல்லாங்குழலை மறந்து விடாமல் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

''இந்த மாமி ஏன் நம்மோடு வருகிறாள்?'' என்று கேட்கிறேன். அவள் சிரிக்கிறாள். அப்பா என்னை — ஒரு நாளுமில்லாத திருநாளாய் அணைத்துக் கொள்ளுகிறார்.

ஒரு ஸ்டேஷனில்—எந்த ஸ்டேஷன் என்று அறிந்து கொள்ளக்கூடத் தெரியாத, தோன்ற வயது அது — காப்பி சாப்பிட அப்பாவோடு இறங்குகிறேன். கூட்டம் நெரிகிறது. காப்பியை நான் உறிஞ்சிக் குடித்துக்கொண்டிருக்கிறேன். திடீரென்று இரயில் நகருவதைக் கவனித்துப் பரபரப்புடன் தலையை நிமிர்த்துகிறேன். எதிரே அப்பாவைக் காணவில்லை. ஒன்றும் புரியாமல் சுற்றுமுற்றும்

பிரான் கோயிஸ் ஸகன் என்ற பிரபல பிரஞ்சு நாவலாசிரியை அண்மையில் ஹாலிவுட்டுக்குப் போயிருந்தார். திரும்பி வந்ததும் பத்திரிகை நிருபர்கள் அவரிடம் ஹாலிவுட் பற்றிய அவரது அபிப்பிராயத்தைக் கேட்டனர்.

அதற்கு அவர் அளித்த பதில்: ''ஹாலிவுட் பற்றி புதிய நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன். நூற்றுப் பத்துப் பக்கங்கள் எழுதி முடித்து விட்டேன். இதற்குள்ளாகவே மூன்று கதாபாத்திரங்களைக் கொன்று விட்டேன். ஹாலிவுட் பற்றிய இந்த நாவலை எழுதி முடிக்கு முன் குறைந்தபட்சம் இன்னும் மூன்று கதாபாத்திரங்களையாவது நிச்சயமாகக் கொன்று விடுவேன்!''

- இன்ஃபா

ஹாலிவுட் – ஓர் அபிப்பிராயம்!



பார்க்கிறேன். கூட்டத்தில் எங்கும் அப்பாவின் தலை தெரியவில்லை. இரயிலின் கடைசிப் பெட்டி பிளாட்பாரத்தைத் தாண்டுகிறது.

வாயடைத்துப் போய் நின்றவன் திடீரென்று யோசனை வந்தவனாக, வி. எல். ஆர். ஸ்டாலின் கல்லாவில் உட்கார்ந்திருப்பவரிடம் போய், ''மாமா, எங்க அப்பா எங்கே?'' என்று கேட்கிறேன்.

அப்புறம் என்னென்னவோ பேச்சுக்கள் நடந்து, எப்படி யெப்படியோ ஆகி, எனக்கு இப்போ நினைவிருப்ப தெல்லாம், அந்த ஸ்டால் சிப்பந்திகளில் ஒருவனாக நானும் ஆகிவிட்டதுதான்.

மாலை நேரங்களில் வேலை கழுத்தை நெரிக்கும். அப்படியும் நேரம் கிடைக்கும்போது மீண்டும் அந்த இடத்தை நினைத்துக் கொள்வேன். சில இரவுகளில் புல்லாங்குழலை எடுத்து வைத்துக்கொண்டு ஊதிப் பார்ப்பேன். மத்யமத்தில் நீட்டி, நிஷாதத்துக்குத் தாவி, மேல் ஷட்ஜமத்தைச் 'சட்'டென்று தொட்டுச் சுருட்டிக் கீழே இறங்கி, காந்தாரத்தை வளைத்து ஆதார ஸ்வரத்தில் என் வயிற்றைப் 'பளீ'ரடித்துக் கொண்டு செத்துப் போய்விட வேண்டும் போன்ற வெறி பிறக்கும். அப்பா என்னுடன் இருந்திருந்தால் ஒருவேளை கற்றுத் தந்திருப்பார்.

எனக்கு இப்போது வியப்பாக இருக்கிறது. அம்மா இறந்தபோது நான் அழுதிருக்கவேண்



டும். அல்லது அப்பா உயிரோடு பிரிந்த போதாவது அழுதிருக்க வேண்டும். எனக்கு ஏன் அழவேண்டுமென்று தோன்றவில்லை? என்ன ஜன்மம் இது?

கோபாலய்யருக்கு என்மேல் பாசம் பிறந்து, என்னை அவர் வீட்டோடு வைத்துக் கொண்டு, அவருடைய நொண்டிப் பெண்ணுக்கு என்னை மாப்பிள்ளையாக்கியதும் வி. எல். ஆர். ஸ்டாலுக்கு என்னை மானேஜராக்கியதும் எனக்கு நினைவு தெரிந்தப்புறம் நடந்தவை. என் கல்யாணத்தைத் தவிர, நினைவில் நிற்கும்படியான வேறு எந்த நிகழ்ச்சியும் எனக்குத் தெரியவில்லை.

கோபாலய்யரின் இளம் மனைவி — இரண்டு பேருக்கும் இருபது வயது வித்தியாசம் இருக்கும்; இரண்டாந் தாரம் — என்மேல் அபரிமிதமான அன்பு காட்டினாள். அது என்ன அன்பு என்பது, ஒரு நாள் அவளுடன் தனியாக இருக்க நேரிட்டபோதுதான் தெரிந்தது.

திடீரென்று அவளை ஒரு நாள் வீட்டில் காணவில்லை. சென்னை போகிற இரயிலில், கார்டு வண்டியில் ஒரு ஆங்கிலோ–இந்திய கார்டுடன் அவளைப் பார்த்ததாகப் பேசிக் கொண்டார்கள். அப்புறம் கோபாலய்யர் அதிக நாட்கள் உயிரோடு இருக்கவில்லை. நானே ஸ்டாலின் சொந்தக்காரன் ஆனேன்.

இத்தனைக்கும் நடுவில் என்னுள் ஊறிப் போயிருந்த என் வேட்கை குறையவில்லை. எப்படியோ வாய்ப்பை உண்டாக்கிக் கொண்டு ஓடோடிப் போனேன், என்னுடைய அந்த இடத்தைப் பார்ப்பதற்காக. பதினைந்து வருடங்களில் அங்கு உண்டாகியிருந்த மாற்றம்...

என்னுடைய குன்றைக் காணோம்; ஏரியைக் காணோம்; மூங்கிற் புதரைக் காணோம். கட்டுக் காவலுடன் வளர்ந்து நின்ற அந்தக் காம்பவுண்டுக்குள்ளிருந்து மோட்டார் சப்தம் இடைவிடாமல் வந்து கொண்டிருந்தது. என்ன நாராசம்!

ஐயோ, அகில பாரத சங்கீத நிகழ்ச்சியில் பிஸ்மில்லாகான் ஷெனாய் இசை ஒலிபரப்பாகும்போது விளக்கையெல்லாம் அணைத்து விட்டு, சப்தம் குறைவாக வைத்து, கண்ணை மூடிக் கொண்டு நான் என்னையே மறக்கும்போதெல்லாம் நான் என் அப்பாவுடன் ஏரிக் கரையில் இருப்பது போலத் தோன்றுமே!, அந்த என் சொர்க்கத்தை எப்படிச் சின்னாபின்னப் படுத்தி விட்டார்கள்!

என்னால் தாளவே முடியவில்லை. இதயத்தைக் கிழித்துக் கொண்டு அழுகை வந்தது. இதற்கா ஓடி வந்தேன்? யாரால் புரிந்து கொள்ள முடியும்? என் ரசிப்புத் தன்மை தான், துன்பத்தையெல்லாம் என் மனத்தை அண்டக்கூட விடாமல் ஆக்கியது என்றால் யார்தான் நம்புவார்கள்?

ஒரு நிமிடம் கூட அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் அடுத்த இரயிலிலேயே திரும்பி வந்து சேர்ந்தேன்.

ஆயிற்று, இது நடந்து ஐந்தாறு வருடங்கள் ஆகிவிட்டன. அவ்வப்போது என்னை மயக்கத்தில் ஆழ்த்தி என் மனத்தில் நிலை பெற்றுவிட்ட அந்தக் காட்சியும் அதைச் சுற்றிப் படர்ந்திருந்த நினைவுகளும் இனிமேல் என் மனத்தளவில் மட்டும்தான் என்ற விஷயத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

இதோ, இந்த இடம் என்னுடைய அந்த இடத்தின் அருகே நெருங்க முடியாது. ஆனால் இது எனக்குத் தருகிற நினைவுகள் எத்தனை இன்பமானவை!

இந்த நினைவு மயக்கத்திலேயே மூழ்கிக் கிடக்க, வயிறும், என் நொண்டி மனைவிக்கும் அவள் தந்திருக்கும் மூன்று செல்வங்களுக்கும் எனக்கு இருக்கும் கடமையும் என்னை விடுவதில்லை.

தநிஸா, தஸா நித என்ற மால்கோஷின் சுழற்சி, குவ... குவ... என்று கூவும் எங்கள் ஊர்க் குயிலையும், என் அப்பாவின் குழலையும் அதைத் தொடர்ந்து.... அப்பப்பா....!

நினைவுகளுக்கு முடிவு எங்கே?

விராலிமலை வேலவனுக்குக் கோடி அர்ச்சனை

❁

திருச்சி ஜில்லாவில் உள்ள புராதன க்ஷேத்திரமான விராலிமலையைப் பற்றி அறியாத முருகனடியார்களே இருக்கமாட்டார்கள். பக்தி வழிபாட்டினால் பெறற்கரும் பேற்றையும் பெற்று விடலாம் என்பதற்கு ஆதர்ச புருஷராக விளங்கிய அருணகிரிநாதருக்கு ஆறுமுகப் பெருமான் அஷ்டமா சித்திகளையும் அளித்த அரும் பெரும் ஸ்தலம் அது. அந்தத் திவ்ய ஸ்தலத்தில் திருக்கோவிலில் கொண்டெழுந்தருளியுள்ள முருகப் பெருமானுக்கு உலக நன்மையைக் கருதிக் கோடி அர்ச்சனை செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டு 12-6-67ந் தேதியிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தத் தெய்வீகக் கைங்கரியத்தில் பங்குபெற்று முருகப் பெருமானின் அருளுக்குப் பாத்திரமாக விரும்புகிறவர்கள் தங்கள் காணிக்கையைக் கீழே காணும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

விலாசம் :

டி. எஸ். நடேச குருக்கள்
தெற்கு வீதி, விராலிமலை P.O. (திருச்சி ஜில்லா)

—

எம். குப்புசாமிப் பிள்ளை
திருப்பணிக் கமிட்டி அலுவலகம், மலையடிவாரம்
விராலிமலை P.O. (திருச்சி ஜில்லா)

திருமணம்



சீதா — வாசுதேவன்

மதராஸ் வால்டர் தாம்ஸன் கம்பெனியைச் சேர்ந்தவரும், ஓய்வு பெற்ற பி.எம்.ஜி. ஆபீஸ் சூப்பரின்டெண்ட் ஸ்ரீ டி. எஸ். என். கோபாலஸ்வாமி அய்யங்கார் குமாரருமான சிரஞ்சீவி வாசுதேவனுக்கும் செங்கல்பட்டு செயின்ட் ஜோஸப் ஹைஸ்கூல் ஓய்வு பெற்ற ஹெட்-மாஸ்டர் ஸ்ரீ சுந்தரராஜன் தம்பி குமாரத்தி சௌபாக்கியவதி சீதாவிற்கும் செங்கல்பட்டில் சமீபத்தில் திருமணம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

ஒளி பிறக்குமா?

ஜி. எஸ். பாலகிருஷ்ணன்



சீண்டிக் குழந்தையாட்டம் டெலிபோன் அடிக்கொரு தரம் சிணுங்கிக் கொண்டே இருந்தது. ஆனால் டாக்டர் சாரு அதைக் கவனியாமல் மேல்நாட்டு நவீனமொன்றில் மூழ்கியிருந்தாள். சில விநாடிகள் மணிஓசை ஓயவும் அறையில் நிசப்தம் நிலவியது. ஆனால் அதோ மீண்டும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் முறையில் டெலிபோன் கணகணத்தது. கணகணத்துக் கொண்டே இருந்தது. சலிப்புடன் எழ முயன்றாள் சாரு. அடுத்த கணம் சோபாவில் 'தொப்'பென்று சாய்ந்தாள். 'கன்கிராஜுலேஷன்ஸ்' என்ற ஆங்கில வார்த்தையைக் கேட்டுக் கேட்டு அவள் காது புளித்து விட்டது. தெரிந்த குரல்கள், தெரியாத குரல்கள், கீச்சுக் குரல்கள், கரகரப்பான குரல்கள் — அத்தனையும் அதே சம்பிரதாயச் சொல்லைத்தான் முணுமுணுத்தன. நாள் முழுதும் ஒரே வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்தால் யாருக்குத்தான் அலுப்புத் தட்டாது?

சென்ற சில நாட்களாக எந்தப் பத்திரிகையைப் பிரித்தாலும் இப்படித்தான்! ஒரே வாழ்த்துக்கள்... புகழ்மொழிகள். சில அவளுடைய புகைப்படத்தைப் பெரிய அளவில் முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தன. சில தலையங்கம் எழுதியிருந்தன. அவளைப் பற்றி அவள் சொன்னது. சொல்லாமல் விட்டது. பிறர் சொன்னது என்ற தோரணையில் கதையாக எழுதி அவளுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தன வாரப் பதிப்புகள். உள் நாட்டுப் பத்திரிகைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு அயல் நாட்டு ஏடுகளும் அவள் அடக்கமான முறையில் செய்து, அபரிமிதமான வெற்றியடைந்த ஆராய்ச்சிக்குக் கவி பாடியிருந்தன. அமெரிக்காவிலிருந்து வெளியே வரும் பிரபல பத்திரிகை ஒன்று, அவளுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை விலை கொடுத்து வாங்க முன்வந்திருந்தது. வைத்தியப் பத்திரிகைகளைப் பற்றியோ கேட்கவே வேண்டாம்! இந்தப் பாராட்டுக்களின் இனிப்பு உண்மையில் அவளுக்குத் திகட்டி விட்டது. யாருக்கு வேணும் இந்தப் புகழும் விளம்பரமும்?

மீண்டும் அந்தப் பொல்லாத 'டெலிபோன்' அடித்துத் தொலைத்தது. அதன் வாயை மூட எண்ணிக் குழாயைக் கையில் எடுத்தாள் அவள். டாக்டர் மார்க்கபந்து சென்னையிலிருந்து பேசினார். அவளுக்கு உடம்பில் புல்லரித்தது. தள்ளாத வயதில், யாரையுமே என்றுமே வாய் விட்டுப் புகழாத தன் மாஜிப் பேராசிரியர், 'டிரங்கால்' போட்டுத் தன்னை வாழ்த்துவதென்றால் அது எளிதில் கிடைக்கக் கூடிய பேறா? அவர் என்ன சாதாரண டாக்டரா? 'ஜைனகாலஜி' என்ற பிள்ளைப் பேறு வைத்தியத்தில் அவர் சொல்வது தான் வேத வாக்கு என்று அகில உலகமும் ஒப்புக் கொண்டிருக்கிறதே! சாருவின் வாழ்வை இன்று மணக்க வைக்கும் கடமை உணர்ச்சியும், தளராத ஆர்வமும் தீராத அறிவுப் பசியும், தொழிலிலிருந்த இலட்சிய வெறியும் அவரிடமிருந்து தொத்திக் கொண்ட அரும் குணங்கள் என்பதில் என்ன சந்தேகம்? மற்ற மாணவ மாணவிகளைவிடச் சாருவின் மீது அவர் காற்று கொஞ்சம் அதிகமாகவே வீசியிருந்தது! இல்லாவிட்டால் சொந்த முறையில் ஆராய்ச்சி செய்து அதில் பிரமாத வெற்றி கண்டு,



அகில உலக வைத்திய ஆராய்ச்சிக் கழகம் அளிக்கும் பரிசை அவளால் அடைந்திருக்க முடியுமா என்ன?

ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து டெலிபோனிலும் மார்க்கபந்துவின் குரல் மணிமாக ஒலித்தது. அளவுடன் சாருவைப் புகழ்ந்தார் அவர். 'உன் வெற்றி கண்டு மகிழ்ச்சி. உன் தளராத உழைப்புக்கு என் பாராட்டுக்கள். அறிவுப் பசி நல்லது தான். ஆனால் அறிவின் முரட்டுப் பிடியிலே சிக்கி ஒரேயடியாக அந்தரத்தில் பறக்காதே. உணர்ச்சிகளுக்கும் மதிப்புத் தா. உன்னைத் தேடி வரும் சராசரிநோயாளி வெறும் உணர்ச்சிப் பிண்டம் என்பதை மறக்காதே. அவன் பிரச்னைகளை அவன் அளவில் நின்று கவனி... உன் மனக் கதவும், வீட்டுக் கதவும் எப்பொழுதும் திறந்திருக்கட்டும்...'

கதவு தட்டப்பட்டது!

யார் இந்த அகால வேளையில்? குளிர் கொல்லுகிறதே! பனி விஷமாகவல்லவா கொட்டுகிறது?

மாலேயும் சென்டுமாக யாராவது வந்திருந்தாலும் வியப்பதற்கில்லை! 'அமெரிக்கப் பத்திரிகைகளில் உங்களைப் பற்றிப் படித்தேன்', 'லான்செட் உங்களை எவ்வளவோ புகழ்ந்திருக்கிறது?', 'ஐரோப்பாவில் ஓர் ஆராய்ச்சி நிலையம் உங்களுக்குக் கௌரவ டைரக்டர் பதவியை அளித்திருக்கிறதாமே', 'பாரதப் பெண்களுக்கு நீங்கள் ஒரு சிறந்த வழிகாட்டி' என்ற ரீதியில் ஓடும் பேச்சுக்களை இனியும் கேட்டால் பைத்தியமாக வேண்டியதுதான். பிரசவம் சம்பந்தமாக அவன் செய்த ஆராய்ச்சி வெற்றி அடைந்ததில் அவனுக்கு மகிழ்ச்சிதான். ஆனால் இந்த அங்காடிப் புகழை வேண்டியா அவன் ஆராய்ச்சி செய்தான்? வைத்திய உலகத்துக்கு வெகு நாட்களாகக் கண்ணாமூச்சி காட்டி வந்த ஒரு பிரச்னைக்கு விடை கண்டே தீருவது என்ற வெறியல்லவா அவன் ஆராய்ச்சியின் ஆதார சுருதி? சொந்தப் புகழுக்காக அவன் ஏதாவது செய்திருந்தால்தானே, மறைமுகமாகக் கொட்டிய புகழ்மொழிகள் அவனுக்கு மகிழ்ச்சி யூட்டியிருக்கும்? என்று மார்க்கபந்து என்ற கர்மயோகியான டாக்டரை அவன் சந்தித்தானோ, என்று அவருடைய மந்திரச் சொற்களிலே மயங்கி, அவர் சிந்தனைப் போக்கில் ஒன்றினானோ, அன்றே 'தான்' என்ற நினைவு வெட்டி மடிந்து விட்டதே! அத்தனையும் 'பிரம்ம சொரூபம்' என்ற உண்மையை அப்பட்டமாக எடுத்துச் சொல்லாமல், நாளுக்காகத் தன் செயல்கள் மூலம் அவனுக்கு உணர்த்தின தாடி இல்லாத தவயோகியல்லவா அந்த டாக்டர்?

இருட்டிலே ஒதுங்கி நின்று கொண்டிருந்த இளம் பெண்ணைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டது டாக்டர் சாருவுக்கு. கசங்கின துணிப் பொம்மையைப்போல் இருந்தது அவள் தோற்றம். முகத்திலே தாறுமாறாக அப்பப்பட்டிருந்த மட்டரகப் பவுடரும், உதடுகளில் கலைத் திறனின்றி வாரிப் பூசப்பட்டிருந்த சாயமும், 'க்ரீன் ரூமி'லிருந்து பாதி 'மேக் அப்'பில் ஓடிவந்த நடிகையை நினைப்பூட்டின. பூத்துக் குலுங்கும் பருவம்தான். ஆனால் ஏன் இந்த வாட்டம்? அந்த நீள் விழிகளிலே ஒளிக்குப் பதிலாக ஏன் உறக்கமும், துக்கமும் குழுமியிருக்கின்றன?

அந்தப் பெண்ணை உள்ளே வரும்படி கூறி விட்டு முன்னால் நடந்து சென்றான் டாக்டர் சாரு. அவன் அகத்திலே அர்த்தமற்ற குழப்பம் புகையாகப் பொங்கி எழுந்தது. வேதனை பிடுங்கித் தின்றது. அந்தப் பெண்ணின் தோற்றமே அவள் கதையைச் சொல்லி விட்டதா?

தன் எதிரிலிருந்த சோபாவில் உட்காரும்படி அந்தப் பெண்ணிடம் கூறினான் டாக்டர். ஆனால் அவள் தயங்கித் தயங்கி நின்றாள். அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. காதருகில் கதகதப்பு ஏற்பட்டுச் செம்மை படர்ந்ததைக் கவனிக்கத் தவறவில்லை டாக்டர்.

"உட்காரம்மா."

"வேண்டாம் டாக்டர். நான் நின்று கொண்டே பேசுகிறேன்."

"நீ உட்காரப் போகிறாயா இல்லையா?" என்று சற்றுக் கடுமையாகவே வினவினான் டாக்டர். அவளும் ஆயிரம் சங்கோசத்துடன் சோபாவின் முன் ஓரத்தில் அமர்ந்தாள். இப்பொழுது அவள் உடம்பு கொஞ்சம் அதிகமாகவே நடுங்கிக் கொண்டிருந்தது.

"உன் பெயர் என்ன?"

"..........."

"உனக்குப் பெயர் கிடையாதா?"

"ஆதியில் தமயந்தி என்று அழைத்து வந்தார்கள். அதற்குப் பின் நூர்ஜஹான்... மின்மினி... யாமினி .... நளினி ... என்று எனக்கு இடாத பெயர்களே இல்லை. இதைத் தவிர அங்கு வருகிற 'ரசிகர்கள்' வேறு எனக்குப் புதுப் புதுப் பெயர்கள் சூட்டுகிறார்கள். என்ன பிழைப்பு, என்ன வாழ்க்கை! சினிமா நடிகைகளின் பெயரிட்டழைப்பதில் சிலருக்குக் கொள்ளை ஆசை... எல்லாம் வெறி... வேறென்ன?"

"அப்படியென்றால்...." என்று ஏதோ வாயெடுத்த சாரு, ஏனோ மௌனம் சாதித்தான். எல்லாம் விளங்கி விட்டது!

வடநாட்டில் இருக்கும் இந்த ஊருக்கு வேலைக்கு வந்த மறுநாளே இங்கு பெண்மை களங்கமுற்று நாறும் ஒரு தெரு இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் சாருவுக்கு ஏற்பட்டது. அழகையும் இளமையையும் அங்காடிச் சரக்காக விற்று, அதற்கான விலையுடன் வியாதியையும் பெற்றுக் கொண்ட ஒரு பெரிய பட்டாளம் அவனிடம் ஊசி போட்டுக்கொள்ள வந்த போது டாக்டர் கலங்கியே போனான். மொட்டும் மலருமாக எத்தனை பெண்கள்! 'கவீர்' என்று சிரித்துப் பரிமளம் வீச வேண்டிய புனிதமான பெண்மைக்கு இப்படி ஒரு தலைக்குனிவா! கறை பட்ட குத்து விளக்குகள்!... ஆனால் யாரைப் போய்ப் பழிப்பது?

"என் தொழிலைச் சொன்னால் எங்கே என்னைத் தொட மாட்டீர்களோ என்று அஞ்சித்தான் தயங்கினேன்."

"இதோ பார், வைத்தியத் தொழில் புரியும் எங்களுக்கு எல்லா உடல்களும் புனிதமானவை; எல்லா உயிர்களும் தூய்மையானவையே! எங்கள் தொழில் ஒரு தவம். துயர் துடைப்பதுதான் எங்கள் லட்சியம்."

"எவ்வளவு இனிமையாகப் பேசுகிறீர்கள்! அந்தக் காலத்தில் எங்கள் தலைமை ஆசிரியரும் இப்படித்தான் பேசுவார்... பாவம், இறந்து விட்டார்... நானும் எவ்வளவோ டாக்டர்களை அணுகிவிட்டேன்... எல்லோரும் பாம்பாகச் சீறினார்கள். எனக்கு உதவ மறுத்து விட்டார்கள்."

"உன் உடம்புக்கு என்ன?"

'துப்பட்டா'வின் தலைப்பை இழுத்துக் கடித்தபடி சிலையாக வீற்றிருந்தாள் அவள். கண்களில் நீர் குபுகுபுவென்று இலைவிடத் தொடங்கியது.

"நான் தர்மசங்கடமான நிலையில் இருக்கிறேன். தாய்க் கிழவி சீறுகிறாள். என்னுடன் வாழும் மற்ற பெண்கள் என்னைக் கரித்துக் கொட்டுகிறார்கள். அவர்கள் சொல்வதும் உண்மைதானே? தாய்மைக்கும் எங்களுடைய தொழிலுக்கும் எப்படி ஒத்துப் போகும்? யார் யாரோ தவமிருக்கிறார்கள்



பழைய சிநேகிதி உமாவின் வீட்டைப் பார்வையிடுகிறாள் பானு....
பேஷா இருக்கு, எல்லாம் பேஷா இருக்கு உமா....
'முகஸ்துதி' போதும் பானு!
நிஜம்மாத்தான் உமா! நீ பண்டம் பாத்திரம் எல்லாம் பளபளப்பா வச்சிண்டிருக்கே. என் வீட்டுப் பாத்திரங்கள் அழுது வடியும்.
அதெல்லாம் கிடக்கட்டும் இந்தா இதைக் குடி, பானு....
அதென்னடி மாயம் உமா! எப்படி இவ்வளவு சூடா ஆறு நிமிஷத்திலே பலகாரம் தயார் செய்தாய்? இன்று என்ன நினைப்பில் ஆத்தியபடியே இருக்கியே!
அது பெரிய ரகசியம்! போனால் போகிறது, நீதான் சிநேகிதியாச்சே சொல்கிறேன். எல்லாம் 'லிக்கோ' செய்யும் மாயம்!
'லிக்கோ'வைப் பற்றி கேட்டதுண்டு. ஆனால் அக்கறை காட்டவில்லை இதுவரை.....
அடி அசடே! 'லிக்கோ'வைக் கொண்டுதான் நான் சீக்கிரமாகச் சமையலை முடிக்கிறேன். புகையே கிடையாது. நீண்ட நேரம் நின்று எரிகிறது. எந்த ரகக் கரி அடுப்புக்கும் ஏற்றது. இத்தனையுடன் சிக்கனமானது. போதுமா?
நிஜம்மா?
அதனால் பாத்திரமெல்லாம் பளபளன்னு இருக்கக் காரணம் 'லிக்கோ' சாம்பல் தான்!
உமா! ஒரு உதவி செய்தியன்! அடுத்த தடவை நீ 'லிக்கோ' வாங்கும் போது எனக்கும் சேர்த்து ஆர்டர் பண்ணேன்!....
LECO
லிக்கோ
நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்.
நெய்வேலி-1

ஒரு குழந்தைக்காக. அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு இயற்கை என்னை ஏன் அநியாயமாகச் சோதிக்கிறது?''

''இயற்கையை ஏன் பழிக்கிறாய்? அது எப்பொழுதும் நியாயமான முறையில்தான் நடந்து கொள்ளும். மனித மனத்தின் கோணங்கிகளுக்கு ஏற்றபடி இயற்கை தன் போக்கை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது எத்தகைய பேதைமை. நாம்தான் பிரகிருதியின் போக்கிலே போக வேண்டும். அதுதான் விவேகம். ...தாய்மையை ஏன் பாரமென்று பழிக்கிறாய்? ஒரு பெண்ணின் வாழ்வு பூரணத்துவம் பெறுவதே தாய்மையில்தான்.''

முதன் முதலாக அவள் சிரித்தாள். ஒரு வறட்டுச் சிரிப்பு. அது அகத்தில் வளர்ந்திருந்த வெறுப்பின் எதிரொலி போலும்.

''வாழ்வே இல்லாத எங்களுக்கெல்லாம் என்ன பூரணத்துவம் வேண்டியிருக்கிறது! நாங்கள் எல்லாம் உயிர்களா? வெறும் சதைகள்! ஏதோ பெயருக்கு நாட்களை ஓட்டிவிட்டுப் புழுவாக மடியவேண்டியவர்கள். பிரகிருதி வெள்ளத்தின் போக்கிலே நீந்திச் சென்று அது அளிக்கும் பரிசுகளை அடையும் பாக்கியசாலிகளுக்கு ஏற்படும் புல்லரிப்பெல்லாம் எங்களுக்கு ஏது? இந்தச் சகதியிலே ஒரு மரம் வளர வேண்டுமென்று யார் தவம் இருந்தார்கள்?....அலங்கார நடையில் பேசுவது என் வழக்கமாகி விட்டது. அந்த நாளில் கவிதைகள் கூட எழுதி, தலைமை ஆசிரியரின் பாராட்டைப் பெற்றிருக்கிறேன்! எப்படியோ தொடங்கின வாழ்வு எங்கோ வந்து முடியும் என்று யார் கண்டார்கள்?''

டாக்டர் சாருவுக்கு அந்தப் பெண் பேசப் பேச அநுதாபம் பிறந்தது. புத்திசாலியான இவள் எப்படிப் படுகுழியில் விழுந்தாள்?.... கடவுள் ஒவ்வொருவருக்கும் காலமென்ற சூனியமான கரும் பலகையைத் தருகிறார். எது வேண்டுமானாலும் எழுதிக் கொள் என்ற உரிமையையும் தருகிறார். அழகை வழிபடுகிறவர்கள் வண்ணச் சித்திரங்கள் தீட்டுகிறார்கள், அல்லது கவிதைகள் வரைகிறார்கள். வேறு சிலர் விஞ்ஞான சூத்திரங்களாக எழுதித் தள்ளுகிறார்கள். ஆராய்ச்சி வெறி பிடித்த கோஷ்டி இது. அறிவுத் திறவுகோலால் இயற்கையின் மூடுமந்திரங்களைக் கண்டு பிடிப்பதே இவர்கள் இலட்சியம். சாதனை. முன் யோசனை கொஞ்சமுமின்றி 'ஸ்லேட்'டில் எதை எதையோ எழுதித் தொலைத்த பின், சிறுபிள்ளைத்தனமாக எச்சில் துப்பி அழிக்க முயலும் பைத்தியக்காரர்களும் உண்டு. தங்கள் செயல்களைக் கண்டு வெட்கி, அவற்றுக்குச் சமாதி எழுப்பும் கும்பல்! முரட்டுத்தனமாகக் கரும்பலகையை விட்டெறிந்து வேடிக்கை பார்த்த பின் அது விரிந்து விட்டதே என்று வருந்துகிறவர்கள் அநுதாபத்துக்கு உரியவர்கள்..... டாக்டர் சாரு எண்ண அலைகளிலிருந்து தன்னை மீட்டுக் கொண்டு அந்தப் பெண்ணிடம் உரையாடத் தொடங்கினாள்.

''இயற்கையின் நியதிகளுக்குத் தலைவணங்குவதுதான் விவேகம். இதைத்தான் உனக்கு மற்ற டாக்டர்களும் சொல்லியிருப்பார்கள்.''

''எல்லா டாக்டர்களும் இப்படி வேதாந்தம் பேசினால் எங்கள் கதி என்ன? நாங்கள் சிறகொடிந்தவர்கள். வெறும் மண்ணிலே தத்த முயலும் எங்களுக்கு விண்ணின் விந்தைகளை வர்ணித்து என்ன பயன்? வெறுப்புத்தான் மிஞ்சும்... 'வேண்டாத ஒன்றை' எதற்காக வளர்க்க வேண்டும்? அதை அழிப்பதில் என்ன தவறு? அத்தனை டாக்டர்களும் ஏன் ஒரேமாதிரி மறுக்கிறார்கள்?''

''அழிப்பது அரக்கத்தனம். ஆக்குவதுதான் தெய்வீகம். கசாப்புக் கடைக்காரனின் கத்திக்கும் டாக்டரின் கத்திக்கும் வித்தியாசமில்லையா?''

''டாக்டர்... நீங்களுமா இப்படிப் பேசுகிறீர்கள்? இனிமையாக நீங்கள் மொழிந்ததையெல்லாம் பார்த்தபோது எனக்கு உதவுவீர்கள் என்றல்லவா எண்ணினேன்?... ஹூம்... நான் போய் வருகிறேன்'' என்று கூறி எழ முயன்றவளைப் பலவந்தமாக உட்கார வைத்தாள் டாக்டர் சாரு.

''ஏன் இப்படிப் பதற்றப்படுகிறாய்? நான் சொல்வதைக் கொஞ்சம் அமைதியாகக் கேள்.''

''எனக்கு இனிமேல் எதையும் கேட்பதற்குப் பொறுமை இல்லை. மற்ற டாக்டர்கள் சொன்னதைத்தான் நீங்களும் திரும்பச் சொல்லப் போகிறீர்கள். அது என் பிரச்னையைத் தீர்க்காது. உங்களால் ஒரு நாளும் என் நிலைமையைப் புரிந்துகொள்ள முடியாது. நாம் வாழ்வது வெவ்வேறு உலகங்களில்...''

டாக்டர் சாரு தன் சோபாவை விட்டு எழுந்து சென்று அவள் பக்கத்தில் அமர்ந்தாள். அவள் கரங்களைத் தன் கரங்களுடன் பொருத்திக் கொண்டாள். நேசக் கரத்தின் சூடு அவளை மிகவும் நெகிழ வைத்தது. அவள் விம்மத் தொடங்கினாள்.

''இதோ பார், நம் அனுபவங்கள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் அடிப்படை உணர்ச்சிகள் உனக்கும் எனக்கும் ஒன்றுதான்'' என்று ஏதோ பேச முயன்ற டாக்டரின் சொற்களைக் கத்திரித்தாள் அவள்.

''இந்தப் பாழும் வயிற்றில் ஏன் ஒரு பாப ஜன்மம் பிறக்க வேண்டும்? நான் துன்பப்படுவது போதாதா? என்னுடைய அவல நிலையை நினைந்து நான் வருந்தவில்லை. என் செயல்கள்தான் என் வீழ்ச்சிக்குக் காரணம்... ஆனால் புது உயிர் ஒன்று தோன்றி ஏன் நரகத்தில் உழல வேண்டும்?''

''அது நரகத்தில் உழலும் என்று என்ன நிச்சயம்? பிறக்காத ஓர் உயிரின் வருங்காலத்தை நிர்ணயிக்க நீ யார்?''

''நல்ல கேள்வி. நீங்கள் கேட்பதில் தவறு இல்லை. உங்களுக்கு என்னைப் போன்றவர்களின் வாழ்க்கையைப் பற்றி என்ன தெரியும்? குடி வெறி, காம வெறி, பொய், புரட்டு, வறுமை, நோய்... இதுதான் எங்கள் உலகம். இந்தச் சுற்றுப்புறத்தில் பிறந்து வளரும் குழந்தையின் வருங்காலம் என்ன? அவன் மனிதனாகவா வாழ்வான்? சீ! நினைத்தாலே குமட்டிக் கொண்டு வருகிறது...''

டாக்டர் சாரு பதில் பேசவில்லை. நிலைப் படுதாவுக்கு மேலாக இருந்த கண்ணாடி வழியாக வெளி உலகத்தை வெறித்துப் பார்த்

துக் கொண்டிருந்தாள். ஒரே கும்மிருட்டு. குளிர். ஆனால் வானம் மட்டும் பட்டுப் பாவாடையாகக் காட்சியளித்தது. எண்ணிறந்த நட்சத்திரப் பூக்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. இருந்திருந்தாற்போல் ஒரு நட்சத்திரமாலை 'தட்டாமாலை' சுற்றிய படி தரையை நோக்கி விழுந்தது.

''அந்த நட்சத்திரம் விழுந்ததைப் பார்த்தாயா? அது போன்ற ஓர் ஒளிப் பிழம்பு உன் வயிற்றில் தோன்றாது என்று என்ன நிச்சயம்?''

''என்னை ஏன் கேலி செய்கிறீர்கள்?''

''நிஜமாகத்தான் கேட்கிறேன். நாளைக்கு உனக்குப் பிறக்கப் போகும் குழந்தை நரகத்தில்தான் உழலும் என்று ஏன் நினைக்கிறாய்? அது வளர்ந்து பெரிதாகி மகத்தான காரியங்களைச் சாதிக்கலாமல்லவா? எந்த மேதையும் ஒரு தாய் வயிற்றில் பிறந்துதானே ஆக வேண்டும்? யார் கண்டார்கள்? உன் சிசு பிற்காலத்தில் உலகத்தை உய்விக்கும் ஒரு மகாத்மாவாகலாம் இல்லையா? கட்டடக் கலைஞராக மாறி விந்தைகள் புரியலாமில்லையா? நம் நாட்டின் தலைவிதியை, ஏன், உலகத்தின் தலைவிதியையே நிர்ணயிக்கக்கூடிய ஓர் அரசியல் அறிஞனாகலாமில்லையா? புரட்சிக் கவிதைகள் புனைந்து பெண் குலத்துக்கே பெருமை தேடித் தரும் ஒரு கவிக்குயிலாக ஏன் உருவெடுக்கக் கூடாது?''

''என் ஆறுதலுக்காக ஏதேதோ சொல்லுகிறீர்கள். கேட்கக் கதை போலிருக்கிறது.''

''கொஞ்சம் இரு. வருகிறேன்'' என்று கூறி எழுந்துசென்றான் சாரு. ஒரு 'போட்டோ ஆல்ப'த்துடன் திரும்பி வந்தான். பக்கங்களை அவன் புரட்டப் புரட்ட அந்தப் பெண்ணின் முக பாவம் மாறிக் கொண்டே வந்தது. எல்லாம் பச்சிளம் குழந்தைகளின் படங்கள். குழந்தைகளா? குண்டுமல்லிகைகள்! யார் மனம்தான் நிறைவு பெறாது? யார் முகத்தில் தான் பொலிவு பிறக்காது?

''இதோ பார்த்தாயா, இந்தத் தங்கக் குழந்தையை? இதன் தாயார்கூட உன் நிலையில்தான் இருந்தாள். வறுமை அவளைப் படுகுழியில் பிடித்துத் தள்ளியிருந்தது. நொண்டியும் முடமுமாகச் சில குழந்தைகளும் பிறந்து விட்டன; சமூகம் சீந்தாத 'செல்வங்கள்'! அவள் மீண்டும் கருவுற்றாள். கலங்கினாள். மனம் ஒடிந்தது. உடல் சோர்ந்தது.... நாதியற்று நிற்கும் நொண்டிக் குழந்தைகள் அவள் அகத்தில் வெறுப்பை வளர்த்தன. மறுபடியும் ஒன்று? யாருக்கு வேணும்? ஐயோ! வேண்டாம்.... வேண்டவே வேண்டாம். அவள் பல டாக்டர்களை அணுகினாள். எந்த மருத்துவன்தான் அழிக்க முன்வருவான்?

''மழையும் காற்றும் பேய்த்து வாங்கும் நடுநிசியில் அவள் ஒரு டாக்டர் வீட்டுக் கதவைத் தட்டினாள். தாழிடப்படாத கதவு திறந்தது. டாக்டர் இன்னும் தூங்கவில்லை. அவள் மிகுந்த அன்புடன் வரவேற்கப் பட்டாள்.

''அவளுக்கிருந்த வெறுப்பின் வார்த்தைகள் தெறித்துக் கொண்டு வந்தன. தனக்கு உதவ முன்வராத வைத்திய சமூகத்தை ஏசித்தீர்த்தாள். டாக்டர் மட்டும் அவளுக்கு இரங்கி, அவள் வேண்டுகோளை நிறைவேற்றாவிட்டால் அங்கேயே தற்கொலை செய்து கொண்டு விடுவதாகப் பயமுறுத்தினாள்.

''அமைதியாகப் பேசின டாக்டரின் வார்த்தைகளுக்கு அவள் செவி சாய்த்தாள் தானே? அவளைக் குறைகூறிப் பயனில்லை. நொண்டியும் முடமுமாகப் பிறந்திருந்த குழந்தைகள் அவள் அகத்தில் கசப்பை வளர்த்திருந்தன. அவளைப் பிழைப்பு வேறு. மறுபடியும் ஒன்று என்ற பயங்கரமான உண்மை அவளைப் பைத்தியக்காரிபோல் மாற்றியது.

''கருவிலே வளரும் இந்தக் குழந்தையும் முடமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பது பேதமை என்று டாக்டருக்குத் தெரியும். இயற்கை அப்படி யாரையுமே அளவுக்கு மீறிச் சோதிப்பது கிடையாது. அதன் நியதியில் ஓர் ஒழுங்கு இருக்கத்தான் செய்கிறது. அந்தனை 'நொண்டிப் பிள்ளைகளுக்குப்பின், 'தெய்வப் பொறி'யைத் தாங்கின ஒரு குழந்தை ஏன் பிறக்கக் கூடாது? நம்பிக்கைதான் டாக்டரது வாழ்வின் ஆணி வேர். அஸ்திவாரம். ஆனால் அந்தத் தாய்க்கு இதெல்லாம் எங்கே புரியும்? புரிந்தாலும் செவி சாய்ப்பாளா?..... கடைசியில் டாக்டருக்கு ஒரு வழி புலப்பட்டது. பிறக்காத குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதுதான் அது.''

டாக்டர் சாரு 'ஆல்ப'த்தை மூடினான். ''நீ பார்த்த தங்கக் குழந்தை அழகாயில்லையா? அதுபோல் உனக்கும் ஒன்று பிறக்கத்தான் போகிறது! தங்கக் குழந்தை வளர்ந்து பெரிதானபின் செய்து முடித்த மகத்தான சாதனைகளை நான் உனக்கு எடுத்துச் சொல்லப் போவதில்லை. அது மட்டும் பிறக்காமலிருந்திருந்தால் உலகத்துக்கு எவ்வளவு பெரிய நஷ்டம் தெரியுமா? மனித ஜாதியை வாட்டி வந்த ஒரு பிணிக்கு மருந்து கண்டு பிடிப்பதற்காகவே அது பிறந்தது போலும்! வருங்காலத்தில் அது என்னென்ன சாதிக்குமோ, யார் கண்டார்கள்?''

'டெலிபோன்' கணகணத்தது. அதைக் கையிலெடுத்த சாருவால் ஒன்றுமே பேச முடியவில்லை. முப்பது வருடங்களுக்குமுன் டாக்டர் மார்க்கபந்து தன் தாயாருக்கு வழி காட்டியதையும், தான் பிறந்து வளர்ந்ததையும் வர்ணித்ததில் உணர்ச்சி வசப்பட்டிருந்தான் அவன்!

அவள்: சேகரை நான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம். அவர் வாழ்க்கையை ஓர் இராப் பூங்காவாக்க வேண்டுமாம், நான். நேற்றுச் சொன்னார்!



தோழி: ஆமாம். இரண்டில் நீ எதைச் செய்யப் போகிறாய்?

— ஏ. கே. கந்தசாமி

தெய்வத்தின் முடிவு

ரா. வேங்கடசாமி



நினைப்பதெல்லாம் நடந்து விடுவதில்லை. சில விஷயத்தில், எதிர்பாராத விதமாகக் காரியம் வெற்றி அடைந்து விடுவதும் உண்டு. அது நூற்றில் ஒன்றாக இருக்கும். வேதகிரியின் விஷயத்திலும் அப்படித்தான் நடந்தது. தன் மகள் திருமணத்தைப் பொறுத்த வரையில், எதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ.... அது.... அப்படியே, நினைத்த மாதிரியே நடந்தது. நடக்காது என்று நினைத்தவருக்கு, விஷயம் நடந்துவிட்டால் அளவற்ற மகிழ்ச்சிதான்! இருக்க வேண்டியதுதானே? ஆனால் இது நீடிக்குமா என்று கேட்டால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆண்டவனுக்கு இந்த மாதிரி விஷயத்தில் வேடிக்கை அதிகம். கொடுக்கிறதைப் போல் கொடுத்து, அவர்கள் மகிழ்ந்திருக்கும் சமயத்தில், கொடுத்ததைப் பிடுங்கிக் கொண்டு, வேடிக்கை பார்க்கும் பழக்கம் வேதகிரியின் விஷயத்திலும் நடந்துவிட்டது. வேதகிரியின் மகிழ்ச்சியை ஆண்டவன் பிடுங்கிக் கொண்டார். திருப்பிக் கொடுக்கும் உத்தேசமோ?

வேதகிரியின் மனைவி ருக்மிணிக்கு எடுத்த எடுப்பில் விருப்பமில்லாத சம்பந்தம் இது. அவளுக்குத் தன் மகள் காஞ்சனாவை எப்படியும் தன் சகோதரனின் மகன் சுகவரனுக்குத்தான் கொடுக்க விருப்பம்.

"என்ன இருந்தாலும் நீங்கள் இந்த விஷயத்தில் இவ்வளவு பிடிவாதம் காட்டக் கூடாது. பையனுக்கென்ன, நன்றாகத்தானே இருக்கிறான்?.... அவன் நமது வீட்டுக்கு வந்தால், செலவும் குறைவு..... பெண்ணுக்கும், அவனைப் பிடித்திருக்கிறது. ஒன்றாக வளர்ந்தவர்கள்தானே? சொந்தமும் விட்டுப் போகாது" என்று அவள் சமயம் வந்த போதெல்லாம் கணவனிடம் சொல்லத் தவறியதே இல்லை.

தாயின் விருப்பம் இருக்கட்டும். காஞ்சனாவை எடுத்துக் கொள்ளுங்கள். அவளுக்கு சுகவரன் மீதுதான் கண். பார்வை பரிமாற்றும் வரம்புக்குட்பட்டதே! சென்னையில் வேலை கிடைத்துப் போகும் வரை அவன் இங்குதானே இருந்தான். அந்த நிலையை உண்டாக்கித் தந்தவர்கள், பெற்றோர்கள். இப்போது அந்த இணைப்பைப் பிரிப்பதும் இதே பெற்றோர்கள்தான். பெற்றோர்கள் என்று சொல்ல முடியாது. ருக்மிணிதான் மகள் பக்கத்தில் இருக்கிறாளே! சுகவரனுக்கும் அதே நினைவுதான். சொல்லப் போனால் 'காதல்' என்றும் சொல்லலாம்!

மாமன் மகள் தன்னை மிகவும் அறிந்தவள். உறவு விட்டுப் போகாமல் இருக்க அவளைத் தனக்குத்தான் மண முடித்து வைப்பார்கள் என்று அவன் நம்பிக் கொண்டிருந்தான். போகட்டும், அவன் பெற்றோர்களும் அதே நினைவாகத்தானே இருந்தார்கள்.

இவ்வளவு உறுதியாக இருந்த அவர்கள் எல்லோருடைய விருப்பமும், வேதகிரியின் முடிவினால் மாறிப் போய் விட்டது. காஞ்சனா, தந்தையின் விருப்பப்படி சபாபதியை மணக்க வேண்டியிருந்தது. சபாபதியும் யாரோ அல்ல.... வேதகிரிக்குச் சொந்தக்காரன்தான்! கொஞ்சம் தூரத்து உறவு. சபாபதியின் தந்தையும், வேதகிரியும் ஒரு காலத்தில் உறவினர்களாக இருந்தாலும் நெருங்கிய நண்பர்கள். இணை பிரியாதவர்கள் என்று சொல்கிறார்களே, அந்த வகையில் இருந்தது அவர்களுடைய நட்பு. இப்போது சபாபதியின் தந்தை உயிரோடு இல்லை.

என்றாலும், அவர் வேதகிரியிடம் அப்போது வாங்கிக் கொண்டிருந்த உறுதிமொழி சாகாமல் உயிரோடுதான் இருந்தது.

"வேதகிரி! என் கடைசி விருப்பம் ஒன்று இருக்கிறது. அதை நீ நிறைவேற்றி வைப்பாயா?" சாகக் கிடந்த அவர் வேதகிரியிடம் இப்படித்தான் கேட்டார்.

"அதென்ன அப்படிக் கேட்டு விட்டாய்? நீ எதைக் கேட்டாலும் அதை நான் செய்கிறேனப்பா..." என்று வேதகிரியும் வாக்குக் கொடுத்தார்.

"ஒன்றுமில்லை.... என் மகன் சபாபதிக்கு உன் மகள் காஞ்சனாவை மணம் செய்து வைக்க வேண்டும். செய்து வைப்பாயா? நமது உறவும் நட்பும் இப்படியே தொடர வேண்டும் என்பதுதான் என் ஆவல்....."

"என் எண்ணம்கூட அதுவேதான். நீ கவலைப்படாதே. அவர்கள் திருமணம் நடக்கும்." சபாபதியின் தந்தை அதற்குப் பிறகு தான் நிம்மதியாக உயிரை விட்டார். ஆனால் சபாபதி என்ன நினைத்தான்?

"மாமா! என் தந்தை உயிரோடு இருந்தவரை நீங்கள் வாக்குக் கொடுத்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். இப்போது அவர் இல்லை! இந்தக் காலத்தில் இப்படிச் சொல்லலாம். கொடுத்த வாக்கு தவறாமல் நடக்கும் மனிதர்கள் இருப்பதே அபூர்வம். இருப்பினும் நீங்களும் அப்படி நடக்க வேண்டும்; நடந்தாக வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உங்கள் அந்தஸ்துக்கு, இன்னும் பெரிய இடமாகக் கிடைத்தாலும் கிடைக்கும். மேலும் உங்கள் உறவினர்கள் உங்கள் மகளுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்து வைத்தால், அவள் நன்றாக இருப்பாள் என்றும் நினைக்கலாம்.



"எப்போதோ இறந்துவிட்ட ஒருவருக்குக் கொடுத்த உறுதிமொழிக்காக மற்றவர்களின் மனக் கசப்பை நீங்கள் ஏன் எனக்காகச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்? மேலும் ராணுவத்தில் உத்தியோகம் பார்க்கும் என்னைவிட, உங்களுக்கு உள்ளூரில் இருக்கும் மாப்பிள்ளை தேவையாக இருக்கலாம் இல்லையா?"

வேதகிரி தன்னிடம் கல்யாண விஷயத்தை ஆரம்பித்தவுடன் இப்படி சபாபதி ஒரு பெரிய பிரசங்கத்தையே செய்துவிட்டான்.

"சபாபதி! உன் வரைக்கும் நீ செய்யும் வாதம் சரிதான். ஆனால் இந்த விஷயத்தில் எனது கொள்கையே வேறு. உன் தந்தை இப்போது உயிரோடு இருந்திருந்தால் வேண்டுமானாலும் வாக்குறுதியை நான் மீறி ஏதாவது செய்யப் பார்ப்பேன். ஆனால் அவன் உயிரோடு இல்லாததால்தான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்கிற தீவிரம் எனக்கு வந்து விட்டது. இருக்கிறவன் கோபத்தை விட, இல்லாதவன் கோபம் பொல்லாது என்பார்கள். இந்த விஷயத்தில் யார் எதிர்த்தாலும் சரி அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. உனக்கு இத்திருமணத்தில் விருப்பம் இருக்கிறதல்லவா? இல்லை என்று நீ சொல்லி விட்டால்தான், நான் யோசிக்க வேண்டும்..... என்ன சொல்லுகிறாய்?"

சபாபதி யோசிக்கவில்லை. உடனே பதில் சொல்லி விட்டான்.

"என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க நீங்களே இவ்வளவு சங்கடங்களுக்குப் பிறகும் தயாராக இருக்கும் போது, நான், அவர் மகன், ஒதுங்கினால், அது நான் அவருக்குச் செய்யும் மகத்தான துரோகம். எனக்கு இந்தச் சம்பந்தத்தில் பூரண திருப்தி. ஆனால்....."

"சரி! வேறு என்ன சந்தேகம் வந்து விட்டது உனக்கு?"

"பெரியதாக சந்தேகம் ஏதும் இல்லை. இந்தக் காலத்தில் பெற்றோர்கள் பெண்ணின் விருப்பத்தையும் கேட்கிறார்களே, அது போல் நீங்களும் உங்கள் மகளுடைய விருப்பத்தைக் கேட்டு விட்டால், எனக்குத் திருப்தியாக இருக்கும்....."

"காஞ்சனாவின் விருப்பத்தையா? நன்றாகக் கேட்டாய் போ. அவளை நான் அப்படி வளர்க்கவில்லை சபாபதி! அவள் படித்தவள்தான் என்றாலும், பெற்றோர்களுக்கு மிகவும் அடங்கிய பெண். நாங்கள் போடும் கோட்டைத் தாண்ட மாட்டாள். உனக்காக வேண்டுமானால், உன் எதிரில் அவள் விருப்பத்தைக் கேட்கட்டுமா?"



ஆகஸ்ட் 11ம் முதல்
சென்னை
மற்றும் தென்னகமெங்கும்....
மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பு
எதிரிகள் ஜாக்கிரதை!
கதை வசனம் A.L.நாராயணன்
பாடல்கள் கவிஞர் கண்ணதாசன்
இசை வேதா
டைரக்ஷன் R.சுந்தரம் B.E.

சபாபதி வேண்டாமென்று கூறிவிட்டான். தந்தையே உறுதிமொழி கொடுத்து விட்ட பிறகு, மகனின் விருப்பத்தைக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்து விட்டான். அவன் மட்டும் வீட்டுக்குப் போயிருந்தால், மற்றவர்கள் காட்டும் அலட்சியத்திலிருந்து அவனுக்கு உண்மை ஓரளவுக்குப் புரிந்திருந்தாலும் இருக்கும்! வேண்டாத மாப்பிள்ளை என்றால் அலட்சியத்தைக் காட்ட வழியா இல்லை? தாலி கழுத்தில் ஏறும் வரை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்!

''எனக்கு விடுமுறை ஒரு மாதந்தான். அதற்குள் திருமணத்தை நடத்திவிட முடியுமா? இல்லையென்றால், நான் ஆறுமாதங்களுக்குப் பிறகு வேண்டுமானால் இன்னொரு தடவை வருகிறேன்'' என்று சபாபதி சொல்ல, வேதகிரி பதில் அளித்தார்.

''ஒரு மாதத்துக்குள் பல கல்யாணங்களைச் செய்து விடலாமே. மேலும் சபாபதி.. நல்ல காரியங்களை ஒத்திப் போடுவதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அப்படியே தள்ளிப் போடுகிறோம் என்று வைத்துக் கொள். நீ திரும்பி வருவதற்குள், என் உறுதியைக் கெடுக்கும் காரியங்கள் இங்கே நடக்காது என்பது என்ன நிச்சயம்? அதனால் நீ விடுமுறை தீர்வதற்குள்ளாக, உன் கல்யாணத்தை முடித்துக் கொண்டு போய்விடு!''

வேதகிரியின் அசைக்க முடியாத முடிவுக்கு, சபாபதியினால் மேலும் மறுப்பேதும் கூற முடியவில்லை. அதே சமயத்தில் வேதகிரியின் வீட்டில் காஞ்சனாவின் திருமண விஷயமாக ஏற்பட்ட கொந்தளிப்பையும் அவன் அறியவில்லை. ருக்மிணி தனது புதல்வியின் திருமணத்தைக் குறித்துப் போட்டிருந்த திட்டமெல்லாம், நிறைவேற முடியாதவையாகப் போய்விட்டபின், அவளால் எப்படிப் பேசாமல் இருக்க முடியும்? தனக்குள்ள உரிமையை அவள் பல விதத்தில் பிரயோகித்துப் பார்த்தாள். அதற்குக் காஞ்சனாவின் ஆதரவும் இருந்தது. முக்கியமான உறவினர்களோ முகம் சுளித்தார்கள்.

''ஒன்றுமே இல்லாத பையனுக்கு, இப்படிப்பட்ட பெண்ணைக் கொடுப்பதா?'' என்று சற்றுச் சுதந்திரமாக வேதகிரியிடம் பேசியவர்களும் இருந்தார்கள். இவ்வளவுக்கும் பலன் என்னவோ பூஜ்யம்தான்.

வேதகிரி நிச்சயம் செய்துவிட்ட பிறகு, அதில் எந்தவிதமான மாறுதலும் இருக்கவில்லை.

'நான் இறந்துபோன என் நண்பனுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படிதான் நடந்து கொள்வேன்' என்று வேதகிரியாவது உண்மையைச் சொல்லியிருக்கலாம்.

''என் மகளை நான் யாருக்கோ கொடுப்பேன். அதைப் பற்றிக் கேட்க, மற்ற யாருக்கும் உரிமை கிடையாது'' என்று சொல்லாமல் சொல்லி, மற்றவர்கள் வெறுத்து ஒதுங்கும் அளவுக்கு, அவர் நடந்து கொண்டார் என்றால், அங்கே சூழ்நிலை எப்படி இருந்திருக்கும்? இவைகளைப் பார்க்கத்தான் சபாபதி திருமணத்துக்கு முன்பு அங்கு வரவில்லை. வரவேண்டிய அவசியமுமில்லை....



குருவியின் தலையில்!

மத்திய இத்தாலியின் மலைப்பாங்கான பிரதேசத்தில் ஸான் மரினோ என்று சின்னஞ் சிறு சுதந்திர நாடு. இதன் பரப்பளவு 23 சதுர மைல்கள். ஜனத்தொகை 17,000. இதற்கென்று தனி ராணுவம் உண்டு. சிப்பாய்களும் தளபதிகளுமாகச் சேர்ந்து மொத்தம் 180 பேர் ராணுவத்தில் பணியாற்றுகின்றனர்.

இந்த நாடு சமீபத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானத்தைச் செய்தது. சந்திரனிலுள்ள எந்தப் பகுதிக்கும் ஸான் மரினோ உரிமை கொண்டாடாது என்பதே அந்தத் தீர்மானம்! அயல்நாட்டு விவகார மந்திரி இதற்கென மாஸ்கோவுக்குப் பறந்து சென்று தீர்மானத்தில் கையெழுத்திட்டார்.

— இன்கிபா

''வீட்டுக்குப் பெரியவர் நிச்சயம் செய்துவிட்ட காரியத்துக்கு நாம் எவ்வளவு எதிர்ப்பு தெரிவித்தும் பயனில்லாமல் போன பிறகு, அவருடன் ஒத்துழைப்பதுதான் நியாயம்'' என்று ருக்மிணி நினைத்து விட்டாள். வெறுப்பை ஒரேயடியாக உமிழ்ந்து கொண்டிருக்க அவளுக்கு ஆதரவு வேண்டுமே!

''என் தந்தை செய்துவிட்ட முடிவை நான் மாற்ற முடியாது. அவருக்கு மகளாகப் பிறந்துவிட்ட காரணத்துக்காக அவர் சொல்லும் மாப்பிள்ளைக்குத்தான் நான் கழுத்தை நீட்ட வேண்டும். அதனால் மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று காஞ்சனாவும் சுகவரனிடத்தில் சொல்லி விட்டாள். அவன் அப்போது காதலில் தோல்வி கண்ட காளை!

இவ்வளவுக்கும் பிறகுதான் வேதகிரி நினைத்தது நடந்தது. அதாவது மங்கள வாத்தியங்களின் பின்னணியில் சபாபதி காஞ்சனாவின் கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டான்.

திருமணம் நடந்து விட்டது.

திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்லுகிறார்களே, அது எவ்வளவு அநுபவபூர்வமான வார்த்தை?

காதலித்தவர்களும், காதலிக்காதவர்களும் இணையும்போது இந்தப் பழமொழியை நினைத்துப் பார்க்கத் தவறுவதேயில்லை. திருமணந்தான் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதா? அதற்குப் பிறகும் நடக்கும் வாழ்க்கையை யார் நிச்சயிக்கிறார்கள்?

அந்தப் பந்தி யாருமே நினைப்பதில்லை. நினைத்துப் பார்க்க முயற்சி செய்வதில்லை.

ஆனால் மனித வாழ்க்கையின் வரவு செலவுக்கு ஆண்டவன்தான் காரணம் இல்லையா?

(2)

கல்யாணம் நடந்து முதல் பந்தி சாப்பிட்டுக் கொண்டிருந்தது. வாழ்த்துத் தந்திகளைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது, சபாபதியின் கையில் கிடைத்தது ஒரு முக்கியமான தந்தி.

ராணுவத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்திருந்தது. "விடுமுறை ரத்து செய்யப்பட்டு விட்டது. உடனே புறப்பட்டு வரவேண்டும்" என்கிற வாசகம் அந்தத் தந்தியில் இருந்தது. பாகிஸ்தான் படையெடுப்பு நடந்தபோதே சபாபதி பயந்து கொண்டுதான் இருந்தான். எங்கே தனது விடுமுறை ரத்தாகி விடுமோ என்று! அவன் பயந்தது நடந்து விட்டது. அதிலும் ஒரு திருப்தி அவனுக்கு. திருமணம் நல்ல மாதிரியாக முடிந்த பின் வந்திருக்கிறதே என்று! இதே தந்தி இரண்டு தினங்களுக்கு முன் வந்திருந்தால், வேதகிரிக்கும், மற்றவர்களுக்கும் எவ்வளவு தொல்லை? ஆரம்பமான திருமணம் நின்றுவிட்டால், எவ்வளவு பேச்சுக்கள், ஏச்சுக்கள்? இந்த மாதிரியான சமயங்களில் உண்மையான காரணம் எதுவாயினும் அது பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும் என்பதை அனுபவஸ்தர்களே அறிய முடியும்! சபாபதி தன் மாமனாரிடம் தந்தியைக் காட்டியதும், அவர் அவன் புறப்பட உத்தரவு கொடுத்து விட்டார். பழம் தேசபக்தர் அவர். பந்தக்கால் பிரிக்கவில்லை. கங்கணத்தை அவிழ்க்கவில்லை. இன்னும் பல சடங்குகள் பாக்கியிருக்கின்றனவே என்று அவர் தடை சொல்லிக் கொண்டிருக்கவில்லை. அன்று பிற்பகலே புறப்பட்டால்தான், சென்னையில் இரவு ரயிலைப் பிடிக்க முடியும் என்பதால் சபாபதி காஞ்சனாவைத் தவிர, மற்ற எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு வண்டி ஏறினான்.

திருமணம் முடிந்த பிறகுதான் புறப்படுகிறான் என்றாலும், மாப்பிள்ளை கல்யாணக் கோலத்தைக் கலைவு முன்பே புறப்படுகிறான் என்பதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வருத்தம் இருக்கத்தான் செய்தது என்றாலும் அதை அவர்கள் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

"இதற்குத்தான் ராணுவத்தில் வேலை செய்பவர்களை மாப்பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளக்கூடாது" என்று சில உலகமறியாதவர்களும் அங்கே பேசிக் கொண்டிருந்தார்கள்; பொழுது போகாத காரணத்தால்.

இத்துடன் மட்டுமா நின்றது பேச்சு? நரம்பில்லாத பல நாக்குகள் வாய்க்கு வந்தபடியெல்லாம் விமரிசனம் செய்து கொண்டிருந்தன.

சபாபதியின் முகத்தைக்கூடக் காஞ்சனா சரியாகப் பார்க்கவில்லை. அதனால் அவள் உள்ளத்தில் எந்த விதமான சலனமும் இல்லை!

கல்யாணம் என்னவோ நடந்துதான் விட்டது! ஆனால் அதற்கு மேல் நடக்க வேண்டிய வாழ்க்கை?

சரியாகப் பதினைந்தே நாட்கள் ஆகியிருந்தன, சபாபதி ஊருக்குப் போய். அவனிடமிருந்து தனக்குத் தகவல் வரும் என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் வேதகிரி. ஆனால் அவன் நேராகப் போர்முனைக்கு அனுப்பப்படுவான் என்பதையோ, அங்கே அவன் அகால மரணமடைவான் என்பதையோ அவர் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை. இதையெல்லாமா ஒருவர் எதிர்பார்க்கமுடியும்? நாட்டுக்காக உயிர் துறந்த உத்தமர்களில் அவனும் ஒருவன் ஆகி விட்டான். அந்தத் தகவல் வேதகிரிக்கு வந்து சேர ஒரு மாதமாகி விட்டது. கல்யாணம் செய்து கொண்டு போனவன் விரைவில் திரும்பி வருவான், தன் மகளுடன் அவன் ஆனந்தமாக வாழ்க்கை நடத்துவான் என்கிற அவர் கனவெல்லாம் இடிந்து தரைமட்டமாகிவிடவே, அவரும் ஆடிப் போய் விட்டார்.

ஆனால் மற்றவர்கள்...!

ராணுவக் காரியாலயத்திலிருந்து வந்த தந்தியைக் கண்டதும் உறவினர்கள் எல்லோருமே இடிந்து போய்விடவில்லை. ருக்மிணி மட்டும் அழுதாள். காஞ்சனா வருத்தப்பட்டாள். என்னவென்றாலும் தாலி கட்டிய கணவன் அல்லவா? "நாங்கள் அப்போதே சொன்னோம்" என்று இச்சகம் பேசிய நபர்களின் எண்ணிக்கை அதிகமாகியது. அதே சமயத்தில் வேதகிரிக்கு மாற்று யோசனை சொன்னவர்களும் இருந்தார்கள்.

"வேதகிரி! உங்கள் விருப்பப்படி நீங்கள் உங்கள் மகளைச் சபாபதிக்கு மணம் முடித்து வைத்தீர்கள். ஆனால் மாப்பிள்ளையின் ஆயுள் தான் கெட்டியாக இல்லை. அது அவர் வாங்கிக்கொண்டு வந்த வரம். இதிலிருந்து அந்தச் சம்பந்தத்தில் ஆண்டவனுக்கே விருப்பமில்லை என்று தெரிகிறது. நல்ல வேளை! உங்கள் பெண்ணும் இன்னும் கன்னியாகவே இருக்

இந்த ஜீவனுக்குப் பத்து இதயங்கள்



மண் புழுக்கள் நீரில் மூழ்கினால் இறப்பதில்லை. காரணம் இவைகளுக்கு சுவாசப் பைகள் கிடையாது.

இவைகளுக்கும் பத்து இதயங்கள். ஒரு பக்கத்துக்கு ஐந்து வீதம் உண்டு. ஆனால் இவைகளுக்குக் காதுகளோ கண்களோ கிடையாது. மூளை உண்டு. ஆனால் தலையில் இல்லை; முதுகில். முதுகுத்தண்டுமாதிரி செல்லும் நரம்போடு பிணைக்கப்பட்டுள்ளது. இவைகளில் ஆண் - பெண் என்று தனியாகக் கிடையாது. ஆகவே இவை தாமாகவே குட்டி போட்டுக் கொள்ள முடியும்! என்றாலும் மற்றொரு புழுவோடு இல்வாழ்க்கை நடத்தத் தவறுவதில்லை.

— 'நாயக்' — லைக்க் டைஜெஸ்ட்



"தெய்வம் இகழேல்"

"தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்".

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

"காலையும் மாலையும் கடவுளைத் தொழு"

—இவையெல்லாம் நமது நீதி நூல்களிலுள்ள மணிவாசகங்கள் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் இவையனைத்தும் ஒன்றாகக் கூடித் தெய்வப் பிரசாரம் செய்யும் ---

இடம்: கபாலி டாக்கீஸ்!

சாதனம்: டிக்கட்டின் பின்புறம்!

கண்டவர்: சிவசக்தி

ளுன். மூக்கில் இருக்கும் தாலியை எடுத்துவிட்டால் அவள் மீண்டும் திருமணம் செய்து கொள்ளலா மல்லவா? பேசாமல் சபாபதிக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்துவிட்டு, உங்கள் மகளை வேறு யாராவது நல்ல மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்து கொடுத்து விடுங்கள். அதற்காக நீங்கள் ஒன்றும் யோசிக்கத் தேவையில்லை. ஏனெனில் விதவா விவாகத்தை எல்லோரும் ஆதரிக்கும் இந்த நாளில் உங்கள் மகளின் மறுமணத்தை வரவேற்கத்தான் செய்வார்கள்!" என்று ஓயாமல் வேதகிரியிடம் சொல்ல, அவரும் யோசிக்க ஆரம்பித்தார்; அவர் ஒரு பெண்ணின் தந்தை என்கிற காரணத்தினால்! சபாபதியின் ஈமக்கிரியைகள், அவனது சடலம் இல்லாமலே நடந்துவிட்டது. அதற்கு வந்திருந்த உறவினர்கள்கூட "உங்க மகளுக்கு எப்போது திருமணம் செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டு வைத்தார்கள்.

ஆரம்பம் கிடைத்து விட்டது. ஓர் உயிரின் முடிவில் இன்னொரு வாழ்க்கையின் ஆரம்பம் இருக்கிறது என்று யாராவது சொல்லியிருக்கிறார்களோ? தாய் ருக்மிணியும் அசைந்து கொடுத்தாள்.

"ஆமாம்! காஞ்சனாவுக்கு வேறு மணம் செய்துவைத்தால் என்ன?"

யார் யாரோ கேட்டுவிட்ட பிறகு, மனைவி கேட்ட கேள்வியைக் கேட்டு வேதகிரி கோபித்துக்கொள்ளவில்லை. ஆனால் இன்னும் கொஞ்சம் வேகமாக யோசிக்க ஆரம்பித்தார். தங்கள் நிலையை நன்றாக அறிந்தவர்களிடம் வரன் கேட்பதுதான் மிகவும் எளிது என்பதை அவர் அறியாமல் இல்லை. அந்த விஷயமாக அவர் ருக்மிணியிடம் பேசியபோது, "மாப்பிள்ளைக்கு ஏன் வேறு இடம் போக வேண்டும்? நம் சுகவரன் இல்லையா? அவர்கள் குடும்பத்துக்கு நமது விவகாரங்கள் அனைத்தும் தெரியுமே!" என்று அவள் சொல்லி வைத்தாள். காஞ்சனாவுக்கு இக்காரியத்தில் பெரும் பங்கு இருந்தது என்பதை, அவளாலே மறுக்க முடியாது... எப்படியோ ஆண்டவன் தங்களை ஒன்று சேர்க்கிறார் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

ஆண்டவன் சிரித்தான்!

முதலில் உதறிவிட்ட சம்பந்தத்தைத் தேடிக் கொண்டு போக வேண்டிய நிலை வேதகிரிக்கு. சுகவரனின் தந்தை நாகலிங்கத்தைச் சந்தித்தபோது, அவர் முதலில் பிடிகொடுத்துப் பேசவேயில்லை. சுகவரனும் அப்போது சென்னையில் நல்ல உத்தியோகத்தில் இருந்தான். இந்தக் காரணங்களினால் பெண்ணைப் பெற்றவர், மாப்பிள்ளையின் வீட்டுக்குப் பலமுறை நடக்க வேண்டியிருந்தது. முடிவு, வேதகிரிக்கு வெற்றிதான்.

(3)

சுகவரன் சென்னையிலிருந்தே தந்தி கொடுத்து விட்டான், திருமணத்தில் தனக்கு விருப்பம் என்பதைத் தெரிவித்து. கண்ணைப் பெற்றுவிட்ட குருடனின் நிலையில் இருந்தான் அவன். மாறிக் காதலர்களை ஒன்று சேர்க்கும் திட்டம் உருவாகி, திருமணத்துக்கும் நாள் குறித்தாகி விட்டது. திருமணம் நாகலிங்கத்தின் வீட்டிலேயே நடத்துவதாக இருந்தது. ஒதுங்கி இருந்த அவ்வளவு உறவினர்களும் மீண்டும் ஒன்றுகூடித் திருப்தி அடைந்த மனத்தினராய், கல்யாணக் காரியங்களில் ஈடுபட்டனர். ஏறக்குறைய விதியை வென்று விட்டோம் என்று சம்பந்தப்பட்டவர்கள் நினைத்தார்கள்.

முதலில் நடந்த திருமணத்தை விட இது சகலவிதத்திலும் மேன்மையாக இருக்க வேண்டும் என்று இரு சாராரும் போட்டி போட்டுக் கொண்டு செலவு செய்தனர். வேதகிரி பணக்காரர். நாகலிங்கம் வசதி படைத்தவர். கேட்கவா வேண்டும்?

திருமணத்துக்கு மூன்றே தினங்கள்தான் இருந்தன. சுகவரன் விடுமுறை ஏற்றுக் கொண்டு ஊருக்கு வரவேண்டும்!

இந்தத் திருமணத்தையும் சொர்க்கத்தில் தானே நிச்சயித்திருப்பார்கள்? 'ஆனால் இதே திருமணம் முன்பு ஏன் நடக்கவில்லை? அதைத் தான் 'கடவுள் சித்தம்' என்று சுருக்கமாகக் கூறி விடுகிறார்கள்.

ஃ ஃ ஃ

சபாபதி இறக்கவில்லை. சப்தபதி என்கிற வங்காள சிப்பாய் இறந்ததைத் தமிழ் தெரியாத பஞ்சாபி ஒருவன், சபாபதி என்று உச்சரித்ததன் விளைவாகவே, சபாபதி உறவினர்களுக்காகவே இறக்க வேண்டியிருந்தது. ராணுவ முகாமில் தவறுக்கு வருத்தம் தெரிவித்த பிறகு அவனுக்கு வேண்டிய விடுமுறையையும் கொடுத்தனுப்பினார்கள். உறவினர்களுக்கு இந்தச் செய்தியைத் தான் நேரிலே சொல்லிக் கொள்வதாகவும் அவர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டாம் என்றும் சபாபதி அதிகாரிகளிடம் கூறிவிட்

டான். இதைப்போன்ற தவறுகளுக்கெல்லாம் யாரைக் குற்றவாளியாக்குவது?

தான் ஊரில் போய் நின்றால் என்ன விளைவு ஏற்படும் என்பதை யெல்லாம் யூகித்துக் கொண்டே வந்தான் சபாபதி வழி நெடுக! தாற்காலிகமாக விதவையாயிருக்கும் தன் மனைவி காஞ்சனாவை வியப்பில் ஆழ்த்தி, அவளது நெற்றியில் குங்குமத்தைத் தானே இடவேண்டும் என்கிற ஓர் ஆசையினால் கடிதம்கூடப் போடாமல் சென்னையில் வந்து இறங்கினான் சபாபதி.

இதுவரை அவனிடம் இல்லாத அவசரம் இப்போது ஒட்டிக் கொண்டது. அதனால் எப்படியும் அன்று மாலைக்குள் ஊரை அடைந்துவிட வேண்டும் என்கிற வேகமும் அவனுக்கு இருந்தது. அந்த ஒரே காரணத்தினால்தான் டாக்ஸியை விட்டு இறங்கி பஸ்ஸைப் பிடிக்கப் போன பிரயாணி ஒருவன் இன்னொரு பஸ் மோதிக் கீழே விழுந்து, ஸ்தலத்திலேயே உயிர் விட்டதையோ அதற்காகக் கும்பல் கூடியதையோ கவனியாமல் விட்டுவிட்டான்.

அங்கேதான் விதி சிரித்தது!


கும்பலைமட்டும் விலக்கிக் கொண்டு போய் அவன் பார்த்திருந்தால், பஸ்ஸில் அடிபட்டுக் கிடந்தது சகவரன் என்பதையும் அவன் பையில் இருந்த கல்யாணப் பத்திரிகை ஒன்றைப் போலீஸ்காரர் எடுத்துப் படித்துக் கொண்டிருப்பதையும் பார்த்திருப்பான். சகவரன் என்பதால் தனது பிரயாணத்தையும் ஒத்திப் போட்டிருக்க முடியும். சகவரனைத் தான், அவன் தனது கல்யாண சமயத்தில் பார்த்திருக்கிறானே....

சபாபதியின் மனம் ஒரு மாதிரி....


கல்யாண அழைப்பைப் பார்த்திருந்தால், நிலைமை ஒருவாறு தெரிந்து கொண்டு அவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட ஓர் அதிர்ச்சி தரவேண்டாம் என்கிற நல்லெண்ணத்தோடு வந்த வழியிலேயே திரும்பிப் போயிருப்பான். அன்றும் இன்றும் அவன் எதன் மீதும் ஆசைப்பட்டதில்லை. இவ்வளவையும் பார்க்காதது அவன் தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்?

திரும்பவும் அவன் ஊருக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறான்!

அங்கே என்ன நடக்கும் என்பதை அறிந்தவன் ஆண்டவன் ஒருவன்தான்! அவன் தானே எல்லோருடைய வாழ்க்கையையும் அமைத்துக் கொடுக்கிறான்!



அணைக்கட்டுக்குத் துணை நின்றவர்



கிண்டியில் கல்வி கற்று முடித்த ராமலிங்கம் தம் கல்வியைச் செயல் முறைத் துறையில் திருப்பிக் கொள்ளவும் தம் வேலையில் பயிற்சி பெறவும், பெரியாறு அணைக்கட்டு வேலை நடந்து வரும் இடத்துக்குச் சென்றார். அங்கே அனுபவம் வாய்ந்த பெரிய பொறி இயல் நிபுணர்கள் எல்லாம் வியக்கும்படியாக ஒரு காரியம் செய்தார். அங்கே இடப்பட்டு வந்த சுரங்க வழி ஒழுங்காக அமைந்து வரவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி, அதைத் திருத்தி அமைக்கத் துணை செய்தார். அங்கு நடைபெற்ற பலவகை வேலைகளையும் நுட்பமாக அறிந்து கொண்டார். இவை எல்லாம் பின்னர், சென்னை அரசாங்கத்துக்குப் பேருதவியாக முடிந்தன. அங்கு அணை கட்டியதை ஒட்டிய வழக்கு ஒன்று அரசாங்கத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடங்கப் பட்டது. அப்போது அரசாங்கத்தின் சார்பில் ராமலிங்கம் சாட்சி சொல்லவேண்டி வந்தது. அவர் தெளிவாகவும் உறுதியாகவும் கூறிய சாட்சியத்தை, சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்து, அவர்கள் கூறிய சாட்சியங்களைக் குலைப்பதில் நிகரற்றவர் என்று புகழ் பெற்றிருந்த பெரு வழக்கறிஞர் நார்ட்டனாலும் அசைக்க முடியவில்லை. அரசாங்கத்தின் கட்சியே வென்றது.

இத்தகையவர் தமது தொழிலில் படிப்படியாக உயர்ந்து வந்தது வியப்பு அன்று. தமது திறமையால் படிப்படியாக நிர்வாக என்ஜினியர், மேற்பார்வை என்ஜினியர், தலைமை என்ஜினியர் என்னும் பதவிகளைப் பெற்றார். இந்தியா முழுவதிலுமே மேற்பார்வை—என்ஜினியர் பதவியையும், தலைமை என்ஜினியர் பதவியையும் முதன் முதலாகப் பெற்ற இந்திய நாட்டுப் பெருமகன் இவரே. அதற்கு முன்பெல்லாம் அவை மேலை நாட்டினருக்கே உரிய பதவிகளாக இருந்தன.

நட்பும் தயையும் பிறவிக் குணமாக உடையவரும் அறிவும் ஊக்கமும், ஆற்றலும் வாய்மையும் மிகுந்தவரும், சலிப்பறியா உழைப்பாளியும், பேருபகாரியும், என்ஜினியரின் துறையில் மாபெரும் முன்னோடியுமாக விளங்கிய ராமலிங்க ஐயர் பிறந்து ஜூலை 10ந் தேதியுடன் நூறு ஆண்டுகள் நிரம்பின. இத்தருணத்தில் நாம் அனைவரும் அவரை நினைவுகூர்ந்து பாராட்டும் போது நமக்கு நாமே பெருமை தேடிக் கொண்டவர்களாவோம்.

— பெ. நா. அப்புஸ்வாமி

''கால்வாயிலே தண்ணீர் விட்டிருக்க வேண்டுமே!.... இல்லியா? அடுத்த வாரம் நான் உங்க ஊர்ப் பக்கம் வருவேன். இஞ்சினியர்கிட்டே சொல்லிக் கவனிக்கச் சொல்றேன். நீங்க போயிட்டு வாங்க....''

''பட்டாக் இல்லாமல் என்ன? ரிலீஸ் ஆகமாட்டேங்குது. இவரு ஒரு வார்த்தை சொன்னாப் போதும்.....''

''அது புறம்போக்குன்னு சட்டுன்னு சொல்லிட முடியுமா? கலெக்டர் ரிப்போர்ட் வரட்டுமே!''

''ஐயா வந்து அமர்ந்தால் தான் விழாவுக்கு அழகுன்னு எல்லாரும் ரொம்ப ஆசையாக் கேட்கிறாங்க.....''

''எட்டு வருஷமா க்வார்ட்டர்ஸுக்கு ரிப்பேர் நடக்க வேண்டியது இப்பத்தான் திடீர்னு நினைவு வருதாக்கும்.''

''அடுத்த வார நாடகத்துக்கு நான் வர முடியாது நிலைங்க! வெளியூர் போகிறேன்.''

''இன்னிக்காவது இவரைப் பார்க்க முடியுமா? முடியாதா?''

''முடியாது... முடியாது... முடியாது!''

''அம்மா...! அம்மா...! அம்மா, தூக்கத்திலே ஏதோ கத்தறீங்க? எழுப்பிப் பார்றேன்! என்னவோ முடியாது முடியாதுன்னு...''

''உங்களுக்கு என்ன வேலை!... இரண்டு மூணு நாளா இவிங்க எங்கேயோ போய் வந்துகொண்டே இருக்கார்! அலைச்சல் அலுப்பாக இருக்கும்! அப்படியே தூங்கட்டும்....''

என்னுடைய கனவு சம்பாஷணைக் குழப்பத்திலும் அவர்கள் விழிப்புடன் பேசிக் கொள்வது என் செவிகளில் விழுகிறது. மீண்டும் கண்ணயருகிறேன்.

'முடியாது முடியாது' என்ற வார்த்தைகள் ஏதோ பெரிய சுவரொட்டி மாதிரி மனக் கண் முன் தோன்றுகிறது. ஆம்! உண்மைதான்! நம் தமிழக அமைச்சர்களால் தங்கள் அவகாசத்தை எந்த வரையறைக்குள்ளும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது தான்! அவர்கள் சொந்தத் தேவைக்கு என்று ஒரு நிமிடத்தைக்கூட எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் பொதுமக்களின் அன்புப் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். தமிழக மந்திரி சபை எதை எதை யெல்லாம் நாட்டு உடைமையாக்கக் காத்திருக்கிறதோ, முழு விவரம் நமக்குத் தெரியாது. ஆனால் தமிழக மந்திரிகள், தங்கள் நேரத்தை, ஒரு நாளின் இருபத்தி நான்கு மணி நேரத்தையும் நாட்டு உடைமையாக்கி விட்டிருக்கிறார்கள்! இதில் தனியார் துறைக்கு இடமேயில்லை.



நீர், நிலம், நிறைவு

- உணவுப் பிரச்னையைச் சமாளிப்பதில் மூன்று முக்கிய விஷயங்கள் இணைந்துள்ளன. அவை சம்பந்தப்பட்ட மந்திரிகளைப் பேட்டி காணச் சென்ற போது.......



ஒவ்வோர் அமைச்சரின் இருப்பிடமும் அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரை பெரிய திருமண வீடாகவே தான் காட்சி யளிக்கிறது! கோட்டையில் உள்ள அவர்கள் காரியாலய அறை வாயில்களோ பெரிய விழாக் கோலமே பூண்டிருக்கின்றன. உள்ளூர்க்காரர்கள், வெளியூர்க்காரர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள், கட்சித் துறையினர், கல்லூரி ஆசிரியர்கள், வணிகர்கள், வல்லுநர்கள் எல்லாருமே குழுமி யிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்குமே அமைச்சரை நேரில் சந்தித்து அளவளாவ வேண்டும் என்று ஏதோ ஆர்வம், ஆவல்! அவர்கள் அனுப்பும் சீட்டுக்கள் அமைச்சர்கள் முன் குவிகின்றன. அமைச்சர்களும் இயன்ற அளவுக்கு வந்திருப்பவர்களைச் சந்திக்கத் தான் முயலுகிறார்கள்! ஆனால் இது 'சாத்தியமான விஷயமாகத் தெரியவில்லையே! ''நம்ப அமைச்சர் குளியல் அறைக்குள் நுழைந்த பிறகு கூட வெளியே இருந்து இரண்டு பேர் பேசிக்கிட்டுத் தான் இருப்பாங்க'' என்று ஓர் அமைச்சர் வீட்டுப் பணியாள் கூறியது உண்மையாகவே ஒலித்தது. நம் அமைச்சர்கள் பேச்சிலேயே குளிக்க வேண்டியிருக்கிறது!

நம் நாட்டின் இன்றைய பெரும் பிரச்னையான உணவுப் பிரச்னையைச் சமாளிப்பதில், நீர்வளம், விவசாயம், கொள்முதல் — விநியோகம் ஆகிய மூன்று முக்கிய விஷயங்கள் இணைந்திருப்பதால் இது சம்பந்தப்பட்ட திட்டங்களை நம் அமைச்சர்களிடமிருந்தே நேரில் தெரிந்து கொள்ளலாம் என்ற ஆவலின்

விளைவாகக் கிளம்பியபோது தான், நம் அமைச்சர்கள் அன்புக் கடலில் மூழ்கி அவகாசம் என்னும் துரும்பைப் பிடிக்கப் பெருமூச்சு விடுவதைக் காண முடிந்தது. அன்று காதில் விழுந்த பல சம்பாஷணைத் துணுக்குகள்தாம் என் கனவுக் குழப்பத்துக்குக் காரணமாக அமைந்தன.

நீர்ப்பாசனத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சர் கருணாநிதி ஒரு கலைஞர். பட்டத்திலும் மாத்திரமல்ல! அநுபவத்திலுங்கூட! அவர் நாடக மேடைத் தொடர்பு கொண்டவர். சிறந்த நாடக நிர்வாகி, காட்சி மாற்றங்களில், எப்படி விறுவிறுப்பையும், புதுமையையும் புகுத்த விரும்புவாரோ, அந்த முறையில் அவர் பேட்டியாளர்களைக் காண்கிறார். சுருக்கமாகச் சில நிமிடங்களில் விஷயத்தைப் பேசி முடிவு கட்டி, காத்திருக்கும் அடுத்த நபரைக் கூப்பிட மணியை அடிக்கிறார். குறைந்த அவகாசத்தில் நிறைய நபர்களைக் காணும் வித்தையைத் தெரிந்து வைத்திருக்கிறார்.

"எங்களுக்கு வருங்காலத்திலே நிறைய நம்பிக்கை இருக்கிறது. நீர்ப்பாசன விஷயத்தில் முன்னேற்றம் காணப் பல திட்டங்கள், நிறைவேற்றக் கூடிய திட்டங்கள்தான் போட்டு வைத்திருக்கிறோம். சென்ற ஆண்டு அதிக மழையாலும், புயலாலும் பாதிக்கப்பட்டுச் சேதமடைந்த பல ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் எல்லாமே ஓரளவு செப்பனிடப்பட்டு விட்டன. எஞ்சியிருப்பவைகளும் சீக்கிரமே சரிப்படுத்தப்பட்டு விடலாம்! இதற்காக ஒரு தனி இலாகாவே இயங்குகிறது. நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளை ஆங்காங்கு கூட்டி உழவர்களின் தேவைகளை நேரடியாகப் புரிந்து கொண்டு வசதி செய்து கொடுக்கவும் ஏற்பாடு ஆகி யிருக்கிறது. வைகை நதிக் கால்வாய்களை நவீனமாக்கும் ஏற்பாடுகளுக்கும் அனுமதி கிடைத்து விட்டது. இதனால் கூடுதலாக 13,900 ஏக்கராக்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். பல வறண்ட பிரதேசங்களில் நீர் நிலை ஆராய்ச்சிக்கான பரிசோதனைகளைத் தொடங்கி யிருக்கிறோம். பரம்பிக் குளம் ஆழியாறு திட்டத்துக்காகவும், ஏனைய நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காகவும் போதிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பருவ கால மழை, சென்ற ஆண்டைப் போலல்லாமல், சரியான காலத்திலேயே தொடங்கிவிட்டதால் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து முன்கூட்டியே தண்ணீர் விட முடிந்தது. இயற்கையும் எங்களுக்கு உதவும்படியாகவே இருக்குமென்று நம்புகிறோம்."

உத்தேசித்த அவகாசத்துக்கு ஒரு நிமிட காலம் முன்னாடியே பேட்டி முடிந்தது. அந்த ஒரு நிமிட அவகாசத்தை என்னாலான நேரதானமாக அமைச்சருக்கு அளித்ததில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

தமிழக அமைச்சரவையில் முதல் அமைச்சருக்கு அடுத்த





படியாக வயதில் 'சீனி'யரான விவசாயத் துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் வயதுக்கேற்ப அமைதியின் உறைவிடமாக விளங்குகிறார். அவரைப் பார்க்கும்போது, திருநெல்வேலி, தஞ்சாவூர்ப் பகுதிகளில் கண்களுக் கெட்டும் வரை பச்சைப் பசேலென்று பரந்து கிடக்கும் நெல் வயல்களைப் பார்க்கும் நினைவு தோன்றுகிறது.

"மதுரை, சேலம் பகுதிகளிலுள்ள சில வறண்ட நிலங்களைக் குத்தகைக்கு விட்டு விவசாயத்துக்கான பரிசோதனைகளைச் செய்து பார்க்கத் திட்டமிட்டிருக்கிறோம். சில மாவட்டங்களில் ஒருபோகப் பயிரை இருபோகமாக மாற்றிப் பார்க்கவும் உத்தேசம். மிகு பலன் தரும் விதைகளை அதாவது ADT 27 போன்ற ரகங்களைப் பயன்படுத்தும் நிலப்பரப்பை எவ்வளவு விரிவாக்க முடியுமோ அவ்வளவு விரிவாக்கி உற்பத்தி அளவைப் பெருக்குவதே நடப்பு ஆண்டின் நமது வேளாண்மைத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

"ஆனால் நமது உரத் தேவை விஷயத்தில் பற்றாக்குறை இருந்து கொண்டேயிருக்கிறது. இந்த ஆண்டுக்கு வகுக்கப்பட்டிருக்கும் திட்டத்தின்படி இருபோகச் சாகுபடிக்கு அதிகப்படியான நைட்ரஜன் உரம் தேவைப்படும். இதற்காக மத்திய அரசுக்குத் தேவையைத் தெரியப்படுத்தியிருக்கிறோம். உரத் தேவையை மத்திய அரசு பூர்த்தி செய்து விட்டால், இந்த ஆண்டு உணவு உற்பத்தி எதிர்பார்க்கும் அளவுக்கு மேலாகவே இருக்கும் என்று நம்புகிறோம்.

"உழவர்களுக்குத் தேவையான டிராக்டர்களை அதிக எண்ணிக்கையிலேயே வழங்கவும் ஏற்பாடாகி யிருக்கிறது. குழாய்க் கிணறுகளுக்கான மின்சார வசதிகளும் தாமதமில்லாமல் கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் உணவு உற்பத்தி சகஜ நிலையை அடையும் என்று நம்புகிறோம். சிறு விவசாயிகளுக்கு வரிப் பளுவையும் குறைக்க ஏற்பாடாகி யிருக்கிறது."

நீர் ஆயிற்று. நிலம் ஆயிற்று! இவை இரண்டும்

சேர்ந்ததன் பலனாக விளையும் உணவு தானியத்தை நிறைவாக விநியோகிக்கும் பொறுப்பேற்றிருக்கும் உணவு அமைச்சர் மதியழகனைச் சந்தித்தாக வேண்டுமே! "உணவுத் தேவையைப் பொறுத்தவரை தன் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு மிச்சமும் விட்டு வைக்கக்கூடிய மாநிலமல்ல தமிழகம். இது ஒரு பற்றாக்குறை மாநிலம்தான். மத்திய அரசு போட்ட கணக்கு தப்பிதம். இந்த விஷயம் ஏப்ரல் 8, 9 தேதிகளில் டில்லியில் நடந்த முதல் மந்திரிகள் மகாநாட்டில் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டது" என்று அமைச்சர் மதியழகன் சில நாட்களுக்கு முன் குறிப்பிட்டிருந்தது நினைவுக்கு வந்தது.



உணவுப் பற்றாக்குறை ஒரு பக்கம் இருக்க, அமைச்சருக்கு நேரம் பற்றாக்குறை அதிகமாகவே இருப்பதை, அவர் இல்லத்திலும் சரி காரியாலய அறையிலும் சரி நேராகக் கண்டு உணர முடிந்தது. இரண்டு தடவை கோட்டை காரியாலய அறையிலும் மூன்று தடவைகள் அடையாறு இல்லத்திலும் அவரைச் சந்திக்க முயன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு முன்னால் அங்கே, முப்பது நாற்பது நபர்கள் முழுப் பொறுமையுடன் காத்திருப்பதைக் கண்டு நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெற்றிகரமாகப் பின்வாங்கி வீடு திரும்பும் காரியத்தைத் தான் செய்ய முடிந்தது!




இந்த அனுபவங்களைப் பற்றி ஒரு நண்பருடன் பேசிக் கொண்டிருந்த போது அவர் சுவையான விளக்க மொன்றைக் கொடுத்தார். "நீங்கள் முதல் முயற்சியிலேயே அமைச்சர் கருணாநிதியைச் சந்தித்து விட்டீர்கள். அதனால் இந்த ஆண்டு பருவ மழையும், நீர்ப்பாசன வசதிகளும் தடையில்லாமல் மக்களுக்குக் கிடைக்கலாம். அமைச்சர் கோவிந்தசாமியை இரண்டாவது முயற்சியில் பார்த்திருக்கிறீர். அவருடைய இருபோக விவசாயத் திட்டமும் அதிக உற்பத்தி நோக்கமும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லலாம்.

"ஆனால் கொள்முதல், விநியோகம், விலைக் கட்டுப்பாடு என்ற விஷயங்கள் எல்லாம் காத்திருந்து கவனமாகச் செய்யப்பட வேண்டும். அறுவடைக்குப் பிறகு விவசாயிகளையும், பொதுமக்களையும் ஏககாலத்தில் சிக்கலில்லாமல் திருப்திப்படுத்த வழி காண வேண்டும். இதனால்தானோ என்னவோ நீங்கள் ஐந்து தடவைகள் காத்திருந்தும் உணவு அமைச்சரைக் காணாமலே திரும்பியிருக்கிறீர்கள்!"

நான்கு மாத அவகாசத்தில், நகரத்திலுள்ள ரேஷன் கடைகளில் எப்போதும் தட்டுப்பாடில்லாமல் அரிசி கிடைக்க வழி வகுத்திருக்கும் அமைச்சர் மதியழகன், நீண்ட கால நோக்கிலும் மாநில மக்களின் உணவுப்பிரச்சினையை வெற்றிகரமாகக் கையாளாமலா இருந்துவிடப் போகிறார்? நாமும் பார்க்கத்தானே போகிறோம்!

- கோமதி சுவாமிநாதன்

ஐயா, அன்புள்ள குற்றவாளியே!




ரோம் நகரில் அயல் நாட்டவர் யாராவது தங்கள் காரை நிறுத்தக்கூடாத இடத்தில் நிறுத்திவிட்டால், போலீஸ்காரர் அவரிடம் ஒரு நீல நிற அட்டையைக் கொடுப்பார். அதில் "அன்புள்ள ஐயா, உலக யாத்திரிகர்களால் மிகவும் புகழப்படும் ரோம் நகருக்கு உங்கள் வரவு நல்வரவாகுக. எவ்வளவு கவனமுள்ள காரோட்டியாக இருந்தாலும் சமயங்களில் தங்களையும் அறியாமல் இம்மாதிரி குற்றங்கள் செய்து விடுகிறீர்கள். இப்பொழுது நீங்கள் எங்களுடைய போக்குவரத்துச் சட்டத்தின் ...... வது பிரிவை மீறி விட்டீர்கள். இந்தத் தவறு உங்களால் வேண்டுமென்றே செய்யப்படவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். ரோமில் நீங்கள் தங்கியிருக்கும் நாட்கள் தங்களுக்குச் சந்தோஷமாகக் கழிய வாழ்த்துகிறோம்.

இங்ஙனம், நகர மேயர்" என்று எழுதியிருக்குமாம்.

"கத்தோலிக் டைஜெஸ்ட்" - தகவல்: 'நாயக்'

அம்மன் தாலி



எம். எஸ். பெருமாள்

கலகலப்பாய் விடிய வேண்டிய காலைப் பொழுது ஊமைத்தனமாய் அழுதுகொண்டே விடிந்தது. நேரக்கூடாத அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டதே.... அதை நிவர்த்திக்க வேண்டிய பெரும் பொறுப்பைச் சுமந்து கிராமத் தலைவர் மருதமுத்து தலை நிமிர்ந்து வந்து கொண்டிருந்தார்.

கங்காளம்மன் கோவில் சந்நிதி வந்ததும் கால்கள் தாமாக நின்றன. ஏற்றுக் கொண்டிருக்கும் காரியத்தை இதமாகவும், எளிதாகவும் முடிக்கும் கடமையில் அவர் மனத்துள் தெம்பூட்டிக் கொண்டு நிமிர்ந்தார்.

வழக்கமாகப் பூ கொண்டு வந்து போடும் பொன்னுப் பண்டாரம் வந்துதான் இருக்கிறான். அவன் கையில் பூக்குடலையும் இருக்கிறது. ஆனால் குடலையிலும் பூவில்லை, கோவில் தெய்வத்திடமும் பூ இல்லை! பூப் பறிக்கும் நிலையிலா அவன் நிற்கிறான்? பொன்னுப் பண்டாரத்தின் தலை ஏன் தாழ்ந்திருக்கிறது...? கண்ணின் கருவிழிகள் எதனால் கலங்கித்தோய்ந்து கவலையுடன் சுழல்கின்றன?

கவலையுடன் இருப்பவன் அவன் மட்டுந்தானா? அங்கிருந்த ஒவ்வொருவர் முகத்திலும் துயரத்தின் நிழல் அழுத்தமாகப் படர்ந்திருந்தது.

கவலை என்பதே என்னவென்று அறியாமல் காலம் காலமாகக் கங்காளம்மனுக்குத் தொண்டு புரிந்து வரும் பூசாரி வேதாசலம் எண் சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுக, படபடத்த உள்ளத்துடன் தடுமாறினார். தெய்வசந்நிதியில் நிகழ்ந்துவிட்ட அபவாதம் எந்தெந்தத் தீங்குகள் விளைவிக்குமோ என்றெழுந்த பயம் தூய பக்தியின் சிலிர்ப்போடு அவரைச் சூழ்ந்திருந்தது. கங்காளம்மனின் ஆணைகளை ஊருக்குப் பறைசாற்றி நிறைவேற்றி வைக்கும் பிரதிநிதியான பூசாரி, பித்துப் பிடித்தவர் போல் மெய்யெல்லாம் பதற நின்றார்.

''ம்.... நடக்கட்டும்!''

மருதமுத்துவின் உத்தரவு கிடைத்தது. உத்தரவா அது? துடிக்கும் உள்ளத்தின் அவலத்தில் அதுஒரு முனகல். அவ்வளவுதான்!

இடுப்பிலிருந்த சாவியை உருவி, சந்நிதிக் கதவைத் திறந்தார் பூசாரி. கருணைத் தெய்வமான கங்காளம்மனை ஏறிட்டு நோக்கும்போது. ''என் காவலனை நீயும் மோசம் போய் விட்டாயே....'' என்று தெய்வம் அவரைப் பார்த்துப் பரிதாபப் படுவதாக உணர்ந்தார்.

அம்மனின் திருமேனியிலிருந்த பழைய பூக்களை எடுத்து ஓரமாக வைத்துவிட்டு வெளியே வந்தார். பஞ்சாயத்தார் பஞ்சாமி தயாராக வைத்திருந்த தாம்பாளத்தை வாங்கிப் போனார்.

'' ஆயிரம் கண்ணுடைய அம்மையே...
அண்ட பகிரண்ட நாயகியே....''

என வெண்கலக் குரலில் அம்மன் துதி பாடும்





அவரது நா இன்று கனத்துப்போய் அசைய மறுத்தது. யந்திரம் போல் பூஜையை முடித்தார்.

இருட் குகையில் குடிகொண்ட அம்மனின் சந்நிதியை விட்டு ஒளிப் பிழம்பாய் வெளிவரும் பூசாரியின் கரங்களில் கற்பூரத்தின் நெடிய ஒளி கனல் வீசிக் கொண்டிருந்தது.

பஞ்சாயத்தார் பஞ்சாமியிடம் அர்ச்சனைப் பொருள்களைக் கொடுத்த பூசாரி, கற்பூர ஆரத்தியை நீட்டினார். பஞ்சாமி, மருதமுத்துவிடம் சைகை காட்டினார். ஊருக்குப் பெரியவரான மருதமுத்துவிடம் தட்டைக் கொண்டு போனார்.

"தாயே... நீதான் என்னைக் காப்பாத்தணும்..." என் நடுங்கும் குரலில் கூறிய மருதமுத்து ஆரத்தியைக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

பஞ்சாயத்தார் பஞ்சாமி.... வாஞ்சிநாத வாத்தியார், மருதமுத்துவின் மகன் சுந்தரம், சுந்தரத்தின் நண்பன் கண்ணன் என ஒவ்வொருவருக்கும் பிரசாதம் கொடுத்து வந்த பூசாரி, மறுபுறம் ஒதுங்கி நிற்கும் பூக்காரன் பக்கம் தட்டை நகர்த்தி வைத்துவிட்டுக் கோவிலை ஒட்டி வந்து நின்றார்.

"தாயே, கங்காளம்மா.... இதுவரைக்கும் இந்தப் பூமங்கலம் கிராமத்திலே எந்தக் களவும் நடந்ததில்லே. உன்கிட்டே தீர்ப்புக்கும் வந்ததில்லே... ஆனால், இப்போ நீயே திருட்டுக் கொடுத்திட்டு நிக்கிறே...." என்று இரு கரங்களையும் கூப்பியபடி பஞ்சாமி விழிகளில் நீர் பெருகக் கூறினார். பதறும் உடலுடன் நிற்கும் மருதமுத்துவோ சீக்கிரம் விசாரணையை ஆரம்பிக்கத் துடித்தார்.

பஞ்சாமி தொடர்ந்தார் :

"உன் பிள்ளைகளிலே எவனோதான் சிறு பிள்ளைத்தனமா உன் தாலியைத் திருடிட்டான். இந்த விஷயம் யாருக்கும் எந்தத் தீங்கும் ஒன்றும் வராமல் நல்லபடியா முடியற வரைக்கும் உன் அருளும் துணையும் வேணும் அம்மா !"

அம்மன் சந்நிதியில் ஒரு விநாடி அமைதி நிலவியது.

தொண்டையைச் செருமிக் கொண்ட மருதமுத்து கூட்டத்தை நோக்கினார்.

பூசாரி வேதாசலம், பூக்காரன் பொன்னுப் பண்டாரம், வாஞ்சிநாத வாத்தியார், பஞ்சாமி.... மருத்துவப் படிப்புப் படிக்கும் மகன் சுந்தரம், அவனது கல்லூரித் தோழன் கண்ணன்.... இன்னும் பூமங்கலம் கிராமவாசிகள்.... இவர்களைத் தொடாமல் — தொட முடியாமல் — தூரத்தே அதோ விலகி நிற்கும் சின்னத் தம்பி....

மண்டலமிட்ட தயக்கத்தைத் துரத்தியடிக்கும் ஆவேசம் அவருள் புதிய வெறியாய்ப் பிறந்தது. கண்களில் இரத்தச் சிவப்பு கனன்றது. அவர் சாந்தம் இழந்துவிட்டார் என்பதற்கு இதுவே சான்று. இனி அவரை எதிர்த்தோ குறுக்கிட்டோ பேச எவருக்கும் தைரியம் கிடையாது.

"பூமங்கலம் பொன்னையா பரம்பரை மருதமுத்து சொன்னால் சொன்னதுதான். எந்தப் பயலா இருந்தாலும் சரித்தான் 'சத்தியம்'னு அதுக்குக் கட்டுப்பட்டுத்தானேடா, நடக்கணும்? அம்மன் முன்னாலே சத்தியம் செய்யணும்டா...."

"செய்யறோம், சாமீ.....!" என மக்களின் குரல் பீறிட்டெழுந்தது. ஒவ்வொருவர் ஆவேசத்திலும் 'நான் நிரபராதி' என்னும் அழுத்தம் தெறித்தது.

மருதமுத்துவின் பார்வை பூக்காரன் மேல் கவிந்தது. "எலே, பண்டாரம்!"

இடிக் குரலைக் கேட்டுப் பொன்னுப் பண்டாரம் துடித்தான்: "சாமீ.... கங்காளம்மன் மேல் ஆணையா சொல்றேனுங்க. புள்ளை குட்டிக்காரனய்யா நானு...."

"மனசிலே களங்கமில்லேன்னு நெஞ்சு நிமிர்ந்து சொல்லுங்கடா.... கூனிக் குறுகி நிக்காதீங்க...."

"ஐயோ ஆண்டவன் சந்தேகம் அநியாயமா என் மேலேயா விழணும்? ஒரு பாவமும் அறியாதவனுங்கய்யா நான்!...."

"அந்தத் தைரியம் இருந்தால் சத்தியம் பண்ணு" என இடைமறித்தார் வாஞ்சிநாத வாத்தியார்.

"'தெய்வசாட்சியா சொல்றேன், அம்மன் தாலியை நான் திருடலே' அப்படின்னு சத்தியம் பண்ணுடா" என அழுத்தமாகக் கூறினார் மருதமுத்து.

"இங்கே கூடியுள்ள பெரியவங்க சாட்சியாகவும்...."

"'தெய்வத்தின் சாட்சியாக'ன்னு சொல்லுடா...அப்போதான் சத்தியத்துக்கு வலு இருக்கும்..."

"சத்தியமே உருவான கங்காளம்மன் சாட்சியாகவும்தான் சொல்றேன். நான் நிரபராதிங்க. நான் நிரபராதி சாமீ...." என்று கங்காளம்மன் சந்நிதியில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கதறினான் பூக்காரன்.

மருதமுத்துவா இதற்கெல்லாம் கலங்குபவர்? மிடுக்கான குரலில் மிரட்டினார். "ஏன்டா! சாதாரணமான பொன்னு... பொட்டா... தாலியாச்சேடா அது... அம்மன் தாலி ஆச்சுதே... தாலியைத் திருடினவன் என்ன கதியாவானோ? அம்மன் தாலியைத் திருடலாமாடா...திருடலாமா?"

"ஐயோ நான் திருடலீங்களே... நான் ஏனுங்க திருடப் போறேன்....?"

"அதிகாலையிலே ஊரே உறங்கற நேரத்திலே நந்தவனம் வந்து போறவன் நீதானேடா..." என்று கேட்டவர் வாஞ்சிநாத வாத்தியார். எப்போதும் காரண காரியங்களுடன் தக்க ஆதாரம் காட்டியே வாதாடும் வழக்கம் அவருக்கு.

"பூப்பறிக்க வர்றவன், பூப்போல் நகையையும் திருடிக்கிட்டுப் போறதுக்குச் சந்தர்ப்பம் இருக்குதில்லே...?" என்று சீறிய மருதமுத்துவைக் கையமர்த்தினார் பஞ்சாமி. ஏழைகளிடம் இரக்கம் கொண்ட அவர், "தீர விசாரிக்காம தீர்ப்புச் சொல்றது நல்லதில்லே பிள்ளைவாள்!" எனப் பொன்னுவின் பக்கம் பரிந்து பேசினார்.

''விசாரிக்கத்தான் போறேன், பஞ்சாமி ஐயா... ஒருத்தனையும் விசாரிக்காமல் விட்டு விடப் போறதில்லே...'' என்று பதிலுரைத்தவர், ''பூசாரி ஐயா, வாங்க இப்படி'' என அழைத்தார்.

நெஞ்சிலே நெருப்பைக் கொட்டியதுபோல் துடித்த பூசாரியின் சிவந்த கண்களில் நீர் பெருகியது. தெய்வத்தின் தொண்டனுக்கு இப்படி ஓர் அவமானமா? தொண்டுபுரிய வந்த இடத்தில் அம்மனின் நகையை — ஐயோ அதுவும் தாலியை — திருடுவானா அவன் தொண்டன்?

''திருட்டைப் பத்தி உங்ககிட்டே சொன்னவனே நான்தானுங்களே...'' எனத் துடித்தார் பூசாரி.

''உன்னே நாங்க சந்தேகப்படக் கூடாதுங்கிறதுக்காக நீயே முந்திக்கிட்டிருக்கே'' என்று குற்றம் சாட்டினார் வாத்தியார்.

''இந்தத் தெய்வத்துக்குப் பூசை செய்யறவன். நானே திருடுவேனுங்களா...?''

''பூசாரி ஐயா, கங்காளம்மன்தான் தெய்வமே தவிர, அதுக்குப் பூசை செய்யற காரணத்தாலே சாதாரண மனுஷனும் தெய்வமாகிடறதில்லே...ம் சத்தியம் பண்ணுங்க....''

மருதமுத்துவின் ஆணைக்காகவோ கங்காளம்மனின் கட்டளைக்காகவோ பூசாரி பணியத்தான் வேண்டியிருந்தது.

''எங்க பரம்பரைக்கு இத்தனை வருசமா தட்டாமே சோறு போட்டாளே கங்காளம்மா... எங்க குடும்பம் தட்டுத் தடையில்லாமல் வாழக் கருணை காட்டினளே கங்காளம்மா.....அவமேலே ஆணையா சொல்றேனுங்க... தெய்வ நிந்தனைக்கு ஆளாகும்படியா எந்தக் குத்தமும் செய்யலீங்க...'' என உறுதியுடன் சத்தியம் செய்தார் பூசாரி.

ஆவேசம் வந்தது போல் ஓலமிடும் அவரது வெறியைக் கண்டு பயந்த எத்தனையோ பேர்களில் கண்ணனும் ஒருவன். சுந்தரத்தின் கல்லூரித் தோழனை கண்ணன் நண்பனுடன் இரண்டு நாட்கள் கிராமத்தைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தான். வந்த இடத்திலோ அவனுக்கு அனுபவங்கள் எதிர்பாராத புதுமையாக அல்லவோ அமைந்து விட்டன.

கிராமத்தின் தலைவர் என்ற அதிகாரப் பொறுப்பும் கடமையும் கொண்ட மருதமுத்து மற்றவர்களின் சலசலப்பையும் படபடப்பையும் கண்டு அஞ்சாமல், அயராமல் இரும்புத் தூணாக நின்றார். அவரது விழிகளில் விநாடிக்கு விநாடி கோபம் செம்மை பூசிக் கொண்டிருந்ததைக் கண்ணன் கவனிக்கத் தவறவில்லை.

''ஏன் சுந்தரம்? உன் அப்பா கோபத்தோடு மிரட்டறபோது அவனவன் கதறிக்கொண்டு உண்மையை ஒப்புக் கொள்ளுவான்போலிருக்கே?'' என நண்பனிடம் மெதுவாகக் கிசுகிசுத்தான்.

''இப்படியும் ஓர் ஆள் இல்லாவிட்டால் படிப்பு வாசனை இல்லாத இந்த மக்களிடம் பண்பும் எப்போதோ இல்லாமல் போயிருக்கும்...'' என்று பெருமையாகக் கூறினான் சுந்தரம்.

'அம்மன் தாலியைக் காணோம்' என்று காலையில் பூசாரி வந்து சொன்னவுடனேயே பஞ்சாயத்துக் கூடுவதற்காகப் புறப்பட்டாரே மருதமுத்து அவருடன் சுந்தரமும் புறப்பட்டான். கிராமத்தின் வழக்கு விசாரணைகளையும், பஞ்சாயத்து முறைகளையும் பட்டணத்து நண்பனுக்குக் காட்டுவதற்காகத்தானே சுந்தரம் அவனையும் அழைத்து வந்திருக்கிறான்.

சுந்தரமும் கண்ணனும் ரகசியக் குரலில் பேசுவதை உற்றுக் கவனித்த மருதமுத்து அழுத்தமும் கடுமையும் நிறைந்த உறுதியுடன், ''சுந்தரம்! உன் சிநேகிதப் பிள்ளையைக் கூப்பிடு...ம்... கண்ணன்தானே தம்பி? நீ... வா தம்பி இப்படி....'' என அழைத்ததும் பதறிய நெஞ்சங்கள் பலப் பல.

''முன்னைப் பின்னே தெரியாத அவரையும் சத்தியம் செய்யச் சொல்றீங்களே பின்னேவான்.... இது கூடாது...நியாயமில்லே...'' என்று தடுத்தார், நியாயத்தைத் துணைக் கொண்ட பஞ்சாமி.

''அப்பா... என் நண்பனை அவமானப்படுத்தாதீங்க... நேத்துதான் என்னோட இந்தஊருக்கு வந்திருக்கான். ஊருக்கே இவன் புதிது. இவனுக்கும் திருட்டுக்கும் துளியும் சம்பந்தம் இடையாது...'' என்று கண்டிப்புடன் வாதாடிய சுந்தரத்தை அடக்கினான் கண்ணன். பிறரை அவர் மிரட்டும்போது அவர்களின் உணர்ச்சிகளையும் துடிப்பையும் கண்டு பயந்த கண்ணன், தன் மீதே அந்தப் பழி விழும்போது 'ஓ'வென்று கதறவில்லை. மருதமுத்துவின் கோபத்துக்குத்தான் பயந்தானே தவிர, அவரது குற்றச்சாட்டுக்குப் பயப்படவில்லை. 'நான் நிரபராதி' என்னும் தைரியம்தான் அவன் மனத்துள் ஓங்கி நிற்கிறதே... அவன் எதற்காகப் பயப்பட வேண்டும்?

''அம்மா இரு சுந்தரம்... உன் அப்பாவின் சந்தேகத்திலே நியாயம் இருக்கு. யாராக இருந்தாலும் சத்தியம் செய்தே ஆகணுங்கறபோது....''

வாஞ்சிதாத வாத்தியார் தொடர்ந்தார். ''அவன் மட்டும்



என்ன விதிவிலக்கா? படிக்கிற பிள்ளைகள் பாவம் அறியாதவர்கள்தான்... நான் ஆசிரியர். படிக்கிற பிள்ளைகளின் குணம் எனக்குத் தெரியும். நாங்க நம்பறோம். ஆனாலும் சுந்தரம்... உங்க அப்பாவுக்காகத்தான்....''

''வாத்தியாரய்யா, எனக்காக யாரையும் நான் கட்டாயப்படுத்தலே. தெய்வக் குற்றம் பொல்லாததாச்சே. ஊருக்காகவும் உலகானும் தெய்வத்துக்காகவும்தான் சத்தியம் பண்ணச் சொல்றேன்'' என மருதமுத்து சொன்னார்.

''ஆனாலும் வெளியூர் விருந்தாளியைக் கூடவா?'' என முனகினர் சிலர். ''கள்ளமறியாத வெள்ளை மனசா இருக்குது தம்பி.. அந்தப் பால் மனசைப் பாழாக்கிடாதீங்க பெரியய்யா...'' என்று சில கிராமவாசிகள் வாதாடினர். ஆனால் மருதமுத்து ''யாராயிருந்தாலும் தெய்வத்தின் முன்னால் சமந்தானே? புதுசென்ன, பழசென்ன?'' என ஒரே போடாகப் போட்டதும் எதிர்வாதம் புரிய எவருக்கும் துணிவில்லே.

கங்காளம்மனின் உருவத்தை ஏறிட்டு நோக்கிய கண்ணன், கையைச் சிலைக்கு நேரே உயர்த்தியபடி, ''தெய்வத்தின் மீது ஆணையாகச் சொல்றேன்... எனக்கும் இந்தத் திருட்டுக்கும் துளியும் சம்பந்தம் கிடையாது. இது சத்தியம்'' என்றான்.

வந்த இடத்தில் நண்பனுக்கு ஏற்பட்ட அவமானத்தை—அதுவும் தன் தந்தையே ஏற்படுத்தி வைத்துவிட்ட இக்கட்டான நிலையை நொந்த வண்ணம் தலை தாழ்த்தி நகர்ந்த சுந்தரத்தை இழுத்து நிறுத்தியது தந்தையின் அழைப்பு.

''சுந்தரம்!''

''சத்தியம் செய்கிறேனப்பா!''—அழைப்பு பிறந்த ஆவேசத்துக்கு எதிர்மாறான அமைதியோடு அழுத்தமாகக் கூறித் திரும்பினான் சுந்தரம்.

தந்தையும் — மகனும்!

கிராமத் தலைவரும் — பிரஜைகளில் ஒருவனும்!

மருதமுத்து கட்டளையிட, அதை நிறைவேற்றச் சன்னதியை நெருங்கினான் சுந்தரம். இருவர் செயலிலும் பதற்றமில்லை. ஆனால் மற்றவர்கள் துடிக்கிறார்களே!

''சாமி... அவரு உங்க பிள்ளை...உங்க நிழலிலே வளருது; உங்க பார்வைக்குள்ளே படர்ற பயிரு. நீங்களே சந்தேகப்படலாமுங்களா...?'' என்று பதறினார் கிட்டத்தில் ஒரு கிழவர்.

''இந்த இடத்திலே 'தகப்பன் மகன்'கிற பாசம் கிடையாதய்யா... ஊருக்குப் புதிசான பிள்ளை கண்ணனே பணிஞ்சப்போ என் பிள்ளை மட்டும் என்ன உசத்தி?'' என மருதமுத்து அதட்டியபோது கேட்டவன் வாயடைத்து விட்டான். ஆனால் பஞ்சாமி குருக்கள் பேசினார்.

''பிள்ளைவாள்! நீங்க உங்க அதிகாரப் பொறுப்புக்குக் தகுந்தாற்போல் உத்தரவு போடணும்னு அதுக்காக அந்தப் பசலை மனத்தைப் பாழாக்காதீங்க... தெய்வ சன்னதியிலே அசம்பாவிதம் நடக்கக் கூடாது.''

நிதானமான பார்வையால் அவரை அளந்த வாத்தியார் தொடர்ந்தார்: ''பஞ்சாமி ஐயா... சுந்தரத்தை நான் நம்பறேன். —இதே கிராமத்திலே சின்ன வயசிலே என்கிட்டப் படிச்சவன் அவன்... என்றைக்கும் அவன் நல்லவனாகவே வளர்ந்திருக்கிற பெருமையை உலகம் அறியணும். அவன் சத்தியம் பண்ணறதிலே தப்பில்லே...'' என வாதாடிய ஆசிரியர், ''சுந்தரம்! நீ நிரபராதிதான். தைரியமா சத்தியம் பண்ணப்பா...'' என்று தட்டிக் கொடுத்தார்.

கிராமவாசி ரங்கய்யன் அவரிடம் மன்றாடினான். ''வாத்தியாரய்யா... நீங்க கூடவா பெரியவரு பக்கம் பேசறீங்க? எங்களைச் சந்தேகப்பட்டாரு. சத்தியம் பண்ணுறோம். சொந்தப் புள்ளையைக் கூடவா சந்தேகப்படறது?''

தெய்வத்தின் சந்நிதியில் அநாவசியமாகச் சத்தியம் செய்வது கூட அபவாதமாகும் என்று பயந்த கிராமத்தார்கள் சுந்தரம் சத்தியம் செய்ய முன்வந்ததைத் தடுக்க முயன்றனர்.

''ஐயா...தம்பி நேத்துத்தானே ஊரிலேயிருந்து வந்தாருங்க....''

''திருட்டு நேத்து ராத்திரிதானேப்பா நடந்திருக்கு.... உண்மையிலேயே அவன் திருடன் இல்லேன்னு ஆணையிட்டுச் சொல்லுவான்.''

தர்க்கத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் மருதமுத்து சுந்தரத்தைப் பார்த்தார்.


கங்காளம்மனின் திருவுருவை நோக்கி இரு கரங்களையும் குவித்த சுந்தரம், தழுதழுத்த குரலில் ''அப்பா மேலே ஆணையாகவும்... இறந்து போன அம்மா மேலே ஆணையாகவும் கங்காளம்மன் மேலே ஆணையாகவும் சத்தியம் செய்கிறேன். நான் நிரபராதி'' என்று சத்தியம் செய்தான்.

ஊரார் முன்னால் உறவை மதிக்காமல், மகனென்றும் பாராமல் சத்தியம் செய்ய வைத்து, தலைவனுக்குரிய ஸ்தானத்துக்கேற்பத் தம் கடமையைச் செவ்வனே செய்து முடித்து விட்டாரே மருதமுத்து!

சுந்தரத்தைத் தொடர்ந்து மற்றுமுள்ளவர்களும் அம்மன் மேல் ஆணையிட்டுக் கூறினார்கள். அத்தனை பேரும் தான் நிரபராதி என்பதைத்தான் கூறினார்களே தவிர, யார் குற்றவாளி என்பது தெரியாமலே போயிற்று.

''ம்... இதிலே எவனும் குத்தத்தை ஒத்துக்க மாட்டங்க. எலேய், உண்மை ஒருநாளும் மண்ணடிக்கப் போகாதுடா. சாமி நகையிலே கையை வச்சவன், துணிஞ்சு சத்தியமும் பண்ணியிருக்கான்...ம்... ஹும்! 'திருட்டுப் பய எவன்'னு தெரிஞ்சு போச்சுன்னு...'' என முழங்கிய மருதமுத்து, ஒரு விநாடி நிதானித்தார். என்ன தண்டனை வழங்கலாம் என்ற தீர்மானம் மனத்துள் உருவாகிக் கொண்டிருந்தது.

''திருட்டுப் பயல் கையும் களவுமா அகப்பட்டும், வலது கைப் பெருவிரலைத் துண்டிக்கணும்னு தண்டனை போடறேன்...ஆயுசு முழுதும் அதை நெனச்சு நெனச்சு...அவன் துடிக்கணும்...ம்...''. எனத் தண்டனையைக் கூறிய மருதமுத்துவின் பார்வை கோவிலின் சுவர் ஓரமாகச் சரிந்தது.



தமிழ்நாடு பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீ பி. ஏ. சேஷன் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி மீனாக்ஷி B. A. க்கும் தூத்துக்குடி ஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வர அய்யர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி வி. சுப்ரமணியன் M. Sc., க்கும், சென்னையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை நடைபெற்ற வரவேற்பு விழாவில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி & பார்ட்டியாரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

''எலே ரங்கய்யா, எடு அந்த அரிவாளே!'' என்று கை காட்டவே, அவர் ஜாடை புரிந்து கொண்டு ரங்கய்யன் பயந்து கொண்டு அரிவாளை எடுத்து அவர் கரங்களில் பவ்வியமாக வைத்தான்.

காலேக் கதிரவனின் கிரணங்கள் பட்டுப் பளபளத்த அரிவாளின் கூர்மை கண்களைப் பறித்தது. வலது கையில் அரிவாளைப் பிடித்த படி இடது கைப் பெருவிரலால் அதன் கூர்மையைப் பதம் பார்த்த மருதமுத்துவின் காம்பீர்ய தரிசனம் கண்ணனின் நெஞ்சுகள் அச்சம் விளைவித்தது. சுந்தரத்தின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''ம்...பார்வையிலேயே இருக்கட்டும் அது. பூமங்கலம் பொன்னேயா பரம்பரை மருதமுத்து சொன்னாச் சொன்னதுதான்! வாத்தியாரய்யா... நீங்க சாட்சி...பஞ்சாமி ஐயா நீங்க சாட்சி... அம்மன் சாட்சி... அத்தனை பேரும் சாட்சி....'' என எல்லோரையும் சாட்சி வைத்துக் கூறிய மருதமுத்து அரிவாளை எடுத்துக் கங்காளம்மனின் பாதங்களில் பவ்வியமாக வைத்தார்.

''இன்னேக்குச் சொல்றதுதான்டா முடிவு. என்னேக்கு அந்தக் களவாணிப் பய அகப்பட்டாலும் இதே தண்டனைதான்..'' என இறுதி முறையாகத் தம் முடிவைப் பிரகடனம் செய்த மருதமுத்து. ''பூசாரி ஐயா, கோவிலைப் பூட்டுங்க... சாவியைக் கொண்டாங்க இப்படி'' என்று கடுமையாக உத்தரவுமிட்டார். ''ம்... குடுங்க இப்படி'' என வாங்கிச் செருகிக் கொண்டவர், ''நீதி என்னேக்கு இருண்டு போச்சோ அன்னிக்கே கோவிலும் இருண்டு போச்சுன்னு தான் அர்த்தம். நீங்க கற்பூரம் காட்டின வெளிச்சம் மட்டும் தேவையா நிக்கப் போவுது?'' என்று தமது தழும்பேறிய நாத்திகத்துக்கு விளக்கம் கூறுவது போல் சொன்னார்.



''எவனும் இனிமேல் கோவில் பக்கம் காலெடுத்து வைக்கக் கூடாது'' என்று கூறியது வேண்டுகோளா, கட்டளையா...? கண்டிப்பான உத்தரவுதான்.

...''ம்... புறப்படுங்க எல்லோரும். ஊர் மானத்தையும் உங்க மானத்தையும் காப்பாத்தறது தெய்வத்தின் வேலை... மானம் பொதுச் சொத்து. அதைக் காப்பாத்தறதிலே நமக்கும் பங்கு உண்டு. கடமையும் உண்டு. அங்கேயே திருட்டு நடந்தால் அவமானம் நமக்குத்தான்டோ... ம்... போங்கோ... எல்லோரும் போங்க..'' என இடியாய் இடித்துப் புயலாய்ச் சீறி வெடித்தார் மருதமுத்து.

(2)

சென்னை மருத்துவக் கல்லூரியில் இறுதி வருடம் படித்துக்கொண்டிருப்பவன் சுந்தரம். அறுவைச் சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்று உலகப் புகழ் பெறும் சர்ஜனாக விளங்க வேண்டுமென்பது அவன் இலட்சியம். விஞ்ஞானமும் மேல் நாட்டு நாகரிகமும் பேயாய்ப் பற்றியிருக்கும் சென்னை மண்ணில் அவன் வாழ்ந்தாலும் அவன் மனம் இயற்கை வளம் கொழிக்கும் கிராமங்களிலேயே உறைந்திருந்தது. விடுமுறையைக் கழிப்பதற்காகத் தன் நண்பன் கண்ணனையும் அழைத்துக் கொண்டு பூமங்கலம் கிராமத்துக்கு வந்து ஒரு நாள் கூட ஆகவில்லை. கிராமத்தின் எழில் வளத்தையும் இயற்கைச் செல்வத்தையும் நண்பனுக்குக் காட்டிக் களித்திருக்க வந்தால் — வந்த மறு நாளே கிராமத்தில் அமைதி குலைந்து போய் விட்டதே! இன்னும் ஓரிரு தினங்களில் ஊருக்குத் திரும்பிவிட வேண்டியதுதான் என முடிவு செய்தான்.

ஆனால் அதற்குள் முடிக்க வேண்டிய முக்கியமான கடமை ஒன்று இருந்தது. மூன்று மாதங்களுக்கு முன்னால் 'பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டும், சீக்கிரமாக அனுப்புங்கள்' என்று தந்தைக்குக் கடிதம் எழுதியும் பணம் வந்து சேராததால் நண்பன் ராமுவிடம் வாங்கி அபராதத்துடன் கட்ட வேண்டிய நிலை வந்துவிட்டது சுந்தரத்துக்கு. இன்றைக்குள் ராமுவின் கிராமத்துக்குப் போய் அந்தத் தொகையைச் சேர்ப்பிக்கா விட்டால் மானமாக வாழ்ந்த கல்லூரி வாழ்வு மண்ணாகிப் போய்விடும்.

தந்தைக்கு முன்கூட்டியே கடிதம் எழுதி அறிவித்திருந்த போதிலும் கூட அவரிடம் இன்றைய சூழ்நிலையில் எப்படிப் பணத்தைக் கேட்பது என்று தயங்கினான்; தடுமாறினான்.

இத்தகைய எண்ணங்களுடன் வீட்டுக்கு வந்தான் சுந்தரம். மருதமுத்துவின் கோபாவேசமான உருவத்தை மனக் கண் முன் கொணர்ந்து நிறுத்தி உள்ளூற நடுங்கிக் கொண்டிருந்த கண்ணனும் அவனது நிழலாய் நெருங்கி வந்தான்.

போனவர்கள் திரும்பி வரும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தார் தாத்தா சிவகுரு. பாரிச வாயுவுக்குப் பலியான இடது கால் எதற்கும் உதவாமல் மரத்துப் போனதால் எங்கும் எழுந்து நடமாட முடியாத பரிதாபத்துக்கு இரையாகி வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தார். கங்காளம்மனின் தாலி களவு போய்விட்ட செய்தி யறிந்ததும் பதறி மகனை உடனே கோவிலுக்கு விரட்டியிருந்தவர், அவர்கள் வருகிற நேரத்தை ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

பயம் பரவிய முகத்துடன் வந்த கண்ணனைக் காணும்போதே, கோவிலில் ஏதோ நடந்திருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டார் சிவகுரு.

''என்னப்பா, சுந்தரம், உங்க அப்பா வரலியா?''

''வாத்தியாரய்யா அப்பாவை வயல் கன்றப் பக்கம் கூட்டிக்கிட்டுப் போய்விட்டார்!''

''எந்தப் பாவி நகையை எடுத்தானு தெரிஞ்சுதா?''

''தெரியலே தாத்தா. ஆனால் எல்லாரையும் சத்தியம் பண்ணச் சொன்னார் அப்பா.''

''எல்லாரையுமா...''

''என்னையும்தான்! ஏன், கண்ணனைக்கூடத் தான்!''

''என்னது? இந்தத் தம்பியையுமா? சுந்தரம், உங்க அப்பாவுக்கு நிதானம் தவறிப் போச்சா?'' என்று சீறினார் சிவகுரு.

''அதனால் என்ன தாத்தா, மாமா ஊருக்குப் பெரியவர். ஊர் நியாயத்துக்கு அடங்கி நடக்க வேண்டுமில்லையா? அவுங்களைத் தப்புச் சொல்லலாமா?'' என்று சமாதானம் சொன்னான் கண்ணன்.



''கோவில்லே அப்பா முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது தாத்தா...அத்தனை கோபம் அவுங்களுக்கு.''

''இருக்காதாப்பா பின்னே... போன வருஷம் உங்க அப்பா செஞ்சு போட்ட தாலி தானே அது? அவன் பாயோடுபடுக்கையா விழுந்திட்ட காலத்திலே உங்கம்மா வேண்டிக்கிட்டாளே...'' எனச் சொல்லும்போதே சென்ற வருடம் நோயில் நலிந்த மருதமுத்துவின் தோற்றமும் அவர் பிழைத்து எழுவதற்காகக் கங்காளம்மனுக்குத் தாலி செய்து போடுவதாக வேண்டிக் கொண்ட பார்வதியின் பரிதாபமான முகமும் பெரியவரின் நினைவில் நிழலாடின. கடந்துபோன காட்சியை நினைவுகூர்ந்ததால் விழிகளிலும் நீர் திரையிட்டது.

''உங்க அப்பா தேறித் தெளிஞ்சு வரணும்னு வேண்டுதலையாப் போட்ட நகையாச்சேப்பா....தன் மாங்கல்யம் பிழைக்கணும்னு கங்காளம்மனுக்குத் திருமாங்கல்யம் செய்து போடச்சொன்னா உங்க அம்மா. அவ தாலி நிலைச்சது ஆனா, அவதான் நிலைக்காமல் போய்ட்டா..பூவும் மஞ்சளுமாப் போயிட்டா ....ஹூம்....''

தாத்தாவின் பேச்சில் படிந்த துயரம் சுந்தரத்தின் மனத்துள்ளும் பதியவே, இறந்து போன தாயாரை நினைத்துக் கண்ணீர் உகுத்தான்.

''சரியான சமயத்துக்குப் பரீட்சைக்குக் கட்டற பணத்தை அனுப்பாம என் நண்பன் கிட்டே கையேந்திக் கடன் கேட்கிற நிலைமையிலே வச்சிட்டார் அப்பா... இப்போ பணமிருந்தும் அதைக் கேட்டு வாங்கிட்டுப் போகலாம்னு சந்தர்ப்பம் சரியில்லாமல் போயிடுச்சே...'' என்று துயரத்துடன் கூறினான் சுந்தரம்.

கண்ணன், ''ராமு, நாளைக்குப் பம்பாய்க்குப் புறப்படப் போறதாச் சொன்னியே.... அதுக்குள்ளே போய்க் குடுத்திட வேண்டாமா?'' என்று நினைவூட்டினான்.

''குடுக்கணும், கண்ணா... ராமு இருக்கறது பக்கத்து மாங்குளம் கிராமம்தான். ஆனால் இப்பவே புறப்பட்டாத்தானே ராத்திரிக்குள்ளே திரும்ப முடியும்? அப்பா இனிமேல் எந்தப் பேச்செடுத்தாலும் சீறி விழுவாங்களே... நான் எத்தனை நாள் காத்திருக்கணுமோ....!'' என்று கவலையுடன் கூறினான் சுந்தரம்.

''அட நீ ஏம்பா காத்திருக்கணும்? போன வாரம் உன் கடிதாசு பார்த்தவுடனே பணத்துக்கு ஏற்பாடு பண்ணி வச்சிருக்கான். எடுத்துக்கிட்டுப் போகவேண்டியதுதானே?'' என்று சிவகுரு பேரனைச் சமாதானப் படுத்தினார்.

''சரி தாத்தா! இதோ.... சீக்கிரம் வரேன் கண்ணா...'' என்ற சுந்தரம் வரிசையாய், ஒன்றன் மேலொன்றாய் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் பெட்டிகளில் தந்தையின் பெட்டியை இனம் கண்டு திறந்தான்.

''எடுத்துக்கிட்டியா சுந்தரம்?''

''இதோ பார்க்கிறேன். பெட்டியில் துணிமணிகள் ஒன்னுப் பின்னொன்னு இறைஞ்சு கிடக்கு. அருமையான இந்தச் சால்வை.... ஐயோ! இதுகூட இப்படிக் கசங்கிக் கிடக்கே. ஹூம்... அம்மா போனதுக்கப்புறம் எதுவுமே ஒழுங்கில்லாமப் போயிடுச்சு...''

கோவிலில் பெருமை கொள்ளும் வகையில் பணியாற்றி வருவதற்காக மருதமுத்துவுக்குக் கிடைத்த வெகுமதி அந்தச் சிவப்புச் சால்வை. 'யார் பார்க்கக் கேட்டாலும் அதன் அருமை கெட்டுவிடும் என்பதால் கொடுக்க மறுப்பாரே அப்பா. அதை எப்படிக் கசக்கி எறிந்திருக்கிறார்!' என்று தந்தையின் மீது கோபம்கூட வந்தது சுந்தரத்துக்கு.

''எடுத்திட்டியா... இல்லே நான் வரட்டுமா சுந்தரம்? வயசுக் காலத்திலே ஆண்டவன் காலை வேறே மடக்கிப் போட்டுட்டான்'' என்று எழுந்து நிற்க முயன்ற சிவகுரு நடக்க முடியாமல் தடுமாறி மீண்டும் கட்டிலில் சாய்ந்தார்.

''நானே பார்த்து எடுத்துக்கிறேன். தாத்தா... பெட்டியிலே துணிமணிகள் ஒரே கனபாரமாக் கிடக்கு. அதனால்தான் தேட ரொம்பச் சிரமமா யிருக்கு. இந்தச் சால்வை வேறே...'' என எரிச்சலுடன் சால்வையைக் கீழே எறிந்தான் சுந்தரம்.

'கணீங்' என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் சுந்தரம்.

அவன் கண்கள் ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் அகன்று விரிந்தன.

''ஆ...தாலி...அம்மன் தாலி...!'' அவனையும் அறியாமல் வாய் வீறிட்டது. ஆனாலும் அந்த அறையை விட்டுச் சத்தம் வெளியேற முடியாமல் சமாளித்துக் கொண்டான்.

'அப்பாவிடம் எப்படி வந்தது இது? ஏன் இதை அவர் எடுத்து வைத்திருக்க வேண்டும்? தாலியைத் தம் பெட்டியிலேயே வைத்துக் கொண்டே கோவிலில் மற்றவர்களை விரட்டுவானேன்?'

இவ்வளவும் சுந்தரத்தின் இளமை நெஞ்சத்துள் விழுந்து தெறித்து எதிரொலித்தன. கோவிலில் தந்தையின் மிடுக்கும் கோபமும் அட்டகாசமும் ஆர்ப்பாட்டமும் எதற்காக எழுந்தன? நகையைத் தம்மிடம் வைத்துக் கொண்டு ஒவ்வொருவரையும் சத்தியம் செய்யச் சொன்னது ஏன்?

''பணம் எடுத்துக்கிட்டியா சுந்தரம்?'' என்று கண்ணன் கூடத்திலிருந்து அழைத்தான்.

''ஆ!... இதோ வந்து விட்டேன்'' என்று சொன்னாலும் உடனடியாக அவனால் போக முடியவில்லை. இந்தப் பிரச்னைக்கு முடிவு காணாமல் அவன் போகவும் தயாராக இல்லை.

'திருடனே நீதிபதி வேஷம் போட்டதின் காரணம் என்னவாக இருக்கும்? ஹூம்,

காரண காரியங்களை ஆராய இது நேரமில்லே. நடக்க வேண்டியதைச் சிந்திக்கணும்' எனச் சிந்தனைப் பின்னலுக்குள் சிக்கித் தவித்தான் சுந்தரம்.

''சுந்தரம், அதோ மாமா வரு கிறார்'' என்று கண்ணனின் பதற்றம் எழுந்தது.

''தம்பீ! அப்பா வர்றாங்க ளாம்!'' என அடிக்குரலில் எச்சரித்தார் வெகுரு.

சீற்றமே உருவாய்ச் சினந்தெழுந்து வருவார் என எண்ணிப் பயந்து ஒதுங்கி நின்றான் கண்ணன்.

ஆனால்....

நடந்ததற்கு ஆத்மார்த்தமாக மன்னிப்புக் கேட்கும் வண்ணம் மௌனமாய் வந்த மருதமுத்து. '' உங்க பேரன் எங்கேப்பா?'' என்றார்.

''இதோ இங்கேதான் நின்றான்...அவனே ஏம்பா தேடறே?'' என்று பதறினார் பெரியவர்.

''ஊரார் முன்னாலே உறவை நினைக்கக் கூடாதுன்னு சொல்லு வாங்க. நான் அதற்கு ஒரு படி மேலேயும் போயிட்டேன். சுந்தரத் தோட சிநேகிதன் கண்ணனைக் கூட சத்தியம் பண்ணச் சொல் விட்டேன். கண்ணு...!'' என்றார் தழுதழுத்த குரலில்.

''இ தோ வந் துட் டே ன் மாமா...'' என முன்னால் வந்தான் கண்ணன். அவரிடம் அவன் கண்ட புது மாற்றம் வியப்பை யும் திகைப்பையும் தந்தது.

''என்னை மன்னிச்சிடு தம்பீ! உன் மனசையும் புண்படுத்தி விட்டேன்.''



''ஐயோ, இதுக்குப் போய் வருத்தப்படலாமா, மாமா! ஊரிலே பொறுப்புள்ள மனிதர்னு நமக்குள்ள உறவை நினைக்கக் கவலைப்படலாமா? நியாயம் நீதின்னு வந்தால் நாலும்தான் நடக்கும்...''

கண்ணன் மனத்துக்குள் இருந்த பயம் போயே போய்விட்டது. எத்தனை தைரியமாக அவரை நெருங்கி நின்று ஆறுதல் சொல்லுகிறான்!

மகன் வரட்டும் என்று காத்திருந்த வெகுரு அதற்கு மேல் காத்திருக்கப் பொறுக்காமல், ''என்னடாப்பா, எந்தப் பய அம்மன் தாலியைத் திருடியிருப்பான்?'' எனக் கேட்டார்.

''கொஞ்சம் பேசாமல் இருக்க மாட்டீங்களாப்பா? மறக்கணும்னு வந்தா திரும்பத் திரும்பக் கிளறி விட றீங்களே...'' என எரிச்சல் பட்டார் மருதமுத்து. பேச்சை வேறு புறம் திருப்ப எண்ணி, ''தம்பீ, எங்கேப்பா புறப்பட்டு நிற்கிறீங்க?'' என்று கேட்டார்.

''சுந்தரம் டவுனுக்குப் போகணுமின்னு சொன் னான்'' என்றான் கண்ணன்.

''பணம் எடுத்துக்கிட்டானு.... அப்பா.... சாமி மாடத்திலே வச்சிருக்கேன்னு சொன்னேனே... எடுத் துக்கச் சொன்னீங்களா?'' என்று மருதமுத்து கேட்ட வுடன்தான் வெகுரு திகைத்து விழித்தார்.

''அடடா.. நேத்து நீ சொன்னதை நான் மறந்தே போயிட்டேம்பா. இதுக்குப் போய்ப் பெட்டியெல்லாம் உருட்டித் தேடினானே சுந்தரம்...'' என அவர் தம் மறதிக்கு வருந்திக் கூறியபோது மருதமுத்து எப்படிப் பதறிவிட்டார்!

''என்னது? பெட்டியைத் திறந்தானா சுந்தரம்? ஏன் சுந்தரம்... நீ... பெட்டியை...'' என அவரால் தடு மாறத்தான் முடிந்ததே தவிர சொல்ல நினைத்ததைச் சொல்ல இயலவில்லை.

'அப்பா ஏன் இப்படிப் பதறணும்? காரணம் இப் போத்தானே புரியுது?' என மனத்துக்குள் எண்ணிய சுந்தரம், அதை மறைத்து ''இல்லேப்பா... தேடப் போனேன். அதுக்குள்ளே நீங்களே வந்துட்டீங்க'' என்று கூறினான்.

ஒரு விநாடிக்குள் பொங்கித் தணிந்துவிட்ட மருத முத்து தம் தவற்றை வெளிப்படுத்தியும் மறைத்தும் நாடகமாடியதைச் சுந்தரத்தைத் தவிர வேறு எவரா லும் கவனிக்க இயலவில்லை.

''வயசாச்சன்னு மறதியும் வந்திடுது அப்பாவுக்கு...ம் ...சாமி மாடத்திலே வச்சிருக்கேன் சுந்தரம். என்ன வாங்கப்போறே?''

''சில புத்தகங்கள், அப்புறம் துணி மணி. இன்னும் நாலு நாட்களிலே சென்னைக்குப் போறேனேப்பா.''

''பணத்தைப் பார்த்துச் செலவு பண்ணுப்பா. உழைச்சுச் சேர்க்கிற காசிலே உன்னைப் படிக்க வைக் கிறேம். குடும்பப் பேரைக் காப்பாற்று... ஒவ்வொரு சொட்டு ரத்தமும் ஒவ்வொரு ரூபாயாக மாறி உனக் குப் பயன்படுது.''

தந்தையின் உபதேசம் சுந்தரத்துக்குக் கசந்தது. அறி வுரை சொல்லுபவரின் அடித்தளத்தில் மறைந்து கிடக் கும் களங்கம் அவனைச் சுட்டெரித்தது.

''படிப்பதன் நோக்கமே அதுதானேப்பா. குலப் பெருமையைக் காப்பாற்றவும் குடும்பப் பண்பை நிலை நாட்டவும்தானே பள்ளிப் படிப்புப் படிக்கிறோம்'' என்றான் சுந்தரம் நிதானமாக.

''படிக்காமலே இதைத் தெரிஞ்சுக்கணும் தம்பீ. தெரிந்ததைத் தெளிவு படுத்திக்கத்தானே ஏட்டுப் படிப்பு'' எனத் தத்துவம் பேசினார் தந்தை.

''சரி, நீ சாப்பிடப் போ மருது... சுந்தரம் நீ சாக் கிரதையாப் போயிட்டு வா'' என மகனையும் பேரனை யும் பிரித்து அனுப்பினார் வெகுரு.

சுந்தரமும் கண்ணனும் போய்விட்ட பிறகு ஒரு விநாடி தயங்கி நின்று தந்தையைப் பார்த்த மருதமுத்து பரபரப்பாகத் தம் அறைக்குள் பாய்ந்தார். பெட்டியைத் திறந்தவுடன் அவர் கண்கள் ஆராய்ந்தன.

"அப்பாடா... இதை அவன் பார்த்திருக்க மாட்டான். நல்ல காலம். சிவப்புச் சால்வை நான் வச்சது மாதிரியே கசங்கித்தான் இருக்கு" என்று திருப்திப்பட்டவர், மறு கணம் துயரம் தாங்காமல் மனம் உடைந்து அழுதார்.

"கங்காளம்மன் மேல் ஆணைன்னு ஒவ்வொருத்தனும் ஆணையிட்டப்போ உயிரிலே மிதிச்சது போலத் துடிக்கத்தான் முடிஞ்சுது. பொறுப்புக்குத் தகுந்தாப்பிலே நடிக்கவும் வேண்டியிருக்கே. அத்தனை பேரையும் சத்தியம் பண்ணச் சொன்னேன். 'நீயும் சத்தியம் பண்ணு'ன்னு என்னைப் பார்த்துச் சொல்ல எவனுக்கும் தைரியம் வரல்லே. அந்தத் தைரியம் வரவும் வராது. ஏன்னு, பூமங்கலம் பொன்னையா பரம்பரை மருதமுத்துவுக்கு அத்தனை மதிப்பு! எவனாவது என்னையும் சத்தியம் பண்ணுன்னு கேட்டிருந்தான்னு...? ஆனால் இந்த மதிப்போ மரியாதையோ பயமோ பக்தியோ நிலைக்கணுமே. தாயே கங்காளம்மா! என்னை மன்னிச்சுடு..." என்று தமக்குள் கதறித் தீர்த்தார்.

"அட, இதென்ன, கண்ணன் மட்டும் தனியா வருதே!" என்ற சிவகுருவின் குரல் அவரை இவ்வுலக நினைவுக்கு சேர்த்தது. சால்வைக்குள் தாலியைப் பொதிந்து மீண்டும் பெட்டிக்குள் வைத்து ஞாபகமாகப் பூட்டிய பின்னரே அவர் வெளியே வந்தார். பதற்றத்தை மறைத்துத் திடமாக வந்தார் மருதமுத்து வெளியே...

"ஏ... என்னப்பா கண்ணு, சுந்தரத்தோட நீ போகலியா? போகலே... நீ...?"

"இல்லே, மாமா! ஒரு வேலை நேரமாகி விட்டால் இன்னைக்கு ராத்திரி டவுனிலே சித்தி வீட்டிலே தங்கலாம்னு சொன்னான். அதனாலே நான் வந்திட்டேன்."

"ஏன் நீயும் அங்கேயே தங்கக் கூடாதா?" என அவர் கேட்டதற்குச் சிவகுருவே பதிலளித்தார்: "புது எடமாச்சேன்னு தம்பி வெக்கப்படும். சரி, உள்ளே வாய்யா..."

கண்ணன் வீட்டின் பின்புறம் மாடுகன்றுகளைப் பார்ப்பதற்காகப் போய் விட்டான்.

பதற்றம் ஓய்ந்தாலும் அதன் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத மருதமுத்து நாற்காலியில் ஒரு காலை மடக்கித் தாங்கலாக வைத்தபடி அமர்ந்திருந்தார்.

நடக்க இயலாத நிலையிலும் தள்ளாடித் தள்ளாடி நகர்ந்த சிவகுரு மகனை அணுகினார். அவருக்குப் பாசம் மிக மிகப் பெரிது. தம்மைச் சார்ந்தவர்களோ தம் கண்ணெதிரில் நிற்பவர்களோ துளியும் வருத்தப்படக் கூடாது; துயரப்படக்கூடாது. வாடிய பயிரைக் காணும் போதும் வாடும் வள்ளலார் மனங்கொண்டவர் பாசப் பிழம்பான சிவகுரு.

"மருது.... அய்யா.... மருது.... ரொம்பா இடிஞ்சு போய் உட்கார்ந்திட்டே? கவலைப் படாதேய்யா. எல்லாம் நல்லபடியா நடக்கும். பொறுப்புள்ள மனுசனுக்கு வேதனை அதிகமா வர்றது தெசந்தான்...." என்று கூறியவர், மகனின் துயர் துடைக்கும் மாற்றம் அறியாதவராய்க் கலங்கினார்.



"ஹூம்.... எத்தனை பணக் கஷ்டத்திலே நம்ம குடும்பம் எப்படி இருந்த நேரத்திலே வாங்கிப் போட்ட தாலி அது" என அவர் மனம் தாங்காமல் குமுறிய போது மருதமுத்து அதிர்ச்சியடைந்து 'அப்பா' என்று அலறினார்.

"ஒன் பெண்டாட்டியோட பிரார்த்தனைங்கிற ஒரு காரணத்தைத் தவிர தாலி செஞ்சு போடற நெலமையிலேவா நம்ப குடும்பம் இருந்திச்சு?" என்று துடிப்புடன் வினவிய தந்தையை விரக்தியுடன் பார்த்தார் மருதமுத்து.

"என்னப்பா செய்யறது....ஏழைக்குப் பணக் கஷ்டமும் பொருள் நஷ்டமும் வந்தா இது சகஜம்னு உதறிட்டுப் போயிடுறான். ரொம்பப் பணக்காரனுக்கு இதைப் பத்தியெல்லாம் லட்சியம் கிடையாது. நம்மளைப் போல ரெண்டுங் கெட்டானுகதானே திண்டாட வேண்டியிருக்குது...."

"சுந்தரத்தை வைத்தியப் படிப்பு படிக்க வைக்க முடியுமா, நமக்குப் பணபலம் போதுமான்னு தடுமாறினப்போ நீதானே மருது துணிஞ்சு படிக்க வைச்சே....ஆனால் வருசா வருசம் செலவோ நமக்கு மேலே போவுது. அதைச் சமாளிக்க முடியாமப் போகிற நெலமை வரும்போதுதானே இது அகலக் கால்னு புரிஞ்சுக்கிட்டோம்."

மகனின் உயர்வான வாழ்க்கைக்காகத் தம்மை வருத்திக்கொள்ளும் மருதமுத்துவைக் காணும் போது அவரைப் பெற்ற சிவகுருவின் பாச நெஞ்சம் பதறத்தான் செய்தது. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் 'தகுதிக்கு மீறிய ஆசை' என்று இடித்துக் காட்டத் தயங்க மாட்டார். மருதமுத்து தந்தையைச் சமாதானப்படுத்தும் வகையில் பேசத் தொடங்கினார்.

"அப்பா! நாம கஷ்டப்பட்டுச் சுந்தரத்துக்குப் பணம் அனுப்பற சேதி அவனுக்குத் தெரியக் கூடாதுப்பா. அவனுக்கு மட்டும் என்ன, இந்த ஊரிலே எவனுக்கும் தெரிய வேண்டியதில்லே. அதுக்காக நான் எந்த விதப் பழிபாவத்தையும் ஏத்துக்கத் தயாரா யிருக்கேம்பா. என்னவோ நமக்கு நேரம் சரியில்லே. மகசூல் சரிஞ்சு போச்சு. களத்து மேடு நிப்பிடிச்ச மிச்சம் மீதியும் பாழாய்ப் போச்சு. அடுக்கடுக்கா செலவுக்கு மேலே செலவு.... எப்படியோ வாழ்ந்த குடும்பத்துக்குள்ளே எதிர்பாராத பள்ளம் விழுந்து போச்சு. இதெல்லாம், படிக்கிற எம் மகனுக்குத் தெரிஞ்சா அந்தப் பசலே மனசு வீணாப் போகும்பா.... விதை நெல்லைப் பொங்கிச் சோறு திங்க வேண்டிய காலம் வந்தாக்கூட எம் மகனுக்குத் தட்டுத் தடையில்லாமல் நான் பணம் அனுப்பத்தான்

போறேன். நான் எத்தனை கஷ்டப்பட்டாலும் 'எம் மவன் டாக்டர்!' அப்படிங்கிற பெருமையைத்தாம்பா எதிர்பார்த்துக் கிட்டிருக்கேன்.'' உணர்ச்சி பொங்க மருதமுத்து பேசுவதைக் கேட்டதும் சிவகுருவின் விழிகளில் நீர் பெருகியது. ''மருது! தன்னைக் கரைச்சுக்கிட்டு மணம் குடுக்கிற சந்தனக் கட்டையா வாழணுங்கிற ஆசை பெத்தவனுக்கு இருக்கறது நியாயந்தான்டா. ஆனால் ஒன்னோட கெடுபிடியையும் மெரட்டலையும் பார்க்கிறவங்க உன்னைச் சாணைக்கல்லாத்தானே நினைக்கிறாங்க.....'' என்றார்.

''மத்தவங்களுக்கு நான் சாணைக் கல்லுதாம்பா. எம்மவனுக்காக நான் சந்தனக்கட்டையா இருக்கிறதுலே ரொம்ப சந்தோஷப்படறேம்பா! ஆனா.... ஆனா....'' என்று தயங்கினார்.

''மருது! உன்னோட வருத்தம் எனக்குப் புரியுது! நீ சாணைக்கல்லா இருக்கிற நாளிலேயும் இப்படி ஒரு திருட்டு நடந்து போச்சேன்னு வேதனைப்படறே! ஒண்ணு சொல்றேன், ஒனக்கு. நீயும் நானும் பொறக்கறதுக்கு முன்னே பொறுப்பெடுத்துக்கறதுக்கு முன்னே எத்தனையோ காலம் காலமா இருந்து வர்றவ கங்காளம்மன். அவள் ரொம்ப சக்தி வாய்ஞ்ச தெய்வம்.....'' என்ற போது மருதமுத்து அதிர்ந்தார்.

''தன் தாலியைத் திருடினவனை அவ சும்மா வுட்டுடுவான்னு நெனக்கிறியா...சும்மா வுடமாட்டா....'' என்று சிவகுரு கூறும்போது அவர் பதறித் துடித்தார்.

தன்வினையே தன்னைச் சுட்டது. அந்தச் சூடு பொறுக்காமல் வேதனைத் தீயில் வெந்து கொண்டிருப்பவரை மேலும் மேலும் எரியவல்லவா விடுகிறது தந்தையின் வேதாந்த சமாதானம்?

3

பின்னிரவு நேரத்தில் இருட்பூச்சின் பின்னணியோடு கருமையில் கரைந்திருந்தது கங்காளம்மன் கோவில். 'க்றீச்', 'க்றீச்' என்ற சுவர்க்கோழியின் அலறலும், தவளைகளின் சத்தமும் காய்ந்த இலைகளின் சரசரப்பும் தவிர மோனமிட்ட தன்மையின் அமைதியில் ஆழ்ந்திருந்தது கோவிலும் சுற்றுப்பிராகாரமும்.

கோவிலுக்குள் சிறைப்பட்ட கங்காளம்மனுக்குத் தூண்டாமணி விளக்கு ஒன்றே துணையிருந்தது.

எங்கும் பேரமைதி கொலு வீற்றிருந்த நேரத்தில் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து நடந்து வந்த சுந்தரம் கோவிலை நெருங்கினான். தயாராகக் கொண்டு வந்திருந்த இரும்புச் சுத்தியால் பூட்டை அடித்து உடைத்து உள்ளே நுழைந்தான். வெளியாரின் பார்வைக்குள் படாமல் ஒதுங்கி மறைந்து கொண்ட



சுந்தரம், பதற்றத்தை மறைத்து நிமிர்ந்தான்.

''தாயே! நான் வெள்ளைப் பிள்ளை தான். ஆனாலும் துணிச்சலோட இதைச் செய்திருக்கேன். அப்பா எந்தக் காரணத்துக்காக உன் தாலியை எடுத்து மறைச்சு வைச்சிருக்காரோ, அது எனக்குத் தெரியாது. தெரியவும் வேண்டாம். படிப்புக்காக வைத்திருக்கும் பணத்தை, குடும்பப் பண்பைக் காப்பாற்ற, இதோ நான் செலவு செய்திருக்கேன்... பல கஷ்டங்களையும் சமாளிக்க, ஒருத்தருக்கும் தெரியாமல் நகரத்திலே இருந்து தாலிச் சங்கிலியை வாங்கி வைத்திருக்கேன். மகன் தந்தைக்காற்றும் பெரிய உதவியாக நான் செய்திருக்கிறதை ஏற்றுக் கொள் தேவி. என் தந்தையின் கௌரவத்தைக் காப்பாற்று. அவரே திருடியிருக்கிற உண்மைதெரியாமலிருக்க நேற்று அவர் போட்ட பெரிய மனிதர் வேஷத்தைப் பிறருக்குக் காட்டிக் கொடுத்திடாதே, தெய்வமே! அநியாயமா அவர் மற்ற நிரபராதிகளைத் துடிக்க வைச்ச பாவத்துக்குப் பரிகாரமா நான் என் படிப்புக்கான பணத்திலேயே நகையை வாங்கி வந்து ஈடு கொடுத்திருக்கேன். யாருக்கும் எந்தத் தீங்கும் வராமல் நீதான் காப்பாத்தணும், கங்காளம்மா.....!''

கண்களில் நீர் பெருகி வழிய நின்ற சுந்தரத்தின் நெஞ்சில் இந்தப் பிரார்த்தனை நிறைந்திருந்தது.

மௌனத்தின் பிடியில் சிக்கியிருந்த கோவிலில் அவன் ஒருவனைத் தவிர வேறு ஆட்கள் எவரும் இல்லை. மனத்துள் உருக்கமான பிரார்த்தனையுடன் சுந்தரம், மடியிலிருந்த தாலிச் சங்கிலியை எடுத்துக் கங்காளம்மனின் கழுத்திலே பூட்டப் போன சமயம்....

யாரோ கோவிலுக்குள் புகுந்ததை உணர்ந்து பதறி ஓடி வந்து பதுங்கிப் பதுங்கி மெல்ல அடியோற்றி நடந்து சந்நிதியை நெருங்கிய முரட்டு உருவம், கங்காளம்மனுக்கருகே நின்ற சுந்தரத்தின் பிடரியை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டது.

''யார்ரா அவன்? கையும் மெய்யுமா மாட்டிக்கிட்டான். பாவி, அத்தனை பேரையும் சத்தியம் செய்ய வைச்ச படுபாவி யாரு'' என உறுமிய உருவம், ''யார்டா நீ....பூட்டை ஒடைச்சு உள்ளே வந்த திருட்டுப்பய....'' என்று மிரட்டியபடியே சுந்தரத்தைப் பிடித்து வெளியே தள்ளிக் கொண்டு வந்தது.

''ஐயோ.... யாரோ வந்துவிட்டார்களே, காரியம் மிஞ்சிப் போய் விட்டதே....'' என்று பதறிய சுந்தரம் பேச்சிழந்து நின்றான்.

'எவனாயிருந்தாலும் தொலைஞ்சான்...!' என்று பொங்கி வெடித்த பொன்னுப் பண்டாரம் சுந்த ரத்தை ஓங்கி அறைந்தான். பொருமிய உள்ளத் துடன் பதுங்கிப் பதுங்கி வந்தவன் பூக்காரன் பொன்னுப் பண்டாரம்தான் !

''வாடா இப்படி வெளக்குப் பக்கத்திலே!'' என உறுமியபடி சுந்தரத்தின் சட்டைக் காலரை முரட்டுத்தனமாகப் பற்றிக் கொண்டு முகத்திலே மீண்டும் ஓர் அடி வைத்தபடி இழுத்துத் தள்ளி னான். மங்கிய விளக்கொளியில் திருடனை இனம் கண்டுகொண்டபின் ஐயோ, ஏன் இப்படிப் பதறு கிறான் அவன் ?

''ஆ... ஐயய்யோ, தம்பி, நீங்களா? நீங்களா இந்தக் காரியம் செய்தீங்க....?'' எனத் தடுமாறி னான் பொன்னுப் பண்டாரம்.

கல்லூரி மாணவன் கங்காளம்மன் தாலியை ஏன் திருடியிருக்க வேண்டும்? இதன் காரண காரியங்களை ஆராய அவனுக்கு அமைதியும் இல்லை, அவகாசமுமில்லை.

''தம்பி யாரோன்னு தெரியாம நிதானம் தவறிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க!ஐயா. நீங்க இந்த நேரத்திலே ஏன்... இப்படி....?''

''தாலியைத் திருப்பிக் கொண்டு வந்து போட வந்தேன்.''

''இன்னிக்குப் பூரா மனசு குமுறிக்கிட்டிருந்த தாலே வெறியிலே கத்திட்டேன். நீங்க போயி டுங்க தம்பி.... யாரும் வர்றதுக்குள்ளே ஓடிப் போயிடுங்க....''

''மாட்டேன் பொன்னையா. தண்டனையை நான் அனுபவிச்சே ஆகணும். ஈனத்தனம் செய்த நெஞ்சுக்குக் கொஞ்சமாவது துக்கம் வேணும் பொன்னையா....''

''தம்பி, யாரும் வர்றதுக்குள்ளே தாலியை என் கையிலே கொடுங்க. குற்றவாளி நானாகவே இருந்திடறேன். நீங்க ஓடிப் போயிடுங்க'' என்று மன்றாடினான் பொன்னு. பரம்பரை பரம்பரை யாக ஊறி வந்த எசமான விசுவாசம் அவனை அந்த நிலையிலும் நல்லவனாக, தியாகியாகத்தான் மாற்றிக் கொண்டிருந்தது. ஆனால் சுந்தரமோ பிடிவாதமாக மறுத்தான். ''மாட்டேன், பொன் னையா....நான் ஓடிப் போக மாட்டேன்'' என்று திடமாகக் கூறியபடி நின்றான்.

தொலைவில் யாரோ வரும் காலடி ஓசை கேட் கவே பூக்காரன் துடித்தான். ''எசமான் உப்பை



இது நாள் தின்னதுக்கு என் நன்றியைக் காட்ட ஒரே ஒரு சந்தர்ப்பம் கொடுங்க சின்னையா. நீங்க வளர வேண்டிய பிள்ளை...... வாழ வேண்டிய பிள்ளை. நீங்க திருட்டுப் பட்டம் கட்டிக்க வேண்டாம். குற்றத்தை நானே ஏத்துக்கிறேன். சின்னையா கொடுங்க தாலியை....'' என்று கெஞ்சியபடி சுந்த ரத்தின் கையிலிருந்த தாலியைப் பறிக்க முயன்றான். இருவர் கரங்களுக்கும் ஊடா கத் தாலி ஊசலாடிக் கொண்டிருந்தது.

தந்தையின் போலி கௌரவம் கெட்ட வெளிச்சமாகிவிடக் கூடாதே என்று பழியைச் சுமந்து கொள்ளத் தயாராக இருப்பவன், படித்த வாலிபன்! ஆனால் பெரிய மனிதரின் பிள்ளைக்குத் தலை குனிவு நேரக்கூடாதே என்பதற்காக எந்தவித ரத்தபந்தமும் இல்லாத அன்னி யன் ஒருவன் — அதுவும் முதல் நாள் அவமானப் படுத்தப்பட்ட அவனே அந்தப் பழியை ஏற்றுக் கொள்ளத் துடிக் கிறான். தியாகத்தில் ஒருவரை ஒருவர் மிஞ்சிவிடப் போராடிய நேரத்தில் ஒரு சில வினாடிகள் விழுங்கி விட்டன.

விளைவு !

கோவிலில் சத்தம் கேட்டுப் பதறி ஓடி வந்து கொண்டிருந்தார் பூசாரி வேதாசலம். அன்னைக்குத் தொண்டு புரிந்து வந்த பாக்யம் தடைப்பட்டுப் போனதே என்ற துயரத்துள் தம்மைக் கரைத்துக் கொண்டிருந்த வேதாசலம் அதன் காரணகர்த்தாவான திருடன் பிடிபட்டு விட்டான் என்ற மகிழ்வின் வெறித் துள்ளலோடு பிரளயமாய்ப் பொங்கியவாறு வந்தார்.


''யார்ரு, திருட்டுப் பய. ஒருநாளிலே ஊரையே கலக்கிப்புட்டியே....'' என்று சீறியபடி வந்தவர், ''ஆ....பொன்னுப் பண்டாரமா திருடன்?''எனத் திகைத்து நின்றார். அவரைத் தொடர்ந்து வந்த சிலர், திருடன் பிடிபட்ட சேதியை அறி விக்க ஊருக்குள் ஓடினர்.

பஞ்சாயத்தார் பஞ்சாமியும் வாத்தி நாத வாத்தியாரும் விரைந்து வந் தார்கள். ''மருதமுத்துப்பிள்ளைவாளுக்கு ஆள் அனுப்புங்க சீக்கிரம்....'' என உத்தரவிட்டபடியே கோவிலை நெருங்கி னார் பஞ்சாமி.

''தோ, நான் போறேனுங்க. பெரிய ஐயாவைக் கையோடே கூட்டி வாரே னுங்க'' எனக் கூச்சலிட்ட வண்ணம் சிலர் ஓட்டமாயோடினர்.

ஒவ்வொருவர் நெஞ்சிலும் எரிநெருப் பைச் சொருகிய திருட்டுப் பயல் அகப் பட்டு விட்டான்! ஊரைக் கலக்கிய பெரும் அபவாதம் நீங்கி விட்டது என்ற வெற்றியோடல்லவா ஒவ்வொருவரும் ஓடுகிறார்கள்....

''ஓடியாடா ஓடியா.... பொன்னுப் பண்டாரம் எங்கியும் தப்பிச்சு ஓடிப் போறதுக்குள்ளே பெரிய ஐயாவைக் கூட்டியாரலாம்'' என்று சொல்லிக் கொண்டே விரைந்தனர் சிலர்.



"ஓடிப்போறதுக்காகப் பிடிபடல்லே, நான்...." – ஆரவாரத்தைக் கிழித்துக் கொண்டு அமைதியின் புனிதமாய்ப் பிறந்தது பொன்னுவின் பேச்சு!

பூசாரி பதறினார்.

"ஏலே பொன்னு, காலையிலே தைரியமா சத்தியம் பண்ணினியேடா.... பாவி... அம்மா உன்னைச் சும்மா விடுவாளா ?"

"பூசாரி ஐயா! குற்றவாளி நான்தான். என்னைக் கையும் களவுமா பிடிச்சவர் பொன்னுப் பண்டாரம்தான்!"

எங்கிருந்து வருகிறது இந்தக் குரல்? பழக்கமான குரலாகவும் பரிச்சயமான நபராகவும் இருக்கவே, இருளிலும் அவனை இனங்காண முயன்றனர் அனைவரும்.

சொன்னவன் சுந்தரம்! தன் உருவத்தைப் பிறருக்குப் பிரத்தியட்சமாக்க அவன் நகர்ந்து முன்வந்தபோதெல்லாம் வலியச் சென்று அவனை மறைத்து மறைத்து நின்று கொண்ட பூக்காரன் இப்போது வலுவிழந்து போய் விட்டான்.

"தம்பீ.... நீங்களா?" – பஞ்சாமி பதறினார்.

"என்னது.... சுந்தரம்.... நீயா.... நீயா இருடன்? என்கிட்ட படிச்ச மாணவனு இருடன்? நான் நம்பணுமா இதை ?" என்று துடித்தார் வாஞ்சிநாதன்.

" நம்பித்தான் ஆகணும் வாத்தியாரய்யா...." எனச் சுந்தரமே தெளிவாகச் சொன்னவுடன் அவர் கொதித்தார்.

"வெக்கமாயில்லே, இதைச் சொல்றதுக்கு? என்கிட்டே படிச்ச பாடம் உன்னைத் திருடத்தான் சொல்லுதா.... நீ நீதி நூல் படிச்சியேப்பா.... அறநெறிச் சாரம் படிச்சியே, திருக்குறளும் படிச்சியே தம்பி..."

"வாத்தியாரய்யா, கொஞ்சம் நிதானமா இருங்க. வேறு ஏதோ குழப்பம் நடந்திருக்கு" என அவரைச் சமாதானப்படுத்தினார் பஞ்சாமி.

ஆனாலும் ஆசிரியரால் சமாதானமாக முடியவில்லை.

"இத்தனைக்கும் காரணம் நான்தானுங்க" என்று மண்டியிட்டு வணங்கிய பொன்னுவை மீறிக்கொண்டு வெறியுடன் "இல்லே திருடன் நான்தான்... நான்தான் திருடன்! கங்காளம்மன் தாலியை நேற்று திருடினவன் நானேதான்" எனக் கூச்சலிட்டான் சுந்தரம்.

பளீரென்று மின்னல் பாளமாய் அவன் கன்னத்தில் சாடினார் ஆசிரியர். "உன்னை என் மாணவன்னு சொல்லவே வெட்கமா இருக்குடா சுந்தரம். உனக்காகக் காலையிலே பரிஞ்சு பேசினேனே.... சே, படிக்காத பாமர மக்களுக்கும் பண்பு கெட்டுப்போற படிச்ச முட்டாளுக்கும் என்னடா வித்தியாசம்?" தாம் திருடனின் ஆசிரியர் என்ற பழி அவர் மனத்தில் பாறையாய் மோதிக் கனத்தது.

"என்னை மன்னிச்சுடுங்க சார். எந்தத் தண்டனைக்கும் நான் தயாராக இருக்கிறேன்" என்று சுந்தரம் தலை தாழ்த்தி நின்றான்.

"சின்னையா.., திருடினவன் நான் இருக்க நீங்க என்னைக் காப்பாத்தறதுக்காகப் பேச வேண்டாம். வாத்தியாரய்யா. என்னை அடிங்க, உதைங்க... கங்காளம்மன் தாலியைத் திருடின பாவி நான்தானுங்க" என்ற பூக்காரன் வாத்தியாரய்யாவின் பாதங்களில் விழுந்து கதறிய சமயம் புயல் பாய்ச்சலில் ஓடிவந்து கொண்டிருந்தார் மருதமுத்து.

மருதமுத்துவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நண்பனின் கிராமத்துக்குச் சென்று வருவதாகச் சொன்ன அந்தச் சுந்தரமா இவன்? தாமதமானால் செட்டி வீட்டிலே தங்கிவிட்டுப் போவதாகச் சொன்ன அந்தச் சுந்தரமா இவன்?

"சுந்தரம்... ஐயா சுந்தரம்!... நீயா? நீயா இங்கே?" என்றார். பாசம் பேச்சைத் தடை செய்தது. பிரவாகமாய்ப் பொங்கி வந்தவரை, சுந்தரம் என்ற சொல் அணை போட்டு விட்டதே!

"திருடன் நான்தானப்பா...."

மருதமுத்து என்னும் தந்தை மௌனியானார்.

பூக்காரன் குறுக்கே விழுந்தான். "இல்லே எஜமான், திருடின நகையைத் திருப்பிப் போட வந்தேன். சின்னய்யா என்னைக் கையும் மெய்யுமாப் பிடிச்சிட்டார்."

மருதமுத்து என்னும் தலைவர் சீறினார்— "சீ பண்டாரம். சொல்ல வெட்கமாயில்லே உனக்கு...?"

"அப்பா, என்னை நம்புங்க. பொன்னையா நிரபராதி. தண்டனை எனக்குக் கொடுங்கப்பா. அம்மன் நகையைத் தொட்டதற்காக அனுபவிக்கிறேன். குற்றவாளி நான்தானப்பா. குற்றவாளியே ஒப்புக்கொள்ளும் போது... அப்பா.... பொன்னையாவை ஒன்னும் பண்ணாதீங்க. இதோ இருக்கு கங்காளம்மன் தாலி!" என்று நகையைத் தந்தையின் முகத்தருகே நீட்டிய சுந்தரம் அவரது முகபாவ மாற்றங்களைக் கூர்ந்து கவனிக்கத் தவறவில்லை.

மருதமுத்து என்னும் குற்றவாளி நெஞ்சுக்குள் குமைந்து போனார். தன் வினை தன்னைச் சுடும்! தன்னைச் சுடவேண்டிய தற்குப் பதில் தன் உயிருக்குயிரான தனயனையல்லவா சுட்டுப் போகக்கிறது?

"சுந்தரம், உன்கிட்ட ஏது நகை? உண்மை என்னன்னு தெரியாமல்...."

"தெரிந்துதான் பேசறேம்ப்பா. பொன்னையா ஒரு தப்பும் பண்ணலே... நான்தான் திருடன். காலையில் நீங்க என்ன சொன்னீங்க?" – சுந்தரத்தின் கேள்வி அழுத்தமாகவும் அச்சமூட்டுவதாகவும் இருந்தது.

மருதமுத்துவை, தந்தை நிலையிலிருந்து திருப்பி, தலைவன் ஸ்தானத்தில் நிறுத்தி வைக்கத்தான் சுந்தரம் தன்னை மாற்றிக் கொண்டு வாதாடினான்.

"எ....என்ன சொன்னேன்...?"

"காலையில் நீங்க சொன்ன தண்டனையை நான் ஏத்துக்கறேன்... மனுஷனா பாக்காதீங்கப்பா... பெரிய மனிதராகி விட்டால் ஊரார் முன்னாலே உறவைப் பார்த்துத் துடிக்கக்கூடாது..."

மருதமுத்து மனமடிந்து துடித்தார். நகை நம்மிடம் இருக்கும்போது எவனும் பிடிபட மாட்டான்; எவனுக்கும் எந்த ஆபத்தும் வராது என்ற தைரியத்தில் யாருக்கும் எந்தச் சேதமும் நிகழாது என்ற உத்தரவாதத்தில் கொஞ்சம் கொடியதாகவே தண்டனை அறிவித்த அவர், இப்போது அவரே எதிர்பாராத வண்ணம் அவரது உயிரின் உயிர் — உதிரத்தின் உதிரம் — எதிரே குற்றவாளியாகப் பிடிபட்டு நிற்கும்போது பதறாமல் என்ன செய்வார்? செய்யாத குற்றத்துக்குச் சீரழியப் போவது அந்தச் செல்வனா? அதுவும் தந்தையின் வேஷத்தை மறைக்க— அல்லது காப்பாற்ற — வலிய வந்து தண்டனை அனுபவிக்க வேண்டியவன் அந்த இளங் குருத்தா?

காலையில் அவர் அறிவித்த தண்டனை இருளைக் கிழித்துக் கொண்டு அவர் செவியில் முட்டி மோதி எதிரொலித்தது.

''இருட்டுப் பய கையும் களவுமா அகப்படட்டும், வலது கைப் பெருவிரலை துண்டிக்கணும்னு தண்டனை போடறேன்... ஆயுசு பூராவும் அதை நினைச்சு அவன் துடிக்கணும்...எலே ரங்கய்யா, எடு அந்த அரிவாளை. இங்கியே இருக்கட்டும் அது...''

ஒரு முறைக்கு ஒரு முறை அதிகரித்த வேகத்துடன் அவர் செவிப் பறையைத் தாக்கித் தகர்த்த உள்ளொலிக்கு அவர் பலியானார். விநாடிக்கு விநாடி வெறியின் பிடிக்கு இரையாகித் தடுமாறிய மருதமுத்து கிராமத் தலைவர் என்ற ஸ்தானத்திலிருந்து வழுவாமல் — வழுவ விரும்பாமல் — தண்டனையைக் கூறிவிடத் தயாராகி விட்டார்! மகனே குற்றவாளி என்பதால் தண்டனையைச் சொல்லத் தயங்குகிறார் என எவரும் அவரைப் பழி சொல்லாதிருக்க அவர் தண்டனையைச் சொல்ல முன்வந்து விட்டார்.

பதற்றத்தை மறைத்த உறுதியுடன், ''காலையில் சொன்னது எதுவோ, அதைத் தான்....'' என அவர் கூற யத்தனிப்பதற்குள் பலரும் கூக்குரலிட்டனர்.

''பிள்ளைவாள்! இது கொடுமை அவன் உங்கள் மகன்!'' எனக் கத்தினார் பஞ்சாமி.

''மாமா... விட்டுடுங்க மாமா... அவனை மன்னிச்சுடுங்க. அவன் என் நண்பன்!'' எனக் கதறினான் கண்ணன்.

''பிள்ளைவாள், அப்படியே நிறுத்துங்க, தண்டனையைச் சொல்லாதிங்க. அவன் என் மாணவன்'' எனத் துடித்தார் வாஞ்சிநாத வாத்தியார்.

சுந்தரம் சிரித்தான்.

''மகன், நண்பன், மாணவன்! ஆனால் நான் இப்போ திருடன்!'' என்றான் சுந்தரம் அழுத்தமாக.

''ஆமா... காலையிலே சொன்ன தண்டனை எதுவோ அதுதான் இன்னைக்கும். என்னைக்கும் அதுதாண்டா முடிவு. அதை மாத்தறதுக்கில்லே. பூமங்கலம் பொன்னையா பரம்பரை மருதமுத்து சொன்னது சொன்னது தான். அது அப்பனா இருந்தா என்ன, மகனா இருந்தால் என்ன?'' என ஆவேசமாகக் கூச்சலிட்ட மருதமுத்து மறுபடியும் இதய அழுத்தம் தாங்காமல் தடுமாறினார்.



''இந்தப் போர்டில் உள்ள எழுத்துக்களைப் படியுங்கள், பார்க்கலாம்!''

எல்லோரது பதற்றம் நிறைந்த பார்வையும் அவர் மேல் சரிந்து அவரைத் தாங்கிப் பிடிக்க விரைந்த ஒரு விநாடி அவகாசத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு விட்டான் சுந்தரம்.

கங்காளம்மனின் பாதத்திலிருந்த அரிவாள் மின்னல் வேகத்தில் சுந்தரத்தின் வலது கைப் பெருவிரலைத் துண்டித்த பணியைச் செய்த பெருமையோடு பணியின் வெகுமதியாகப் பச்சை ரத்தத்தைப் பருகியபடி அவன் கையை விட்டு, 'சலீர்' என்ற ஓசையுடன் மண்டபத்தில் விழுந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து விட்ட கோரத்தைக் கண்டு, ''ஐயையோ!'' எனப் பதறித் திரும்பினார் பூசாரி. அவர் அலறல் கேட்டு மற்றவர்கள் மருதமுத்துவை அப்படியே விட்டு விட்டு, அவன் பக்கம் திரும்பி வந்தால்...?

'ஓ'வென்ற பேரிரைச்சல் அங்கு பிறந்தது.

''என்னப்பா, சுந்தரம்! என்ன காரியம் இது?''

''ஐயய்யோ! என்ன கோரம்! இப்படிப் பண்ணிட்டியே சுந்தரம்.....!''

''சின்னையா! உங்களுக்கு இது நல்லாயிருக்குதா?''

''தம்பீ.... சின்னய்யா...''

பலரின் பதற்றமும் பல்வேறு வடிவம் கொண்டு கூக்குரல்களாய்ப் பீறிட்டு, வெடித்தது. அத்தனையும் கேட்டும் கேளாத மௌனத்தில் தம்மை ஆழ்த்திக் கொண்டவர் போல் பார்த்தும், பாராத கர்மயோகத்துள் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டவர் போல், பித்தனோ, ஞானியோ போல் பேச்சை ஒடுக்கி நின்றார் மருதமுத்து.

அவர் கிராமத் தலைவர்! அவருக்கு நீதி பெரிது! அதை நிறைவேற்றி நிலைநாட்டி விட்டாரல்லவா?

"நிக்கிறீங்களே பிள்ளைவாள், அசையாமல்? உங்க மனசு என்ன கல்லா? கங்காளம்மன் மாதிரி நீங்களும் கல்லா உறைஞ்சு போயிட்டீங்களா?" என்று துடித்து அவரை நிஜவுலகத்துக்கு இழுத்து வந்தார் பஞ்சாமி.

வாத்தியாரய்யா தம் மேல் துண்டைக் கிழித்து ரங்கனிடம் கொடுத்துத் தண்ணீரில் நனைத்து எடுத்து வரச் சொன்னார். ஆத்திரத்தில் தன்னை அறைந்து விட்டதால் சுந்தரம் அவசரப்பட்டு விட்டானோ என்று துயரப்பட்டார் ஆசிரியர். "உன் பிடிவாதத்துக்குக் காரணம், என் கோபம்தான். என்னை மன்னிச்சுடு சுந்தரம்" என்று தழுதழுத்தபடி கூறியவர், ஈரத் துணியை அவனது கையைச் சுற்றிக் கட்டினார்.

நடக்க முடியாமல் தடுமாறிய சுந்தரத்தின் துயரத்தைப் பார்த்து, "உன்னை நானே தூக்கிக் கொண்டு போகிறேன்டா" எனக் கதறியபடி, மகனை அள்ளி அணைத்துச் சுமந்தபடி வீடு நோக்கி நடந்தார் மருதமுத்து.

4

எதையும் பகுத்தறிவால் அலசி ஆராய்ந்து தர்க்கித்துத் தீர்வு காணும் சுந்தரத்துக்கு நீதி பெரிதாக இருக்கலாம்.

கிராமத் தலைவர் என்ற ஸ்தானத்திற்கேற்ப நீதியும் தந்தை என்ற உயிர்த் துடிப்புக்கேற்பப் பாசமுமாக இரண்டின் பிடியிலும் பிழிபட்டுத் திணறும் மருதமுத்துவுக்கு நீதி, பாசம் இரண்டுமே சம அளவில் முக்கியமாக இருக்கலாம்.

ஆனால் தாத்தா செவுருவுக்கோ பாசம் ஒன்றுதான் மிக மிகப்பெரியது. இரத்தக்கறை படிந்த கைவிரல்களுடன் மகனைத் தோளில் சுமந்து வந்த மருதமுத்துவைப் பார்த்ததும் ஐயோ எனக் கதறினார். 'அட, குற்றவாளி யாராகத்தான் இருக்கட்டுமே!' தண்டனை அரக்கத்தனமானது என எப்போதும் வாதாடி வரும் செவுரு, தண்டனை வழங்கிய மருதமுத்துவின்மீது சாம்பலாக்கும் எரிமலையாய்ச் சீறினார்.

வந்து நின்ற மற்றவர்களின் தெளிவற்ற முகத்தை ஏறிட்டு நோக்கிய செவுரு, தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து பேரனை நெருங்கினார். முதுமையின் தொய்வும், மனத் துடிப்பின் துவளலும் அவரை மேலும் தள்ளாடச் செய்தன.

"சுந்தரம்! நீ தாயில்லாப் பிள்ளைதான். ஆனா இப்படித் தகப்பனும் இல்லாமப் போயிருக்க வேண்டாம். ஐயோ.. ஐயய்யோ! உன் அம்மா இருந்தா துடிச்சிருப்பாளேடா!"

சுந்தரத்தின் மேல் அனுதாபமாக எழுந்த சொற்கள் மகன் மேல் ஆத்திரக் கணைகளாய் விசிறி விழத் தொடங்கின.

"ஏன்டா, மருது! உன் பிள்ளைக்கு நீ தண்டனை கொடுத்திட்டே. எம் பிள்ளைக்கு நான் என்ன தண்டனையடா கொடுக்கிறது? அதையும் நீயே சொல்லி முடிவு பண்ணிடு. ஏன்னா, நீ கிராமத்துக்கே தலைவனில்லையா? எந்த அதிகாரமும் உன் கையிலேதானே இருக்கு? சொல்லுடா, சொல்லு..." என வெறியுடன் இரைந்த தாத்தாவைக் கையமர்த்தினான் சுந்தரம்:

"கொஞ்சம் சும்மா இருங்க தாத்தா. அப்பா நீதியைத்தானே செய்தார்" என்ற அவனிடம் எரிந்து விழுந்தார் பெரியவர்:

"போதுன்டா உன் பேச்சு. நீதிக்கும் ஓர் எல்லை உண்டு. பாசத்தையே பாலாகக் கொடுத்து ஊட்டின மகராசி இன்னிக்கு இருந்திருந்தால் பதறித் துடிச்சிருப்பா. பாசமெல்லாம் நாசமாப் போனதைப் பார்த்து நெஞ்சு வெடிக்கக் கதறியிருப்பா. துளித் துளியா ரத்தம் கொடுத்தவனே இப்போ குடம் குடமாக் கொட்ட வச்ச அநியாயத்தைப் பார்த்தா ரத்தத்துக்கு ரத்தம் பழி வாங்கியிருப்பா" என்று புலம்பிய பெரியவர், பேச முடியாத அரை மயக்கத்தில் பேரனின் தோள்களில் சாய்ந்தார்.

5

கல்லூரி மாணவனான சுந்தரம் கங்காளம்மன் தாலியைத் திருட வேண்டிய அவசியமோ சந்தர்ப்பமோ ஏன் வரவேண்டும்? என்ன காரணத்தினால் அவன் திருடினான். தண்டனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணங்களுக்கு இரையான இதயத்துடன் கண்ணன் தனிமையை நாடிப் போய் விட்டிருந்தான். அவனுக்கு அந்தச் சூழ்நிலை கசந்தது. பூடகமாக நாடகமாடும் நண்பனின் போக்கைப் புரிந்து கொள்ள முடியாமல் ஒதுங்கிச் சென்று விட்டான்.

நெஞ்சில் விழுந்த அடியைத் தாங்க வலுவின்றிச் சோர்ந்து போன தாத்தா செவுரு தம்முடைய இருப்பிடத்தைத் தஞ்சமடைந்தார்.

ஓவென்ற பேரமைதிக்குள் மூழ்கிக் கிடந்த பண்ணைத் தோட்டத்தில் தந்தையும் மகனும் தனித்திருக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. அதுவும் தாமாக ஏற்படுத்திக் கொண்ட காரியார்த்தச் சந்திப்புத்தான் அது!

மகனின் முகத்தை நேரிட்டு நோக்கவும் வெட்கியவராய் வேதனை குமிழ்த்து வரத் தழுதழுத்த துயரத்துடன், "ஏன்டா, சுந்தரம், குற்றவாளி யாருன்னு தெரியாமல் ஏன்டா அவசரப்பட்டுட்டே?" எனக் கேட்டார்.

சுந்தரம் அமைதியாகச் சிரித்தான்.

"அப்பா, குற்றவாளி யாருன்னு தெரிஞ்சதால்தானப்பா அவசரப்பட்டேன்!"

"அந்தத் தாலி என் பெட்டியில் இருக்கும் போது உன்கிட்ட ஏது இன்னொரு நகை?"

"ஸ்... மெல்லப் பேசுங்கப்பா. தாத்தாவோ, கண்ணனோ கேட்டால் ஆபத்து. அப்பா, படிப்புச் செலவுக்கு இருந்த பணத்தை நம் குடும்ப கௌரவத்தைக் காப்பாத்தறதுக்காகச் செலவு செய்தேன். படிப்பின் பயனே குடும்பப் பண்பையும், சிறப்பையும் காப்பாத்தறதுதானேப்பா? உங்கள் மானத்தையும் உயிரையும் ஒருசேரக் காப்பாத்த....."

"நீ குற்றவாளியாகிட்டே!"

"மானம் போனாச் செத்து. அதைக் காப்பாத்தற கடமை எனக்கும் உண்டல்லவா? ஒருத்தருக்கும் தெரியாமல் நீங்க நகையை மறைச்சது போல ஒருத்தருக்கும்


இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை
சாந்தி
கிரௌன்
புவனேசுவரி
மற்றும்
தென்னாட்டெங்கும்
பத்மஸ்ரீ
சிவாஜி
கணேசன்
அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
திருவருட்செல்வர்
பாடல்கள் - கவிஞர் கண்ணதாசன் • இசை - K.V.மகாதேவன்
ஒளிப்பதிவு பிரசாத் • கலை - கங்கா
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P.நாகராஜன்


White
det
whitens
while it washes
clean

தெரியாமலே நகையைப் போட்டுட முயற்சி பண்ணினேன். உங்கவரைக்கும் நீங்க ஜெயிச்சுட்டீங்க... ஆனா, உங்க பிள்ளை — நான் — என்னுடைய முயற்சியிலே தோற்றுப் போயிட்டேன் அப்பா!''

''சுந்தரம், நான் எதுக்காக அந்த நகையை மறைச்சு வச்சிருக்கேன்னு தெரியுமா?''

''காரணம் தெரியாது. நேற்றுப் பணத்தைத் தேடும்போது பார்த்தேன். அதுவும் உங்கள் கோப சொரூபத்தை நெனைச்சுப் பயந்த கண்ணன் அவசரப்படுத்தியதால் சீக்கிரம் போக நினைச்சு நீங்க வருவதற்கு முன்னாலேயே தேடினேன். தற்செயலாகச் சிவப்புச் சால்வையை உதறிக் கீழே எறிஞ்சேன். அது வைக்கப் பட்டிருந்த அமைப்பை இப்போ நினைச்சுப் பார்த்தால்தான் உள் அர்த்தம் தெரியுது.''

''ஆனா, ஊரார் முன்னாலே நீ ஏன்டா குற்றவாளியா நின்னே?''

''உங்களோட கோபமும், கௌரவமும் எந்த அப்பாவியையாவது பாதிச்சுட்டா? பூமங்கலம் பொன்னையா பரம்பரைக்கு மதிப்புக் கொடுக்கணுங்கற ஒரே விசுவாசத்தினால் உங்களுக்கு அடிமையாயிருக்கிற இந்தக் கிராமத்து ஜனங்களிலே எவனும் தண்டனை அடையக் கூடாதுப்பா! ஒருத்தருக்கும் தெரியாமல் உங்களைக் காப்பாத்திட நெனைச்சேன். தோற்றவன் நான். முயற்சியிலே தோற்றவனுக்குத் தண்டனை வேண்டாமா அப்பா? அதனால் தண்டனை என்னோட போகட்டும். நீங்கள் ஊருக்கும் உலகத்துக்கும் பெரிய மனிதராகவே இருங்கள். உங்கள் சுய கௌரவம் பாதிக்கப்பட வேண்டாம். நான் இன்னைக்கே இந்த மண்ணை உதறிப் போனால், எப்படியாவது வாழ முடியும். நான் புகழ்பெற்ற சர்ஜனாக வந்து பெரிய பெரிய ஆபரேஷன்.....'' — சுந்தரத்தின் பேச்சு சட்டென்று நின்றது. வருங்கால டாக்டரின் வாழ்வைச் சிதைத்து விட்டது போல் வெட்டுண்ட விரலின் மேல் கட்டையும் மீறி இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

அவ்வளவு நேரமும் உள்ளூற உருகிக் கரைந்து உருக் குலைந்து போய்க் கொண்டிருந்த மருதமுத்து வேதனையை வெளிப்படையாகக் கொட்டி அரற்றத் தொடங்கினார்.



''சுந்தரம், என் அந்தஸ்தும் கௌரவமும் எனக்குச் சத்துருக்கள். படாடோபமாக இருக்கணும்னு விரும்புவேன். ஊரிலே பிரமாதமாகப் பேர் அடிபட ஆசைப்படுவேன். ஆனா, அதுக்குப் பணமும் செலவாக்கூடாதுன்னு நெனைப்பேன்.''



''இரண்டும் எதிரெதிரான கொள்கைகள் ஆச்சேப்பா!''

''ஆமாம்... உன்னையும் என்னையும்போல.. சுந்தரம்... போன வருஷம் உங்கம்மாவோட பிரார்த்தனையை நிறைவேற்ற நான் செய்து போட்ட தாலிதான் இது.... தெரியுமில்லே?''

''தெரியும்.''

''நான் செய்து போட்ட இந்தத் தாலியும் சங்கிலியும் முழுத் தங்கமில்லே!''

''என்னது?'' என அதிர்ந்தான் சுந்தரம்.

''சுந்தரம், பட்டணத்திலே பித்தளையிலே செய்து, பொன் முலாம் பூசச் சொன்னது.''

''போலி நகையா?''

''ஆமாம். என்னைப் போலவே வெறும் வெளிப் பகட்டு.''

''அப்பா, தெய்வத்துக்குச் செய்யறதிலேயும் கலப்படமா?... ஏம்பா....?''

''அன்னிக்கு நான் இருந்த நிலையிலே வேறெதையும் செய்ய முடியல்லே. என்னு நான்தான் ஆடம்பரப் பிரியனாச்சே? பகட்டாகச் செய்திட்டுப் புகழ் தேடிக்கிட்டேன். அந்தத் தாலியில் ஒரு சிறு குண்டு எங்கியோ அறுந்து போயிடுச்சு.''

''அதை மத்தவங்களுக்குத் தெரியாமப் பிலே செப்பனிட எடுத்துப் போனாலும் 'நகை போலி'ங்கறது தெரிய வருமேன்னு பயந்து—''

''ஒருத்தருக்கும் தெரியாமல் சரி செய்திட நினைச்சேன். உன்னூர் ஆசாரியிடம் கொடுத்தால் உண்மை தெரிஞ்சு போகுமே. பட்டணத்துக்கே கொண்டு போய்ச் சரி பண்ணிக் கொண்டு வரணுங்கிற திட்டத்திலே எடுத்து மறைச்சு வச்சேன். ஆனால், பூசாரி நகையைக் காணோம்னு கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணிவிட்டார் நேத்து. அதனாலே நானும் என் பொறுப்புக்குத் தகுந்தாப்பிலே நடிக்க வேண்டியிருந்தது. ஆனால், சத்தியமாச் சொல்றேன்டா, அது இந்த மாதிரி விபரீதத்திலே முடியும்னு நினைச்சிருந்தா குற்றத்தைப் பகிரங்கமாகவே என் மேலேயே ஏத்திக்கிட்டிருப்பேன் சுந்தரம்.''

''அப்பா! நான் குற்றவாளியாகப் பிடிபட்டுப் பலர் முன்னாலே தலைகுனிஞ்சு நின்னப்போ எனக்குத் தண்டனை தர உங்க மனம் மறுத்ததே... துடிச்சதே... தகப்பன்—மகன்கிற பாச உறவாலேதானேப்பா அந்தத் துடிப்பு?''

''பாசத்துக்காக நான் துடிக்கல்லே. பண்புக்காகத் துடிச்சேன். உன் நிலையிலே வேறு யார் இருந்தாலும் நெஞ்சு வெடிக்கக் கதறியிருப்பேன். பொன்னுப் பண்டாரம்தான் குத்தவாளின்னு தெரிஞ்சதும் ஊருக்காக அவனை மெரட்டிட்டுப் பெருந்தன்மையா

மன்னிச்சுடணும்னுதான்டா வந்தேன்...'''' என்று குமுறினார்.

''பெருந்தன்மையா!'' என்று சுந்தரம் குத்தலாகக் கூறியதும் மருதமுத்து சாட்டை யடி பட்டது போல் துடித்தார்.

''சுந்தரம்! குற்றவாளியை நிரபராதி யாக்கிட்டு, வேறே ஒரு நிரபராதிக்குத் தண்டனை குடுக்கணும்னு மனசு துடிக்குது... நான் அந்த நேரத்திலே தண்டனை குடுக்கா மலும் இருந்திருக்கலாம். அப்படி இருந்தா 'குற்றவாளி தன் மகன்னு தெரிஞ்சதும் தண்டனை குடுக்கத் தயங்குறான் மருதமுத்து' என்று ஊரும் உலகமும் என்னே ஏசும்டா. பூமங்கலம் பொன்னையா பரம்பரை மருத முத்து, மகனுக்காக, சொன்ன சொல் தவறிட்டான்னு பழி வந்திடுமேடா...''

''அதனால்தான் குற்றத்தை நானே ஏத் துக்கிட்டேன். நகை நம்மகிட்டேதானே இருக்குங்கற தைரியத்திலே வெளியே யாருக் கும் தெரியாதுங்கற எண்ணத்திலே உங்களை யாரும் சந்தேகப்பட மாட்டாங்கன்னு இட நம்பிக்கையிலே நீங்க மற்றவங்களை வெரட்டி னீங்க... ஐயோ! சத்தியம் கூடச் செய்யச் சொன்னீங்களே....''

''அந்தப் பாவமே என் மகனைப் பழி வாங்கிவிட்டதுடா. என் ஆயுசு முழுதும் இதை நினைச்சு நினைச்சுத் துடிக்க வச்சுட்டு டா தெய்வம். ..... ஐயோ! அநியாயமா வலது கைப் பெருவிரலை இழந்துட்டியேடா சுந்தரம்!''

''ஆமா, வாழ்க்கையை இழந்துவிடவில்லே அப்பா. இதை சொல்லுறதே, 'ஒரு குடும்பம் வாழ ஒருவன் தன்னைத் தியாகம் செய்ய லாம்.... ஒரு சமுதாயம் வாழ ஒரு குடும் பமே தன்னைத் தியாகம் செய்யலாம்' என்று. நான் வெறும் ஒரு விரலைத்தானேப்பா தியாகம் செய்தேன்?''

''ஆமா, அதோட உன் எதிர்காலமே வீணாகப் போச்சேடா! சுந்தரம் நீ இழந்த ஒரு விரல் என் நெஞ்சிலே என்னைக்கும் நெருஞ்சி முள் ளாய்க் குத்திக் கொண்டேதான் இருக்கும். பணமும் செலவாகாமல் பகட்டாகவும் வாழ ணும்கிற பித்தனை மனங்களுக்கு — என்னைப் போன்ற அப்பாக்களுக்கு — உன்னைப் போல் பத்தரை மாற்றுத் தங்கம் — ஒரு மகன் — இருந்தாப் போதும். உலகம் சீக்கிரம் திருந் திடும்.''

ஒன்றின் அழிவிலே பிறந்த ஆரம்பமாய் அமைந்தது மருதமுத்துவின் ஞானோதயம். மகனை நெஞ்சுடன் ஆதாரமாய் அணைத்துக் கொண்டவாறே, ''ஐயா, சுந்தரம்... நீ படிச்சுப் பட்டம் வாங்கணும்... டாக்டராகி இந்த ஊருக்கே வரணும்... இந்த ஊரே உன்னைப் புகழணும்ங்கிறதுதாம்பா என் லட் சியம். உன்னே அந்த நெலைக்கு உசத்திப் பாக்குறவரைக்கும் நான் எந்த விதமான பொல்லாப்பையும் ஏத்துக்குவேன்'யா...... உன்னுக்குள்ளே நல்லவனுக இருந்தாலும் ஒலகத்துக்கு முன்னால் பொல்லாதவனு போலி வேஷக்காரனு நடிக்கவும் தயாரா இருந்தேனே, சுந்தரம், ஒனக்காக நான் என்ன வேணும்னாலும் செய்யத் தயாரா இருக் கிறப்போ நீ எவ்வ்பா அவசரப்பட்டுட்டே ஐயா!...என் நெஞ்சு துடியாய் துடிக்குதய்யா! இனி நிற்கிறது நின்னேனே அய்யா! வச்சி விட்டியே, ஐயா!...'' என்று கதறினார்.

''...ஆமா, என் நெஞ்சு எப்பவுமே நிமிர்ந்தே இருக்குமப்பா'' என்று உறுதியுடன் கூறினான்.

தந்தையும் மகனும் பேசுவதெல்லாம் புரிபடாது தெரியாமலே, தொய்ந்து மதிலுக்கு அப்பால், பூசாரியும், பொன் னுப் பண்டாரமும், பூசாரி வேதாசல மும் பேசிக்கொண்டு நின்றார்கள்.

''நான் எத்தனை தடவை வாதாடியும் சின்னையா விட்டுக் கொடுக்கல்லே. குற் றத்தை அவரே ஏத்துக்கிட்டார். அவர் தியாகம் யாருக்கு வரும் பூசாரி ஐயா?''

''மகன்தான் குற்றவாளின்னு தெரிந் கும் கலங்காமல் தண்டனை கொடுத்தாரே பெரியவர், அவர் நீதி யாருக்கு வரும் பொன்னையா?''


மகனின் கண்ணீர் தம் கறையைக் கழுவித் தூய்மை பெற்ற மருதமுத்து நிமிர்ந்தெழுந்தார். அவரது போலி நாடகத்துக்குப் புகழாரங்களா? பித்தனை மனம் கொண்ட அந்தஸ்துப் பித்தரின் பித்தலாட்டத்துக்கு எழும் பாராட்டு மொழிகளா?

''ஐயோ.....!''

துடிப்பும் துயரமும் பொங்க மகனைக் கட்டிக்கொண்டு, ''சு...ந்...த..ர..ம்!'' என்று கதறினார் மருதமுத்து!



○●○



வட்ட மேஜை

- வாழ்க, பல்லாண்டு!
- புளியங்கொட்டை தரும் பலன்
- தமிழ்த் தாத்தா தபால் தலை
- கைவந்த கலை

இருபத்தாறு நிறைந்து இருபத்தேழில் புகும் 'கல்கி'க்கு வாசகர் சார்பில் என் வாழ்த்து! பெரியோர்கள் நல்லருளாலே, இறைவனின் பெருங் கருணையாலே, வாசகப் பெருமக்களின் இடையறாப் பேராதரவாலே, ஆசிரியக் குழாம் வலிய வழங்கும் அரிய தொண்டாலே இது நாள் வரை சிறந்து விளங்கும் கல்கி இதுபோலே பல மடங்கு உயர்ந்தோங்குக! ஓங்குக!

சென்னை — 28
15—7—67 தம்பி சீநிவாசன்

ஃ ஃ ஃ

சென்ற ஜூன் மாதம் 25ம் தேதி இதழில் திரு முகுந்தன் அவர்கள் எழுதிய "புளி வரு கிறது" என்னும் கட்டுரையைக் கண்ணுற் றேன். அவர் தம் கட்டுரையை நகைச்சுவைக் கண்ணோட்டத்தில் எழுதியிருப்பினும், நான் இங்கு ஓர் உண்மையைத் தெரிவிக்க விரும்பு கிறேன்.

பங்காரப்பேட்டில் கடந்த இருபது வருடங்களாக எங்களது The Mysore Starch Mfg. Co., என்னும் தொழிற்சாலை இயங்கி வருகிறது. இதைப் போன்ற ஒரு தொழிற் சாலை, ஆந்திராவில் உள்ள ஹிந்துப்பூரிலும் The Andhra Starch Mfg. Co., என்னும் பெய ரில் அநேக வருடங்களாக நடைபெற்று வருகிறது. இவ்விரு தொழிற்சாலைகளுக்கும் மூல ஆதாரமே புளியங்கொட்டைதான். நாடெங்கிலும் பல பாகங்களில் விளைக்கப் படும் புளியங்கொட்டைகளை வாங்கி அவற்றை வறுத்துத் தோலை நீக்கிப் பொடி செய்து அதைச் சலித்து நுண்ணிய மாவாக்கி மூட்டை களில் நிரப்பி வடஇந்திய மில்களுக்கெல் லாம் அனுப்புகிறோம். மாவை வெவ்வேறு வகைப்படுத்தி, சணல் தரம், நெசவாலைத் தரம் என்று பிரித்துத் துணிகளுக்குக் கஞ்சி போடப் பெருமளவில் பயன்படுத்துகிறார்கள். இதைத் தவிர மாவு, சுவர்களில் விளம்பரத் தாள்களை ஒட்டுதல் போன்ற அநேக காரியங் களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. மேல் தோலை உருண்டைகள் செய்து நாங்கள் வெந்நீர் அடுப்புக்குப் பயன்படுத்துகிறோம். இவ்வகை மாவை ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்கிறோம்.

பங்காரப்பேட்டை
20—7—67 பிரேமா சுரேந்திரநாத்

ஃ ஃ ஃ

சென்ற வார இதழ் தலையங்கம் படித்தேன். மூன்னாள் மன்னர்களுக்குப் பட்டினுள், உறுதியளிக்கப்பட்ட மானியத்தை ரத்து செய்யலாகாது என்பதைத் தெள்ளென விளக்கிய விதம் என்னைப் பெரிதும் கவர்ந் தது. எத்தனையோ கோடிக்கணக்கில் திட்டங் களுக்குச் செலவு செய்யும் அரசுக்கு இந்த நான்கு கோடி ஒரு பொருட்டா? இதைப் பார்க்குமிடத்து "யானை போவது தெரி யாது. பூனை போவது தெரியும்" என்ற பழமொழிதான் ஞாபகத்துக்கு வருகிறது.

மதுரை
20—7—67 மு. காளிமுத்து

ஃ ஃ ஃ

2—7—67 கல்கியில் வே. ரா. சுந்தர ராஜன், "புன்னைப் பறந்த பத்மா" என்ற தலைப்பின் கீழ் எழுதிய கட்டுரையைப் படித் துக் கண்ணீர் விட்டேன். வியாழக்கிழமை தோறும் "வாய்ஸ் ஆப் அமெரிக்கா"வின் நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழும் நேயர்களுள் நானும் ஒருவன். இந்தியாவின் கலை, கலா சாரங்களைப் பற்றிச் சகோதரி பத்மா மிக அழகாகவும், தெளிவாகவும் பேசும்போது கேட்கக் கேட்க இனிமையாக இருக்கும். இவரின் இனிய தமிழோசையைக் கேட்டு மகிழ்ந்து வந்த நான், காலை ஏழு மணிக்கு இவர் கார் ஓட்டிக் கொண்டு போகும்போது வேறு ஒரு காருடன் மோதி இருநூற்றைம்பது அடி தூக்கி எறியப்பட்டு இடுப்புக்குக் கீழ் உள்ள எலும்புகள் முறிந்து இறந்ததாகப் படித்ததும் என்னையறியாமலே உள்ளம் விம்மி னேன். எனக்கே இப்படி இருந்தால் பெற்ற தாய் தந்தையர்களுக்கு எப்படி இருக்கும்?

கொழும்பு
12—7—67 அ.தே. மாணிக்கம்

ஃ ஃ ஃ

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 3—1—68 முதல் 10—1—68 வரை சென்னையில் நடைபெற விருக்கிறது. இதைக் கௌரவிக் கும் வகையில், "தமிழ்த் தாத்தா" எனப் புகழ் பெற்றிருக்கிற மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் நினை வாகத் தபால் தலைவெளியிட வேணும். இதற் குத் தபால் - தந்தி இலாகா அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

சென்னை—5
19—7—67 ச. ராஜீ

ஃ ஃ ஃ

திரு பி. வி. ஆர்., "மணக்கோலம்" நாவ லில் பாகீரதி அம்மாள், சீதா, ஜானு, கமலா முதலியவர்களின் வெவ்வேறான குணங்களைத் தான் எப்படித் தெளிவாக எடுத்துக்காட்டி யிருக்கிறார். அவர்களுக்கிடையே நடைபெறும் உரையாடல்கள்தான் எவ்வளவு இயற்கையா யிருக்கின்றன? இதெல்லாம் அந்த ஆசிரிய ருக்குக் கைவந்த கலை போலும்!

பம்பாய்—78
12—7—67 கே. ராகவன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



காலைக் கதிரின்
ஒளியைவிட
அதிக ஒளி
படைத்தது
மபத்லால்
க்ரூப்
பிரின்டெட் பாப்ளின்கள்
'டெரின்'/ காட்டன் பிரின்டெட்
பாப்ளின்கள். 'டெபிலஸ்டு'
மற்றும் 'ம:பிளேஸ்டு'
வகைகள்.
LPE-Aiyars M. 155 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சத
தபால் செலவு தனி

